நன்னிலம்

ஸ்ரீலஸ்ரீ தாண்டவராயசுவாமிகள்

வழங்கிய

கைவல்ய நவநீதம்





பூஜ்ய ஸ்ரீ தயானந்த சரஸ்வதிஜி சாமிகள்



சுவாமி. சு. சதானந்தா



ஸ்ரீ குரு முதல்வர் ஸ்ரீ ல ஸ்ரீ சுயம்பிரகாச சுவாமி
திருமழபாடி மடாலய ஆண்டவர்




ஸ்ரீ கொங்கணசித்தர் திருக்கோயில்
ஊதியூர், காங்கேயம் வட்டம், திருப்பூர் மாவட்டம்

நன்னிலம்

ஸ்ரீலஸ்ரீ தாண்டவராயசுவாமிகள்

வழங்கிய

கைவல்ய நவநீதம்





பூஜ்ய ஸ்ரீ தயானந்த சரஸ்வதிஜி சாமிகள்



சுவாமி. சு. சதானந்தா

நூலின் பெயர்	:	நன்னிலம் ஸ்ரீலஸ்ரீ தாண்டவராய சுவாமிகள் அருளிய **கைவல்ய நவநீதம்**
நூல் வகை	:	**தமிழ் வேதாந்த உபதேசம்**
உரையாசிரியர்	:	**R. மாணிக்கம் [எ] சு. சதானந்தசாமி,** அமிர்தவர்ஷிணி உரை பதிப்பு, தாராபுரம்.
முதற்பதிப்பு	:	23–4–2017
தாள்வகை	:	18.6 கி. மேப்லித்தோ
நூல் அளவு	:	1 X 8
எழுத்து	:	12 புள்ளி
பக்கங்கள்	:	256
படிகள்	:	2000
விலை	:	ரூ. 80/–
பதிப்பகம்	:	*ஓவியா பதிப்பகம்* 20/40, சொலைசட்டிதெரு. AKMG லாட்ஜ் அருகில். திண்டுக்கல் - 0451 - 2430309

ஆய்வுரை

'கைவல்ய நவநீதம்' வேதாந்திகளாலும் சைவ சித்தாந்திகளாலும் மிகவும் போற்றப்படும் ஒரு நூல்.

வடமொழியில் தான் பல நுணுக்கமான நூல்கள் உள்ளன என்பார் பலர். தமிழில் கைவல்ய நவநீதத்தைப் படித்தோர் அப்படிச் சொல்ல மாட்டார்கள்.

ஸ்ரீலஸ்ரீ தாண்டவராய ஸ்வாமிகள் அருளிச் செய்த இந்நூல் வேதாந்தத்தின் சாரம். ஞான விழிப்புக்கான அனைத்து சாதனங்களையும் வழி முறைகளையும் ஒருங்கே திரட்டி எளிய முறையில் புரியவைக்கிறது. அப்யாசிகளுக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் கைமேல் பலனாகி சாதனையை முறையாக முழுமை செய்கிறது.

பெயரே அப்படித்தான் வருகிறது. கைவல்யம் என்பது உயரிய ஞான நிலை அதற்குமேல் உயரிய ஞானநிலை ஏதுமில்லாத ஒப்புவமையற்ற நிலையாதலால் அது கைவல்யம் அதையே விசாரத்தினால் கடைந்து கடைந்து எடுத்து வெண்ணைபோல் திரட்டித் தருவதால் நவநீதம். நம் ஸ்ரீலஸ்ரீ சதானந்த சாமியின் அமிர்தவர்ஷிணி என்னும் எளிய விளக்க உரை அதற்கு மேலும் சிறப்பு சேர்க்கிறது. சிறிதளவு வேதாந்தப் பரிச்சயம் உள்ளவர்கள் தானாகப் படிக்கத் தொடங்கினால் பலப்பல இடங்களில் தவறான விளக்கமும் புரிதலும் கொண்டு அசல் விஷயத்தை முக்கியக் கருத்தை சரியாகப் புரிந்து கொள்ளாமல் போவார்கள். சாமி சு. சதானந்தா அவர்களின் அமிர்தவர்ஷிணி உரை, முறையான பாரம்பரியமான விளக்கம் தந்து, நம்மை நேர்பாதையில் சந்தேகமில்லாமல் சரியான புரிதலை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. உறுதியும் கூட.

அவருடைய குரு பாரம்பரியம், சீரான பாடம், அப்யாசம் அனைத்தும் அனைவரும் அறிந்ததே. எளிமையாகவும் பாரம்பரியம் மாறாமலும் விளக்குவதில் சாமி வல்லவர். அவருடைய அனைத்துப் புத்தகங்களிலும் இது மகுடமாக அவர்தம் விசால வேதாந்த ஞானத்திற்கும் சான்றாக இப்புத்தகம் இங்கு உங்கள் முன் வெளிவருகிறது. அனைவரும் படித்துப் பயனுற வேண்டும்.

இப்படிக்கு வேதாந்த மாணவன்

ஹரிசங்கர் N.D.,

Keepfilt Hospital, Shenay Nagar, Madurai

அணிந்துரை

ஓம் தத் ஸத்!

ஒன்று அவன் தானே இரண்டு அவன் இன் அருள
நின்றனன் மூன்றின் உள், நான்கு உணர்ந்தான்,
ஐந்து வென்றனன், ஆறுவிரிஞ்தனன் ஏழ் உம்பர்ச் சென்றனன்,
தான் இருந்தான் உணர்ந்து எட்டே!,

(திருமந்திரம் - பாயிரம்)

மந்தரும் உணருமாறு வஸ்து தத்துவம்
சொல்வேனே என விளம்பும் அத்துவித நூலாகிய ஸ்ரீலஸ்ரீ தாண்டவேசுர சுவாமிகளால் இயற்றபட்ட கைவல்ய நவநீதம் எனும் நூலுக்கு நமது குருவாகிய சதானந்த சுவாமிகள் 288, கவிகளுக்கு ஏற்ப உரைதனை மிக எளிமை படுத்தி சொல், எழுத்து, பொருள், யாப்பு அணி இலக்கணத்திற்கு குறையாதபடி பட்டறிவு இல்லாத மனிதரும் மெய் பொருள் உணரும் வண்ணம், தேன் மதுவை போன்ற தித்திக்கும் வண்ணமும் அமிர்தவர்ஷிணி உரையை நமக்காக அருளியுள்ளார்கள். வேதாந்த தெளிவுக்கு விதையிடும், மூலப்பாடல்களின் உரைநூல்கள் காலத்திற்கு ஏற்ப நிறைய அருளாளர்கள் எழுதி இருந்தாலும், நம்முடைய குருவாகிய சு. சதானந்த சுவாமிகளின் உரை போல் இல்லை என்பது மிகையாகாது. கைவல்ய நவநீதம் நூல் பாயிரம் ஏழு (7) பாடல்களும் தத்துவ விளக்கப் படலம் நூற்றி ஒன்று (101) பாடல்களும் சந்தேகம் தெளிதல் படலம் (180) நூற்றி என்பது பாடல்களுமாக மொத்தம் இரு நூற்றி என்பத்து எட்டு (288) பாடலுக்கும் உரை எழுதி மெய்யன்பர்களின் இறைபசிக்கு உணவு அழித்துள்ளார்கள். நம், குருநாதர், ஞானமயமான பேரானந்த நிலையில் ஆழ்த்துகின்ற இந்த ஒப்பற்ற ஞான சாத்திரமான “கைவல்ய நவநீதத்தை”, மூலத்தில் உள்ளபடி பாடல்களாகவும், அமிர்தவர்ஷிணி விளக்கஉரை செய்த நம் குரு அந்த ஸ்ரீ தாண்டவேசுர சுவாமிகளின் மறு பிறப்பே என்றால் மிகையில்லை.

குலவுசற் குருவின்பாதக் குளிர்புனல் தலைமேல் கொண்டார்
உலகினில் தீர்த்தம் எல்லாம் உற்றபே றடைவார் போல
நலம் மெய் ஆகிய கைவல்ய நவநீத நூலைக்கற்றோர்கள்
பலகலை ஞான நூல்களைப் படித்த ஞானிகளாய் வாழ்வார்தாமே

இப்பாடலுக்கு ஏற்ப நமது குருவின் திருவடியில் அபிசேகம் செய்த தீர்த்தத்தை சிரசில் தெளித்துக் கொண்டாலே போதும் கங்கை முதலிய அனைத்து புண்ணிய தீர்த்தமும் முழுகினோர் அடையும் பயனெலாம் நாமும் அடையலாம். ஏன் என்றால் நமது சுவாமியின் முதலாவது (2005-ல்) நாநா சீவவாதகட்டளை" நூலினை மறுபதிப்புச் செய்தும் இரண்டாவது (2007-ல்) ஞான வாசிட்ட நூலின் சாரமாக வசன நடையில் எழுதி ஞானக்கதைகள் எனத், தலைப்பிட்டுப் பதித்து வெளியீடு செய்தும். மூன்றாவது, திருவள்ளுவர் குடும்ப வரலாறு நூலினை செய்து (2009-ல்) பதித்து வெளியிட்டும் நான்காவது (2013-ல்) ஒழுவில் ஒடுக்கம் ஞான நூலுக்கு உரைசெய்து பதிப்பித்து வெளியிட்டும் ஐந்தாவதாக (2014-ல்) பரமார்த்தரிசனம் நூலுக்கு உரைசெய்து பதித்து வெளியிட்டும் ஆறாவதாக (2015-ல்) கீதாசார தாலாட்டுக்கு உரை செய்தும் பதித்து வெளியிட்டும் ஒவ்வொரு நூலையும் ஒவ்வொரு புண்ணியஸ்தலங்களில் விழா வைத்து வெளியீடு செய்தும், இப் புவிக்கு பெருமை சேர்த்தது அல்லாமல் கைவல்ய நவநீதம் நூலுக்கும் அமிர்தவர்ஷிணி எனும் உரையும் செய்து (2017-ல்), பதிப்பித்து இப்போது வெளியிடும் நமது சதானந்த சுவாமிகள் ஏழு பூமிக்கும் வேதாந்த ஞான விதையை வித்திட்டு மெய்பொருள் அறிந்த அருளாளருக்கும் நமது குருநாதர் ஆசிகளும் அருளும் நமக்கும் கிடைக்கும் என்பது திண்ணம். இந்நூல் நமது சுவாமிகளின் ஏழாம் படைப்பு ஆகும்.

"எல்லாம் அறியும் அறிவு தனைவிட்டு
எல்லாம் அறிந்தும் இலாபமங்கு இல்லை
எல்லாம் அறிந்த அறிவினை நானென்னில்
எல்லாம் அறிந்த இறை யெனலாமே."

- திருமந்திரம்

அரி மெய்ஞ்ஞானத் தீயால் அவித்தையாம் உடலீறாகும்
பெரியது லமும்கா லத்தால் பிணம் ஆகி விழும் அந்நேரம்
உரிய சூக்குமச ரீரம் உலைஇரும் புண்ட நீர்போல்
துரியமாய் விபுவாய் நின்ற சொரூபத்தில் இறந்துபோமே.

(கைவல்ய நவநீதம்)

மனித பிறப்பு எடுத்த சிறப்புத் தன்மைக்கு நமது குருசுவாமிகள் கூறும் விளக்க உரையில், சஞ்சிதம், ஆகாமியம், பிராரத்தம் என்ற மூன்று கர்மத்தோடு கூடிய மனிதனே

அஞ்ஞானியாம். ஆத்ம ஞானத்தால் இரண்டு கர்மத்தை நாசமாக்கியவனே, ஜீவன் முக்தன் ஆவான். மீதியுள்ள பிராரத்த கர்மத்தை புசித்து முடிப்பதே விதேக முத்தியாம், ஞானியிடம் பாவம், புண்ணியம் இரண்டும் இல்லை. ஜீவன் சிவத்தோடு இரண்டறக் கலந்து இதுஇதன்றி அதுவாகி விடுவதே விதேக முக்தி என்றும் இதுவே பிறப்பு இறப்பும் இல்லாத பெருவாழ்வை தரும் என்றும் நமது சுவாமிகள் அளிக்கும் கருத்துவண்ணம், சுருதி குருசுகாநுபவத்திற்கு ஏற்புடையதே! மேற்கோள் காட்டிய கவிக்கு ஏற்ப எண்ணில் அடங்காத யுகங்களாக இந்த ஜீவனுக்குப் பிறவியைக் கொடுத்து கொண்டிருந்த அவித்தை அஞ்ஞானம் என்கிற காரண சரீரத்தை, ஆத்ம ஞானத்தீயால் அத்தியந்தமும் நாசமாக்கி விடுகிறது. இருபது தத்துவங்களோடு கூடிய சூக்கும சரீரமும், காய்ந்த இரும்பில் விழுந்த நீர்த்துளிகளை அந்த நெருப்பு குடித்து நாசமாக்கி விடுவதுபோல் ஆத்ம ஜோதியில் கரைந்து அத்தியந்தம் நாசமாகிவிடுகிறது. இந்த ஜீவனும் அண்டம் எல்லாம் நிறைந்து இருக்கிற சிவஜோதியில் கரைந்து ஐக்கியமாகி விடுகிறது. இப்படி ஜீவன் ஐக்கியமாகி விடுவதே மனித பிறப்பு எடுத்த சிறப்பு தன்மைக்கு எடுத்து காட்டாக, நமது சுவாமிகள் எளிய உரையில் தெரிவிக்கின்றார்.

உபதேசப் பித்தோ உபமானப் பித்தோ
விபரீதமோ பழக்கோ வேறோ - தபசி நீ
கண்மூடாது விண்மூடத்தேடும் கவுசனைப் போல்
என்மூடா யோகமிது ஏன்?

(ஒழிவில் ஒடுக்கம்)

நமது சுவாமிகள் ஒழிவில் ஒடுக்கம் நூலில் இந்த கவிக்கு மேற்கோள் காட்டி உரை செய்யும் போது கண்ணை மூடினாலே போதுமே, இந்த உலகமே இருண்டுபோமே? அதைவிடுத்து விண்ணை பெரிய போர்வை கொண்டு மூடுகிறேன் என்று சொல்வது மூடத்தனம் அன்றோ? இதுபோல் பலபேர்கள் பசப்பும் பகட்டும் காட்டும் போலி குருமார்களின் நடுவே, யோகம் சொல்லித் தருகிறேன் என்று மக்களை மீண்டும் பிறப்பு இறப்பெனும் படுகுழியில் தள்ளும் அவர் இவர்கட்கு எமன் அன்றோ? நம்முடைய சுவாமி, சு. சதானந்தா அவர்கள் அறிவும் ஒன்றே. பிரமம் ஒன்றே, ஞானம் ஒன்றே என்று உண்மையான அத்துவித (வேதாந்தத்தை) நமக்காக அருளி, மீண்டும் பிறவா நிலையை உணர்த்தி வீடுபேறு அடையும் மார்க்கத்தை இந்நூல், எளிய முறையில் உரைநடைமூலம்

உணர்த்தியுள்ளார்கள் நம்முடைய சுவாமிகள் எளியோனுக்கு எளியோனாய்ப் பாமரரும் ஆவார். பண்டிதத் திறமை காட்டாதவர். எனது தந்தையார் மருத்துவர், ஞானி, ஸ்ரீசாமி அவர்கள் 10-10-1982-ல் எட்டு வாழ்த்து கவிகள் நம் குருசாமிகள் மீது புனைந்து என்னற்ற மக்களை வரவைத்து விழா எடுத்து சுவாமிகளை மகிழ்வித்து மகிழ்ந்தார் என்னுடைய தந்தை. இந்த பேறு எங்கள் குடும்பத்தாருக்கு கிடைத்த பெறும் பேறு ஆகும். சிவத்திருவார்ந்த மெய் அன்பர்களும் ஆன்மீக சாதன முடையவர்களுக்கும் அருளாளர்களுக்கும், சீவன் முக்திநிலை, பெற்றோர்க்கும் சுவாமிகளின் அமிர்வர்ஷிணி உரை நூலாகிய கைவல்ய நவநீதம் உண்மைப் பொருளை கூறியுள்ள நூல் ஆகும் என, அவையடக்கத்துடன் நூல் செய்வோரது மரபின்படி முறைபடுத்தி செய்யப்பட்டுள்ளது. சிறப்பிற்கெலாம் சிறப்பே!...

"யாரறிவார் எங்கள் அண்ணல் பெருமையை
யாரறிவார் இந்த அகலமும் நீளமும்
பேரறியாத பெருஞ்சுடர் ஒன்று அதின்
வேரறி யாமை விளம்பு கின்றேனே,"

- திருமூலதேவர்

இந்த நூலுக்கு என்னை அணிந்துரை செய்யுமாறு நமது சுவாமிகள் உத்தரவு கொடுத்தது நான் இப்பிறவியில் பெற்ற பெரும் பேறு ஆகும். சிறியோனை ஒரு பொருட்டாக மதித்து, எனக்கு கொடுத்த இந்த அரும் செயலை சிறியேன் செய்ததில் சில குற்றம் குறை இருப்பினும் மெய்யன்பர்கள் பொறுத்து அருளும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். கற்றதனால் தொல்லை வினை கட்டறுமோ? நல்ல குலம் பெற்றதனால் போமோ பிறவிநோய்? போகாது. ஜாதி மதம், சமயம் மொழி, தேசம், பொருள் பதவி என்று பேதவாதக்குதற்கங் (மொழி) களை பாராட்டுவதை நீக்கி, முன்னோர்கள் நின்ற நிலை ஈதென்றுணரும் சித்த சுத்தி பெற்ற மானிடபிறவிகளே, பிறவியென! யாவராலும் புகழ்துரைக்கும்படி இந்நூல் மணத்தெளிவினைப் பெறச் செய்து ஜீவன் முக்தர்களாய் வாழ வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

என்றும் அன்புடன்
ஸ்ரீ சு. சதானந்த சுவாமி அவர்களின் உண்மை மாணவன்
எஸ். வேதகிரி. **ஈஸ்வரன்** BASM, DCMS, MPUM, RMP, MD, (AM)
பரம்பரை சித்த மருத்துவர்.
கபிலர் மலை, பரமத்தி வேலூர் தாலுகா, நாமக்கல் மாவட்டம்.

முனைவர். ஞா. சண்முகவேல்,
உதவிப் பேராசிரியர், தமிழ்துறை
சுவாமி தயானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
மஞ்சக்குடி - 612 610. குடவாசல்.

ஓம் தத்ஸத்!

மதிப்புரை

பூஜ்யஸ்ரீ தயானந்த சரஸ்வதி சுவாஜியின் பொன்னடிக்கு வணக்கம்.

"சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை - உபயாம்
இதுவே மதியாகும் அல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும்"

என்ற ஔவையின் அறிவுரை நினைந்து தொடங்குகின்றேன். நன்னிலம் ஸ்ரீலஸ்ரீ நாராயண குருமூர்த்திகளின் சீடர் ஸ்ரீலஸ்ரீ தாண்டவராய சுவாமிகள் அருளிய அத்வைதத்தின் அமுதமொழிகளாக அமைந்த கைவல்ய நவநீதத்தை சதானந்த சுவாமிகள் அவர்களின் உரை வாயிலாக மீண்டும் ஒருமுறை படிக்கப் பெறும் வாய்ப்புப் பெற்றேன்.

கைவல்ய நவநீதம் என்பதற்கு "வேதம் என்னும் பசுவில் கைவலிமையால் கறந்து முன்னோர் தந்த பாலை கடைந்தெடுத்த வெண்ணெய்" என்று பொருள் விளக்கம் தருவர். கைவல்யம் என்றால் மோட்சம்; நவநீதம் என்றால் வெண்ணெய், "வெண்ணெய் போலத் திரட்டித் தரப்பட்ட மோட்சம்" எனவும் பொருள் கொள்ளலாம். இந்நூல் தத்துவ விளக்கப்படலம், சந்தேகம் தெளிதற் படலம் என இரு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. பாடல்களை ஆசிரியர் மாணவர் உரையாடல் போலவும், தந்தை மகனுக்கு கூறும் அறிவுரை போலவும் அமைந்துள்ளன.

"கானவர் வலையிற்பட்டு கைதப்பி யோடுமான்போல்" என்ற உவமை வேடனின் வலையிலிருந்து காகத்தின் உதவியினால் தப்பிய மானை உணர்த்துகிறது. அதைப்போல மனைவி மக்கள் பெற்றோர் உறவு உடமைகளிலிருந்து விடுபட வேண்டும். பிரம்மத்தை சத்துசித்து ஆனந்தமென மூன்று பதமாக கூறும் விளக்கம் குறிப்பிடத்தக்கது. இந்நூலில் இதுபோல பல இடங்களைக் குறிப்பிடலாம்.

இவ்வுலகமானது மாயையாகிய புறத்தின்பால் செல்லும் விதமாகவே ஒவ்வொரு ஆன்மாவும் படைக்கப்பட்டிருக்கிறது. மனிதன் உட்பட உயிர்கள் அனைத்தும் இரை தேடவே முயல்கின்றன. இரை கிடைத்தவுடன் பூரணம் பெற வேண்டும். மனிதனைத் தவிர அனைத்து உயிர்களும் ஒவ்வொரு வேளையும் இரை கிடைத்தவுடன் திருப்தி அடைகின்றன. மனிதன் அதனுடன் நிற்காமல் மாயையாகிய புறத்தின்பால் மனதை அலையவிட்டு இன்ப துன்பங்களுக்கு இவனே கருவியாகின்றான். இதற்கு ஆறாவது அறிவின் பால் பெற முடியாத அஞ்ஞான மிகுதியே காரணம் எனலாம். ஒரு மனிதன் தன்னுடைய வாழ்க்கையில் ஆறாவது அறிவினால் எந்த அளவுக்கு உண்மையை உணர்ந்து கொள்ள முற்படுகிறானோ அந்த அளவுக்கு ஆன்மீக அறிவினைப் பெறுகின்றான் சதானந்த சாமிகளின் அமிர்தவர்ஷிணியின் உரை சிறப்பு அறிவின் ஊற்றாக திகழுமிதில் (ஐயமில்லை) இந்நூல் பலரது கைகளிலும் தவழ்ந்து அஞ்ஞான இருளை அகற்றும் என நிச்சயம் நம்புகிறேன். சுபம் எல்லாம் செயல் கூடும்! சாந்தி ஓம்!

இப்படிக்கு,

ஞா. சண்முகவேல்

மஞ்சக்குடி.

ஹரி ஓம் தத்ஸத் திருச்சிற்றம்பலம்

சைதன்யம் சாஸ்வதம் சாந்தம் வியோமாதீதம்
நிரஞ்சனம் நாதவிந்து கலாதீதம் தஸ்மை ஸ்ரீ குருவே நமஹ.

ஆனைமுகம் ஆறுமுகன் அம்பிகை பொன் அம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு

பாசம் அனைத்தையும் தனித்தனிப் பரிந்திட நீக்கி
நேசமாகிய அறிவுரு நீ எனக் காட்டிப்
பேசும் ஏழ்வகைப் பிறப்புனக்கு இல்லை எனப் பேசி
தூசு நீக்கிய சுயம்பிரகாசனைத் தொழுவாம்..

சிவமயம்

குருவாழ்க குருவே துணை

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

- திருக்குறள்

அணிந்துரையுடன் கூடிய
சு. சதானந்த சுவாமிகளின் வாழ்க்கை குறிப்பு

சுவாமி அவர்கள் (1948-ம் ஆண்டு) விய வருடம் ஆடி மாதம் 5-ம் நாள் வியாழக்கிழமை மதுரை மாநகரில் திரு. க. ரங்கசாமி பிள்ளை சங்கரம்மாள் தம்பதிகளின் தவப்பயனாகத் தோன்றினார். தந்தையாரின் பூர்வீக கிராமம் கம்பம் அருகில் உள்ள கருநாக்க முத்தம்பட்டி கிராமம் சுவாமிகளின் இயற்பெயர் திரு R. மாணிக்கம் என்பதாகும். சுவாமி அவர்கள் சிறுவயதிலேயே தந்தை கூறும் திருக்கூட்டத்தில் இதிகாசபுராண உபதேச வாக்கியங்களை கேட்டு மனதில் ஆழப்பதித்து கொண்டார். தந்தையார் சுவாமிகளின் 14-ம் வயதில் இயற்கை எய்தினார். தந்தை மறைவுக்குப் பின் சுவாமிகள் திருவருள் அழைக்க வீட்டிலிருந்து வெளியேறினார். பல்வேறு பணிகளில் 4, ஆண்டுகள் கழியவும் தன்னுடைய 19-ம் வயது

இறுதியில் திருச்செந்தூர் கோவில் வளாகத்தில் ஞானி ஒருவரால் கரும உபதேசமும் புறத்துறவும் செய்யப்பட்டது. இதன்பின் சுமார் 3 1/2 ஆண்டுகள் திருமழப்பாடி ஸ்ரீலஸ்ரீ சுயம்பிரகாச சுவாமிகள் மடாலயத்தில் குரு பணியில் ஈடுபட்டார். இந்த காலத்தில் சுவாமிகளுக்கு வேதாந்த பாடத்தை புகட்டியவர்கள் கல்லிடைக்குறிச்சி ஆத்மானந்த சுவாமிகளும் இலக்கணம் ராமசாமி சுவாமிகளும் ஆவர். இவர்கள் காரைக்குடி கோவிலூர் மடம் தமிழ் வேதாந்த மரபு சார்ந்தவர்கள் சுவாமிகளின் மானசீக குரு திருமழபாடி மடாலய ஆண்டவர் ஸ்ரீலஸ்ரீ சுயம்பிரகாச சுவாமி! அவர்களே.

அடுத்து பாதயாத்திரையாக 3 ஆண்டுகள் தமிழகத்தில் உள்ள புண்ணிய ஸ்தலங்களைத் தரிசனம் செய்தார். 9 ஆண்டுக்குப்பின் அன்னையைக் காண தன் பூர்வீக கிராமம் வந்தபோது, அங்குள்ள ஆன்மீக அன்பர்கள் சுவாமிகளின் வேதாந்த கருத்துக்களைக் கேட்டு குருவாக்கி இன்புற்றனர்.

கம்பத்தில் அன்பர் திரு. கி.கஞ்சையன் அவர்கள் சார்பில் 5 நாட்கள் நாநா ஜீவவாத கட்டளை எ னும் நூலை விளக்கம் செய்தார். 2008-ல், 2 1/2 ஆண்டுகள் சின்னம்மனூர் பூலாநந்தீஸ்வரர் 1978 - 81 வரை திருக்கோவிலில் திருமுறை ஓதுவாராகப் பணி செய்தார். 1982-ம் ஆண்டில் தாயார் சிவபதம் அடைந்தார். தாயார் மற்றும் அன்பர்களின் வேண்டுகோளின்படி சுவாமிகள் தமது 33-வது வயதில் (1983-ல்) பாண்டியம்மாள் என்ற பெண்ணை மணந்தார். (1983- 2001 வரை) கம்பம் நகரில் குடியிருந்து, கடிகாரம் பழுது நீக்கும் பணியை மேற்கொண்டு வந்தார். இவர்களுக்கு பெண்குழந்தை பிறந்தது. பெயர் ரங்கநாயகி. 16-ம் வயதில் திருமணமும் நடைபெற்றது. 2001- முடிவில் சுவாமிகளின் வாழ்வில் திடீர் திருப்பம் ஏற்பட்டது. அம்மாவாசை அன்று மகளும் அடுத்த 15-ம் நாள் பௌர்ணமியில் மனைவியும் சிவபதம் அடைந்தார்கள். சிந்தனையில் மூழ்கிய சுவாமிகள் செய்வதறியாமல் திகைத்து அற்றது பற்றெனில் உற்றது வீடு எனும் கருத்துக்கு ஏற்ப கைப்பொருளை எல்லாம் பஸ் பயணம் செய்தே செலவழித்தார். இவ்வாறு 4 ஆண்டுகள் சென்றபின், திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அருகில் உள்ள பொன்னூதிமலையில் ஊதியூர் சென்று கொங்கணர் சன்னதி மலைமேல் தனிமையில் 17 மாதங்களும், ஊதியூரில் 22 மாதமும் இருந்தார். அங்கு பல ஆன்மீகத்

தொண்டர்கள் உறுதுணையாக இருந்தார்கள். கொங்கணர் சன்னதியில் ஒரு ஒளி தன்னுள் செல்வதை உணர்ந்தார். இங்கு 2005-ல் நாநா ஜீவ வாதக் கட்டளை எனும் வேதாந்த நூலை 22 ஆண்டுக்குப்பின் புதிப்பித்து வெளியிட்டார். இந்த நூலை கோவை ஆணைகட்டி பூஜ்ய ஸ்ரீ தயானந்த சரஸ்வதி சுவாமிகளிடம் அறிமுகம் செய்தபோது, அவர்களின் அனுக்கிரகத்தால் ரிஷிகேசம் சென்று 7 மாதகாலம் தங்கி இருந்து ஞான வாசிட்ட நூலின் சாரத்தை வசன நடையில் எழுதி ஞானக்கதைகள் எனும் தலைப்பில் அச்சிட்டு 2007-ம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழாவில் ஊதியூரில் பல பெரியோர்கள் முன்னிலையில் சிறப்புற வெளியீடு செய்யப்பட்டது. இதன்பின் இராமமூர்த்தி அன்பரால் அழைக்கப்பட்டு, தாராபுரம் கொளிஞ்சிவாடியில் அன்பர் திரு P. மருதப்பா ஆசிரியர் அவர்கள் இல்லத்தில் தங்கி இருந்தபோது திருவள்ளுவர் (குடும்ப) வரலாறு எனும் நூலை எழுதி, பதிப்பித்து, மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மன் திருக்கோவிலில் உள்ள வள்ளுவர் கழக மன்றத்தில் 2009-ம் ஆண்டு சிறப்பாக வெளியீடு செய்தார்கள். இந்த இறைபணியில் உயர்திரு. Dr. C.K. செல்லமுத்து (Aircell Dealer, தாராபுரம்) அவர்கள் மிகவும் உறுதுணையாக இருந்தார்கள்.

2010-ம் ஆண்டு எங்களது இல்லத்தில் 16 வாரங்கள் நாநா ஜீவாதக் கட்டளை எனும் நூலும் (வகுப்புகள்) கீதாசாரத் தாலாட்டு எனும் நூலும் சுவாமி அவர்களால் நடத்தப்பட்டது. எங்கள் பாக்கியம்!

2010 - 11 பழனி அருகில் மானூர் தெய்வநாயக சுவாமி சன்னதியில் தங்கிய படி வேதாந்த பாடங்களை 50 வாரங்கள் நடத்தினார்கள். இதற்கு மானூர் திரு. ராசுப்பிள்ளை அவர்கள் பெரிதும் ஏற்பாடுகளை செய்திருந்தார்.

2012-ல் சுவாமி அவர்களுக்கு தாராபுரம் அருகில் காட்டம்மன் புதூரில் ஆசிரமம் அமைக்க கபிலர் மலை ஸ்ரீசாமி, அவர் புதல்வர் திரு வேதகிரீஸ்வரன் தாரபுரம் உயர்திரு. Dr. C.K. செல்லமுத்து, திரு. P. மருதப்பா, ஆசிரியர், T. கரூ ரில் கதிர்வேல், கனகராஜ், திரு. V. ராமமூர்த்தி, அடியேன் திரு. N. ராஜேந்திரன், கம்பம், திரு கஞ்சையன், மற்றும் பலரும் நிதி உதவி செய்தார்கள்.

2013-ல் கரூர் சின்ன வடுகபட்டி சப்தரிஸீஸ்வரர் ஆராய்ச்சி நிலையத்தில் நாநாசீவவாதக்கட்டளை, கீதாசாரத்தாலாட்டு கைவல்ய நவநீதம் என்ற வேதாந்த வகுப்புகள் 100 வாரங்கள் தொடர்ந்து நடைபெற்றன. கரூரில் உள்ள ஐயப்ப சேவா சங்கத்தில் கண்ணுடையவள்ளலின் ஒழிவில் ஒடுக்கம் எனும் நூல் சுவாமிகளால் உரை எழுதி பதிப்பு செய்தும் வெளியீடு செய்யப்பட்டது.

தொடர்ந்து இதே சமயம் அன்பர்கள் மூலம் கிடைத்த உபயநிதியால் 5 3/4 செண்ட் இடம் வாங்கி 2013-ல் ஸ்ரீ சங்கர சதானந்த நிலையம் என்ற பெயரில் மன்றம் திறப்பு விழா செய்யப்பட்டது. இங்கு பூஜ்ய ஸ்ரீ தயானந்த சரஸ்வதி சுவாமிகளின் நல் ஆசியுடன் ஜெகத்குரு ஸ்ரீ ஆதிசங்கரரின் அத்வைத வேதாந்த பாடங்கள் கற்பிக்கப்படுகிறது.

2014-ல் இங்கு பகவத் கீதையின் மறு அவதாரமாகிய பரமார்த்த தரிசனம் எனும் நூல் சுவாமி அவர்களால் உரை எழுதி பதிப்பித்தும் வெளியிடப்பட்டது. சு. சதானந்தசாமியின் வாழ்க்கைக் குறிப்பு நிறைவு.

2015-ல் கீதாசாரத் தாலாட்டு எனும் நூல் உரை எழுதி வெளியீடு செய்யப்பட்டது.

2017-ல் கைவல்ய நவநீதம் என்னும் இந்நூல் சுவாமிகளால் அமிர்தவர்ஷிணி எனும் உரை எழுதப்பட்டு பதிப்பித்து இங்கு வெளியிடப்படுகிறது.

அன்பர்கள், ஆன்மீகத் தொண்டர்கள் அனைவருக்கும் குருவருளும், திருவருளும் துணை புரிவதாக

சாதனம் இன்றி ஒன்றைச் சாதிப்பார் உலகில் இல்லை.
ஆதலால் இந்த நான்கும் அறிந்தவர்க் கறிவுண்டாகும்
நூதன விவேகி உள்ளில் நுழையாது. நுழையும் ஆகில்
பூதசன்மங்கள் கோடி புனிதன் ஆம் புருடன் ஆமே!.

இங்ஙனம்
N ராசேந்திரன் J.E / E.B (ஓய்வு)
R. இந்திராணி, தாராபுரம்.

ஓம் தத்ஸத் திருச்சிற்றம்பலம்!

ஸ்ரீ முகவுரை

எல்லாம் வல்லபரம் பொருளின் கருணைமிக்க பேரன்புசார்ந்த அன்பர்களே? குருமூர்த்திகளின் கிருபையும் எமது அன்பும் உரித்தாவதாக! ஸ்ரீலஸ்ரீ (நன்னிலம்) தாண்டவராயசுவாமிகள் அருளிய கைவல்ய நவநீதம் எனும் தமிழ் உபநிடதம், நம்மவர்க்கும் நாட்டவர்க்கும் உலகினருக்கும், பிறவிக்கடலைக் கடந்து சீவப் பிரம்ம ஐக்யமெனும் முத்திக் கரைசேரத் தோணியாக அமைந்துள்ளது. நன்னிலம் செய்த புண்ணியமும் நாம் செய்த பயன்கருதாத புண்ணியமும் இசைந்துள்ளது என உறுதிகொள்ளலாம்.

இந்நூலின் விசயம் பாடலும் அமிர்தவர்ஷிணி உரையும் தத்துவ விளக்கப் படலமும் சந்தேகந்தெளிதல் படலமும் சிறப்பு பாயிரமும், என்ற முறையே, 7-101-180-5- என்று 293 கவிகளும் மிளிர்கின்றது. அத்வைதமெய்ப்பொருளை விளக்குவதில், அனைத்து மொழிகளிலும் பிறந்த ஞான நூல்களையும் மிஞ்சி தனிமுத்திரை பெற்றுள்ளது. காரணம்? பாயிரம் 7 - ல், 6 - வது பாடல் கொண்டு உணரலாம். சுருங்கச் சொல்லி விளக்கம் தந்த இக்கைவல்ய நவநீதம் நூல் மற்றய ஞானநூல்கள் எல்லாம் புறவழிச்சாலைகளாகவும் இந்நூல் தேசிய நெடுஞ்சாலை (BY-BASS - 47 எனலாமே)யே போன்று, பிரஸ்தானத்திரய நூல்களின் சாரமெல்லாம் தொகுத்து வழங்கியுள்ளார். ஸ்ரீதாண்டவராய சுவாமிகள், ஆன்மீகத் தேடலுடைய பக்குவர்கள் யாவரும் பயனடைதற்கென்றே, அவதரித்த வேதாந்த அத்வைத விளக்க கைவல்ய நூலை, நம்மவர்க்கு வழங்கிய ஞானவள்ளல் ஆவார்கள்.

இவரருளிய இந்நூலுக்கு இதுவரை, யாமறிந்த அளவில் 19-உரை எழுதிப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்கள். இவர்களின் பெயர் ஊர் விபரங்களை இந்நூல் மூலமாகத் தருவதில் பெருமை அடைகின்றேன்.

1. தமிழகத்தின் முதல் வேதாந்த மடாலயமே, கீழ்க்கண்டவர்கள் எல்லாம் உருவாகப் பூர்வீகஸ்தானமாகும் என்பது மிகையில்லை எனலாம்! இங்கு 2-வது குருஸ்தானம், ஸ்ரீ அருணாசல தேசிகரின் பதசாரஉரை. 2- பிறையாறு அருணாசலசுவாமிகளின் உரை, 3 - ஈசூர்சச்சிதானந்த சுவாமிகளின் உரை, 4-சிதம்பரம் ஸ்ரீ பொன்னம்பலம் சுவாமிகளின் உரை. 5- தஞ்சாவூர் வெங்கடாசல சுவாமிகளின் தத்துவார்த்த தீபிகை உரை, 6. மதுரை P.L.

சாமிநாதபிள்ளையவர்களின் உரை, 7. காளையார்கோவில் செல்லப்ப சுவாமிகளின் உரை, 8. திருமாநிலையம் கோவிந்த ஐயரின் உரை, 9. சென்னை, கோ, வடிவேலு அவர்களின் வினாவிடை வசன நடை உரை, 10. உடையார் பாளையம், ஸ்ரீ ஆறுமுக சுவாமிகளின் - சமஸ்கிருத மொழி கலப்பில்லாத சுத்த தமிழ்நடையில் பதவுரை, 11. திருப்பூவணம் (மதுரை) சதசாஸ்த்திரகர்த்தா பரசமயகோளரி, ஸ்ரீ- காசிகானந்தசுவாமியின் கிருதபான உரை, 12. குடியாத்தம் செங்கல்வராயர் உரை, 13. மேலச் சூரன்குடி (நாகர்கோவில்) நா.விவேகாந்தனின் உரை, 14. ரெட்டியாரூர் ஸ்ரீ பழனியப்ப சுவாமிகளின் தாற்பரியவுரை, 15. ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரின் உரை, 16. வேதாந்தகேசரி - நாங்கூர், வாசுதேவானந்தசாமியின் (கவியில்லா - எண்வரிசைப்படி அமைத்த) வசனநடை உரை 17. திருவண்ணாமலை, (கவியின்றிய) சுருக்கமாகிய சிவதீனநாதன் உரை, இவர்கட்கும் மேலாக 18. ஸ்ரீ கைவல்ய நவநீதம் நூலை, கவிகளை (தமிழில் பிறந்ததை) சமஸ்கிருத பாஷையில், புலவர் ஸ்ரீ சங்கு கவி அவர்கள் மொழி பெயர்த்துள்ளார்கள், நம் கைவல்ய நவநீத நூலை, ஜெர்மானிய மொழியிலும், உலகம் தழுவிய ஆங்கிலத்திலும் மற்றும் நமது பிரதேச மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு பயனடைந்து வருகிறார்கள். என்பது பெரிதும் மகிழ்வை தரும் விசயம் எனலாம். 19. பாட்டுச்சித்தர் சீர்காழி நாராயணசாமி அவர்கள் உரை, 20. இவர்கள் எல்லாம் சங்கமித்து நீந்திய சந்தன சாஸ்திரக் கடலினுள்ளே சு. சதானந்தசாமி (அடிமையும்) அமிர்தவர்ஷிணி எனும் உரை எழுதி அச்சிட்டு இங்கு உங்களது முன்னிலையில் பெருமையுடன் வெளியிடப்படுகிறது.

2005-ல் நாநா சீவவாதக்கட்டளை நூலை மறுபதிப்புச் செய்தோம். 2007-ல், வசிஷ்ட மகரிஷி இராமருக்குப தேசித்த ஞானவாசிட்டம் நூலின் சாரத்தை ஒருங்குபடுத்தி வசன நடையில் எழுதி ஞானக்கதைகள் எனும் தலைப்பு தந்து பதித்து இவ்விரு நூலும், இன்று திருப்பூர் மாவட்டத்திலுள்ள ஊதியூரில் சிறப்பாக வெளியிட்டோம். 2- தாராபுரம், வந்தமைந்து, திருவள்ளுவர் (குடும்ப) வரலாறு என்ற நூலை (முழுவசன வடிவ - படைப்பாக்கம்) எழுதி அச்சிட்டு, மதுரையில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயவளாகத்துள் திருவள்ளுவர் கழகத்தில் வெளியிட்டோம்.

2013-ல் ஸ்ரீ கண்ணுடைய வள்ளல் வழங்கிய ஒழிவில் ஒடுக்கம் நூலுக்கு தெளிவுரை எழுதி அச்சிட்டு கரூரில் S. வேதகிரீசுவரன் ஏற்பாடுகளை (எமது சீடர்) கவனிக்கவும்.

ஆணிலையப்பர் திருக்கோயில் சமீபம் மண்டபம் ஒன்றில் சிறப்புற வெளியீடு செய்தோம். 2014- பகவத்கீதை (எனும்) பரமார்த்த தரிசனம் நூலுக்கு எளிய உரை எழுதி அச்சிட்டு, காட்டம்மன்புதூரில், எமது அன்புக்குரியமெய் அன்பர்களின் உபய வடிவிலான, ஸ்ரீ சங்கர சதானந்த நிலையத்தின் திறப்பு விழாவும் இந்நூல் வெளியீடும் செய்தோம். 2015-ல் கபிலர் மலையில், ஸ்ரீ சப்தரிஷீஸ்வர ஆசிரம வளாகத்தில், எமது அன்பு ஆசி அருளுக்குப் பாத்திரரான, ஸ்ரீசாமி R.I.M.P., மணிமந்திர ஔஷதரின் 3-ம் ஆண்டு நினைவாக வெளியிட்டோம். என்னை, எல்லாம் வல்ல குருமூர்த்திகளான அந்தரியாமி நடத்தவே, இந்நூல்களின் ஏழு திருப்பணிகளையும் செய்து நிறைத்தோம். எம் திறமை அல்ல எல்லாம் யார்க்கும் திருவருட் செயலே துணையாவது பெறுக!

ரிஷிகேஷம் (ஆனைகட்டி - கோவை) ஆர்ஷவித்யா குருகுலம் குருமுதல்வர் **பூஸ்யஸ்ரீ தயானந்தசரஸ்வதி சாமிகளின்,** ஆசியும் பேருதவியும் கொண்டே வளர்ந்தேன். திருமழப்பாடி **சுயம்பிரகாச சுவாமிகளுடைய** தாலாட்டும், ஊதியூர் **ஸ்ரீ கொங்கணசித்தரின்** தயையும் பெற்றுய்ந்த எளியோனுக்கு எல்லாவகையிலும் உடன் இருந்து பணி சிறக்கச் சேவைபுரியும், **ஸ்ரீசாமி, வேதகிரீசுவரன்,** கபிலர்மலை, கம்பம், காசி **ஸ்ரீ கி.கஞ்சையன்,** தாராபுரம், Dr. தொழிலதிபர், **C.K. செல்லமுத்து** MJF, கரூர். **K. கதிர்வேல்,** தொழிலதிபர், **K. கனகராஜ்,** பைனான்சியர், தாராபுரம், ஆசிரியர். **V. மருதப்பா, N. இராஜேந்திரன் J.E.,** (E.B.ஓய்வு) - **இந்திராணியம்மாள், வெ. இராமமூர்த்தி,** டாக்டர். **ஹரிசங்கர், N.D., T. சக்திவேல் M.B.B.S., M.D.,** மதுரை, ஆகியோர் அனைவரும் எமது பணிகளுக்கும் உடல், உணவு, உறைவிடம் முதலியன செய்பவர்கள் அனைவருக்கும் எங்கும் எதிலும் எப்போதும் எல்லாநலமும் பெற்றுப் பல்லாண்டு வாழ்ந்தின்புற திருவருள் புரிவதாகுக. ஒத்துழைப்பு நல்கிய அனைவர்க்கும் இந்நூலை வடிவமைப்பு, தட்டச்சு, டிசைனிங் செய்து அச்சிட்டு தந்த **திண்டுக்கல் ஓவியா கிராபிக்ஸ்** நிறுவனத்தாருக்கும் எமது அன்பான ஆசிகள் உரித்தாவதாக!.... என அமைவுறும்.

உரைபதிப்பு, வெளியீடு :

R. மாணிக்கம் (எ) சுவாமி. சு. சதானந்தா

காட்டம்மன் புதூர், ஆச்சியூர் (Po) - 638 673.

தாராபுரம் வழி, திருப்பூர் மாவட்டம். செல் : 98659 65468

ஸ்ரீ ஹரி ஓம் தத்ஸத்!

பரப் பிரம்மணே நமஹ!

திருச்சிற்றம்பலம்!

1. சைதன்யம் ஸாஸ்வதம் சாந்தம் வியோமா தீதம்
நிரஸ்ஸனம் நாதபிந்து கலா தீதம் தஸ்மை ஸ்ரீ குரவே நமஹ!

விநாயகர் ஸ்துதி

2. அல்லல் போம் வல்வினைபோம் அன்னை வயிற்றிற் பிறந்த,
தொல்லைபோம் போகாத் துயரம்போம் துன்பம் போம்,
நல்லகுணம் அதிகமாம் அருணைக் கோபுரத்தே
வீற்றிருக்கும், வல்லகணபதியைக் கைதொழு தக்கால்!

3. ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பல
வன், ஞானகுரு வாணியை உள்நாடு!

4. முந்தை வேதம் முறைப்பட முற்றிட
அந்த வியாதன் தவத்திற் கிரங்கியே
எந்தை வெற்பில் எழுதும் இபமுகன்
சிந்தை வெற்பினும் தீட்டும் உரையினை.,!

5. சரஸ்வதி ஸ்துதி :
பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனும் என்பால்,
கூட்டும்படிநின் கடைக்கண் நல்காய் உள்ளம் கொண்டு
தொண்டர், தீட்டுங் கலைத்தமிழ் தீம்பால் அமுதம் தெளிக்கும்
வண்ணம், காட்டும் வெள் திமப்பேடே, சகலகலா, வல்லியே!...

ஓம் ஹ்ரீம் ஐம் சரஸ்வத்யை நமஹ!.

6. சொல்லும் பொருளும் எனநடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே நின்புதுமலர்த் தாள்
அல்லும் பகலும் தொழும் அவர்க்கே அழியா அரசும்
செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்குமே!.

7. திருவிளங்கச் சிவயோக சித்தி எல்லாம் விளங்கச்
சிவஞான நிலைவிளங்கச் சிவானுபவம் விளங்கத், தெருள்
விளங்கும் திருத்தில்லைத் திருச்சிற்றம் பலத்தே, திருக்
கூத்து விளங்க ஒளிசிறந்த திருவிளக்கே, உருவிளங்க
உயிர் விளங்க உணர்ச்சி அதுவிளங்க, உலகமெல்
லாம் விளங்க அருளுதவும் பெருந்தாயாம், மருவிளங்கும்
குழல்வல்லி மகிழ்ந்து ஒருபால் விளங்க,
வயங்குமணிப் பொதுவிளங்க வளர்ந்த சிவக்கொழுந்தே!

8. குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுந்துய
ராயின வெல்லாம், நிலந்தரம் செய்யும் நீள்விசும்பு
அருளும் அருளொடு பெருநிலம் அளிக்கும்,
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்றதாயினும் ஆயின
செய்யும், நலந்தரும் சொல்லை நான்கண்டு கொண்
டேன் நாராயணா எனும் நாமம்!.

9. சீர்கொண்ட தெய்வ வதனங்கள் ஆறும் திகழ்கடம்பும்
தார்கொண்ட பன்னிருதோள்களும் தாமரைத்தாள்
களும் ஓர், கூர்கொண்ட வேலும் மயிலும் நற்கோழிக் கொடியும்
அருட், கார்கொண்ட வண்மைத் தணிகாசலமும் என்கண் உற்றதே!

10. நாமோதிய கல்வியும் எம் அறிவும்
தாமே பெறவேலவர் தந்ததனால்
பூமேல் மயல்போய் அறமெய்ப் புணர்வீர்
நாமேல் நடவீர் நடவீர் இனியே!...

குருஸ்துதி!

12. பாசமனைத்தையும் தனித்தனிப் பரிந்திட நீக்கி
நேசமாகிய அறிவுரு நீயெனக் காட்டிப்
பேசும் ஏழ்வகைப் பிறப்புனக்கு இலைஎனப் பேசித்
தூசு, நீக்கிய, சுயம்பிரகாசனைத், தொழுவாம்!.

13. எங்கும் மங்கலம் தங்கும் கொங்கு மண்டலம்
அங்குறுபவானிப் பொருணைப் புனலிதம் செய்வதாகி
பொங்குயிர் மூலியார்ந்த பொன்னூதி மாமலை அமர்ந்து
இங்குயிர்க் கருளும் சித்தர் கொங்கண முனிவபோற்றி!

சூரியன் ஸ்துதி...

14. ஸப குஸீமஸம் காஸ்ய பேயம் மஹாத் யுத்தீம்
தமோ ரீர் ஸர்வ பாபக்னம் பிரணதோஸ்மி திவாகரம்!

சந்திரன் ஸ்துதி

15. ததிஷங்க் துஷாபாரம் ஸீரார்ணவ ஸமுத்பவம்
நமாமி ஸஸினம் ஸோமம் ஷம்போர் முகுடபூஷணம்.

16. நந்தி அருளாலே நாதனாம் பேர்பெற்றோம்
நந்தி அருளாலே மூலனை நாடினோம்
நந்தி அருளாவது என்செயும் நாடிடில்
நந்தி வழிகாட்ட நானிருந் தேனே!.

ஜெகத்குரு, ஆதிசங்கரர் ஸ்துதி.

17. அங்கணன் கயிலைவிட்டு அவணியில் அவதரித்து
நங்குரு மரபிற் கெல்லாம் முதற்குரு நாதனாகி
எங்கெனும் வேதமார்க்கம் எழில்பெறச் செய்தானந்த
சங்கர பகவற் பாதம் சம்புதான் முடிமேற் கொள்வாம்!

இந்நூலின் ஸ்தலஸ்துதி

18. தண்ணியல் வெம்மையினான் தலையிற்கடை தோறும்பலி
பண்ணியல் மென்மொழியார் இடங்கொண்டு உழல்பண்டரங்கன்
புண்ணிய நான்மறையோர் முறையால் அடி போற்றிசைப்ப
நண்ணிய நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே!
குருப் பிரம்மா குருவிஷ்ணு குருதேவோ
மஹேஸ்வர குரு சாக்ஷாத் பரப்பிரம்மம்
தஸ்மை ஸ்ரீ குருவே நமஹ!

இது தனி : கலைமகள் அலைமகள் மலைமகள் அருளாரமுதம் எங்கும் எதிலும் எவர்க்கும் எப்போதும் துணைபுரிவதாகுக!.

திருச்சிற்றம்பலம்! ஓம் தத்ஸத்!

20. தந்ததை தாயா வானும் சார்கதி இங்கா வானும்
அந்த மில்லா இன்பம் நமக்கா் வானும் எந்தமுயிர்
தானாகு வானும் சரனாகு வானும் அருட்கோன வானும் குரு!.

21. பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பெனும்
செம்பொருள் காண்ப தறிவு!.

பாயிரம் = என்றால், தாம் செய்யும் நூலினுள் பொதிந்துள்ள கருத்துக் (களை) சுருக்கியும் தொகுத்தும் வணங்கியும் கூறுவது, இது நூல் செய்வோர்களின் மரபுமாகவுள்ளது பாயிரம் அவதாரிகை = ஏழு கவிகளாக உள்ளது.

முதல்கவிக்குரிய அவதாரிகையாதெனின், தோற்றுவதற்கு முன் உள்ள நிருபாதிக (அருவமாய்) நிலையையும், பல்வேறாய் தோற்றம் அளிக்கின்ற உருவ (சோபாதிக) நிலையையும், இவ்விரண்டின் இடைநிலையாகிய, மேற்கூறிய இருநிலைகட்கும் இசைவு தருகின்ற (உருவா அருவ) நிலையையும், இவைகளைப் பிரித்து விளக்கி உபதேசித்த குருவையும், சாஸ்திர பதவிளக்கங்களும் உள்ளுணர்ந்து, பெற்ற சாக்ஷாத்கார (அநுபவநிலையும்) ஆனந்தமும் நழுவிநின்ற (துரியாதீதமாய்) நிலையின் இரகசியங்களை - ருக்வேத மகாவாக்யார்த்தமாகிய, பிரக்ஞானகனம் பிரமம் (உணர்வே பிரம்மம், எனும் பொருளை, ஒன்றோ இரண்டோ அல்லாது, எல்லாந்தாமாய் விளங்கும், அத்துவித சொரூபத்தை, மனம் வாக்கு காயங்களினால் வழிபடத்தொடங்கியவர், இக்கவியுள், தியானத்தின் நழுவிய சமாதியில் தரிசித்த, நிருபாதிகநிலையாம் கூடஸ்த பிரம்மத்தை (தனது எதார்த்த வடிவின் இயல்புகளை) யும் இவைகளில் ஒன்றுபடாத ஸ்வரூபமாகத்துதிக்கின்றார். என்பதாகும்!.

இனி கைவல்ய நவநீதம் நூலின் பாயிரம் ஏழில்,

1. பொன்னில மாதராசை பொருந்தினர் பொருந்தா ருள்ளம்
தன்னிலந் தரந்திற் சீவ சாக்ஷிமாத் திரமாய் நிற்கும்
என்னிலங் களினு மிக்க எழுநில மவற்றின் மேலாம்
நன்னிலம் மருவு மேக நாயகன் பதங்கள் போற்றி.

அ-வ.உ ரை = உயிர்களிடத்தில், குறிப்பாக, மனிதர்கள் இருபாலர்களிடத்திலும் உதிக்கின்ற ஆசைகள் அனைத்தும், பொன்பொருள் சம்பந்தமாகவும், பெண்ணாசை சம்பந்தமாகவும், காணி நிலம் பூமி சம்பந்தமாகவும் இருக்கின்ற மூன்று ஆசைகளிலும் வசப்பட்டு, அவைகட்கு அடிமை ஆகி உழலும் அஞ்ஞானிகளின் இதயாம்பரத்திலும், மேற்காட்டிய மூன்றாசைகளின் சம்பத்துக்களின் அநுபவங்களும் முற்றும் நிலையாமை என உள்ளுணர்ந்து துக்க சொரூபங்கள் என விடுத்தும், வரவு செலவு, சுகம், துக்கம், வெற்றி தோல்வி, பிறப்பு இறப்பு, இரவு பகல், முதலான இருமை வினைப்பாடுகளின் பயன்களையும் உள்ளூறத் துறந்து - விட்டு - திருவடி தரிசனம் அடைந்துள்ள, ஆசை அற்ற மெய்ஞானிகளின் இதயாம்பரத்திலும், ஊடுருவி விளங்கியும், மண், நீர், நெருப்பு, காற்று, என்ற நான்கு மகா பூதங்களையும், இவைகளின் இயல்பான சங்காதங்களையும் தன்னகத்தே கொண்டிலங்கும் ஆகாசம், தான் எதனிடத்தும் தோய்வுறாமல் பற்றின்றி தானாகவே சாக்ஷிமாத்திரமாய் நடமிடும் கூடஸ்த சைதன்யமாய், எங்கும் தானாய் நிறைந்துள்ள பரிபூரண சொரூபமே தான்எனவுணர்ந்து நிற்குமது, அறிவுக்கும் அறிவாகிய பேரறிவுப்பா வெளியாகும்! இது சுயேட்சை, விசாரணை, தனுமானசி, சத்துவாபத்தி, அசம்சத்தி, பதார்த்தாபாவனை, துரியமென்கின்ற ஞானபூமிகள் ஏழினும் மிஞ்சி (அதீதமாய்) நின்ற நன்னிலமாந் துரியாதீதமே தானாய்த் திகழும், ஆதிநடுஅந்தம் கடந்து நின்றிலங்கும் பிரம்ம ஸ்வரூபத்தினை! நமதுள்ளத்துள் பாலாலயம் செய்து தியானித்து வணங்குவோம். (என்றவாறு)

இன்னும், ஏகநாயகமே, மெய் வாய் கண் மூக்கு செவிகளின் வாயிலாக, பஞ்சபூதங்களின் விசயமான, சப்தம் தொடுவுணர்வு ரூபம் சுவை நாற்றம், எனும் குணங்களை அறியும் அந்தக்கரணங்களின் கூட்டுறவு முயல்வுகளையே ருக்வேத மகாவாக்யம் பிரஞ்ஞானம்

பிரம்மம் என்கிறது. ? பிரஞ்ஞா, என்பது - உணர்வே பிரம்மம் - அறிவு என்பதாகும், நித்யானந்தமாயும் சத்தியமாயும் எல்லாவற்றையும் அறிவதாயுமுள்ள அதீதசாக்ஷாத்காரம் பிரம்மமாகவும், இதுவே, கருவி காரணங்களுடன் கூடி விசயாதிகாரியங்களில் பொருந்தும் போது, அவைகளின் மயமாயும் தாக்கற்று இருக்கும் நிலையே பிரத்யேக ஆத்ம சொரூபம் என்றும் உபாதியற்ற பிரம்மமாகவும், உபாதியுடன் கூடிய போது (அதாவது - சீவசுபாவ குணதோஷம்) ஆத்மாவாகவும், இன்னும் அருவமாக, உருவாருமாக, உருவமாகவும் வணங்கி துதி செய்துள்ளார், இந்நூலாசிரியர்! என்றவாறு

2-வது கவிக்குரிய அவதாரிகை - இச்செய்யுளில் முற்கூறிய அத்துவிதவஸ்துவை, சகசநிஷ்டையில் சுலட்சணமாக விளங்கிய சுயஞ்சைதன்யமாகத் துதிக்கின்றார்!.

2. **ஈன்றளித் தளிக்குஞ் செய்கைக் கேதுவாம் அயனாய் மாலாய்**
 ஆன்றவீ சனுமாய்த் தானே வளந்த மூர்த் தியுமாய் நிற்கும்
 மூன்றமுத் தனுமாய் இன்பப் புணரியா தவனாய் நாளும்
 தோன்றிய விமலபோத சொரூ பத்தைப் பணிகின் றேனே.

அ-வ.உரை = இது, அதர்வண வேதமகா வாக்கியமான அயம் ஆத்மா பிரம்மம் - என்பது, எல்லாம் தனக்குச் சம்மதமாம், எதனோடும் சார்புபடாதவாறும், சராசரமும் தாமே என்றும் கொண்டதாம். உற்பத்தி இருப்பு நாசம், எனும் மூன்று தொழில்களைச் செய்தருளுகின்ற பிரம்மனாகவும், மகாவிஷ்ணுவாகவும், சங்கரனாகவும், மிகவும் முயன்று மோக்ஷகைவல்யத்தை உணர்ந்துள்ள, பரமுத்தர்களாகவும், இன்னும் அநேக சீவவடிவங்களாகவும் அண்டபிண்ட சொரூபங்களாகவும் மதுரானந்த கடலினுள்ளிருந்து எழும் ஞானசூரியனாகவும், சூரிய சந்திரர்க்கு உதய அஸ்தமனம் உண்டு. இவையின்றி எப்போதும் சுயமாய் சதாவுதயமாய் (என்னுள்) தோன்றி அருளும் குற்றம்தோஷ மற்ற அறிவுப்பர வெளியாய் ஒளிரும், பிரகாசசொரூபத்தைப் பணிந்து வணங்குகின்றேனே. (எ-று)

(அவதாரிகை) முன்கண்ட, பிரம்ம பரப்பிரம்மமாகிய, சச்சிதானந்தமய நிஜஞான வடிவாய்த்திகழும் அருளிறையை, சாக்ஷாத்காரமாயும் அதீதமாயும், - உருவங்களாயும், அருவமாயும் துதித்தவர் இக்கவியில் அருவஸ்வரூபமாகத் துதிக்கின்றார்.

3 - எவருடைய யருளால் யானே யெங்குமாம் பிரம்ம மென்பால்
கவருடைப் புவன - மெல்லாங் கற்பித மென்றறிந்து
சுவரிடை வெளிபோல் யானென் சொரூப சுபாவ மானேன்
அவருடைப் பதுமப் பாதம் அனுதினம் பணிகின் றேனே!

அ-வ.உரை = அந்தக்கரண கூட்டுறவினால் எனது அநுபவ நிதர்சனமாய் திகழும் எனது நிஜஸ்வரூபத்தை, எனக்குள்ளவாறு அருளிச்செய்தவரை இன்னாரென்று சுட்டிக்காட்ட இயலாது. எங்கும் விடுப்பின்றி பரிபூரணமாய் நிறைந்திருக்கின்ற பிரம்மஸ்வருமாயும், என்னிடத்தில் தோற்றி விரிந்திருக்கின்ற பல்வேறு வடிவாயுள்ள உலகம் முழுவதும் பொய் என்று அறிந்த போது, மடாகாயத்தினுள் அடங்கிக்கிடக்கும் கடமும் கடாகாயமும் போல், (மடம் என்பது வீடு, கடம் - அதனுள்ளிருக்கும் குடம் - என அறியவும்) களக்கமின்றி நானென்றும் அதுவென்றும் பகுப்பின்றி பிரம்மமும் அதன் சுபாவமுமாய் உள்ளேன்! தன்னையும் தனக்கன்னியமாய் வருவதையும் தனக்குள்ளேயே இரண்யகற்பம்போல, மறைத்துக் கொண்டிருக்கின்ற உருவாருவமெனும் நடுநிலையைத், தாமரை மலர்போன்று மென்மையும் நுண்மையுமான திருவருளைச்சதாகால பூஜைசெய்து வணங்குகின்றேன். (எ-று)

எல்லாமாய் அல்லவுமாய் விளங்கும் தன்னைத் தன்னிடத்தே தானாயிருந்து, என்னை இவ்வாறு நீ என, எனக்கருளிய துரிய குருவை வணங்கியது எனக் கொள்க!.

அ-கை- இதில் சற்குருவின் சொரூபத்தைச் சாக்ஷாத்காரமாகத் துதிக்கின்றார்.

4. என்னுடை மனது புத்தி யிந்த்ரிய சரீர மெல்லாம்
என்னுடை அறிவினாலே யிரவிமுன் இமமே யாக்கி
என்னுடை நீயும் நானும் ஏகமென் றைக்யஞ் செய்ய
என்னுடைக் குருவாய்த் தோன்று மீசனை யிறைஞ்சி னேனே.

அ-வ, உரை = என்னுடைய உள்ளம் மனம் புத்தி சித்தம் அகங்காரமெனும் அந்தக்கரணங்களும், மெய் வாய் கண் மூக்குச் செவி முதலிய ஞானேந்ரியங்கள் ஐந்தும், சத்துவ குணத்தின், கூட்டுறவு மற்றுந்தனித் தன்மையாய் ஞானசாதனமாய் திகழ்ந்த பத்தும், வியானன் பிராணன் அபானன் சாமானன் உதானன் முதலிய பிரதான வாயுக்கள் ஐந்தும், வாய், கை, கால், மலக்கருவி, ஜலக்கருவி முதலிய தொழிற்கருவிகள் ஐந்தும், ரசோகுணத்தின் கூட்டுறவு மற்றுந் தனித்தன்மைகளினால் செயல்படும் பத்தும் ஆகிய இந்த இருபது தத்துவங்களையும், தோல், மாமிசம், இரத்தம், நரம்பு, எலும்பு, கொழுப்பு, முதலிய அன்னமயவடிவமான தூல சரீர தத்துவங்கள் ஆறும், ஆக இவ்விருபத்தி ஆறு தத்துவ கூட்டப் பணிகளையும் அதனதன் அவஸ்த்தைகளையும், சற்குரு நெறியில் நின்று விசாரணைசெய்து நீங்கினேன். அவ்வமயம் எனக்குள் விளங்கிய காரணகுருவின் தரிசனபலத்தால் மேற்காட்டிய இருபத்தாறு தத்துவங்களின் நிலைப்பாடுகளும், விண்ணை மறைந்திருந்த மேகங்களை போலும் மலையை மறைத்திருந்த பணியைப் போலும், மாருதம் கண்டு மறைந்த மேகங்களாகவும், சூரியனைக் கண்ட பனியைப்போலும் கலைந்திடவே, நானென்ற நீயும் நீயென்ற நானும் ஒன்றே என்றும் அதுவே அத்வைத அநுபவநிலை என்றும் அருள் ஒளியை ஏற்றுவித்தது, எனது நெடும்பிறவிகளில் செய்த நிஷ்காம புண்ணிய பலமும் மோக்ஷார்த்தநிலை அடைய வேண்டும் என்ற விருப்பமும் வைராக்கியமும் ஒருசேர இவ்வுணர்களே தடித்து, நீரே உப்பாகவும் உப்பே நீராகவும் ஆவது போல எல்லாம் வல்ல அத்திருவருளே குருவடிவாகி திருமேனிதாங்கி எனக்குப்புறம்பிலும் உள்ளிலும் ஆச்சாரிய மூர்த்தமாயும் அமூர்த்தமாயும் வந்து அருள்பாலித்த, அந்தரியாமியாம் குருவை வணங்குகின்றேன்! (எ-று)

அ-கை = முன் பல ஜென்மங்களில் இயற்றிவந்த புண்ய பலத்தாலும், மோக்ஷார்த்தம்பெறும் இச்சையினாலும், சிரவணாதி சாதனங்களாலும் எளியேனை வலிந்து வந்துள்ளாண்ட தனது ஞானாச்சாரியரை வணங்கி உள்நெகிழ்ந்து தெளிந்து, அவ்வந்தரியாமியின் உந்துதலால் தாம் கூறுகின்ற நூல் முகம், யாதெனின், தாம்கூறும் ஞானநூலின் விசயமும், இவ்விசயத்தால்

உண்டாகும் பயனும், இந்நூலின் கருத்துத் தொகுப்பிற்கும், இதுகூறிய விசயத்திற்கும் உள்ள சம்பந்தமும், இது கேட்டு உய்வுபெறத்தக்க அதிகாரியும் (பக்குவனின் இயல்பும் என) என்ற அநுபந்த சதுட்டயம் (அதாவது) நான்குவித உபதேசம், இந்நான்கும், வணங்கி குருவைப் பணிந்து கேட்கும் சீடன் மாணாக்கருக்கு அறியவேண்டியதை விரித்துரைக்க வேண்டியது அவசியமும், நூல் செய்வோரின் மரபும் இதுவாதலால், இவ்கவியில், அநுபந்தம் நான்கில் விசயமும் அதிகாரியும் என்றிரு இலக்கணங்களை உபதேசிக்கின்றார்.

5. **அந்தமுந் நடுவு மின்றி யாதியு மின்றி வான்போல்**
   சந்தத மொளிரும் ஞான சற்குரு பாதம் போற்றிப்
   பந்தமும் வீடுங் காட்டப் பரந்தநூல் பார்க்க மாட்டா
   மந்தரு முணரு மாறு வஸ்துதத் துவஞ்சொல் வேனே!.

அ-வ.உரை = தோற்றம் இருப்பு நாசமின்றி, ஆகாயத்திலிருந்து பூமி நீர் தீ காற்று முதலிய நான்கு பூதங்களும் தோன்றி இருந்து நாசம் ஆனாலும், இவைகளால் யாதொரு தாக்கமுமின்றிய ஆகாசத்தைப் (வெளியை) போல, அசங்கமாய் விளங்கும் ஞானாச் சாரியரின் மென்மலர்ப் பாதம் வணங்கி, முத்திமார்க்கமாகிய ஆத்திகமும், இதற்கெதிர்மறையான நாத்திக மார்க்கமும் தெரிவித்து, சீடனது அஞ்ஞான முடிச்சை அவிழ்க்கும் உபாயமாக, மெய்ப்பொருள் எனும் பரவஸ்து தத்துவத்தை இனி முறைப்படுத்தி எளிதில் யாவரும் உணரும்படி கூறுகின்றேன்?

இக்கவியில், ஈற்றில், மைந்தர் (சீடர்)கேட்பாயாக? எனவும், சில பதிப்புகளில், மந்தர் என்றும் வரும் இதனால் பிறழ்ச்சி இல்லை.

தேசம் காலம் வந்துக்கள் விசாரிக்குமிடத்து நாசமாயினும் தான் சேதமற்று இருத்தலின் அந்தமின்றி எனவும், எப்போதும் யாதொரு இடையீடுமின்றி பூரணானந்தமாயிருத்தலால் நடுவின்றி என்றும், யாதொரு பிரகாசத்தையும் கவர்ந்திடாமல் சதோதயஞ் சுயம்பிரகாசமாய் விளங்குவதால், தனக்கு ஆதிநடு அந்தமின்றி சுத்த சைதன்ய சச்சிதானந்தமே குருவின் ஸ்வரூபமாதலால், சதாகாலமும் என்னுள் (சற்குரு) பிரகாசிக்கின்றனன், என்றார். வானில் காணும் சூரியனும் நீருள் காணும் சூரியனும்போல அதுவும்

நானும் வெவ்வேறின்றி நிற்கும் அருட்பரவெளியைப் பணிந்து வணங்கியும், பக்குவர்கள் அவசியம் அறிய வேண்டிய அநுபந்த சதுட்டயங்கள் நான்கில் இக்கவியின் மூலம் அதிகாரி விசயம் எனுமிரண்டையும் கூறினேன். அதாவது, சாத்திரங்கள் முழுமையும் தேடிக்கண்டு வாசித்துணர்ந்து தெளிதல் வெகுபிரயாசையும் தீராத துன்பமென்றுங் கருதி, பலஞானசாத்திரங்கள் கூறும் ஞான விசயங்களின் சாரமாய்த்திகழும் தன்னை விரைவில் தெரிந்துகொள்ளும் இச்சையுடையவர்கள் எளிதில் உணரும்படி உணர்த்தியுள்ளதால், விரிந்து கிடக்கும் நூல்களை ஆராயும் அவாவினை விட்டொழிந்திருப்பர், இக்கவியின் உள்ள மந்தர், மந்ததரர், தீவிரர், தீவிரதரர் எனும் நான்கு பக்குவர்களும், எளிதிலுணரும்படி வஸ்துதத்துவத்தை விளக்கமாய் உபதேசித்துள்ளேன்.

இன்னும், இந்நூலை குரு முன்னிலையில் கேட்டு வாசித்துணரும்பக்குவம் நிறைந்த அதிகாரி (உரியவனை)யும், இந்நூலின் கூறப்படுகின்ற, வித்யா விருத்தி எனும் விசயானந்தத்தையும், என்ற இரண்டும் கூறியவர், இனிவரும் ஆறாவது கவியில் சம்பந்தம் பயன் எனும் இரண்டையும் கூறுகின்றார் (எ-று)

(அ-கை - இக்கவியுள் சம்பந்தமும் பயனும் கூறுகின்றார்)

6. படர்ந்த வேதாந்த மென்னும் பாற்கடல் மொண்டு முன்னூற்
குடங்களி னிறைத்து வைத்தார் குரவர்க ளெல்லாங் காய்ச்சிக்
கடைந்தெடுந் தளித்தே னிந்தக் கைவல்ய நவநீ தத்தை
அடைந்தவர் விடய மண்டின் றலைவரோ பசியில் லாரே.,

அ-வ.உரை = நான்கு வேதங்கள் ஆறுசாத்திரங்கள், நூற்றி (உப எட்டு நிஷத்துக்கள்) இரண்டு இதிகாசங்கள், பதினெட்டுப் புராணங்கள், என விரிந்து கிடக்கின்ற ஞானசமுத்திரத்திலிருந்து, பல்வேறு நூல் பிரிவுகளாக்கி குடங்களில் நிறைத்துத் தனித்தனியே வைத்துள்ளனர். நமது முன்னோர்களான தீர்க்கதரிசிகள், அவைகளை நான்பெற்ற குருவுபதேசத்தின் விசாரணையால், ஞான அக்னியால் காய்ச்சி சிரவணஞ்செய் மனனத்தால் கடைந்து அதில் மிதந்துள்ள, தெளிதல் எனும் வெண்ணையினை ஒருசேரத் திரட்டிக்

கைவல்ய நவநீதத்தை கொடுத்துள்ளேன். இதனை விசுவாசத்தோடும் புசித்து உட்கொள்பவர்கள், நித்ய திருப்தியை அடைந்தவர்களாதலால், மூவாசை எனும் விசயானந்தமெனும் மண்ணைப் புசிப்பார்களோ? பவசாகரத்தினுள் மூழ்குவார்களோ? புசியார்கள் பவக்கடலினுள் மூழ்கவுமாட்டார்கள், (என்றவாறு).

வேதங்களின் முடிவாகிய மகாவாக்கியம் கூறிய ஒவ்வொரு மொழியும், அது சீடனின் உணர்வு விழிக்குள் மலர்ந்து எழும் அறிவுதயமாகும்படி, அமைந்துள்ளது, அதெப்படி? எனின், 21 - சாகைகளை தன்னகத்தே கொண்டுள்ள ருக்வேதம், பிரஞ்ஞானம் பிரம்மம் என்கிறது. 101. சாகைகளை தன்னகத்தே கொண்டுள்ள யசுர்வேதம் அகம்பிரம்மாஸ்மி என்கிறது 1000 - சாகைகளைத் தன்னகத்தே கொண்டுள்ள சாம வேதம். தத்துவமசி (தத்-துவம்-அஸி) என்கிறது. 9-சாகைகளை தன்னகத்தே கொண்டுள்ள, அதர்வணவேதம் அயம் ஆத்மா பிரம்மம், என்கிறது. முறையே மனனம் 2-அநுபூதி, 3-உபதேசம், 4. சம்மதம் வாக்கியங்களாகும்.

முந்திய, 5-6- கவிகளில், 1. இந்த ஞானநூலை விசாரணைசெய்து அறிந்துய்வுபெற விரும்பும் அதிகாரியையும், 2, மோக்ஷார்த்தமெனும் அதிரகஸ்யா ரகஸ்யார்தம் பொதிந்துள்ளது என்ற ஞான விசயமும், நூலினுள்ள விசயத்தை உள்ளத்தினூடு தொடர்பு (விசுவாசம்) படுத்தும் சம்பந்தமும், இவைகளால், விசாரணை விருப்பம் தெளிவு நிச்சயமென்று பெறும் உன்னும் மோக்ஷார்த்தமே, அதாவது, சீவனே சிவமாய், இன்னும் ஆத்மாவே பரமாத்மாவாயுள்ளூற நித்ய திருப்தராய் உவந்திருத்தலே பயனும், என்ற அநுபந்த சதுட்டயங்களின் இலக்கணங்களை, (அர்த்தாபத்தி எனும் பிரமாணத்தால்), புகையிருக்குமிடம் நெருப்புமிருக்கும் என்பது போல, உபதேசித் தருளியுள்ளார்கள்,

எதிரின்தொடர் : பிரமமெனும் காமதேனு விடம் சுருதி சாத்திரங்கள் எனும் கரந்தபாலை விசாரமெனும் அக்கினியாற் காய்ச்சி, பூர்வபக்ஷமெனும் நீர் சுண்டிடச் சித்தாந்தமெனும், மதுரமாக்கி, விருத்திஞானமெனும் பிறைகுத்தி, உபதேசமெனும் மத்திட்டு, மனனமெனும் கடைதலைச் செய்து, அதிற்திரண்டெழுந்த அநுபவ ஆய்ச்சியமாம் வெண்ணையை, நவநீதத்தை அடைந்த

னுபவித்தவர்களே நித்திய திருப்தியாயினோர் அன்றி, இதனைப் புசிக்குஞ் சமர்த்தற்ற பக்குவம் அல்லாதோர் விசயானந்த மெனும் மண்ணைப் புசித்தவர்களாம், முத்தி ஆனந்தமடையும் இச்சையில்லாதவர் பசியிலார்! என்றா ஸ்ரீலஸ்ரீ தாண்டவராய சுவாமிகள்., (எ-று).

7. **முத்தனை வேங்கடேச முகுந்தனை எனையாட் கொண்ட**
   கத்தனை வணங்கிச் சொல்லும் கைவல்ய நவநீ தத்தைத்
   தத்துவ விளக்கமென்றுஞ் சந்தேகந் தெளித லென்றும்
   வைத்திரு படல மாக வகுத்துரை செய்கின் றேனே.

அ-வ.உரை = பதி பசு பாசம் எனும் மூவித கட்டுப்பாடுகளையும் நீக்கும், ஸ்ரீமத் நாராயணனை, என்னை ஆட்கொண்டருளிய இறைவனை வணங்கி, இனி கூறிடும் கைவல்யநவநீதம் ஞானசாத்திரத்தினை, தத்துவ விளக்கம் என்றும், சந்தேகந்தெளிதல் என்றும் திருநாமம் (பெயர்) தந்து இருபகுதிகளாகப் பிரித்துக் கூறுகின்றேன்!. என்கிறார் (விளக்கம், வெளிப்படை) (எ-று)

அ - கை - முற்கவியில் கூறிய பகுதிவகைகள் இரண்டினுள், தத்துவத்தை விளங்கச்செய்யும் பகுதியைமட்டும் இது கேட்கும் அதிகாரி (பக்குவர்)க்கு முதன்மையாகச் சாதன சதுட்டயங்களின் இலக்கணங்களைக் கூறுகின்றார். கைவல்ய நவநீதம் தத்துவ விளக்கம் பகுதியின் நூல்வரவு.

1. **நித்திய வநித்தி யங்கள் நிண்ணயந் தெரிவி வேகம்**
   மத்திய விகபரங் களில் வரும்போகங் களின் நிராசை
   சத்திய முரைக்க வேண்டுஞ் சமாதி என்றாறு கூட்டம்
   முத்தியை விரும்பு மிச்சை மொழிவர் சாதனமிந் நான்கே.

அ-வ.உரை = நித்தியம் அநித்யம், - நிலைத்தது, நிலையாதது, என்றும், இன்னும் காரியப்பட்டுவந்துள்ள நாமரூபப் பொருள்கள் அனைத்தும் அநித்தியம் - உண்மையில்லாதது, இவைகளுள் உருவாவதற்கு ஏதுவாயும் மூலமாயுமுள்ள காரணப்பொருளே, நித்தியம் என அறிகின்ற பகுத்தறிவே விவேகம், இகலோக வாழ்வு பரலோக வாழ்வு மத்தியலோகவாழ்வுகளில் நாம்பெற்று அநுபவிக்கும். (பெற்றோர், மனைவி, மக்கள், வீடு, பொன் பொருள்,

ஆடுமாடு நிலம் ஆடை ஆபரணம் வாகனம்) செல்வங்களின் சுகபோகங்களில், நிராசை அபிமானமின்றிப் பற்றற்ற மனஇயல்பு), சாதனம் அப்யாசிக்கு பக்குவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய, சமதமாதிகள் எனும் சத்சம்பத்துக்கள், இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ எனவரும் அச்சம் நீங்கிடவும் இனிப்பிறவா நெறியான, மோக்ஷார்த்தமெனும் ஐக்கிய முத்தியினை இப்பிறவிலே இன்றே இப்போதே அடைய வேண்டும் என்ற முமூட்சுத்வம் (விருப்பம் விடாமுயற்சி வைராக்யம், என இந்த நான்கையும், இந்நூல் கேட்கும் அதிகாரிகள் அவசியம் கடைப்பிடிக்க வேண்டிய சாதனங்கள் நான்கும் என்று, சான்றோர்கள் கூறியுள்ளனர், என்கிறார் (எ-று).

2. சமந்தமம் விடல்ச கித்தல் சமாதானஞ் சிரத்தை யாறாம்
சமமகக் கரண தண்டந் தமம்புரக் கரண தண்டம்
அமர்மனை விவகாரங்கள் அருகலே விடலென் றாகும்
அமர்செயுஞ் சுகந்துக் காதிவரினனு பவித்தல் சகித்தல்...

அ-வ, உரை = ஞான விருப்பமும் விடா முயற்சியுமுடைய பக்குவன், இந்த ஆறு சத்சம்பத்துக்களையும் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாம், இதில் சமம், என்பது, அந்தக்கரணங்களின், நினைவுகளை செம்மைப்படுத்தி, தீயதோஷபாப சங்காதங்களின் சிந்தனை எழுமானால், எழுந்த அந்த இடத்திலேயே அழித்துவிடுதலாகும், குற்றவாளிகட்கு தண்டனை கொடுத்து அடக்குவது போல, உள்விரியும் மனோராஜ்ஜிய விவகாரங்களை முடக்கி, சிரவணம் மனனம் தியானம் போன்ற நற்சிந்தனைகளில் செலுத்துவதே சமம் ஆகும். தமம் என்பது, புறக்கருவிகளாகிய ஞானேந்திரிய கருமேந்திரியங்களை தனது கட்டுப்பாட்டுக்குள்ளே வைத்திருப்பதாகும். அதன் இஷ்டப்படியே விட்டுவிடலாகாது, விடல் என்பது தமது பூர்வகர்ம விதிப்படியே நம்மை எதிர்கொண்டு வந்த பெற்றோர் மனைவி, மக்கள் சுற்றம் இவைகளின் சுகதுக்கபயன்பாடுகள் வந்தபோது, அவைகளில் யாதொன்றிடத்தும் பற்று வைக்காமல் அபிமானமின்றி, உள்ளே விடுவதே விடல் என்பதாகும். உடலோடும் மனதோடும், உலகத்தோடும் உறவோடும் உடமைகளோடும்

கூடியனுபவிக்கின்ற போதில் நடந்துவிட்ட காரியங்களினால் வரும், சுகந் துக்க நஷ்ட மானா அவமானங்களை எல்லாம், தான் செய்ய வந்துள்ளதென எண்ணிப் பொறுத்துக் கொள்வதே, சகித்தல் என்பதாகும். இந்த 2-வது கவியுள், வந்த சமதமாதி சத்சம்பத்துக்களில் நான்கை விளக்கினார். இனிவரும் கவியில் எஞ்சிய இரு சம்பத்தும் கூறுகின்றார் எனக் கொள்க!" (எ-று)

இது, குளகம் - செய்யுள் மரபு

3. சிரவணப் பொருளைத் தானே சித்தஞ் சிந்திக்கு மாறு
சரசமாய் வைக்கு மித்தைச் சமாதான மென்பர் மேலோர்
பரம சற்குரு நூலன்பு பற்றலே சிரத்தை யாகும்
வரமிகு சமாதி யாறின் வகையின் சொற்பொரு ளிதாமே...

அ-வ. உரை = குருவின் முன்பு தாம்கேட்ட வேதாந்த வாக்கியங்களைச் சிரவணம் (கேட்டல்) செய்த விசயார்த்தங்களையே அடிக்கடி உள்மனதில் சிந்தித்திருத்தலும் , மனம் லயம்கொண்டு அநுபவித்துக் கொண்டும், கொஞ்சம் கொஞ்சமாக, குருவுபதேசம் மற்றும் சாத்திரப்பயிற்சிகளை உள்மரித்தலே, சமாதானம் என்பர் மேலோர்! இன்னும், குருவுபதேசம் சாத்திரம் கூறும் ஞானவிசய வித்யானந்தமே நமக்குவாய்த்த நிலையான பொருள் என்று எண்ணி அதனிடத்தில் மாறாத அன்பும் விருப்பமும் முயற்சியும் கொண்டிருத்தலே சிரத்தை (தீவிர முயல்வு) என்பதாகும்...

இன்னும் அநித்ய வஸ்துகளினின்றும் நீங்கி, நித்யவஸ்துவினை அடைவதற்கு உபாயமான குணங்களையும் சாதன சம்பத்துக்களாகக் கூறியுள்ளார் என்பதுமாம்... (எ-று)

அ-கை- மேற்கூறிய சமதமாதி சாதனங்களாறும் ஒரு சாதகனுக்கு, இன்றியமையாத செல்வம் அருள் நிதியம், இதனால் உண்டாகும் பயன் இன்னதன்மையது என இனிக் கூறுகின்றார்!.

4. சாதன மின்றி ஒன்றைச் சாதிப்பாருலகி லில்லை
ஆதலால் இந்த நான்கு மடைந்தவர்க் கறிவுண்டாகும்
நூதன விவேகியுள்ளினுழையாது நுழையு மாகில்
பூதசென் மங்கள் கோடி புனிதனாம் புருட னாமே!...

அ-வ, உரை = குழந்தாய்? நமது பாவபுண்யங்களை கருமங்கள் மூலம் தீர்த்துக் கொள்வதற்கு நம் தூலசரீரம் கிடைத்துள்ளது. ஆயினும், இவ்வுடலை இயக்க, பிராணாதிகளும், பூத விசயங்களை அறிந்திட ஞானேந்திரியங்களும், காரியங்களை செய்திட கர்மேந்திரியங்களும், உலகவிசய விவகாரங்களைப் பராமரித்து ஒப்புரவு செய்திட உள்ள மாதி அந்தக் கரணங்களும் நமக்குச் சாதனமாக இயல்பாகவே வாய்த்திருக்கிறதல்லவா? இப்படியே, ஜீவனை ஜெகத்தை, சிவத்தை அறிந்து ஐக்யமுத்தி அடையவே, நித்தியம் அநித்தியங்களை பகுத்தறிகின்ற விவேகம், நிராசை, மோக்ஷயிச்சை, முமூட்சுத்வம் என்கிற, வைராக்யம் இந்நான்கு சாதனங்களும் வாய்க்கப் பெற்றவர்களுக்கே ஞானோதய முண்டாகும், எடுத்துள்ள இந்த ஜென்மத்திலேயே இச்சாதனங்கள் விவேகிகளிடத்தும் நுழையாது, அப்படி நுழைந்துள்ளதானால், இவன் முன்அனந்த ஜெனனங்களில் மோக்ஷார்த்தத்தை விரும்பிப் பழகிய சாதனாதிப் பயன்களே இப்பிறவியில் வாய்த்துள்ளது. இவனே புனிதன் புருசோத்தமன் என்று அறிந்துய்வு பெறலாம்! அகத்தில் நான் யார் எத்தன்மையன் என்றறிய, இவ்விவேகாதி சாதனங்கள் இன்றியமையாத அவசியமாகும் என்பதாகும்...

அ-கை- மேற்கூறிய அரிய சாதனங்கள் வாய்த்துள்ள சீடனின் தீவிரதர பக்குவத்தை அறிவிக்கின்றார்.

5. இவனதி காரி யானோன் இந்திரியங் களா லும்
புவன தெய்வங்க ளாலும் பூதபௌ திகங்களாலும்
தவன மூன்றடைந்து வெய்யிற் சகித்திடாப் புழுப்போல் வெம்பி
பவமறு ஞான தீர்த்தம் படிந்திடப் பதறினானே...

அ-வ, உரை = முற்கவியிற் கூறப்பட்ட சாதனங்களை உடையவனே இந்நூல் கேட்டுணர்தற்குரிய அதிகாரியாவன், இவனது வாழ்வில் முத் துக்கங்களான, 1. ஆதியாத்மீகம் - உடலுள் ஏற்படும் பிராணாதி இருதய சம்பந்தமான நோய், 2 - ஆதி தெய்வீகம் அசத்தியம் பேசிசெய்த தெய்வநிந்தைகளினால் பூர்வம் செய்த பாவகர்மங்களாலும் எதிர்பாராமல் ஒன்றிருக்க ஒன்றாய் விளைவுகள் தருபவைகள் ஆகும். 3- ஆதிபௌதிகம், இடி, மின்னல், வெப்பம், குளிர், சூறை, காற்று, வெள்ளம், பூமி அதிர்வு, தீயும்,

பூராண், தேள் பாம்பு மற்றுமுள்ள மிருகங்களினாலும் வருகின்ற துன்பங்கள் என்ற, இம் மூன்று துங்கங்களிலும் உழன்றுவருந்தி, ஐயகோ, உலகே மாயம், வாழ்வே மாயம் நிலை ஏது நாம் காணும் சுகமே மாயம் எனப்புழுங்கி மணற்பரப்பில் ஊர்ந்து செல்லும், எலும்பில்லாத புழு, சூரிய வெப்பம் மேலேசுட, மணலின் சூடு கீழே எரிக்க, தப்பிக்க வழியும் இயலாமையுடனும் துடிக்கும் அதுபோல, இவனும் அத்துக்கங்களால் விழுங்கப்பட்டுத் துன்பத்துக்கு ஆற்றா மல், தலையில் தீப்பற்றி எரியும்போது எவ்வளவு விரைவில் நீர்தேடி அணைத்துக் குளிர்ச்சியும் சுகமும்பெற முற்படுபவனாய் வினைகளை பாவங்களை பிறவிகளை ஒழிக்கின்ற, ஞானானந்த சாகரத்துள் மூழ்கி இன்புறத் தீவிரமாக - அதிகப்பிரயத்தன வைராக்யங்கொண்டு தேடலுற்றான்... (எ-று).

அ-கை-பொருளற்றவைகளைப் புணர்ந்து துன்புற்று விடு தலைபெற்று, இவைகளுக்கு மாற்றமான, பிறவிப்பிணியும் தீர்க்கும் மாமருந்தாகிய ஞானானந்தம் எங்கே எப்போது எவரிடத்துள்ளது, அவர் எங்குள்ளார் என்று தேடி அலையும் தீவிரதரப் பக்குவனின் முன், ஞானாச்சாரியார் தரிசனம் ஆகின்றார் என்பதாம்.

6. ஆனவிம் மனவை மக்கள் அர்த்த ஏ டணைகள் மூன்றில்
கானவர் வலையிற் பட்டு கைதப்பி யோடுமான் போல்
போனவன் வெறுங்கை யோடே போகாத வண்ணஞ் சென்று
ஞானசற் குருவைக் கண்டு நன்றாக வணங்கி னானே...

அ-வ, உரை = மண பெண் பொன் மற்றும் உடமை என்ற பலவும் உலக உறவுகளும் இவைகளை அநுபவித்த இவ்வுடலுந்துன்பம் என்று விட்டு வெளியேறிய, தீவரதரப் பக்குவன், வேடன்விரித்த வலையில் மான் ஒன்று சிக்கிக் கலங்கியிருந்தது, மானின் நண்பன் காகம் வந்து மானிடம், நண்பா கவலைப்படாதே காலையில், வேடன், உன்னிடம் வந்ததும் ஒருமுறை சத்தமிடுவேன். அப்போது நீ மூச்சையடக்கி கண்களை மூடிப் படுத்துக்கொள் நீ இறந்ததாகக் கருதி வேடன் வலையை அவிழ்க்கத் தொடங்கியதும் ஒருமுறை சப்தமிடுவேன். நீ உன்னை விடுவித்துக் கொள்ளத் தயாராய்க்கொள். அந்த வேடன் வலையை முற்றும் அவிழ்த்துவிட்டபின் உடனே ஒரு சப்தமிடுவேன். நீ இந்த மூன்றாது

சப்தங்கேட்ட உடனே துள்ளி எழுந்தோடித்தப்பித்துவிடு, என்ற காகத்திற்கு நன்றி கூறி அப்படியே இருக்க, காலை வந்தது வேடனும் வந்தான். கூவியது, காகம், வேடன் வலையை அவிழ்க தொடங்கியதும் காகம் கரைந்தது. வலையை அவிழ்த்து முடியவும் காகம் கரைந்தது வலையை அவிழ்த்து முடியவும் காகம் கரைந்தது அவ்வளவு தான்! இறந்து கிடப்பதுபோல் பாசாங்கு கொண்டிருந்தமான் தன் நண்பன் கூறிய தந்திரப்படியே துள்ளிக்குதித்து ஓடிப்போய் தப்பிப்போனமான் கண்டம் விட்டு கண்டம் தாவி மீண்டும் வலையனின் கண்ணிலும் படாமல் மறைந்துவிட்டது. இதுபோல இல்லத்தை மனைவிமக்கள் பெற்றோர் உறவு உடமைகளை துன்பங்கள் என விட்டு ஓடிவந்த தீவிரதர பக்குவன், வழியில் சாக்ஷாத் சிவபரம் பொருளே குருமூர்த்தமாய் அமர்ந்து இருந்த ஞானாச்சாரியரைக் கண்டு, வில்வம் பூபத்திரம் - இலைகள் - இவைகளை குருவின் திருமுன்பு சமர்ப்பித்துப் பதறி அழுது நாக்குளறி, வெட்டிவிட்டமரம் போல, அஷ்டாங்க சாஷ்டாங்கமாய் வீழ்ந்து தெண்டனிட்டு வணங்கித் தனக்கு ஏற்பட்ட சோகமோக தாபத்துயரங்களை கூறத் துவங்கினான்... (எ-று). அ-கை-மூவாசைத் துன்பவலையத்தைவிடடு வெளியேவந்த பக்குவனின் எண்ணம் பேதலித்து இனிச்செய்வதறியாமல் திரியும் போது, அவன் கண்ணில்பட்ட ஞானாச்சாரியாரை கண்டு, வழிபடுசாதனங்களோடும் சென்று வீழ்ந்து பணிந்துவணங்கி விண்ணப்பித்து நின்றான். (எ-று)

7 - வணங்கிநின் றழுது சொல்வான் மாயவாழ் வெனுஞ்சோ கத்தால்
உணங்கினே னையனே என்னுள் ளமே குளிரும் வண்ணம்
பிணங்கிய கோசபாசப் பின்னலைச் சின்னமாக்கி
இணங்கிய குருவே என்னை இரட்சிக்க வேண்டு மென்றான்!.

அ-வ, உரை =பதறி வந்து பணிந்து புலம்பி அழுதவனை குருவானவர் புன்முறுவலுடன் பார்த்தார், அதுசமயம், அவரைச்சரண் அடைந்த பக்குவன் ஐயனே, இனி எனக்குத் தாயும் தந்தையும் குருவும் அருநிதியமும் எனக்கு நீரேயாம், பொருளல்லவற்றை பொருளென்று இருமாந்திருந்தேன், மூவாசையும் அதனால் மனோமயம் அன்னமயம் பிராணமயம் விஞ்ஞானமயம்

ஆனந்தமயம் என்கிற சூறாவளியில் சிக்கி உழன்றேன் முற்றுமவைகள் துன்பம் என்றுணர்ந்து, எம்மனத்திலும் பற்றாவண்ணம் மீண்டுவந்து தங்களைச் சரணடைந்தேன். இதுகாறும் என்னைத் துன்புறுத்திய வறுமையை அறியாமையை இயலாமையைத் துரத்தி பஞ்சகோச மதயானைகளை அடக்கும் என்னை ஆளுமை கொண்டுள்ள ஞானசூரியனே! அடியேன்மீது தங்களின் கருணை அருள்பாலித்து, இப்பெத்தத்தினின்றும் வேறுபடுத்தி முத்தியிற்கூட்டுவிக்கும்படி, என்னுள்ளம் சாந்திபெறும்படி, முறைப்படியெனக்கு உபதேசியுங்கள் சுவாமி என விண்ணப்பித்து நின்றான். (எ - று)

அ - கை - அப்படி சரணடைந்து அழுது வணங்கி விண்ணப்பித்த பக்குவனின் உள்ளக்கிடக்கையை பரிசோதித்தும் உபாயங் கூறியும் பயனையும் கூறுகின்றார். (எ-று).

8. **அன்னதன் சிசுவை ஐயன் ஆமை மீன்பறவை போலத்**
 தன்னகங் கருதிநோ க்கித் தடவிச் சந்நிதி யிருத்தி
 உன்னது பிறவி மாற்றும் உபாயம் ஒன்றுண்டு சொல்வேன்
 சொன்னது கேட்பா யாகில் தொடர்பவந் தொலையு மென்றான்.

அ-வ, உரை = தம்முன் சரணடைந்த சீடனின் உள்ளத்துள் அகம் மமதை (நான் எனதென்ற அபிமானம் உண்டோ என ஆராய்ந்தார், பின், அவன்மீது கருணையும், என்ன செய்யலாம் என்ற, (நீ) யோகசித்தமும், அவனது வருத்தத்திற்கான காரண காரியங்களையும் கருதிப் பாவனை செய்தார் என்பதாம். இது அகத் தீட்சை இரண்டும் புறத்தீட்சை ஒன்றுமாகும். அதாவது, இனிவருவதை நினைக்கும் ஆகாமியத்தை ஒழித்து, சச்சிதானந்தமயமான தனது அறிவை உணரும்படி எண்ணி, ஆமைபோல் கருதினார். முன்செனன கரும காரியங்களால் எஞ்சியுள்ள சஞ்சிதம் நீங்கும்படி மீனைப் போலப் பார்த்தார். நிகழ்கால வரவுகளான பஞ்சபூதபௌதிக வடிவநாம ரூபங்களை நித்யானந்தமாக, பரிபூரணானந்தமாக வியாபித்து (உள்ளும் புறம்பும் புணர்ந்து)ப் பறவையைப் போலத் தடவித்தன்னருகில் அமரச் செய்தார்.

இதுவரை உன்னைத் தொடர்ந்து வந்த செனன மரணப் பெருந்துன்பத்தை முற்றும் ஒழிக்கின்ற தந்திர உபாயமொன்று எம்மிடம் உள்ளது. அதை உனக்கு உபதேசிப்பேன், அதை நீ அப்படியே கேட்டு அநுசரித்துப் பழகி வருவாயானால், உனக்குவந்தசனன மரணப் பெருநோய்த் துன்பம் தொலைந்துவிடும் என்றருளிச்செய்தார். இதில், தண்ணீரில் வாழும் களமாகக் கொண்ட ஆமைதான் கரையிலே இட்ட முட்டையைத் தருணங்கண்டபோது, முட்டை குஞ்சாகவேண்டும் என அதிநுண்மையும் கூர்மையுமாய் மனதினுள் எண்ணி எண்ணியே குஞ்சாக்கும் மரபு. நீரில் மீன் தான் இட்ட முட்டைச்சினையை, உரியகாலத்தில், குஞ்சாக்கும்படி தீட்சண்யமாய்க் கூர்ந்து பார்த்தே குஞ்சாக்கிடும் மரபு, பறவைகளானது, கூட்டில் தான் இட்ட முட்டைகளை அடைகாத்து தம்சிறகுகளால் தழுவித் தழுவியும் சூடேற்றிக் குஞ்சாக்கிடுமது போலும், சீடனை குருமூர்த்தியானவர், மீனைப்போல் பார்த்தார் ஆமைபோல் நினைத்தார், பறவை போலத் தடவிப் பரிசயோகம் செய்தார். அவரது திருக்கரங்களை சீடனின் தலையில் வைத்துத்து ஆசீர்வதித்து தம்அருகில் அமர்த்திக் கொண்டார். (எ-று).

அ-கை-குருவானவர் கூறிய அமுதவாக்கை எண்ணி அகம் குளிர்ந்து மேலும் பணிந்து சீடன் கூறுகின்றான்.

9. தொடர்பவந் தொலையுமென்று சொன்னதைக் கேட்டபோதே
தடமடு மூழ்கினான் போற் சரீரமுங் குளிர்ந் துள்ளாறி
அடரும் அன்பு ஒழுகினாற்போல் ஆனந்த பாஷ்பங் காட்டி
மடன்மலர்ப் பாதம் மீண்டும் வணங்கி நின்றீது சொல்வான்.

அ-வ, உரை =உதய அஸ்த மனங்களின் செயல்போல் என்னை தொடர்ந்து வந்த பிறப்பிறப்புத் துன்பமானது ஒழிந்துபோம் என்ற ஆசிரியர் வசனாமிர்தம் கேட்டபோதே, விரிவாயும் பெரிதாயும் தாமரைகள் நிறைந்த குளத்தினுள் மூழ்கினவனைப் போல, முதலில் உடல்குளிர்ந்து உள்ளமும் குளிர்ந்து இருகடைக்கண்களிலும் ஆனந்தமேலீட்டால் கண்ணீர்த் ததும்பிவழிய , காலைப்போதலர்ந்த தாமரை மலரிதழ்ப் போன்ற குருவின் திருவடிகளில் மீண்டும் மீண்டும் விழுந்துப் பணிந்து வணங்கி நின்று இவ்வாறு சொல்லத் தலைப்படுகின்றான்., (எ-று)

அ-கை - சீடனின் உண்மை உறவில் நான் எனதென்னும் அகம் மமதை இல்லைஎன்பதை குறிப்பினால் குருஅறிந்தார்.

10. சொன்னது கேட்க மாட்டாத் தொண்டனா னாலுஞ் சுவாமி
நின்னது கருணை யாலே நீரென்னை ஆள லாமே
உன்னது பிறவி மாற்றும் உபாய மொன்றுண்டென் றீரே
இன்னதென் றதைநீர் காட்டி ஈடேற்ற வேண்டுமென்றான்.

அ-வ, உரை = தாங்கள் உபதேசித்த வண்ணம் கடைப்பிடிக்க முடியாத மந்தப்புத்தியுடைய எளியேன், ஆயினும், உடல்பொருள் ஆவி மூன்றையும் தங்களின் பாதத்தில் அர்ப்பணித்துள்ள இவ்வடிமையை, தேவரீரது கருணா சமுத்திர ஆர்ப்பரிப்பால் எனைத் தடுத்தாட்கொண்டு அரசு நடத்தலாமே! என்னைப் பவநோய் தாக்காமல் அதைகெடுத்து ஒழிக்கும் தந்திர உபாயம் ஒன்று உண்டு என்றீரே, அவ்வுபாய தந்திரம் இன்னதன்மைத்து என உபதேசித்து அநுக்ரகிக்க வேண்டுமென்று குழைந்து பணிந்து நெகிழ்ந்தும் சீடன் கூறினான். சீடனறிவு எவ்வளவு துல்லிமானாலும், அதனா லுண்டாகும் ஆனந்தத்தை அவன்விளங்கிக் கொள்ளமுடியாது. அ..தை துரிய அருளாய் விளங்கும் குருமூர்த்தியே விளக்க வேண்டும் என்பது சம்பிரதாய மரபாகும்!. (எ - று).

அ-கை- சீடனின் இதயாம்பரத்தில் நான் எனதென்னும் அகம்பாவனை இல்லை என அறிந்து ஆத்மசொருபத்தை உபதேசிக்கத் துவங்குகிறார்.

11. அடங்கிய விருத்தியானென்று அறிந்தபின் செறிந்த மண்ணின்
குடம்பையுட் புழுமுன் ஊதுங் குளவியின் கொள்கை போலத்
தொடங்கிய குருவும் ஆன்ம சொருபமே மருவ வேண்டி
உடம்பினுட் சீவனைப் பார்த்து உபதேச மோது வாரே...

அ-வ, உரை = சீடனது அந்தக்கரண விருத்திகள் விரிவின்றி தேகவாசனை, உலகவாசனை, சாத்திரவாசனை, உறவு உடமைகளில் தேட்டமின்றி அடங்கியுள்ளது என அறிந்த பின்பு, சீவனை சிவமாக்கிட உபதேசிக்கின்றார். அது எதுபோல எனின் யாதானும் ஓரிடத்தில் களிமண்ணால் கூடுகட்டி, அதில் ஆறுவயல் குளங்களில் நெளியும் புழுவை கண்டு, அதனை கொட்டிப் பார்க்கும்

குளவி. அப்புழு எவ்விதச் சேட்டையுமற்று கிடக்குமானால், இதுதன்கொள்கைக்கு உதவாது என விட்டுவிட்டு, வேறு ஒரு புழுவைக் கொட்டும், உடனே அப்புழுபடக்படக் கென்று துள்ளுமானால், இது நாம் கூறியது செய்வதைவிட்டு தான் தோன்றி தனமாய்திரியும் என அதையும் விட்டுவிட்டு, வேறு ஒரு புழுவைகண்டு கொட்டிய உடனே மெல்லநெளியும் இப்படி ஒவ்வொரு கொட்டுக்கும் ஒருமுறை நெளியும், ஆகா! இப்புழுவே நம் சந்ததி விருத்திக்கேற்றதென எண்ணி தூக்கிக் கொண்டுபோய் அந்த ஈரக் களிமண்கூட்டில் பதித்துவைத்துவிட்டு குளவி வெளியிற்ற சென்று கூட்டிற்கு அருகில் வந்தபோதெல்லாம் ரீங்காரம் செய்து அப்புழுவை கொட்டிவிட்டு செல்லும், இப்படியே தொடர, அப்புழுவானது, ஐயோ குளவிவருமே கொட்டுமே குளவி வருமே கொட்டுமே என்று எண்ணி எண்ணி அக் குளவிமயமே ஆவதுபோல வேதசாத்திரங் குருவுபதேச வாக்கியங்கள் சீவனை சிவமாக்கும் பிரம்ம வித்தையை உபதேசிக்கின்றார்.

இன்னும், குருமுன்பு சீடன் அடக்கமாகவும் அவரது தேகப் பணியையும் செய்தும், குருஉபதேசப்படியே தன்னை உருவகம் செய்து கொள்ள வேண்டும் தவிர தானாக ஏதும் பேசியும், செய்தும், கேட்டும் அதிகப்பிரசங்கியாக நடக்ககூடாது, ஏனெனின் குருசம்பிரதாய (வாழையடி வாழை என்ற) மரபுக்கு ஏற்புடையதாகாது எனப் பக்குவர்கள் அறியவும். (எ-று).

அ-கை-சீடனின் பிறப்பு இறப்புத் துன்பத்தை நீக்கும்பொருட்டு அது அவனுக்குண்டான காரணமும், அது அவனை, நீங்கவும் நிற்கவுமுள்ள கால அளவையும் கூறுகின்றார்.

12. வாராய் என்மகனே தன்னை மறந் தவன்பிறந் திறந்து
தீராத சுழற்காற் றுற்ற செத்தைபோற் சுற்றிச் சுற்றிப்
பேராத கால நேமிப் பிரமையிற் றிரிவன் போதம்
ஆராயுந் தன்னைத் தானென்று அறியுமவ் வளவுந்தானே!

அ-வ, உரை = குருவுக்குச் சீடனின், தனது ஆஸ்தி அநுபவங்கட்கு உரிமை உடையவனாதலால் வாராய் என்மகனே என்றழைத்தார். புத்ரா? உனக்கு நான் கூறும் ஆத்மார்த்த விசயங்களை அப்படியே செவி வழியே உள்வாங்கி மனதிற்பதித்துக்கொள்க. தனது எதார்த்த

ஆத்ம சொரூப, இயல்பு இலக்ஷணங்கள் எப்படி உள்ளது என்று விசாரித்து ஆராய்ந்து அறியாதவன், சூறாவளிக்காற்றில் அகப்பட்ட சருகைப், (துரும்பை) போலச் சுழன்றும், காலச்சக்கரத்தில் வைத்து சுழற்றி சுழற்றிப் பிறப்பு இறப்புத் துன்பத்தில் பிணித்துக் கொண்டேயிருக்கும் இது, ஒருவன் தன்னை யார் என்று நன்கு, உணர்ந்து தெளிந்து நான், ஆன்மா அறிவே வடிவானவன் என்று தீர்க்கமாய் நிச்சயம் செய்யும் கால அளவும் தொடர்ந்துவரும் என்பதை நீ மனதினுள், தரித்துக்கொள்வாயாக (எ-று).

அ-கை-இனி, தன்னைச் சரணடைந்த பக்குவனுக்கு மகாவாக்கியங்களின் உபதேசமுறையாக அறியவேண்டிய பொருள் இன்னதெனத் தெளிவுபடத் தெரிவிக்கின்றார்.

13. தன்னையுந் தனக் காதாரத் தலைவனையுங் கண்டா னேல்
பின்னையத் தலைவன் தானாய்ப் பிரமமாய்ப் பிறப்புத் தீர்வன்
உன்னைநீ யறிவா யாகில் உனக்கொரு கேடும் இல்லை
என்னை நீ கேட்கை யாலே யீதுவுப தேசித் தேனே!

அ-வ, உரை = நான் என்றும் எனதென்றும், செய்பவனும் அநுபவிப்பவனும் நானே என்றெண்ணும் சிதாபாச சீவனையும் இவைகட்கு ஆதாரமாயிலங்கும் கூடஸ்தனையும் (ஜெகசீவ பரகாரியங்களை தன்னகத்தே தோற்றி வைத்து ஒடுக்கியும், இவைகட்கு சாட்சியாயிருக்கும் சத்துநிலை) இவ்விருவரது இயல்புகளையும் கண்டுள்ளே உணர்ந்தான் ஆயின், பின்பு சித்தாபாச சீவனை மறந்து தனக்கு தலைவனாகிய கூடத்தப் பிரம்மமே தானாய் உள்ளுணர்ந்து கண்டவன் பிறப்பு இறப்பு எனும் சுழற்சியை அடையமாட்டான், தான் ஒன்றுமட்டும், ஆனால் இரண்டுமில்லை, எங்கும் எதிலும் எப்போதும், (இல்லை, தோய்வின்றித் திகழும் அத்வைதப் பிரம்மஸ் வரூபமே நான் எனத் தெளிவும் உறுதியும் கொள்வாயானால் உனக்குயாதொரு தீங்கும் வராது, எம்மைச் சரணடைந்து கேட்டதால், உனக்கு இப்பரமார்த்த இரகசியமான தத்துவ மசி மகாவாக்யத்தை உபதேசித்தேன்.... (எ-று)

அ-கை- தன்னையறிய வேண்டும் என்ற குருவின் வாக்கின் பொருளை அறியாமல், தேகமே இதுகாலமும் தான் என்றிருந்த

சீடன், இதை அறியாதவர்கள் இப்பூலகில் எவரும் உண்டோ, இப்படி அறிந்தவர்களும் பிறப்பு இறப்புகளை நீங்கவில்லை, இதனுண்மையை யான் அறியும்படி கூறியருள்வீர் ஐயனே! (எ-று).

14. என்னைத் தானசடனா யுள்ளத் தெண்ணியோ சொன்னீ ரையா
தன்னைத் தானறியா மாந்தர்தரணியில் ஒருவ ருண்டோ
பின்னைத் தானவர்க ளெல்லாம் பிறந்திறந் துழல்வா னேன்
நின்னைத் தானம்பினேற்கு நிண்ணய மருளு வீரே...

அ-வ, உரை = ஆசிரியரது அநுபவ வசனப்படி, தேகமும் உலகமும் உள்ளும்புறம்பும் தானாய்த் திகழும் உன்னை அறிவாய் என்ற ஆசிரியரின் வாக்யகருத்தை உள்ளுணராதசீடன், யாதொருவுணர்ச்சியும் அற்ற சடனாக என்னை எண்ணுகின்றீரோ, தங்களைத்தாங்கள் அறியாத மானுடர் உலகில் எவரும் உள்ளனரோ? எனது பாட்டன் பாட்டி இன்னார், என் தந்தைதாயர் இன்னின்னார், என் உயரம், அகலம், எடை, நிறம், பெயர், இன்னின்னது என்று தங்களின் பேர் உதவியாலும் நன்கு அறிந்துள்ளேன். இப்படியே ஒவ்வொரு வரும் அறிந்துள்ளனர். ஆயினும் இவர்கள் பிறப்பதும் இறப்பதுமாகவே சுழல்கின்றனர். இதுகுறித்து அறிவுமயக்கமடைகின்றேன். தங்களின் திருப்பாதமே சரணமென அடிமைபூண்ட எளியவனின் மதிமயக்கம் தீர்த்துவைத்து, உள்ள பொருளாம் அதன் நிச்சயத்தை கூறியருள்வீர்களையா? (எ-று).

அ-கை- தான் என்பதன் பொருளறியாமல், உண்மை அநுபவம் எவ்வாறு எனக்கேட்ட சீடனின், அறியாமை, விபரீதபாவனைகளைக் கண்டு வருத்தமும், ஞானாச்சாரியர் கருணையும் கொண்டு கூறுகின்றார்.

15. இன்னது தேகந் தேகி இவனென வுணர்வன் யாவன்
அன்னவன் தன்னைத் தானென்று அறிந்த -வனாகு மென்றார்
சொன்னபின் தேகியார் இத்தூல மல்லா மல்என்றான்
பின்னது கேட்ட ஐயர் பீடையுந் நகையுங் கொண்டார்....

அ-வ, உரை = ஆசிரியர் தனதனுபவமான நிர்மலசுத்தப் பிரம்மத்தை தான் எனக்கூறியும், சீடன் தனது அநுபவமான தேகமே

தான் அன்றி இத்தேகத்துள், இதுகாறும் நானறியாத தேகி என்ற ஒருவன் உளனோ உண்டேல் யானறிந்துய்யும்படி அநுக்ரகிக்க வேண்டும் சுவாமி என, நம் சரீரமானது எது எந்தத் தன்மையுடையது, இதனுள், கூத்தாட்டுபவன் மறைவாக இருந்து பொம்மைகளை ஆட்டுவிப்பவன் போன்ற சரீரி (தேகி - இன்னும் ஆன்மா!) என்பவன் யார் எந்ததன்மையுடையவன் என உள்மரித்து விசாரித்தறிந்து தெளிந்தவனே தன்னை பிரம்மம் என்று தெரிந்தவனாகும் என்றார் குரு! பின்பு சீடனின் மாறுபட்ட கூற்றைக் கேட்டு, நிலையாமையுடைய தேகமே தான் என்று எண்ணியிருப்பவனை, எங்ஙனம் உய்விக்கலாம் என்று நாணமும் தேகமே தான் என்று அறியத் தலைப்பட்டவன் தேகியையும் தானாக அறிவன் என்று மகிழ்ச்சியும் கொண்டு மேலும் உபதேசத்தை உதிர்க்கின்றார்!....

அ-கை-புகை இருக்குமிடத்தில் நெருப்பிருக்கும் என்பது போல, ஆருடனாய், தேகம் நானல்ல என்றும், அதனுள்ளிருக்கும் தேகியே நான் என்றும் அறிந்தேன் இதில் விழிப்பு கனவு உறக்க நிலைப்பாடுகளான அவஸ்தை (அநுபவம்)களை அறிகின்றவன் யார் என விரித்துரையும் ஐயனே! எனச் சீடன் விண்ணப்பித்தான்...(எ-று).

16 - தேகமல் லாமல் வேறே தேகியார் காணேன் என்றாய்
மோகமாங் கனவில் வந்து முளைத்திடு மவனார் சொல்லாய்
சோகமாங் கனவு தோன்றாச் சுழுத்தி கண்டவ னார்சொல்வாய்
ஆகநீ நனவில் எண்ணும் அறிவு தானேது சொல்வாய்?...

அ-வ, உரை = நல்லவனே? உனது பருமனான சரீரத்தை அன்றி வேறு ஒன்றுங் காணேன் இருந்தால் நானறியாதிருப்பதேன் என்றாய், சோம்பலும் மயக்கமும் தூக்கமும் வந்தபோது தூல சரீரத்தைக் கிடத்தி, கனவு வந்து அலைக்கழிக்குமதனை அங்கே யார் பார்த்துக் கொண்டிருந்தது? அப்போது தூல தேகமும அதன் நினைவுகளும் உன்னிடத்தில்லை அல்லவா? சரி, இந்தக் கனவும் நழுவி ஆழ்ந்த் உறக்கத்திலிருக்கும்போது, அங்கே ஆனந்தத்தையும் சூனியத்தையும் - (ஒன்றுமறிந்திராதசுழுத்தி அவஸ்தை) அநுபவத்தையும் அங்கே பார்த்திருந்தாய் அவ்வநுபவத்தை விழிப்பு நிலை அடைந்தபோது கூறுகின்ற அநுபவம் உனக்குண்டாயிருக்கின்றதோ? அவ்வாறாயின், அங்கே அதனைக்

கண்டிருந்தது யார் என்பதைக் கூறுவாயாக?., ஆக, விழிப்பில், கனவு இல்லை, கனவில், விழிப்பும் உறக்கமுமில்லை, இதேபோல் , ஆழ்ந்த உறக்கத்தில் விழிப்பும் கனவுமில்லை, ஆயின் இம் மூன்று அவஸ்தை (காரியங்களிலும் ஒன்று மாத்திரமே மூன்றையும் கண்டு கொண்டிருக்கின்றன அதைநீ ஆராய்ந்துணர்ந்து கூறுவாயாக, தேகி என்பவன் தான்நீ அதனை மறந்து தேகமே தான் என்று விபரீத (ஒன்றை வேறு ஒன்றாக அறியும்) புத்தியை இழந்து தேகியான உன்னைத்தேடு (எ-று).

அ-கை-குருவே என்ன ஆச்சரியம், தங்களின் இதவுபதேச முறைமையினால், எனது தேகத்திலும் அந்நியமாக தேகி என்றொருவன் உள்ளான் என்பதை சற்றே உணர்கின்றேன். அதனது சொருப இயல்புகளை அடியவனுக்கு விளக்கி அருள்வீராக சுவாமி என வணங்கிக் கூறினான் (எ-று).

17- நனவுகண் டதுநான் கண்ட நனவுளே நினைவு நீங்கிக்
கனவுகண்டது மிரண்டுங் காணாத சுழுத்தி கண்டதும்
தினமும் அநுபவித்த லொக்கும் தெரியவு மில்லை சற்றே
மனதினி லுதிக்கும் பின்னை மறைக்கு மதுஅருள் வீரே....

அ-வ, உரை = கருணைக் கடலான தேவரீரே! விழிப்புநிலை எனும் சாக்கிர நிகழ் காலத்தில் எனது உடலும் இவ்வுலக நாமருபங்களையும் காணுகின்றேன் இவைகள் அனைத்தும், உடலைக்கிடத்தி சபலமான உறக்கத்தில் சொப்பனம் கண்டேன் அப்போது விழிப்பு நிலையில் கண்டது ஏதுமில்லை. இந்தக் கனவையுங்கடந்து ஆழ்ந்த உறக்கமெனும் சுழுத்தி நிலையை அநுபவித்தபோது முன்பு கண்ட விழிப்பும் கனவும் நீங்கி, ஒன்றுமறிய முடியாத சூனியாவஸ்தையைக் கண்டேன். இவ்வித அநுபவம் எனக்கு தினமும் நிகழ்ந்ததை உணர்கின்றேன். தேவரீரருளிய தேகி என்ற ஒருவன் இருக்கின்றான் என்பது, நெருப்பை மறைத்துச் சூழ்ந்துள்ள புகைபோல, அறிகிறேன். எனது தேகத்தைப் பார்ப்பதுபோல, தேகியையும் பிரத்யக்ஷமாக அறிந்துய்யும்படியும் (மின்னலே போல என்னுள் சற்றுத் தோன்றியும் மறைவதுமாய் இருப்பதனை) தெளிவும் நிச்சயமுமாய் உபதேசித்திடுவீர்களாக ஐயனே!....

அ-கை-முன்பு தேகமே தான் என்று இருந்தவனை, கொஞ்சம் கொஞ்சமாக, செம்பைப் பொன்னாக்கும் முறைபோல, வேறுபடுத்தி பின்பு, களவு கொண்டு போனவனின் காலடிவழியே சென்று கள்வனைக் கண்டதுபோல, முன்பு கண்ட தேக இலக்கணங்களைக்கூறிப் பின் அவைகளையும் நீக்கி, யாவற்றையும் அறியும் சாக்ஷியான கூடத்தனே தானாகும்படி விளக்கங்களை கூறத் துவங்குகிறார்., (எ-று)

18 தாலத்தின் மரங்கள் காட்டித் தனிப்பிறை காட்டுவார்போல்
ஆலத்தின் உடுக்கள் காட்டி அருந்ததி காட்டு வார்போல்
தூலத்தை முன்பு காட்டிச் சூக்கும சொரூப மான
மூலத்தைப் பின்பு காட்ட முனிவரர் தொடங்கி னாரே...

அ-வ, உரை = இங்கே தாலம் - பூமி, ஆலம் - ஆகாயம், உடுக்கள் - நட்க்ஷத்திரம், முனிவர் - சச்சிதானந்தஸ்வரூபமே சதாபாவனையில் உள்ளவர், இப்பூமியிலுள்ளோர், வளர் மூன்றாம் பிறையைப் பார் என்றதும் அருகிருந்தவர் எங்கே எனக்குத் தெரியவில்லையே என்று கூறிக் கொண்டே விண்ணில் கண்களை மிதக்கவிட்டபோது, அவர் அதோ அந்த மரத்தின் நேரே மேலே பார் என்றதும் இவர் பார்த்தறிந்த முறைபோலவும், வான்வெளியில் வரும் நட்க்ஷத்திர மண்டலத்தில் ஓரிடத்தில் அருந்ததி நட்க்ஷத்திரத்தைப் பார் என்று, கூறும் (இது திருமணப் பெண்ணுக்கு அம்மி மிதித்து அருந்ததி காட்டுதல் என்பது, ஒரு தொன்று தொட்டு வரும் சம்பிரதாய மரபு) முறையே போலும், நேத்திரங்களால் காணுகின்ற நாமரூப வடிவங்களையும் அதன் இயல்புகளையும் தெரியச்செய்து, நுண்மையும் அணுவுக் கணுவாயும் சத்துசித்து ஆனந்தமெல்லாம் ஒருருவாயிலங்கும் மூலத்தைப் பின்பு காட்ட உபாதிகளை நீக்கி, நிருபாதிகமான பரமான்மாவைச் சீடனுக்கு தெரிவிக்க ஞானாச்சாரியார் தொடங்குகின்றார்... (எ-று).

அ-கை : அறிவுப்பர வெளியாம் சித்தைச் சீடன் தரிசிக்கும் பொருட்டு, தன்னை உடலாகவும் உலகமாவும் உடமைகளாகவும் சீவனாகவும் ஈசனாகவும் தோன்றிடும் ஆரோபபுத்தியையும், ஒன்றும் இரண்டுமின்றி எல்லாந்தானாய் மிளிரும் அத்வைதஸ்வரூபத்தை, சீடனுக்கு அறிவிக்க, ஒன்றை வேறு ஒன்றாயும் பலப் பலவாயும்

காட்டுகின்ற ஆரோப - (மனவிரிவு இயல்புகள்) யுக்தியையும், மகாகாரண மூலமாம், விரிந்த செகசீவ பரங்களை எல்லாம் தானே தானாய் தன்னுள் ஒடுங்கிடக் காட்டும் அபவாத (மன ஒருமை) ஆலயம் நிலையியல்பையும் உணர்த்துகின்ற அபவாத யுக்தியையும் விரித்து - விளக்கிடத் தொடங்குகின்றார். (எ-று).

19. அத்தியா ரோபம் என்றும் அபவாத மென்றுஞ் சொல்லும்
உத்தியாற் பந்தம் வீடென்று உரைக்கும்வேதாந்த மெல்லாம்
மித்தையா மாரோ பத்தாற் பந்தமா மபவாதத் தால்
முத்தியா மிவ்விரண் டின் முந்தி யாரோபங் கேளாய்...

அ-வ, உரை = அத்தியாரோபம் என்றும் அபவாத மென்றும் வேதத்தில் இருவகை யுக்திகளைக் கூறுகின்றது. இதில் அத்தி என்பது அத்தியாசம்? இகபர அநுபவங்கட்கு ஏதுவாகின்ற, பயிற்சி பழக்கவழக்கங்களாகும். ஆரோபநெறி என்பது, பாசம் பந்தம் துக்கம் பிறப்பு இறப்புகளையே தரும். அபவாதநெறி என்பது, ஆரோபவழியால் கண்டனுபவித்தயாவும் நிலையாமையே இயல்பானது என்று நன்குணர்ந்து தெளிந்தும், இவைகட்கெல்லாம் சாக்ஷித்தன்மையான தானே நித்யத்துவம் எனும் அபவாத வழியும் முத்திப் பேறுமாகும் என அறிந்துகொள். இனி, இவ்விருவகையில் முன்பு ஆரோபம் என்பதை திருஷ்டாந்தமாகக் கூறுகின்றார்!... (எ-று).

20. ஆரோப மத்தியாசம் கற்பனை யாவ தெல்லாம்
ஓரோர் வஸ்துவினை வேறே ஓரோர் வஸ்துவென ஓர்தல்
நாருடு பணியாய்த் தோன்றல் நரனாகித் தறியிற்த் தோன்றல்
நீருடு கானற்த் தோன்றல் நிரந்தரம் வெளியிற் தோன்றல்.

அ-வ, உரை =ஆரோபம் அத்தியாசம் கற்பனை என்பதெல்லாம் கண்ணில் கண்ட பொருள் ஒவ்வொன்றையும் வேறு ஒன்றாகப் பாவித்தல், அதாவது, உபாதியற்ற பஞ்சு மூலப்பொருள், இதனால் நூலாகி நெசவாகி வஸ்திரமாகி, அணிகலனாகும் போது மூலமான பஞ்சைவிட்டு வஸ்திரம் எனக்கூறுவது போல, தூரத்தில் வழியில் எதிரில் கிடக்கும், கயிறு மாலை கம்பு போன்றவற்றைக் கண்டதும், பாம்புள்ளது என்றும், தோட்டத்தில் காவலுக்காக வைத்திருந்த திருஷ்டிபொம்மையை கண்டதும், அதோ ஆள் இருக்கிறார் என்றும்,

கவிழ்த்திய குடைபோலும் நீலநிறமும் ஆகவிளங்கும். ஆகாயத்தின் தரம் இல்லாததை, குடையை போல நீலநிறம் போல உள்ளது என்பதுமே ஆரோபயுக்தியாம் என்று நீ அறிந்து கொள்வாயாக என்றருளினார். (எ-று).

அ-கை, - முன் கவியில் கூறிய உபமானம் போலவே, சுத்தப் பிரம்ம சைதன்யத்தினிடமாக, உலகம், உடமை, உறவு சீவன் ஈசுவரன் முதலியவைகள், இரவு நிலவிலும் பகலிலும் நமக்குப் புறம்பாக நமது நிழல் சத்தியம் போலவே தோற்றும் எனச் சாதிக்கின்றார்!...

21. இப்படிப் போல நாம ரூபங்க ளிரண்டு மின்றி
ஒப்பமா விரண்டற்று ஒன்றாய் உணர்வொளி நிறைவாய் நிற்கும்
அப்பிர மத்திற் தோன்றும் ஐம்பூத விகார மெல்லாஞ்
செப்பிய கற்பிதத்தால் செனித்தவென் றறிந்து கொள்ளே.

அ-வ, உரை = இப்படியாகிய நாமரூபங்கள் என்றிரு தன்மைகளும் இல்லாமல், ஒற்றுமையாகவும், இரண்டல்லது பலவுமான துவைதமின்றி ஏகமாயும் எல்லாமாயும், ஞானஒளிப் பிரகாசமாயும், ஈடுஇடையின்றி எங்கும் நிறைந்துள்ள பரிபூரணமாயுமுள்ள அப்பிரமத்தில், இருந்தும் தோன்றிய, பஞ்சபூத காரியமான வேறுபாடுகள் அனைத்தும், மித்தையாக - சத்தியமில்லாத தாகிய ஆரோபயுக்தியினால் உண்டானவைகள் என்று அறிந்து கொள்வாயாக என்றருளினார்! (எ-று).

அ-கை, - சத்திய வஸ்துவாம் பிரம்மத்தினிடத்தே, கற்பிதமாக நீரில் தன்முகம் உண்டானது போல, சீவேசுவர ஜெகத்துண்டான இருவகையும் கூறத் தொடங்கி, இதில் முன்பு ஒருவகையைக் கூறுகின்றார்!.. (எ-று)

22- அதுதா னெப்படி என்றக் காலனாதி யாஞ்சீவ ரெல்லாம்
பொதுவான சுழுத்தி போலப் பொருந்துமவ் வியத்தந் தன்னில்
இதுகால தத்துவப் பேரீசனுட் பார்வை யாலே
முதுமூல சுபாவம் விட்டு முக்குணம் வியத்த மாமே...,

அ-வ, உரை = மாணவ? முற்கூறிய அந்தக் கற்பனைச் சிருஷ்டி உண்டான முறை எப்படி என்பாயாகில், தோற்றம் இருப்பு நாசம், முதலிய ஆதிநடு அந்தமற்ற அறிவே வடிவான, சீவகோடிகள்

அனைவர்க்கும், இவர்களின் ஆழ்ந்த உறக்கமான அநுபவமாயுள்ள சாதாரண சுழுத்தியைப் போன்று சூனியமாய் இருக்கும், மகதத்வமாகிய மூலப்பிரகிருதி என்ற மாயையினிடத்தில் அமைந்திருக்கும், இம்மாயை ஆனது கால தத்துவமெனும் பெயரை உடைய ஈசுவரனுடைய (திருஷ்டி) சங்கற்பத்தினால், வேறுபடாத முக்குணங்களும் காரணமாக கலந்துநின்ற தன்மையைவிட்டு வியக்தமாக (தனித்தனியே தோற்றுகின்ற) மூன்று குணங்களும் வெளிப்பாடு பெறுகின்றன என்றருளினார்... (எ-று).

அ-கை = முக்குண லயமாயுள்ள பிரகிருதியினின்றும் வெளிப்பட்ட மூன்று குணங்களின் இயல்புகளைக் கூறுகின்றார். (எ-று).

23 உத்தமம் வெளுப்புச் செம்மை யுபயமாங் கருப்பு மாகும்
சத்துவ குணத்தினோடு இரசோகுணந் தமோகு ணந்தான்
சுத்தமோ டழுக்கிருட் டாய்ச் சொல்லும் முக்குணமும் மூன்றாய்
ஒத்துள வேனுந் தம்முள் ஒருகுண மதிக மாமே...

அ-வ, உரை = அறிவே வடிவான சீவர்கள் தமக்குரிமை யல்லாதவைகளில் நேசத்தால் கட்டுண்டு, தாங்கள் யாரென்பதை மறந்து அவ்வியத்தத்தில் (தெளிந்த சுத்த ஜலம் சத்துவமாகும், கலங்கலான நீர் ரசோகுணமாகும், சேறும் நீரும் பிறிபடாத நிலையுள்ளது தாமோகுணமாகும். ஆனால், இவைகள் அவ்வியக்த நிலையில், யாதொருபேத(ங்)களுமின்றி ஒன்றியிருந்தது, இதுஎது போலெனின், ஒருபடி திருநீறும், ஒருபடி குங்குமமும், ஒருபடி (வெந்து போன விறகினை நீரால் அனைத்து, நொறுக்கி தூள் செய்த கரித்தூள், மூன்றையும் நன்றாக கலந்தபோதுள்ளவாறு அமைந்திருக்கும் இதுவே இப்போது வியத்தமாகி (வெள்ளை நூலும் சிவப்பு நூலும் கருப்பு நூலும் ஒன்றுபட முறுக்கினால் எப்படியோ அப்படி வெளிப்பாடடையும், சீவர்களின் காரியங்களின் சாரமாக ஒருகுணம் மேலாங்கும் போது அக்குணத்தின் செயலுக்கேற்றபடியே மற்றைய இரண்டு குணங்களும் அதற்குள் அடங்கியே நிற்கும், ஒவ்வொரு குணம் சாரும்போதும் இப்படியே இயங்கும் என நீ அறிவாயாக, என்றொருவகை சிருஷ்டியை கூறியருளினார்... (எ-று).

அ-கை,- இனி மற்றொருவகை சிருஷ்டியையும் கூறுகிறார்.

24 - ஒருவழி யிதுவாம் மித்தை ஒருவழி வேறாய்ச் சொல்வார்
மருவுமவ் வியத்தந் தானே மகத்துவ மாகுமென்றும்
அருண்மக தத்துவந் தான் அகங்கார மாகும் என்றும்
கருவகங் காரம் மூன்றாய்க் காட்டிய குணமா மென்றும்...

அ-வ, உரை = முற்கவியில் ஒருவகைச் சிருஷ்டியை வேத வித்துக்கள் கூறியுள்ளனர். இதேபோல மற்றொருவகைச் சிருஷ்டியும் கூறியுள்ளனர். முற்கூறிய அவ்வியக்த நிலையே மகதத்துவமென்றும், இம்மக தத்துவமே அகங்கார தத்துவம் என்றும், இவ்வகங்காரநிலையே வெளிப்படுந் தருணமாயுள்ளபோது கால தத்துவ மென்றும் குணங்கள் மூன்றினது வேறுபடுநிலைகளாம், அதாவது, ஆலமரம் ஆல விதையுள் ஒடுங்கிய நிலையே அவ்வியக்தமாகும். அவ்விதை நனைந்தூறி உப்புயிருத்தலே, மகதத்வமாகும், இதுவே ஒருசிலநாளில் முளைவிட்டு இலைவிட்டு காணுமதுவே காலதத்துமாகும் இதில் அவ்வியக்தமே அகங்கார தத்துவம் என்றும் நீ அறிந்திடுவாயாக என்றருளினார்!.. (எ-று).

இன்னும் நிர்மல சொரூபமான தன்னை, எதிரிட்டுக் காண முற்படும் அறிவுக்கு முன்பிருந்த மறதிநிலையே குணவேறுபாடு அற்ற அவ்வியக்தமான பிரகிருதி என்றும்... அவ்வறிவு உள்முகமாகவும் வெளிமுகமாகவும் மருவிடும்நிலையே இடமே - மகதத்துவமென்றும், இது தன்னிடத்துக் காரியப்படும் வித்யாச வித்தைகளே அகங்கார தத்துவம் என்றும், அதன் சலனமற்ற சொரூபமே சத்துவ குணமென்றும், சலன சுபாவமே இரசோ குணமென்றும், இதன் மக்கினம் - ஆர்ப்பரிப்புகளே தமோகுணம் என்றும், இதனைத் தனது அநுபவத்தாற் காணப்படும் உகபத் சிருஷ்டி என்றும் சத்துக்கள் கூறியுள்ளனர். என்பர்! (எ-று).

அ-கை- முன் கூறிய மூன்று குணங்களையும் கொண்டு, ஜெகசீவபரங்களின் உற்பத்தியை கூறும்போது முதலில் ஈசுவர சிருஷ்டியைக் கூறுகின்றார்... (எ-று).

25. இக்குணங்களிலே விண்போன்றிருக்குஞ் சிற்சாயை தோன்றும்
முக்குணங் களினுந் தூய்தாம் முதற் குணம்மாயை யாகும்
அக்குணப் பிரமச் சாயை அந்தரி யாமி மாயை
எக்குணங் களும்பற் றாதோன் நிமித்த காரணமா மீசன்!...

அ-வ, உரை = சுத்தப் பிரம்ம சைதன்யமான பிம்பம், அவ்வியக்தமாய் முக்குணலயமாயுள்ள பிரகிருதியே தெளிந்தநீராம், இந்த நீருள் தோன்றும் அப்பிரம்ம சைதன்ய பிம்பமே, பிரதி பிம்பமாகும், ஆக, பிரம்மசைதன்ய பிம்பமும், பிரகிருதி எனும் மாயையும், இம்மாயை நீருள் தோன்றும், பிரதிபிம்பமும் என இம் மூன்றுங்கூடிய ஓர் லிங்கஸ்வரூபமே ஈசுவரன் என்று வேதங்கள் வரைவு செய்துள்ளன. ஈசுவரனுக்கு இதுவே காரணசரீரமாகும் மற்றும் ஈசுவரனுக்கு இவ்விசய காலமே ஆனந்தமய கோசமுமாகும்.

அ-கை ஈசுவரனின் காரண சரீர உற்பத்தியும், சீவனது உற்பத்தியையும் கூறுகின்றார்.

26. ஈசனுக் கிதுசு ழுத்தி யிதுவே காரண சரீரம்
கோசமா னந்த மாகும் குணமி ராசதம வித்தைத்
தேசறு மவித்தை தோறும் சிற்சாயை சீவ கோடி
நாசமா முயிர்க் கப்போது நாமமும் பிராக்ஞனாமே...

அ-வ, உரை = இவ்வீசுவரனுக்கு இந்த மாயையே சுழுத்தி அவஸ்தையாகும். இதுவே ஈசுவரனுக்கு காரண சரீரமு மாகும், இதுவே இவருக்கு ஆனந்தமய கோசமும் ஆகும். பிரகாச விளக்கமில்லாத ரசோ குண அவித்தைதோறும் தோன்றுகின்ற ஞான விரிவுணர்வே சீவர்களாகும், யாவையும் அழிந்து மறந்துள்ள சுழுத்தி அவஸ்தையைப் பொருந்தியனுபவிக்கின்ற அவ்வவசரத்தில் (தருணத்தில்) சீவர்களுக்குப் பெயர் பிராக்ஞன் (அறிவுடையோன்) எனப்படும். (எ-று).

அ-கை - இனி சீவர்களது காரண சரீர உற்பத்தியை நன்கு விரித்து விளக்கம் தருகின்றார் ஞானாச்சாரியார்!. (எ-று).

27- அழுக்கொடு பற்றுஞ் சீவர்க் கதுவே யானந்த கோசம்
சுழுத்தி காரண சரீரஞ் சொன்ன விம்மட்டு மோகம்
முழுக்குணத் திரண்டால் வந்த மூலவா ரோபஞ் சொன்னோம்
வழுத்துஞ் சூக்கும வாரோப வழியும் நீ மொழியக் கேளாய்.

அ-வ, உரை = சுத்தமாயை ஈசுவரனுக்கு காரணசரீரமும் சுழுத்தி அவஸ்தையும் ஆனந்தமய கோசமும் போல, சீவர்களுக்கு இந்த சுத்தரசோகுண அவித்தையே, காரண சரீரமும் சுழுத்திய வஸ்தையும் ஆனந்த மய கோசமுமாம், இந்த சுத்த சத்துவம் சுத்த

ரஜசு சுத்த தமசு எனும் முக்குணங்களுக்கே முழுக்குணமென்று பெயராகும். இந்த முழுக்குணங்களினின்றும் சத்துவம் ரஜசு என்று இரண்டு குணங்களிலிருந் துண்டான மூல ஆரோபத்தைக் கூறினோம். இனி இதில் எஞ்சிய தமோ குணத்திலிருந்து உண்டாகும் சூக்கும ஆரோபம் பற்றிக் கூறுவோம். கவனமாய்க் கேட்பாயாக. (எ-று).

இன்னும்., சர்வ சாக்ஷியாயும் தோற்ற ஒடுக்கங்கடந்த அநாதியாயுமுள்ள பிரம்மமே தலைமையுடையதாதலால், சீவன் கூடஸ்தன் ஈசுவரன் பிரப்பிரம்மன் என்று நான்கு அதிஷ்டானங்களாகவும் கூறியுள்ளது, அஃது சத்துவரசோ குணங்களில் தங்கியதால் மாயை அவித்தை என்றும் அவற்றில், அப்பிரம்மப், பிம்பப் பிரதிபிம்பம் - (சாயை, நிழல்) ஆரோபமாவதால் ஈசுவரன் சீவன் என்றும், அம்மாயை அவித்தைகள் சீவேசுவர காரியங்களாவதால் காரண சரீர மென்றும், அவைகளினுள் சர்வமும் அடங்கியிருப்பதை, சுழுத்தியவஸ்தை என்றும், அவைகளில் நீங்காத பிரியமுள்ளதால் ஆனந்த மயகோசமெனவும், இவைகளை யான் எனதென்று அபிமானம் - கொண்டுள்ளதால், அந்தரியாமி பிராக்ஞன் எனவுமாம். (எ-று).

அ-கை, - சீவேசுவரர்களுக்குச் சூட்சும சரீரம் உண்டான வகைமுறையை கூறுமுன் சத்திகளின் தோற்றம் இன்னின்னதென விரித்துரைக்கின்றார்... (எ-று).

28. ஏமமா யாவினோதயீ சனா ரருளினாலே
பூமலி வுயிர்கட் கெல்லாம் போகசா தனமுண்டாகத்
தாமத குணமிரண்டு சத்தியாய்ப் பிரிந்து தோன்றும்
வீமமா மூடல் என்றும் விவிதமாந் தோற்ற மென்றும்...

அ-வ, உரை = விருப்பங்களில் ஆர்ப்பரிப்புடைய மாயையை துணைக் காரணமாகக் கொண்டுள்ள ஈசுவரனுடைய கிருபையினால் நேர்த்திமிகுந்த சீவர்கள் அனைவர்க்கும் அநுபோக சாதனம் உண்டாகும் பொருட்டுத் தமோ குணமானது ஆவரணம் (மறைப்புச்சக்தி) என்றும் சூக்கும பஞ்சீகரணமாகாத பஞ்சபூதங்களையும், பஞ்சீகரண பூதங்கள் ஐந்தையும், இதனால் பல்வேறுவிதமாகும் நாமரூபப் பதார்த்தங்களையும் தருகின்ற விக்ஷேப (தோற்றங்களாகின்ற) சத்தி என்றும் இரு விதங்களாகப்

பிரிந்து தோன்றும், தனது தேவைகளை தான் கவனித்துக்கொள்ளும் வியஷ்டிசீவர்கள், அச்சீவர்கள் அனைவருங்கூடிய சமஷ்டியே வடிவனாம் ஈசுவரன் எனக்கொள்க! (எ-று).

இன்னும் சேறு கலந்த நீருள் தோன்றும் ஆபாச பிம்பமும், அறிவின்மையும், ஆவரணமும், அறிவும், விட்சேபமும் என இரண்டு சத்திகளாய் மலர்ந்தன் என்பதாம்.

அ-கை, - விட்சேப சத்தியின் தன்மாத்திரையாயுள்ள சூட்சும பஞ்சபூத உற்பத்தியைக் கூறுகின்றார்... (எ-று).

29. தோற்றமாஞ் சத்தி தன்னிற் சொல்லிய விண்ணாம் விண்ணிற்
காற்றாங் காற்றிற் தீயாம் கனலில்நீராம் நீரில் மண்ணாம்
போற்றுமிவ் வைந்தும் நொய்ய பூதங்க ளென்று பேராம்
சாற்றுமற்றிவற்றிற் போக சாதன தனவுண்டாகும்!

அ-வ, உரை = மூலப்பிரகிருதியினின்றும் வெளிப்பட்ட, சுத்த சத்துவமும், இதில் ஈசுவரனும் உண்டாகியது, சுத்தரசோ குணத்தினின்றும், சீவர்கள் உண்டாகியது, சுத்த தமோ குணத்தினின்றும் வெளிப்பட்ட இரண்டு சக்திகளில் முன்பு ஆவரண (மறைப்பு) சக்தியை கூறினோம், எஞ்சிய விட்க்ஷேப சத்தியின் விரிவுபயன்பாடுகளைப் பற்றிக் கூறுகிறோம் கேட்பாயாக?, விட்க்ஷேபச் சத்தியிலிருந்து சப்தம் என்ற விசயமான ஆகாசம் தோன்றியது, இவ்வாகாசத்திலிருந்தும் தொடுவுணர்வு தட்பவெப்பம் பரிசவிசயங்களடங்கிய வாயு தோன்றியது. இவ்வாயுவிலிருந்தும் ரூபங்கள் (உருவங்கள்) விசயமான அக்கினி தோன்றியது. அவ்வக்கினியிலிருந்தும் சடுவித (ஆறுசுவை) ரசங்களையுடைய அப்பு (நீர்) தோன்றியது. இந்நீரிலிருந்தும் பிருதிவி (பூமி) கந்தங்களின் விசயமான (நாற்றம்) பிருதிவி தோன்றியது, அந்தந்தப் பூதங்களின், விசயங்களான, சப்தம், பரிசம் ரூபம் ரசம் கந்தம் முதலிய விசயங்களையே அந்தந்த பூதங்களின் (குணங்களையே) தன்மாத்திரைகள் என்று சாத்திரங்கள் கூறியுள்ளது என்று அறிவாயாக, (எ-று).

அ-கை- இந்த சுத்த சத்துவகுணத் தன்மாத்திரைகளிலிருந்தே உள்ளமாதி அந்தக் கரணங்கள் உண்டாயின, என்றார் (எ-று).

**30. ஆதிமுக் குணமிப் பூதம் அடங்கலுங் கலந்து நிற்கும்
கோதில்வெண் குணத்திலைந்து கூறுணர்க் கருவியாகும்
ஓதிய பின்னை ஐந்தும் உள்ளம் புத்தி யிரண்டாய் ஞான
சாதன மாமிவ் வேழும் சற்குணப் பிரிவினாலே....**

அ-வ, உரை = ஆதியின் பராசக்தியினிடமாய் தோன்றிய வேறுபாடற்ற முக்குணங்களே ஆதிமுக்குணம் ஆகும். இதில் ஒவ்வொரு பூதங்களிடமும் சத்துவம், இரஜசு, தமசு என்ற மூன்று குணங்களும் உண்டு, இவற்றில் ஆகாசாம்சமாக, உள்ளமும், வாயுவினம்சமாக மனமும், அக்கினியினம்சமாக புத்தியும், நீரினம்சமாக சித்தமும் பூமியினம்சமாக அகங்காரமும் என்ற இவ்வந்தக் கரணங்களின் ஐந்திலும் பஞ்சபூத தன் மாத்திரைகளின் சமஷ்டி (கூட்டுறவு) தன்மையாகப் பொருந்தியுள்ளன. இதனாலேயே, மனதினாலறிந்ததைப் புத்தி பகுத்தறிந்து நிச்சயம் செய்யவும், புத்தியினாலறிந்து தெளிந்ததை அடிக்கடிப் பாவனையுடன் சிந்தித்திருக்கும் சித்தமும் இச்சித்தம் நிதானித்த விசயங்களை அபிமானித்து அங்கீகரித்து அனுமதிக்கினற அகங்காரமுமாகிய இந்நான்கினது விசய விவகார பாவனைகளை எல்லாம் தன்னகத்தே ஏற்றுப் பத்திரமாக வைத்திருக்கும் ஆகாசமும் ஆகிய இப்பஞ்சபூத விசயங்களும் கூட்டுறவாயிலங்கும், சத்துவகுணசமஷ்டியிலான அந்தக்கரணங்கள் ஐந்தும், இச்சத்துவகுண பஞ்சபூதங்களின் விசயங்கள் (தன்னம்சங்கள்) ஐந்தும் வியஷ்டியாக, தனித்தனியே நின்று, ஆகாசம்சமாகிய சப்தங்களை காதுவழியே கேட்கும், வாயுவினம்சமாக, தோள் (துவக்கிந்திரியம்) பரிசங்களை அறியும், அக்கினியினம்சமாக கண்கள் ரூபங்களையறியும், நீரினம் சமாகநாக்குசுவைகளையறியும் பிருதிவியினம்சமாக ஆக்கிராணம் (மூக்கு) கந்தங் (வாசனை) களையறியும், இந்த மெய்வாய் கண் மூக்குச் செவி ஐந்தும் மனம் புத்தி இரண்டுமாக, ஒருசேர இவ்வேழும், அறியப்படுவதற் கேதுவானவைகளே, ஞானேந்திரியங்கள் என்றும், இப்பத்தும் அந்தக் கரணங்கள் ஐந்தும் ஞானேந்திரியங்கள் ஐந்தும் சத்துவகுணாம் சமாதலால் ஞானசாதனங்கள் என்று சாத்திரங்கள் கூறியுள்ளன. இன்னும், வியஷ்டி அம்சங்களான ஞானேந்ரியங்கள் ஐந்தும், சமஷ்டி அம்சங்களில் மனமும் புத்தியுமாகிய இவ்வேழும் ஞானசாதனங்களாகும் என இக்கவியுள் கூறியுள்ளார்.

அ-கை, - தன்னம்சமாயுள்ள ரசோகுணத்திலிருந்து வியானாதி வாயுக்கள் ஐந்தும், கர்மேந்திரியங்கள் ஐந்தும் உற்பத்தி விதங்கூறுகின்றார்.

31. இராஜத குணத்தில் வேறிட்டு எடுத்தகூ றைந்தும் ஐந்தும்
பிராண வாயுக்க ளென்றும் பெருந்தொழிற் கன்ம மென்றும்
பராவிய பெயராம் இந்தப் பதினேழு மிலிங்க தேகம்
சுராசுரர் நரர்வி லங்காய்த் தோன்றிய வுயிர்கட் கெல்லாம்.

அ-வ, உரை = தன்னம்சமாயுள்ள சுத்தஇரசோகுணக் கூறுகளைந்தும் கூடி ஒரு தன்மையாயுள்ள வியானாதி வாயுக்கள் ஐந்தும், தனித்தனிக் கூறுகளாயுள்ள கர்மேந்திரியங்கள் ஐந்தும் இதன் பங்குகளும் சேர்ந்து பருமையும் நுண்மையுமான, உடலியக்கமான கிரியை (காரியங்களைச்) களைச் செய்யும் இக்கர்மேந்திரியங்கள் ஐந்தும் ஆக இப்பத்தும் இராஜ தகுணாம்சமாதலால் தொழிலில் ஈடுபடு கருவிகளாயின, இக்கவியில் பதினேழு தத்துவம் என்று கூறியது யாதெனில், சில நூலாசிரியர்கள், அந்தக்கரணம் ஐந்தும் ஞானேந்திரியம் ஐந்தும் வியானாதி வாயுக்கள் ஐந்தும் கர்மேந்திரியங்கள் ஐந்தும் கூடிய இருபது தத்துவங்களும் சூட்சுமசரீரம் என்றும் பதினெட்டு என்றும் பத்தொன்பது என்றும், பதினான்கு என்றும் சில தத்துவங்கள் ஒன்றினில் ஒன்றாய் அடக்கி கூறியுள்ளது. இந் நூலாசிரியர் ஸ்ரீ தாண்டவராயசுவாமிகள் அந்தக்கரணம் ஐந்தில் மூன்றை நீக்கி, மனம் புத்தி இரண்டுமட்டும், வியானாதி வாயுக்கள் ஐந்தும் கர்மேந்ரியங்கள் ஐந்துமாகப் பதினேழு தத்துவங்களும் சூட்சும சரீரத் தத்துவங்கள் என்று கூறியுள்ளார் என அறியவும், இப்படியான, 20-19-18-17-14, எனப்பல படி கண்டாலும் இதுவே தேவர்கள், அசுரர், மனிதர்கள் விலங்கினங்கள் பறவை மற்றுமுள்ள அனைத்துச் சீவர்களுக்கும் சூட்சும சரீரங்களாயுள்ளது என்று கூறியருளினார்!... (எ-று).

அ-கை, சூக்கும தேகங்களில் அவ்வப்போது நிகழும் அவஸ்தா காரியங்களுக்கேற்ற கற்பனைப் பெயர்களை கூறுகின்றார். (எ-று).

32. இவ்வுடல் மருவுஞ்சீவர்க் கிலங்குதை சதனென்றாகும்
இவ்வுடல் மருவு மீசர்க் கிரணிய கருப்பனாகும்
இவ்வுடல் இரண்டு பேர்க்கும் லிங்கசூக்குமசரீரம்
இவ்வுடற் கோசமூன்றாமிது கனாவவஸ்தை யாமே!...

அ-வ, உரை = மேற்கூறிய வியஷ்டி (தன்உடல், தன் உயிர், தன் உடமை, தனது அநுபவம் என்று, தன்னைச் சார்ந்தவைகளோடு மட்டும் தன்னதென்று கூடி சூக்குமவுடலோடுங்கருமம்., அநுபவிக்கின்ற சீவர்களுக்குப் பிரியமானபெயர் தைசதன் என்பதாகும், வேறுவிதமாய், எல்லாவுடமைகள் எல்லாவுயிர்கள் எல்லாவுடல்கள், எல்லாச்சீவர்கள், எல்லா அநுபவங்களையு தன்னுள்ளடக்கிக் கொண்டுந் தனது சூக்குமமானவுடலுடன் கூடி அநுபவிக்கின்ற ஈசுவரனுக்குப் பிரியமாய் வரும் பெயர் இரணியகர்ப்பன் என்பதாகும். ஈசுவரன் சீவர் இருவருக்கும் இதுவே சூக்கும சரீரங்களாகும், இச்சூட்சும சரீரங்களுக்கு, பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம் என்கின்ற மூன்று கோசங்களும் உள்ளதாம், இவ்விருவர்க்கும் இச்சூக்கும தேகமே மனோராஜ்ஜியம் நிகழுமிது கனவு (சொப்பனஅவஸ்தையாகும்) நிலையாம், விசயங்கள் என்கிற தன்மாத்திரைகள் சூக்குமாயிருப்பதால் சூட்சும பூதங்கள் என்றும், இவற்றினது தடிப்பை (ஆர்ப்பரிப்பை) சூக்கும தேகங்கள் எனவும், இவ்விருவகைநிலையினை பொருந்தி அநுபவிப்பவர்களை (சீவனை) தைசதன் என்றும், ஈசுவரனை இரண்ய கர்ப்பன் எனவும் அது மனோராஜ்ஜியம் செய்தலை சொப்பனகாரியாவஸ்தை என்றும், இதுவே பிராண, மனோ, விஞ்ஞான மயங்களாகத் தன்னை மறைத்துக் கொள்வதால் கோசம் (மூடி - உறை) என்றும் அவ்வவ் அவஸ்தா காரியங்களைச் சார்ந்து வரும் கற்பனைப் பெயர்கள் இவ்விதமாம் என்றறிந்திடுக என்றருளினார், (எ-று).

அ-கை, பஞ்சபூத பௌதீகமான நாமருபசெகத்து (உலகம்) உற்பத்தியையும் இவை தோன்றக் காரணமாயுள்ளவற்றையுங் கூறுகின்றார்., (எ-று).

33. சூக்கும சகமிம் மட்டுஞ் சொல்லினோ மிப்பாற் றூலம்
ஆக்குமா ரோபந்தானும் அடைவினின் மொழியக் கேளாய்
தாக்குமிவ் வுயிர்க்குத் தூலந் தனுவும்போ கமுமுண்டாகக்
காக்குமவ் வீசன் பஞ்சீ கரணங்கள் செய்தான் தானே...

அ-வ, உரை = சுத்த சத்துவம் சுத்தரஜசு குணங்களிலிருந்து சூக்கும பஞ்சபூதங்களின் தன்மாத்திரைகளையும், அதன் மூலம் இருபது தத்துவங்களின் கூட்டுவடிவச் செயலாகும் சூக்கும சரீரங்களின் இயல்புகளைச் சொன்னோம், நன்மகனே? இனிச் சூக்கும சரீரமுடைய சீவர்களுக்கு, தாங்கள் வசிப்பதற்கு வீடான தூல உடலையும், மூலிகை தாண்யம் நவலோகம் ஆடையாபரணம் உண்டாகத்தக்க, சிருஷ்டியைச் செய்யவும், சீவர்கடைத்தேறும் படிக் கருணையோடும் இடம், கல், மணல், சிமிண்ட், சுண்ணாம்பு மரம் நீர் கொண்டு உருவாக்கும் குடியிருப்பு மனைபோல ஈசுவரன் ஐந்து பூதங்களையும் கலந்து பிணைத்து ஒருங்குபடுத்தும் பணியான பஞ்சீகரணம் செய்து, அதன் மூலம் சீவர்களைப் பராமரிக்கும்படி செய்தான், எப்படி? அண்டம், பூலோகம், உடல்கள் - நாமரூபங்கள் புசிப்பு (அநுபவித்தல்) முதலியனவாகும்.... (எ-று).

அ-கை, இனி பஞ்ச பூதக்கலப்பு (பஞ்சீகரண) முறையும் அவற்றினாலாகும் காரியங்களையும் கூறுகின்றார்... (எ-று).

34. ஐந்துபூ தமும்பத் தாக்கி அவைபாதி நந்நான் காக்கி
நந்துந்தன் பாதிவிட்டு நாலொடு நாலுங் கூட்ட
வந்தன தூல பூதம் மகாபூத மவற்றி னின்றுந்
தந்தன நான்காந் தூலத் தனுவண்டபுவன போகம்...

அ-வ, உரை = சுத்ததமோகுண பூதங்கள் ஐந்தினையும் இரண்டிரண்டாகப் பிரித்து அதில் (பத்தில்), தன்னம்சமாக ஒருபிரிவு ஐந்தை வைத்து, மறுபாதி ஐந்தை, ஒவ்வொன்றையும் நான்கு நான்கு பாகம் செய்து இப்படிப் பிரித்த இருபது பங்குகளையும், தன்னம்சபூதங்கள் ஐந்திலும், தன்னம்சபூதம் அரைப்பாகமும், (அதாவது - ஆகாசம் அரைப்பங்கில், காற்று 1/8, தீ 1/8, நீர் 1/8, மண் 1/8 - பங்குகள் வீதம் சேர்ப்பித்தது எனவாம்) மற்றய ஒவ்வொரு பூதங்களின் 1/8 பங்குகளும் சேர்ந்தது பஞ்சீகரணம் ஆகும்.

இவற்றினின்றும் வந்ததே சீவர்களின் சரீரங்களும் அண்டமும் புவனமும் புசிப்புகளும்.. (எ-று).

அ-கை, சீவேசுவரர்கள் தூலதேகத்துடன் கூடியபோது வரும் கற்பனைப் பெயர்களைக் கூறுதல்... (எ-று).

35. தூலமே மருவுஞ் சீவன் சொல்லிய விசுவ னாகும்
தூலமே மருவுமீசன் சொல்லும் விராட் புருடனாகும்
தூலமே அன்ன கோசந் துன்னுஞ் சாக்கிரவவஸ்தை
தூல கற்பனை ஈதென்று தொகுத்தது மனதிற் கொள்வாய்
... (எ-று).

அ-வ, உரை = தன்மாத்திரைகளான ஐந்து பூதங்களும் ஒன்றோடு ஒன்று கலந்த (பஞ்சீரகரணமான) தை தூலபூதம் என்பதாம், அதோருருவமாய்த் தடித்ததை தூலசரீரமென்றும், அதனைப் பொருந்தி அநுபவிக்கின்ற சீவரை விசுவனென்றும், ஈசுவரனை விராட்டுப்புருடன் என்றும், தனக்கு அன்னியமாய் எதிரிட்டு அறிவதை சாக்கிராவஸ்தை (விழிப்பு நிலை) என்றும், இதுவே இவ்விருவருக்கும் அன்னமய கோசம் என்றும் கொள்ளலுமாம், தனது ஒரு தேகத்தையே குறிக்கும் சீவனது தூலஉடலை வியஷ்டி என்றும், தன் தேகமாகவே, அண்டபிண்ட சராசரங்களையும் சீவகோடிகளின் சர்வ சரீரங்களையும் ஒருங்குறத் தன்னதாக அபிமானிக்கும் (கருதும்) ஈசுவரனின் சரீரமே சமஷ்டியாம் என்றறிக.. (எ-று). இவ்விதம், சீவ ஈசுவரர்களின் கற்பனை நாமம் கூறப்பட்டது.

அ-கை, - இவ்விதம் சீவேசுவரர்களுக்கு உபாதிகள் ஒன்றாயின் சீவன் ஈசுவவரன் என்று வேறுபடுத்தி அறிவது எவ்வாறெனின் அதற்கு விடைபகர்கின்றார் (எ-று).

36. சீரிய வீசனார்க்குஞ் சீவர்க்கு முபாதி ஒன்றேல்
ஆரிய குருவே பேதம் அறிவது எப்படியென்றக்கால்
காரிய வுபாதி சீவன் காரண வுபாதி யீசன்
வீரிய மிகுஞ் சமஷ்டி வியஷ்டியாற் பேத மாமே...

அ-வ, உரை = வேதாந்த வேதாகமங்கள் எல்லாம் திரண்டு ஒருருவமாய் எளியவனுக்கு வாய்த்த ஞானச்சாரியரே, தாங்கள் அருளிய முற்கவியின்படி , சீவனுக்கும் ஈசுவரனுக்கும்,

தூலசரீரவுபாதி, அன்னமயகோசவுபாதி, விழிப்புநிலையான சாக்கிராவஸ்தை உபாதிகள் ஒன்றே என உரைத்தருளியுள்ளீர்கள், இவ்விதம் இரண்டுபேரையும் ஒன்றுபடுமாறு கூறியதில் அடியவனுக்குச் சந்தேகம் வந்துள்ளது. வேதாந்த உபநிஷத்துக்கள் எல்லாம் ஈசுவரனை அந்தரியாமி சர்வக்ஞன் என்றும், சீவனை கிஞ்சிக்ஞன் - அற்ப அறிவுடையோன், தனது ஒருடம்பை மாத்திரம் அறிபவன் என்றும் ஈசுவரனோ? உலகிலுள்ள அனைத்துடம்புகளையும் அறிகின்றவனாயிருக்க தாங்கள் இவ்விருவரது உபாதிகளையும் ஒன்று எனக் கூறியது கூடுமாறு எவ்விதமெனின், நன்மாணாக்கனே, தனி ஒரு மரத்தைபோன்றவன் வியஷ்டிசீவன், பல்கோடி மரங்கள் இணைந்துள்ள, ஆரண்யத்(வனம்)தைப் போன்றவன் சமஷ்டியை உடையவன் ஈசுவரன், எனச் சுலபமாய் அறிந்திருப்பாயாக என்றருளினார்.. (எ-று)..

இதுவுமது பற்றியதே குளகம்

**37. மரங்கள் போல் வியஷ்டி பேதம் வனமெனல் சமஷ்டி பேதம்
சரங்கள்தா வரங்கள் பேதம் தனியுடல் வியஷ்டி யென்பார்
பரம்பிய வெல்லாங் கூட்டிப் பார்ப்பது சமஷ்டி என்பார்
இரங்கு பலசீவர்க் கும்மீசர்க்கும் பேத மீதே!...**

அ-வ, உரை = தனித்து நிற்கும் ஒரு மரத்தைப் போன்றது சீவர்களின் வியஷ்டிபேதம், விரிந்துதிரியும் அனைத்துயிர்களின் தூலவுடல் களுஞ்சேர்ந்து, பல்லாயிரம் மரங்களைத் தன்னகத்தே கொண்டவனமே ஈசுவரனின் சமஷ்டிபேதம் இதுவே ஆகும் என அறிவாய்... இன்னும் தனித்து நிற்கும் சீவனின் வியஷ்டி பேதம் காரியவுபாதியாம், அனைத்தையும் தானாய் அமைந்திருக்கும் ஈசுவரனின் சமஷ்டிபேதமே காரணவுபாதியாம்.

அ-கை, 19-வது கவி முதல் 31-வது கவிவரையும், ஆரோப உத்தியினால் தன்னிடத்தில் தோன்றிய சகசீவபரங்களின் கற்பனைத்தோற்றங்களை விளக்கினார், இனி, 2-வது உத்தியான அபவாதக்கிரமத்தை உபதேசிக்கத் துவங்குகிறார், என்பதாம் (எ-று).

38. கற்பனை வந்து வாறு காட்டினோம் காண்ப வெல்லாம்
சொப்பனம் போலு மென்றேத் துணிந்தவன் ஞானியாவான்
செற்புதை மழைக்காலம் போய்த் தெளிந்த வாகாயம் போல
அற்புத முத்திசேரும் அபவாத வழியுங் கேளாய்?...

அ-வ, உரை = மயக்கம் சந்தேகம் விபரீதபுத்தியினால் மூலத்தை மறந்துவிட்டு மரத்தின் இலைகிளைகளை ஆராயும் ஆரோபயுக்தியை விரித்து விளக்கியவர் இனி, ஆபரணங்களை விட்டுப் பொன்னைப் பார்ப்பது போலவும், சட்டி குடம்பானை வடிவங்களைவிட்டு மண்ணைப் பார்ப்பது போலவும், உபாதிகளைவிட்டு நிருபாதிகத்தைப் பார்ப்பது போலவும் தூலசூக்கும காரணசரீரங்களின் அவஸ்தைஅபிமான அதிஷ்டானங்களை ஆய்ந்து, அவைகள் அநித்யமாய், தோற்ற மாத்திரமாய் கற்பனையாய் வந்தவை என்றும், இவைகள் கனவைப்போல பொய்யாகியது என்றும் விசாரித்தறிந்து தெளிந்து, நீர்கோர்த்த கருமேகங்கள் சூழ்ந்து, மின்னலும் குமுறலும் இடியும் மழையும் கொட்டித் தீர்ந்த பின், மேகம், குமுறல் மின்னல் இடி இருள்யாவும் நீங்கி வெளிச்சென்று விளங்கும் ஆகாயம் போன்ற நான்! எனக்கு இங்கு நிகழ்ந்த எதுவும் ஒரு பொருட்டன்று எனத் துணிந்தவன் அக்கணமே ஞானியாவான்! இச்சன்மார்க்கநெறிக் கேதுவாகும், ஒன்றினில் ஒன்றை ஒடுக்கிக் காணும் (அபவாத) உத்தியைப் பற்றி இனிக் கூறுவோம் கேட்பாயாக, என்றார். (எ-று).

அ-கை- அபவாத இலக்கணம் கூறல்.

39.அரவன்று கயிறென் றார்போல் ஆளன்று தறியென் றார்போல்
குரவன்தன் னுபதே சத்தால் கூறும் நூல் ஒளியைக் கொண்டு
புரமன்று பொறிதானன்று பூதங்க ளன்று ஞானந்
திரமென்றும் பிரம மென்றுந் தெளிதலே அபவா தங்காண்!

அ-வ, உரை = வழியில் எதிரில் கிடந்த கயிற்றைப் பார்த்து, முன் பாம்புகளை கண்டிருந்த ஸ்மிருதி ஞாபகத்தால் பயமுண்டாகி அருகில் சென்று பார்த்தபோது, இது பாம்பு அல்ல, கயிறு என்றறிந்ததும் பயம் நீங்கித் தெளிவுண்டாவது போலவும், தூரத்தில் நட்டுவைத்த கட்டையைக் கண்டு, யாரது ஆளோ கள்வனோ கண்காணியோ எனப்பாவித்து அதனருகிற் சென்றபோது, இது

ஆளோ கள்வனோ அல்ல கட்டைதான் எனத் தெளிந்தது போலவும், ஞானசாத்திரங்கள் கூறும், பரவித்தையின் நுண்மை இரகசிய விசயங்களை ஞானாச்சாரியார் உபதேசவாக்கியங்களின் பிரகாசமான வெளிச்சமாம் ஞானக்கண்ணினால் உணர்ந்து தெளிந்து துணிந்து, தேகம் முதலிய அநாத்ம தத்துவங்கள் முப்பத்தி ஐந்தினது செயலும் இயல்பும் பயனும் நான் அல்ல என்னதல்ல என்றும் அறிந்து, இவைகட்கு ஏதுவாய் நின்றிலங்கிய புவனங்களுமல்ல, பஞ்ச பூதங்களுமல்ல பஞ்ச கோசங்களும் நானல்ல, இவ்விலக்கணங்களுக்கு காரணசாக்ஷித்திரமான ஞானமென்றும், பிரம்மமென்றுந் தெளிந்த அநுபவ நிலையே அபவாதநெறியுத்தியாம், என்றார்... (எ-று).

அ-கை, அதிஷ்டானமும் அதன் பிரதாபமும் தவிர, ஆரோபம் என்ற கற்பனாத்தியாசங்கள் ஏதும்நீ இல்லவே இல்லை எனல்.

40. படமும் நூலும்போற் செய்த பணியும் பொன்னும்போற் பார்க்கில்
கடமும் மண்ணும் போல் ஒன்றாங் காரண காரியங்கள்
உடன்முதற் சுபாவ மீறாய் ஒன்றிலொன்றுதித்த வாறே
அடைவினி லொடுக்கிங் காண்பது அபவாத வுபாய மாமே!.

அ-வ, உரை = காரணமாயுள்ள பஞ்சைவிட்டு, நூல் அங்கவஸ்திரம் சேலை, வேஷ்டி, போர்வை, துண்டு என்ற காரியார்த்தங்களை எண்ணாமல், இதன் மூலாதாரம் பஞ்சே என எண்ணுவதும், ஆதாரமாயுள்ள தங்கத்தை நீக்கி இது பதக்கம், ஆரம், சங்கிலி, தோடு, வளையல் எனும் காரியார்த்தங்கள் எனும் ஆரோப புத்தியை நீக்கி இவ்வனைத்திலும் பொருந்தியவாறுள்ளது தங்கமே என்றெண்ணுவதும், மூலத்தாதுப்பொருளாய் மண் இருக்க, இது சட்டி பானை குடம் குதிரு மொடா என்று கண்டறியும் ஆரோப புத்தியை விவேகத்தால் சிதைத்தழித்து, காரணமாயுள்ள மண்ணே என்றும் உள்ளது என எண்ணுவதே, ஒன்றினுள் ஒன்றை ஒடுக்கிக் காணுமதுவே அபவாத நெறியாகும்! இன்னும் அறிவுப் பொருளாயுள்ள சிவம் இன்றி, இது இது தூலவுடல் சூக்குமவுடல் காரணவுடல் என்றும், இது மலை சமுத்திரம் உலகம், மனை உடமைகள், உறவுமுறைகள் பஞ்சகோசங்கள் பஞ்சபூதங்கள் சீவர்கள் ஈசுவரன் என்கிற ஆரோப கற்பனைகளை (விசாரபலமும்

ஞானாச்சாரியரது உபதேசமும் கொண்டு) ஒழித்து, மேற்கூறி அனைத்திலும் ஊடுருவிநின்று அறிந்து கொண்டிருக்கும் அறிவே வடிவாய்த்திகழும் சிவமே நானென்று எண்ணுவதே அபவாத உபாயமாகும் என்றார், தன்னிடத்தில் எதார்த்தமாய் இல்லாத கற்பனா சிருஷ்டிகளான சகசீவபரங்களையும் தன்னதாய் தன்னுள் ஒடுக்கிக், காண்பதுவே, அபவாத யுக்தியாகும்... (எ-று)

அ-கை, - முன்பு, 28-வது கவியில், வீமமாமூடலென்றுங் கூறிய ஆவரணசத்தியின் இலக்கணம் யாதென வினவுதல்... (எ-று).

41. தூடண தமத்தில் வந்த தோற்றமாஞ் சத்தி செய்யும்
ஏடணை விகாரஞ் சொன்னீர் இரண்டு சத்திகளென் றீரே
மூடலாஞ் சத்தி செய்யும் மோகமுஞ் சொல்லு மையா
கேடறக் குருவே என்னக் கிருபையோ டருள்செய்வாரே...

அ-வ, உரை = நித்யானந்தமெல்லாந்திரண்டு ஓருருவமாய் என்னை ஈடேற்றும்படி எழுந்தருளிய தேசிகோத்தமரே!.. முன் 28-வது கவியை விளக்கும்போது, சுத்ததமோ குணத்தினின்றும் உண்டாகிய சக்திகள் இரண்டு என்றீர். அதில், இரண்டாஞ் சத்தியான விட்சேப சத்தியினது பிரமித்தும் தூஷித்தும் புகழத்தக்க, மூவாசைகள் அடங்கிய விவகாரவிரிவுகளை எல்லாம் சொன்னீர்கள் ஆனால் சீவர்களை மயக்கியும் அவனை அவனுக்கு காட்டாமல் மறைத்தும் கேட்டினைச் செய்யும் ஆவரண (மறைப்புச்) சத்தியின் மகத்துவ மயக்கதையும் அடியேனுக்கு கருணைகூர்ந்துபதேசித்தருள வேண்டுமென்று விண்ணப்பிக்க, குருவும் அநுக்கிரகித்துக் கிருபையோடும் உபதேசம் செய்கிறார். (எ-று).

அ-கை, ஆவரண சத்தியின் இலக்கண வடிவ இயல்பினை கூறுதல்.

42. தானிகர் தனக்காம் ஈசன்தனை யும்தங் களைத்தாம் கண்ட
ஞானிகள் தமையும் அன்றி நாஸ்திந பாதி என்னும்
ஊனிடை உயிர்கள் உள்ளத்து உணர்வு விழிக்குருடாம் வண்ணம்
வான்நிலம் திசைகள் மூடும் மழைநிசி இருள்போல் மூடும்?

அ-வ, உரை = தன்னை ஒருவரும் சிருஷ்டிக்கவோ சம்காரஞ்செய்யவோ தனது சிருஷ்டியை வேறு ஒருவர் சிருஷ்டிக்கவோ, தனக்கு நிகராக வேறு ஒருவர் இருக்கவோ முடியாத,

பிரம்ம மயமாகிய ஈசுவரனையும், குருவுபதேசமும் சாதனங்களும் விசாரணையுங்கொண்டு, தான் அதுவாகவும் அதுதானாகவும் உணர்ந்து தெளிந்து நிச்சயித்துப் பூரண சொரூபமாயுள்ள ஞானிகளையும் தவிர, மகனே நீகேட்ட ஆவரண சத்தியானது, மற்றய சீவர்களின் உள்விளங்கும் ஆத்மசோதியாம் ஞானதிருஷ்டி எனும் உணர்வுவிழி, கடவுளே இல்லை இருந்தால் நம் கண்ணுக்குத் தெரியமாட்டானா, எனும் நாத்திகரையும் இவரது வாக்கியங்களை நம்பி இருக்கின்ற நபாதிகரையும், இவர்களது உடம்பினுள் அந்தரியாமியாய்த் திகழும் அறிவுச்சுடர்ப்பொருள் இவர்களுக்கு தோன்றாமல்? கண்ணிருந்தும் சீவர்கள் இருட்டறையுள் இருக்கும் பொருளை அறிய முடியாதபடி இருள் மறைத்திருக்குமது போல, கருமேகஞ் சூழ்ந்து எங்கும் இருண்டு காணும் கார்காலத் தன்மையே போலவும், மூடி மறைத்து, இகபரசுகமிரன்டுங்கூடாது கேடும் பாவமும் பயனுமாகிய, பிறப்பு இறப்புத் துன்பங்களிலேயே செலுத்திடும் தொழிலாய்த் திகழும் இந்த மூடலென்னும் ஆவரண சத்தியினியல்பு இதுவென நீயறிவாய், என்றருளினார். (எ-று).

(இதுவுமது - குளகம்)

43. பூன்றமாம் பிரமத்திற்கும் புறத்துள்ள விகாரங் கட்கும்
ஆன்ற கூடத்தருக்கும் அகத்துள்ள விகாரங் கட்கும்
தோன்றிய பேதஞ் சற்றும் தோன்றாமல் மறைத்து மூடும்
ஊன்றிய பவவியாதி உண்டாக்கு முபாதி யீதே...

அ-வ, உரை = அண்டபிண்ட சராசரங்களெங்கும் நீக்கமின்றி நிறைந்திருக்கும் பிரம்மஸ்வரூபத்துக்கும், மாயையால் தாக்குறாத ஈசுவரர்க்கும் அறிவுருவமாயிலங்கும் கூடஸ்தருக்கும் சீவன் முதலிய வேறுபாடுகளையும் , இவைகளின் சித்சடபே தங்களேதும், (உணர்வுடைய, உணர்வற்ற) எள்ளளவும் தோன்றாதவாறு மறைக்கும், தனக்குளே விளங்கும் சிவஞானசோதியையும் மறைக்கும் எங்கும் நிறைந்துள்ள பரமாத்ம சொரூபத்தையும் இச்சீவர்கள் அறியமுடியாதபடி மறைக்கும், இதனாலேயே இவர்கள் பிறப்பு இறப்புத் துன்பங்களை விருத்தி, செய்து கொண்டே இருக்கும், தன்னை அறியவிடாது மறைக்கும் இந்த ஆவரண (மறைக்கும்) சத்தியின் இயல்பே இதுவாம். (எ-று).

அ-கை, எல்லாம் தானாய் விளங்கும் பிரதமக் காட்சிதோன்றியபின், அது மறைபடும்போதும் மறைபடாத போதும், கற்பனை விசயங்கள் தோன்றும் வகையில்லையே என்ற சீடனுக்கு அத்தலைமை திருஷ்டி (பார்வை) யின் இலக்கணங்களை இரண்டு விதமாகக் கூறுகின்றார்... (எ-று).

44. ஆதார மறைந்து போனால் ஆரோப மெங்கே தோன்றும்
ஆதார மறையா தாயின் ஆரோப மில்லையே என்றால்
ஆதாரஞ் சமம் விசேட மாமென யிரண்டு கூறாம்
ஆதாரஞ்சமமா யெங்கும் ஆரோபம் விசேட மாமே.,

அ-வ. உரை = வானில் வந்த கதிரவன் நீரில் தோன்றுவதுண்மையே வானில் வந்த சூரியன் மறைந்து போனால் நீரில் சூரியன் மறைந்து போகவேண்டுமன்றோ? என்ற நல்லவனே கேளாய், காரிய காரணமாய் வரும் ஆதாரங்களில், இதுசமம் இதுவிசேடம் என்றிரு கூறாகுந் தன்மைகள் உண்டு. ஒன்று கடல் நீரினுள் உப்புச் சுவையுள்ளதுபோல் நேத்திரம் மூலம் காணமுடியாதபடி எங்கும் நிறைந்துள்ளது சமம் என்றும், இன்னொன்று கற்பித ஜால ஆரோபமாய்த் தோன்றுவது விசேடமாம். உபாதிகாரியங்களாகாத பரிபூரண கூடஸ்த பிரம்மமாகத் திகழும்போது சமம் என்றும், அதனின்று முண்டாகும் அந்தக்கரண பரிணாமங்கள் ஆகிய சீவேஸ்வரசெகத்துக் (காரண காரிய உபாதி)கள் யாவும் விசேடம் என்றுமாகும். இப்படித் தோன்றி இருந்து அழியும் அக்காரியங்களின் சம்பந்தித்த அறிவுண்மை போன்றதாயினும் மித்தை (பொய்) யே ஆகுவதால், அந்த விட்ஷேபவிருத்திகளை ஆரோபமென்று அறிந்துகொள்வாயாக! (எ-று).

(இதுவுமது, குளகம்) ஒருகவியல் கூறப்படும் விசயம் முடிவுறாமல் அடுத்த கவியிலும் தொடருமிதுவே - குளகம் என்பதாகும்.

45. சகமதி லிதுவென் சுட்டாஞ் சமானந்தான் மறைந்திடாது
மிகயிது கயிறு பாம்பாம் விசேடந்தான் மறைந்து போகும்
அகமெனுஞ் சமானந் தன்னை அஞ்ஞானம் மறைத் திடாது
பகர்விசேடமதாஞ் சீவன் பரனெனு மவரை மூடும்...

அ-வ, உரை = உலகத்தவர்களுக்கு, இது என்று சுட்டிக் காட்டமுடியாத மகத்துவம் பொருந்தியது சமம் எனும் பொருள்,

மனிதர் மற்றுஞ் சீவர்களின் கண்களை மூடினாலும் (உணர்வுவிழி மூடியது) சமமானது மறைவதில்லை, அடிக்கடி உவமை கூறப்படும் கயிறும் பாம்பும் விசேடமாகத் தோன்றியமை, ஏதேனும் ஒன்று மறைந்த போது ஒன்று மறைந்துவிடும், இதுபோல, அகம் பிரம்மம் அது நானென்னும் கூடஸ்த பிரமத்தை, அறியாமை ஆவரணம் மறைக்க மாட்டாது, மேற்கூறிய ஆவரண சங்காதங்களே, விசேடமாகிச் சீவேசுவரர்களை மறைத்திடும் என்றறிந்து கொள்வாய்? (எ-று). இன்னும் கானல் நீராய்த் தோன்றினாலும் அங்கு நீர் காணப்படுவதில்லை. தேகம் உருவங்களை அநுசரித்து நிழல் தோன்றுமதுபோல, அஞ்ஞான ஆவரண ஆரோபங்களான விசேடத்திற்கு, ஆதாரம் சமமேயாம். இது, சீவன், ஈசுவரன், இருவரின் ஞானவிழியும் மூடும் ஆதலால் இவர் அதிஷ்டானத்தை அறிய ஒட்டாமல் இவ்வாவரனம் மூடிடும், இது ஆத்மாவாகிய ஆதாரத்தை மறைக்கமாட்டாது என்றாகும். (எ - று).

அ-கை, சீவேசுவரர்களின் ஞானவிழியை, அவர்களின் அந்தக்கரண பரிணாமங்கள் (விசேபகாரியங்கள்) மறைத்ததே அன்றி ஆவரணம் என்ற ஒன்று எங்கே எவ்விதம் மறைத்தது என வினவுதல்?...

46. கேவல நிலைதோன் றாமற் கெடுத்தது பஞ்ச கோசம்
சீவனுஞ் செகத்து மாகிச் செனித்த விட்க்ஷேப மன்றோ
ஆவரணந் தானே பாழ்அ னர்த்தமென் றுரைத்த தேதோ
மேவருங் குருவே யன்ன வினாவின மகனே கேளாய்...

அ-வ, உரை = மும்மூர்த்திகளும் ஓர்வடிவாய்த் திகழும் கருணாமூர்த்தியே, மூடலாவரண சத்தியின் பிரதாபத்தை, 41-வது கவியில் அடியேனுக்கு விளக்கும்படி கோரினேன், தொடர்ந்து 5, கவிகளின் மூலமாக, இந்த ஆவரணசத்தி, சீவர்களுக்கு ஆத்மாவை அறியவிடாமல் மறைத்து, அதனால் இறப்புப் பிறப்புத் துன்பங்களையே உண்டாக்கும் என்றே கூறினீர், ஆனால் ஐயனே, விட்சேப சத்தியினிடத்து உண்டான பஞ்சபூதத்திலிருந்தே சூக்கும சரீரதத்துவங்கள் இருபதும் தூல சரீரதத்துவங்கள் ஆறும், பிராணமயம் மனோமயம் விஞ்ஞானமயம், மற்றும் அன்னமய கோசங்களும், இவ்விக்ஷேப சத்தியிலிருந்து தோன்றும் இச்சீவர்களுக்கு யாவரும் காணும்படியான ஆத்மா மூடி மறைத்துக்

கொண்டிருக்கவும், அவ்வாரண சக்தியே பெருந்துன்பத்தைத் தரும் சத்தி என்று கூறியதன் கருத்து யாது? எனக்கேட்ட சீடனின் ஐயப்பாட்டை நீக்கிட மேலும் கூறுகிறேன் கேட்பாயாக? என்றருளினார்... (எ-று),

அ-கை, விக்ஷேபசத்தியினால் விளையும் நன்மையும் ஆவரணசத்தியினால் உண்டாகும் தீமைகளையும், ஒருவமையில் கூறுகின்றார்.

47. தோற்றமாஞ் சத்தி தானுந் துன்பமாம் பவமா னாலும்
ஆற்றலான் முத்திசேர்வார்க் கனுகூல சகாயமாகும்
ஊற்றமாம் பகற் காலம்போ லுபகாரம் நிசியிலுண்டோ
மாற்றமென் உரைப்பேன் மைந்தா மறைப்பது மிகப் பொல்லாதே.

அ-வ, உரை = உனது கேள்விக்குரிய விடையைக் கூறுகின்றேன் கவனமாகக் கேட்டு உள்மரிப்பாயாக? நீகூறிய தூலசூக்கும சரீரங்களிரண்டும், கோசங்கள் நான்கும் இருசரீரங்களின் இருபத்தாறு தத்துவங்களும் உண்டாவதற்கு விக்ஷேப சத்தியே காரணமாயுள்ளது. ஆயினுமது, பகற்காலத்தில் உண்டாகும் பயன்பாடுகளேபோல மிக நன்மையுடையதாகும், ஆனால் அந்த மூட ஆவரண சத்தியோ, இரவுக்காலம் போல், நான் ஒன்றுமறியாது உறங்கினேன், என்ற அநுபவம் போல யாதொரு பயனுமின்றித் துன்பத்தை தருமென உறுதிகொள்வாய், மகனே வாக்கு இல்லாவிட்டால் வேதவாக்யார்த்த சப்தங்கள் எழாது, வேதவாக்கியங்களை காதின்வழியே உள்சென்று, அதனுண் பொருளைப் புத்தி ஈர்த்து சீவனுக்குத் தருகின்றது, இதனாலேயே சீவனுக்கு ஆத்மஞானம் உண்டாகி, பலபிறவிகளாகப் பீடிக்கப்பட்டிருந்த அஞ்ஞானஇருளும் நீங்கித் துன்பங்களும் ஒழிந்து, மோக்ஷார்த்தம் பெறுகின்றான். இதனாலேயே விக்ஷேப சத்தியை பகல் போதையபயனும், யாது பயனுமற்ற ஆவரணசத்தியை இரவுப்போதென்றும் கூறினதாம். (எ-று).

(இதுவுமது பற்றியது - குளகம்)

48. சுழுத்தியிற் பிரளயத்திற் தோற்றமாஞ் சகங்கள் மாண்டும்
அழுத்திய பவம்போய் முத்தி அடைந்த பேரொருவ ருண்டோ
முழுத்த விக்ஷேப மெல்லாம் முத்தியிற் கூட்டு விக்கும்
கொழுத்த ஆவரண முத்தி கூடாமற் கெடுத்த கேடே...

அ-வ, உரை = பிரம்மாவின் ஆயுளின் முடிவான மகாபிரளயம் எப்படியிருந்தது என யாரும் கண்டவரிலை ஆயினும், சீவர்கள் ஒவ்வொரும் தினந்தினமும் அநுபவமான நல்லுறக்கமான சுழுத்தி அவஸ்தையும் அந்த மகா பிரளயத்தைப் போன்றதே, இந்நிலையில் உள்ள சீவர்கள் யாதொரு சங்கல்பமுமின்றி, தான் தனது அதுஇது நீ நான் உடல் உடமை உறவு பெண்பால் ஆண்பால் இரவு பகல் என்ற யாவும் அழிந்து மருண்டு சூனியமாய் உள்ளனர். இந்நிலையே அஞ்ஞான ஆவரணத்தினது பிரத்யக்ஷம்போன்ற தன்மை, இது தானாயுணர்ந்த எவரும் முத்திப் பேற்றினை எய்தியதுண்டோ? விக்ஷேப சத்தியினது முழுமையும், சீவன் சீவனாகத்தக்க அனைத்து உதவியுமாயுள்ளது. இகபர காரியப் பயன்கள் யாவும் அதுவே தருகின்றது. அந்தக்கரணங்களின் உதவியால், சிரவணம் மனனம் நிதித்யாசனம், சாதனாதிபயன்கள், விசாரணைதியானம்; முதலியவைகளால், இந்த சீவர்கள் முத்தி அடைவது சாத்தியமாயிருப்பதால் இவ்விக்ஷேப சத்தி அனைவர்க்கும் நன்மையே செய்கிறது. முத்தியை அடைய விக்ஷேபசத்தியே காரணமாகும். ஆவரணமோ பந்தத்தில் அழுத்திப் பவமரணாதி துன்பங்களையே தவறாமல் தரும். என்றருளினார். (எ-று).

அ-கை, பொய்யாகத் தோற்றிவந்த விக்ஷேபசத்தியிலிருந்து வெளிப்படும் பயன்பாடுகளெல்லாம் பொய்யாய்ப் போமே எனில், அப்படி ஆகாது என விளக்குகின்றார். குருமூர்த்தியானவர். (எ-று).

49. சுத்தியில் வெள்ளி போலத் தோன்றிய தோற்றமான சத்தியும் பொய்யே என்றால் சத்தி சாதனமாய் வந்த முத்தியும் பொய்யா மென்னின் மோகநித் திரைவிலங் கா நித்திரை தெளியுமா போல் நிருவான நிலைமெய் யாமே...

அ-வ, உரை = கிளிஞ்சல் என்பது காக்கைச் சிப்பி அல்லது ஒருகண்ணாடி துண்டு, அதில் சூரியஒளிபடும் போது வெள்ளியாய் கற்பனை மயக்கத்தால் தோன்றுமதுபோல உண்டான விட்சேபசத்தியும் பொய்யே ஆயின், அவ்விக்ஷேப சத்தியினாலுண்டான, அந்தக்கரணாதிகளும் அதனால் ஏற்றுக்கொண்டசிரவணாதிகளும் சாஸ்திரங்குருவும் வீடுபேறு

மித்தை (பொய்யே) என்பாயாகில், மோகமாகிய மயக்கத் தூக்கத்தில், சொப்பனம் கண்டவன், புலி ஒன்று தன்னைத் துரத்திவந்து கடித்ததும் பயத்தினால் விழித்துப் பார்த்தபோது அங்கே புலியின் நிகழ்வேதும் நடக்கவில்லைதான், ஆனால் புலிவந்து விரட்டி கடித்ததனால் பயந்து விழித்தயாவும் உண்மையில் நடந்தது தானே? இப்படியே அவ்விசேக்ஷப விருத்திவித்தை அநுபவத்தால் பெறப்படும் முத்திநிலையும் மெய்யே ஆகும் எனத் தெளிவடைவாயாக, என்றருளினார்... (எ-று).

அ-கை, - இச்சத்திகளுக்கு ஏதுவாயிருந்தமாயையை நீக்கிடத் தக்க உபாயங்களைக் கூறுகின்றார்.. (எ-று).

50. இம்பரி னஞ்சை நஞ்சால் இரும்பினை இரும்பால் எய்யும்
அம்பினை அம்பால் பற்றும் அழுக்கினை அழுக்கால் மாய்ப்பர்
வம்பியல் மாயைதன்னை மாயையால் மாய்ப்பர் பின்னைத்
தம்பமா மதுவுங் கூடச் சவஞ்சுடுந்தடிபோற்போமே...

அ-வ, உரை = இவ்வுலகியல் நடைமுறையில், சர்ப்பம் தீண்டி உயிருக்குப் போராடுவாருக்கு மருத்துவர் உயிர்காக்கும் மருந்தாக அவ்விஷமே பயன்படுத்திக் காப்பாற்றுவது போலவும். இரும்பை அதன் மிகுதிகளை மற்றோர் இரும்பான அறத்தைக் கொண்டு தரித்து குறைத்து சரிசெய்வது போலவும், போரில் எதிரிவிடும் நாகபாசக்கணைக்கு எதிரியான, கருடாஸ்திரத்தை விட்டுத்தடுப்பது போலவும் (கணை - அம்பு) அக்கினியை உதிர்த்துவரும் அம்புக்கு, நீரைப்பொலிந்து வரும் வருணா, ஸ்திரம் போலவும் அழுக்கினைப் போக்கிட, உவர்மண் முதலிய அழுக்கால் போக்குவது போலவும், இங்ஙணமே அசுத்தமாயை சுத்தமாயையால், ஞானிகள் கெடுப்பார்கள். பின்பு அசுத்தமாயையைக் கெடுத்த சுத்தமாயையும் பிணத்தை சுடும்போது புரட்டித்தள்ளி விட்டதடியும், இப்பணிமுடிவுல் அத்தீயிலேயே எரிந்து கெடும்படி போட்டிடுவார்கள், உலகவடிவ விசயமான அசுத்தமாயையை, அறிவே வடிவான சுத்தமாயையினாற் கெடுத்தவிடத்தில் உதயமான பரஞானத்தினால், அசுத்த மாயையோடு கூடவே சுத்தமாயையும் கெடும் என்று உபதேசித்தார் (எ-று).

அ-கை- இவ்விருவிதமான மாயைகளால் ஆத்மாக்(சிவர்) களினிடத்து பத்துவிதமான அவஸ்தைகள் வருமென்றும் அவற்றின் பெயர்களையும் கூறுகின்றார்... (எ-று).

51. இந்தமா யையினாற் சீவர்க்கு ஏழவஸ்தை களுண்டாகும்
அந்தயே ழவஸ்தை தன்னை அடைவினின் மொழியக்கேளாய்
முந்தவஞ் ஞானமூடல் முளைத்தல் காணாத ஞான
சந்ததங் கண்ட ஞானம் தழல் கெடல் குளிர்மையாதல்.

அ-வ, உரை = முற்கவியில் மாயையினால் உண்டான அஞ்ஞானத்தை மாயை நாசமாக்கியது என்று கூறினோம், அத்தகையமாயையிலிருந்து சீவர்களுக்குண்டாகும் ஏழு அவஸ்தைகளின் விளக்கங்களையும் அதுவதின் பெயர்களையும் யாம் கூற நீ கேட்பாய் என்றார். 1. அஞ்ஞானம் - அறியாமை 2. மூடலாவரணம் - அறியவிடாது மறைத்தது, 3. முளைத்தல் - விட்சேபம், 4. காணாதஞானம் - பரோட்சஞானம், 5. கண்டஞானம் - அபரோக்ஷஞானம், 6. தழல்கெடல் - துக்கம் நீங்குதல், 7. குளிர்தல் திருப்தியானந்தம் என்று இவ்வேழினது பெயர்களாகும், இவ்வேழினது விளக்கங்களையும் இனிவரும் கவியில் கூறுவேன் கேட்டுத்தெளிவு பெறுவாயாக என்றார்... (எ-று).

அ-கை, முற்கவியில் கூறிய ஏழவஸ்தைகளின் தன்மையை கூறுதல்.

52. பிரமமாந் தனைம றந்த பேதமை யேஅஞ் ஞானம்
பரனில்லை காணோ மென்று பகர்த லாவரண மூடல்
நரனொரு கருத்தாற் சீவன் நானென முளைத்த தோற்றம்
குரவன் வாக்கியத் தாற்தனைக் குறிக்கொளல் பரோஷ ஞானம்...

அ-வ, உரை = தானே பிரம்ம சச்சிதானந்த சொரூபம் என்றதைமறந்ததே, அறியாமையாகிய அஞ்ஞானம், பிரமமா அப்படி ஒன்றில்லை இருந்தால் நான் கண்டிருப்பேன் அல்லவா? என்பது மூடலாவரணமாகும். சீவர்களில் எவரேனும் ஓரோர் சமயம், நான் சீவித்துக் கொண்டுதான் இருக்கிறேன் என்றெண்ணுதல், முளைத்தல் என்கிற விட்சேப சத்தியாகும். ஞானாச்சாரியாரின் உபதேசவாக்கியத்தால் அனுமானமாகத் தன்னைக் குறித்துணர்தல் பரோட்சஞானமாம், என்றார். (எ-று).

(இதுவுமது பற்றியது - குளகம்)

53. தத்துவ விசாரஞ் செய்து சகலசந் தேகமும் போய்
அத்வைதந் தானாதல் அபரோ ட்சஞான மாகும்
கத்தனாஞ் சீவ போதங் கழிதலே துக்கம் போதல்
முத்தனா யெல்லாஞ் செய்து முடிந்த தானந்த மாமே!...

அ-வ, உரை = செம்மைநலம் மிக்கோனே? முற்கவியில் ஏழு அவஸ்தைகளில் நான்கு அவஸ்தைகளை கூறினோம். மீதி மூன்றும் இப்போது கூறுவதைக் கேட்பாயாக? குருசாஸ்திர பயிற்சி விசுவாசத்தால் உள்விசாரணை செய்து, அநாத்ம அதத்துவ அகந்தைகளை நீக்கி, நானே கூடஸ்தனும் பிரம்மமும் எனத்தெளிந்த நிச்சயத்தின்மூலம் அத்வைதஸ்வரூபந் தானாய்விளங்குவதே அபரோக்ஷ ஞானமாகும். விபரீதபுத்தியால் நான் சீவன் ஈசுவரன் என்ற அதிகாரப் புசிப்பு முதலிய அகம்பாவனையை உள்விடுதலே, சர்வதுக்கநிவர்த்தியாகும், ஒருசீவன் பிறந்தபயனாக, செய்யத்தக்கது எல்லாம் செய்து, அடையத்தக்க எல்லாம் செம்பைப் பொன்னாக்கும் முறைமைபோல, சீவனை சிவமாக்கினேன்! அடைந்தேன் எனும் நிரதிசயானந்த திருப்தியே, பேரானந்தமாகும்!

இந்த அஞ்ஞானம் ஆவரணம் இரண்டும் அசுத்தமாயா காரியங்களாகும், விட்சேபம் பரோட்சபம் இடை (நடு) நிலைச் சுத்தாசுத்த மாயா காரியங்களாகும், துக்கம் ஒழிதல், அபரோஷ ஞானம், ஆனந்தம் மூன்றும் சுத்தமாய காரியங் (உபாதி), களாகும், இவற்றில் அபரோட்ச ஞானத்தினால், (கண்களால் பிரத்யக்ஷமாய் நேர்பட காணுதல்) அநுமான ஆருடபாவமான பரோக்ஷ ஞானம் நீங்கும், இன்னும் விட்சேபசத்தியின் காரியவுபாதிகளாக காண்பான் காட்சி காணப்படும் பொருள் நீங்கும், கூடவே துக்கநிவர்த்தியினால் ஆவரணமும் நீங்கும், இத்தடையற்ற ஆனந்தத்தினால் அஞ்ஞான உபாதிகள்யாவும் நீங்கும், இவைகள் நீங்கவே, கற்பனையாக வந்த பெயர்களும் நீங்கி, அதிசயமின்றிய பேரானந்த சொரூபந் தானாய்த் திகழும், என்றுணர்ந்திருப்பாயாக! என்றருளிச் செய்தார்... (எ-று).

அ-கை. அந்த ஏழவஸ்தைகளை விளக்கிடத் தக்க தசம திருஷ்டாந்தமெனும் ஒரு உவமையை, பத்துப்பேர்கள் கூடி நதியைக் கடந்த கதையைக் கூறுகின்றார் (எ-று).

54. இதுநினக் கறியும் வண்ண மிப்படி ஒருதிட் டாந்தம்
புதுமையாங் கதைகேள் பத்துப் புருடர் ஓராற்றை நீந்தி
உதக தீரத்தி லேறி ஒருவன் ஒன்பதுபே ருமெண்ணி
அதனொடுந் தசமன் தானென்று அறியாமல் மயங்கி நின்றான்.

அ-வ, உரை = மைந்தா? நீ சுலபமாய்ப் புரிந்திடுமாறு ஒருகதையை கூறுவேன் கவனமாய்க் கேட்டு பயனடைதி என்றவர் கூற தொடங்கினார், ஒரு ஊரைச் சேர்ந்த பத்துப்பேர்கள் கூடி, திருவிழா காணச்சென்றனர், வழியில் ஒருநதியில் வெள்ளப்பெருக்காய் ஓடியதுகண்டு திகைத்துப் பின்தெளிந்து, துணிந்து, வந்து பத்துப்பேரில் ஒருவன் கண்காணியாகி, ஒருவருக்கொருவர் கைகோர்த்தபடி சேர்ந்து ஆற்றில் இரங்கி சிரமப்பட்டுக் கரையேறினார்கள். அதில் கண்காணியானவன் நாம் பத்துபேரும் சரியாக கரை சேர்ந்தோமா என்று ஒவ்வொருவராக எண்ணினவன் தன்னைச்சேர்க்காமல், ஐயோ ஒன்பதுபேர்தான் உள்ளோம் நம்முடன் வந்த ஒருவனை ஆற்றுவெள்ளம் இழுத்துச் சென்றுவிட்டதே என்று துக்கம்மேலிட்டு அழத்தொடங்கியாவரும் அழுதனராம்? (எ-று).

அ-கை, தான்கூறிய உவமைக்கும், அவ்வுவமைக்குரிய பொருளையும் நேர்பட ஒப்புமை காட்டுதலாம்... (எ-று).

55. அறியாத மயலஞ்ஞானம் அவனில்லை காணோ மென்றல்
பிரியா ஆவரண மாகும் பீடைகொண் டழல் விக்ஷேபம்
நெறியாளன் தசமனுண்டு நிற்கின்றா னென்ற சொல்லைக்
குறியாக எண்ணி நோக்கிக் கொள்வது பரோட்சஞானம்...

அ-வ, உரை = குமரா? எண்ணிய கண்காணி தன்னைச் சேர்க்காதே அஞ்ஞானம் சூழ்ந்தமயக்கமாம், அப்பத்தாமவன் இங்கில்லை இருந்தால் காணப்படுவனன்றோ? என்றது அறியாமை நீங்கிடாத ஆவரணமாகும், பத்தாமவனை வெள்ளம் கொண்டுபோனதே எனத் துக்கித்து ஐயோவென அலறியழுதல் விக்ஷேபமாகும், அவ்வழியே வந்த நல்லோன் ஒருவன், இக்கண்காணி படுந்துன்பம் கண்டு மனமிரங்கி நடந்தது என்ன? என்று கேட்டான், கண்காணியோ நடந்தவற்றை விரிவாகக் கூறிப் பத்துப் பேர்களில் ஒருவனை இழுத்துச் சென்றுவிட்டது, ஒன்பது பேர்

மட்டும் இங்குள்ளோம். என்றான் என்னே? என்று கொள் என்று சிரித்தான் அன்பனே நீ இப்போது எண்ணிவா பார்க்கலாம் என்றான். வழிப்போக்கன், கவலையே சூழ்ந்திருந்த கண்காணி முன்போலவே எண்ணி பார்த்தீரா பத்தாவனைக் காணோமென்றழுதான் வழியே வந்தவனுக்கு, புரிந்துவிட்ட துவிசயம், அன்பனே நீங்கள் வந்த பத்துப் பேர்களும் இருக்கிறீர்கள் என்றான் அவ்வசனம் கேட்டபோதே துக்கம் தொலைந்து குறிப்பினால் அறிந்துகொண்டு தேறினான், கண்காணியின் இந்த அவஸ்தையே பரோட்ச ஞானமாகும் என்றார்... (எ-று).

(இதுவுமது பற்றியது - குளகம்)

56. புண்ணிய பதிகன் பின்னும் புருடரொண் பதின்மர் தம்மை
எண்ணிய நீதசமன் ஆவாய் என்னவோ தன்னைக் காணல்
கண்ணினிற் கண்ட ஞானம் கரைதல்போ லதுநோய் போதல்
திண்ணிய மனத்திலையந் தெளிதலா னந்த மாமே! (எ-று).

அ-வ, உரை = முன்கவியின் முடிவில் பத்துப்பேரும் இருக்கின்றீர்களே என்று வழியே வந்த புண்ணியன் அடக்கமாகக் கூறியதை விளக்கமாக கூறுகிறான். அன்பனே, கரையேறிய பத்துப்பேரில் எண்ணிய உன்னைச் சேர்க்காததே உன் துக்கத்திற்கு காரணம் என்றறிவாய்? என்றதும், தன்னைப் பத்தாமவன் என்று கண்டானது அபரோட்ச ஞானமாகும், இங்கே அழுகை நின்றது துக்கநிவிர்த்தியானது, துக்கத்தில் வன்மையுடைய மனம் சந்தேகந்தீர்ந்ததே யாதொரு தடையுமின்றிய ஆனந்தமாகும் என்றார்... தன்னையுள்ளவாறு கண்டபோதே! மூன்று சரீர அவஸ்தா வாசனைகளும், அபிமான நாமங்களும் சீவேசுவராதி அகந்தையும், பஞ்சபூதபஞ்சகோச ஆரவாரங்களும், கடலில் உண்டாகும், அலை திவலை நுரை குமுழி சேறு கலங்கள் பாசி என்ற ஏழுவித உபாதிகளும் போல என்றெண்ணி, இன்பக்கடலே தானாயிருந்தான்... (எ-று).

அ-கை, தேவரீரே! தசமன் உவமைப்படி அங்கே, உடன்வந்தோரை எண்ணிய தானே தசமன் எனக் கண்டதுபோலத், தன்னைத் தானாகத் தரிசிக்கவேண்டும் என்ற சீடனை நோக்கி, மகாவாக்கியார்த்த நிருபக முறைப்படி, அத்வைதனாகவே இருக்கும் அவனை

அவனுக்குக் காட்டும் பிரம்ம வித்தையை உபதேசிக்கின்றார்!.. (எ-று).

57. தசபுமான் தனைக்கண்டாற்போற் சற்குரு மூர்த்தியே என்
நிசவடி வினையான் காணநீர் காட்டல் வேண்டுமென்றான்
சுசிபெறு மிலக்கி யார்த்தந் தற்பத துவம்பதங் கட்கும்
அசிபத மைக்யஞ் செய்யும் அதுசெயு முண்மை கேளாய்.

அ-வ, உரை = தேசிகோத்தமரே! நதியைக் கடந்த ,10 பேரில் ஒருவன் தனைமறந்து எண்ணி ஒருவன் ஆற்றோடு தொலைந்தான் எனத்துக்கிக்க, வழிவந்த ஆப்தன் பத்தாமவன் இருக்கின்றான் எனவும் துக்கம் நீங்கி ஆனந்தம் கொண்டது போல, என்னுள் என்னை அநாத்ம தத்துவங்களுக்கும் வேறாய், தத்துவாதீனமான பிரம்மத்தை நான் தரிசிக்கும்படி, தேவரீர் அநுக்கிரகிக்க வேண்டுமென்றான். நீ அது என்ற துவம்பத தற்பதங்களின், பரிசுத்த இலக்கியார்த்தமான கூடஸ்த பிரமத்தினூடு பொருந்தும் ஐக்யத்தை, அது நீயாகவே இருக்கிறாய் என்னும் அசிபதப்பொருளானது காட்டுமுண்மையை நீகேட்பாயாக! என்றார். (எ-று)

இன்னும், வியஷ்டி தேகத்திலுள்ள தனது வாச்சிய இலட்சியங்களைப் பகுத்து அறிவதே, துவம்பத விசாரமென்றும், உடலுக்குப் புறம்பாயுள்ள அண்ட பிண்ட சராசர சரீரங்களையும், இவைகட்கு அநுகூல ஆதாரமான பரமாத்மாவையும் இந்த லட்சியத்தையும் இந்த லட்சியப் பொருளினிடத்து மிளிரும் ஒன்பதுவாச்சியங்களையும், பிறித்து அறிவதே தத்பத விசாரமாகுமென்றும், இவ்வித விசயங்களை நுணுகி ஆய்ந்து தெளிந்த பொருளில் புத்தி நிச்சயம் கொள்வதே சர்வதுக்க நிவர்த்தியும் பேரானந்தப் பிராப்தியுமென்றுணர்ந்திடுவாயாக என்றருளினார். (எ-று).

58. விண்ணொன்றே மகாவிண் ணென்று மேகவிண்ணென்னும் பாரில்
மண்ணொன்றை கடவிண் ணென்றும் மருவிய ஜலவிண்ணென்றும்
எண்ணுங் கற்பனைபோலொன்றே எங்குமாம் பிரமம் ஈசன்
நண்ணுங் கூடஸ்தன் சீவன் நான்கு சைதன்ய மாமே...

அ-வ, உரை = பரவெளியாக எங்கும் விரிந்துள்ள ஆகாயம் ஒன்றே மகாகாயமாயிருக்க, மண்ணினாலான கடத்துள்திகழும் இடைவெளியைக் கடாகாசமென்றும், மேகங்களினூடே பொருந்தியுள்ள தன்மையை மேகவின் (மேகாகாசம்) ணென்றும், கடத்தின் ஜலத்துள் தெரியும் விண்வெளியை கடஜல ஆகாசம் என்றெண்ணும் கற்பனாவஸ்தையே போல, சீவன் அநுபவிக்கின்ற நிலைக்கேற்ப, சுத்தப்பரிபூரண சைதன்யமே பிரம்மமென்றும், ஈசுவரனென்றும் கூடஸ்தன் என்றும் சீவனென்றும் நான்கு சித்ருப பேதங்களாகும். இதில் பின்வரும் மூன்றும் உபாதியால் வந்த கற்பனைத் தலைமைகளாகும். முந்தைய பிரம்மம் ஒன்று மாத்திரமே! எப்போதும் எங்கும் எவர்க்கும் தலைமையுடையது எனத் தெளிவு பெறுவாயாக என்றார். (எ-று).

அ-கை, இந்நான்கு சைதன்யங்களில், பிந்திய மூன்று ஆரோப சைதன்யங்களையும் விசாரித்து தெளிந்து நீக்கி முந்திய தலைமைச் சைதன்ய (ஆதாரத்தை) சொரூபத்துடன் பொருந்து வாயாக? என்றருளினார்.. (எ-று).

59. பூச்சிய வீசன் சீவன் புகழ்பத மிரண்டி னிற்கும்
வாச்சிய மிலக்கியந்தான் மலமிலாப் பிரம்ம மாத்மா
காய்ச்சி பாலின்நெய் போற் கலந்தொன்றாங் கடைந்தெடுக்கும்
ஆச்சிய மென்னவுன்னை அறிந்து நீ பிரிந்து கொள்ளே.

அ-வ, உரை = தற்பதம் துவம்பதம், என்ற இரண்டு பதங்களுக்கும் முறையே ஈசுவரன், சீவன், இருவருமே வாச்சியார்த்தங்களாகும் (ஆரோபம்) என மகாவாக்கியங்கள் கூறியுள்ளன, இலக்கியார்த்தமான பிரம்மமும் கூடஸ்தருமாம், காய்ச்சிய பாலில் வெண்ணை மறைந்திருப்பதே போல சடமான உடலினுள் பொருந்தி இருக்கின்ற ஆத்மாவைத் தரிசித்து, மனன விசாரணையாற் கடைந்தெடுத்து உருக்கிய நெய்யேபோல நீஅநாத்ம தத்துவங்களைப் பிரித்து நீக்கித் தனித்து நிற்பாயாக! 58-வது கவியிற் கூறிய உவமானத்தை நன்கு ஆராய்ந்தால் உண்மையை நீ எளிதிற் கூடலாம், மகாகாயம், கடாகாயம், இரண்டும் முறையே பிரம்மமும் கூடஸ்தரும் இலக்கியார்த்த பிம்ப ஆதாரம் ஆகும். மேகஜல ஆகாசமும் கடசல ஆகாசமும், பிரதி பிம்ப ஆரோப

ஆகாசமாகும் இது, ஈசுபரனும் சீவனும் வாச்சியார்த்த முகமைகளாகும். கடாகாசத்திலும் மகாகாசத்திலும் உபாதிகளற்று தானாயிருந்தது, இதுவே சத்யத்தலைமை வாய்ந்தது ஆனால்? மேகஜல ஆகாசமும் கடசல ஆகாசமும் சலம் எனும் உபாதியினால் பிரதிபிம்பித்த அஞ்ஞான ஆரோபக் கற்பனை முகமைகளாகும். இப்படித் தோன்றி இருந்து அழியக் காரணமாய் நின்ற, கடாகாசமும் மகாகாசமும், கூடத்தரும் பிரம்மமும், முக்காலமும் சத்தியமென்று தெளிவு பெறுவாயாக? இவ்வநுபவ நிலையே அத்வைத சித்தியும், அசிபதமெனும் சீவப் பிரம்ம ஐக்யம் என்பதும் அறிக? என்றார், (எ-று).

அ-கை, - தன்னைத் தரிசிக்கும் இச்சையின் பொருட்டுத் தான் அல்லாதவைகளை விசாரித்து அறிந்து நீக்கவேண்டும் (எ-று).

60. பிறிவதுதா னெப்படி யென்றக்கால் பிணமாகு முடல்நா னென்னும்
அறிவினைக் கொல்லவேண்டும் ஐம்பூத விகார மன்றோ
வெறியதோர் துருத்தி மூக்கால் விடுமது போலுன் மூக்கால்
எறிபிராணனு நீயல்லை இராசதகுண விகார மென்றேயெண்..

அ-வ, உரை =ஆச்சார்ய சுவாமிகளே, ஆத்ம அநாத்மாக்களை பிறித்தறிவது எப்படி எனக்கேட்பாயாகில், இத்தூல உடலுக்கு உணவும் நீரும் மருந்தும் ஆடையாபரங்களும் சந்தனாதி சாதனங்களாலும் பேணிப்பராமரித்துப் பூஜித்தாலும், ஐம்பூத சாதனமிது அழிந்து விடுமதில் சத்தியபுத்தி வைத்ததைக் (மயக்கத்தை) கெடுத்துவிடு, துருத்தி ஒன்றது தனை, தூக்கும்போது காற்றை உள்வாங்குதலும், கீழேவைக்கும்போது காற்றை வெளிவிடுவதும் போல், உன் மூக்கினால் உள்வாங்கி வெளிவிடும் மூச்சுக் காற்று (உயிரென்று கூறும்) பிராணவாயுவானது, நீஅல்ல, அதுஇரசோகுணகாரியமென்று அதில் உதாசீனானந்தமாய் இளைப்பாறுக? என்றார், (எ-று).

(இதுவுமது பற்றியது - குளகம்)

61. கரணமா மனது புந்திகருத் தாவாம் அவையான் மாவே
தரமுள யிரண்டு கோசம் சத்துவ குணவி காரம்
வரமறு துயிலா னந்த மயனையும் நீயென எண்ணாதே
விரவிய தமவஞ் ஞானவி ருத்தியின் விகார மாமே!...

அ-வ. உரை = அந்தக்கரண அகம்பாவனா செய்யும், மனமும்

புத்தியும் பேதவாத சகிதமுடைய மனோமயம் விஞ்ஞானமயம் என்ற இவ்விரு கோசங்களும், அஸ்திரஉபாதியான கனவும் (மனோராஜ்ஜியமும) சத்துவகுண காரியங்களாகும், இவ்விரண்டும் ஆத்மோவோ நீயல்ல, அநாத்மதத் துவங்கள்முப்பத்தி ஐந்தும் இறந்த சுழுத்தி தூக்கத்தில் அநுபவிக்கும் ஆனந்தமும், தமோகுண அவித்யா விருத்திரூப விகார (காரிய) மாம் ஆதலின், இவ்வானந்த மயகோசாபிமானி சீவனையும் ஆத்மாவாகக் கருதாதே? எனவுபதேசித்தார்...

இன்னும், மேற்கூறிய ஐந்துகோசங்களும், முக்குண காரியங்களாவதால் இவைகளிடம் ஞானம் என்பது சிறிதுமில்லை, இவைகள் ஒவ்வொன்றும் தங்களை அறியாமலும் தங்களைச் சார்ந்தவற்றையும் அறிய முடியாத சடமாயுள்ளன நோக்கரிய நுண்ணுணர்வு ஏதுமில்லாததால், பிரம்மமாம்! சிவஞான சோதியில் அணுகமாட்டாதெனத் தெளிவு கொள்வாய்! 1. தூலம் சூக்குமம் காரணமென்ற சரீரங்கள் மூன்றும், 2. சாக்கிரம் சொப்பணம் சுழுத்தி என்ற அவஸ்தைகள், 3. மூன்றும் விசுவன் தைசதன் பிராக்ஞன் என்ற அபிமான, 4. நாமங்களும் ஐந்துகோசாபிமானங்களையும் நான் (அன்று என நீங்கினவனாம்!) என்றருளினார்... (எ-று).

அ-கை, விசாரணை மிகுதியால் அநாத்மதத்துவங்களை நியதிகளைந்து சுத்த சைதன்யத்தை அநுபவத்தாற் கண்டு, நீஅதுவாகும் பொருட்டு பஞ்சகோசங்களின் விலட்சணனாய், (இக்கோசங்கள் ஐந்தின் அபிமானங்களுமற்றவனா) வாய் எனக் கூறுதல்... (எ-று).

62. சத்தொடுஞ் சித்தா நந்தஞ் சமந் திரஞ் சாக்ஷியேகம்
நித்தியம் வியாபியான்மா நீயது வாய்அ றிந்துப்
பொத்தொடுஞ் சடந்துக் காதி பொருந்து பேதங்க ளான
குத்திரப் பஞ்சகோசக் குகை விட்டு வெளியி லாவாய்!...

அ-வ, உரை = புண்ணியமிக்க புத்திரனே? ஆத்ம லக்ஷணம் கூறுவதுகேளாய், ஆதி நடு அந்தமென்ற முக்காலமும் கடந்து நிற்கும் சத்தியவஸ்த்துவாயும், தத்துவங்கள் 96-ல் மிகமிக முக்யம் வாய்ந்துள்ள, 36, தத்துவங்களின் பேத சேக்ஷ்டைகளனைத்தையும், இமை மூடாது கண்காணித்துக் கொண்டிருக்கும் அறிவு

ரூபச்சித்தாயும் உடலின் மூன்றவஸ்தைகளின், மற்றும் கர்மேந்திரிய ஞானேந்திரிய அந்தக்கரணங்களால் அடையப்பெரும் ஆனந்தங்களுக்கு அவ்வப்போது முடிவுண்டு, இவ்வானந் தங்கட்கெல்லாம் ஆனந்தத்தை ஓய்வின்றி வழங்கிக் கொண்டிருக்கும் பேரானந்தமாயும் தேசகால வஸ்து பரிச்சேதமின்றி, எதிலும் கூடுதல் குறைதலின்றிய சமமாயும் தொய்வு நழுவுதலின்றிய ஸ்திரமாயும், நாடகமேடை, ஆர்மோன்யம் பின்பாட்டு மிருதங்கம் கஞ்சிரா முதலிய இசைக்கருவிகளையும் அதனை மீட்டுகின்ற இசைக்கலைஞர்களையும் ராஜபார்ட் ஸ்திரீபார்ட் தமாஷ், மற்றய நடிகர்களின் குழுவையும் நாடகம் பார்க்கின்ற இரசிகப் பொதுமக்களையும் இவரிவர், இது இது இன்னின்னதென்றுக் காட்டிக் கொண்டிருக்கும் நாடகசாலைத் தீபம்போல், எல்லாவற்றையும் காட்டிக் கொண்டிருக்கும் சாக்ஷிமாத்திரமாயும் அநாத்மதத்துவங்கள் திரிபதங்கள் யாவற்றுக்கும் இதுவே தலைமைப் பொருளான ஏகமாயும், எப்போதும் எல்லாமும் எதிலும் இளைப்புறுதலில்லாத ஆர்ஜவம் (ஆற்றல்) குறைவில்லாத நித்தியமாயும் சேதமற்றதாயும் உள்ள உனது ஆத்ம புத்தியின் நிச்சயமுமாயும். அண்டபிண்ட சராசரங்கள் எங்கும் இடைவெளியின்றிய பரிபூரணமாயும் விளங்கும் உனது ஆன்மா! சச்சிதானந்த சொரூபமே நான்நான், நானே சீவனும் ஈசுவரனும் கூடஸ்தனும் பிரம்மமும் அத்வைதஸ்வரூபமுமாய் தரிசித்துப் பஞ்சகோசக் குற்றங்களாகியுள்ள சடவடிவ துக்கங்களை நீக்கி, உன்னை இதுகாலம்வரை பிணித்துப் பந்தப்படுத்திவந்த ஐங்கோசமாகிய வலையை, நான் அகம்பிரம்மாஸ்மி எனும் மகாவாக்ய உபதேசபலத்தால் சிதைத்து அந்த கேடு சூழ்ந்த குகையினின்றும் விடுதலை உணர்வுப் பரவெளியில் சுகிப்பாய் என்றருளினார்! - (எ-று).

அ·கை, இப்படி விடுதலைபெற்ற போது தான் முன்பிருந்த இடமும் விட்டு இனிசேருமிடமும் அறியாது, இடையில் நிலையமற்ற ஓர் சூன்யத்திடம் சிக்கியுள்ளதாகத் துக்கித்து கூறுகின்றான். (எ-று).

63. பஞ்சகோ சமும்விட் டப்பாற் பார்க்கின்ற பொழுது பாழே
விஞ்சிய ததுவல் லாமல் வேறு ஒன்றுந் தெரியக் காணேன்

அஞ்சன மிருளையோ நான் அகமென அநுபவிப்பேன்
வஞ்சமில் குருவே என்ற மகன்மதி தெளியச் சொல்வார்!.

அ-வ, உரை = உண்மைப் பொருளையே உபதேசித்தருளும் தேசிகமூர்த்தியே, மூன்று சரீரங்கள் மூன்று அவஸ்தைகள் மூன்றபிமான நாமங்களை எல்லாம் நியதிகளைந்தபோதும், ஐந்துகோசங்களை அபிமானித்த புத்தியைநீக்கி நின்ற தருணம், யாதொருஞானவுணர்வுமின்றிய சூனியமே எஞ்சியுள்ளது, இவ் வந்தகார சூனியத்தையோ நான் என்று அநுபவிப்பேன், என்ற சீடனறிவின் மயக்கம் தெளியுமாறு போதனையை விரிவு செய்கிறார்! இதில் அஞ்சன இருள் என்றது, குணங்கள் மூன்றும் வெளிப்படாதிருந்த பிரகிருதியை எனக் கொள்க என்றருளினார்.. (எ-று).

அ-கை, முக்குணம் சீவேசுவர செகத்துகள் வெளிப்படாத மூலப் பிரகிருதி என்னும் இருளில் தன்னையறியாமல் அஞ்ஞான மயக்கத்தில் நின்ற சீடனை நோக்கி, உன்னை நீயார் எனக் காண்பிக்கும், இருளாய் சூனியமாய் உள்ள இதுவா நான் என்றவனே அந்த அஞ்ஞான இருளைக் காண்கின்ற நீயே! சுத்த சைதன்யப் பிரம்ம சொரூபம் என கண்டு தெளிவும் உறுதியும் கொள்வாயாக

64. முன்புகல் தசமன் புத்தி மோகத்தா லெண்ணிஎண்ணி
ஒன்பது பேரைக் கண்ட ஒருவனாந்தனைக்கா ணாமல்
பின்பவ னிடையிற் கண்ட பெரியபா ழவனோ பாராய்
அன்புள மகனே காண்பது அடங்கலுங் காண்பாய் நீயே.

அ-வ, உரை = முன் 56-வது கவியில் கூறியபடி, புத்திமயக்கத்தினால், நதியைக் கடந்தவர்கள் சரியாகவுள்ளனரா? என்றெண்ணியவன் தன்னையும் ஒருவனாகச் சேர்த்தெண்ண மறந்ததுக்கங் கொண்டு வழிப்போக்கரின் இதங்கூறியதுகொண்டு பத்தாமவன் தானே எனக்கண்டு துயர் ஒழிந்தான் அன்றி, அவ்விடத்தில் பதினோராமவன் உள்ளனோ ஒன்பதுபேர்களை எண்ணிய தானே பத்தாமவன் அன்றி அவன் பாழல்லவே அஸ்திபாதிப் பிரியவஸ்துவில் அன்புள்ள மைந்தனே, திரிசியதிரிபுடிகளைக் கண்டவன் நீயே ஆவாய் என்றனர்!.... (எ-று)

அ-கை - அத்தகைமைய தலைமை (அதிஷ்டானம்) சைதன்யமான தனது சந்நிதியில் உண்டாகி இருந்து அழியுமிது புற்புத நியாயம் என்றபடி என்கிறார்!... (எ-று).

65. தூல சூக் குமவஞ் ஞானம் தோன்றுமுன் றவத்தை தாமும்
காலமோர் மூன்றுஞ் சென்மக் கடல்எழுங் கல்லோ லங்கள்
போலவே வந்து வந்து போனது எத்தனையென் பேனான்
ஆலமர்க் கடவுளாணை அவைக் கெல்லாஞ் சாக்ஷி நீயே!.

அ-வ, உரை = தூலம் சூக்குமம் காரணமென்ற சரீரங்கள் மூன்றும் விழிப்பு கனவு உறக்கம் என்ற அவஸ்தைகள் மூன்றும், விசுவன் தைசதன் பிராக்ஞன் என்ற அபிமான நாமங்களும் இவைகளில் யான் எனதென்று அநுபவிக்கின்ற சிதாபாசனும் பஞ்ச கோசங்களின் நேசகாரியங்களும், பிறப்பென்னுங் கடலின்மேற்பரப்பில் ஆர்ப்பரிக்கின்ற அலை திவலை நூரை குமுழி சேறு கலங்கள் பாசி என்ற இந்த உபாதிகள், அக்கடலினின்றும் எத்தனை முறைகள் வந்தது இருந்தது போனது என்று எவ்வாறு அளவு கண்டுரைப்பேன், மைந்தா? இவைகளையே புற்புதநியாயம் என்று உபநிஷத்துக்கள் புகல்கின்றன! இந்த அலையாதிகள் ஏழு உபாதிகட்கும் கடலே காரணமாவது போல, அன்று சனகாதியர்கள் புடைசூழ, கல்லாலின் கீழ் வீரா சனத்திலிருந்துபதேசித்தருளிய ஸ்ரீகுரு தக்ஷிணா மூர்த்தியின் மேலாணையிட்டுக் கூறுகின்றேன். அவ்வவித்தை அஞ்ஞான ஆரோபாதிகள் அனைத்திற்கும் நீயே சாக்ஷியாய் இருக்கின்றனை! என்றார். (எ-று).

அ-கை, அவ்வாத்மாவை தவிர ஞானஸ்வரூபன்தான் அறிவதற்கு வேறே ஓர் ஞானம் அன்று என்றுறுதிபெற, தானே தன்னை அறிந்து உள்ளது என்கிறார்! .. (எ-று).

66. எல்லாங்கண் டறியுமென்னை ஏதுகொண் டறிவே னென்று
சொல்லாதே சுயமாஞ் சோதிச் சுடருக்குச் சுடர்வே றுண்டோ
பல்லார்முன் தசமன் தன்னைப் பார்த்த துந்தனைக் கொண்டே தான்
அல்லாது பதினொன் றானும்(அ)வனிடத் துண்டோ பாராய்...

அ-வ, உரை = அன்பா, முன், 64-வது கவியில் கூறியபடியே அன்றி அங்கே ஆற்றில் ஒன்பது பேரையும் எண்ணியதானே பத்தாமவன்

என்றறிந்துதுபோல, சீவன் ஈசுவரன் கூடஸ்தன் என்ற வாச்சியார்த்தங்களை விட்டு இவைகளின் இலட்சியார்த்தமாயுள்ள, பிரம்மமே, நான் என்ற உறுதிநிலை போல, இவை யாவற்றையும் அறிந்து கொண்டிருக்கும் சுயம்பிரகாச ஸ்வரூப ஆன்மசோதியை அறிவிக்கும் பிரகாசம் (ஒளி) வேறு உள்ளதோ? ஏனெனின், மற்றய எட்டுப் பிரகாசங்களும், ஆன்மசோதியை அறிவை ஒளியை முன்னிட்டே பிரகாசிக்கின்றன அறிகின்றன என்றறிந்துய்வாயாக! என்றார்.

அ-கை, உபாதிகாரியாதி அற்ப அறிவுகளையும், சர்வஞ்ஞுத்வாதி ஞானசாதனாதி காரியாதிகளையும் நீங்கி நின்றிலங்கும் அறிவு ரூபன் நீயே என, அவனை அவனுக்குத் தரிசிக்கச் செய்தலாம்!...

67. அறிவுக் கறிவுசெய்யு மறிவு வேறுண் டென்று எண்ணும்
அறிவற்ற குதர்க்க மூடர்க் கனவஸ்தை பலமாய்த் தீரும்
அறிபடும் பொருள் நீயல்ல அறிபடாப் பொருளும் நீயல்ல
அறிபொரு ளாகுமுன்னை அநுபவித் தறிவாய் நீயே!..

அ-வ, உரை = தானே தானாய் எல்லாந்தனதாய்த் திகழும் சுயமே சுடரும் ஆன்ம அறிவை அறிவிக்கும் மற்றொரு அறிவு இருக்கின்றதோ? என்ற உனது மூர்க்கமான விபரீதப் புத்தியை கொண்டுள்ள அஞ்ஞானிகளுக்கு, பேதனம் எனும் அவஸ்தைகளே பயனாய் முடியும், காண்பவன், காட்சி, காண்கின்ற பொருள்கள் (திரிசியம் - திரிபுபடி) யாவும் ‘நீயல்ல’, அஞ்ஞானா ஆவரணசூனியமும் அந்தந்த வஸ்துக்களும் நீயல்ல, இல்லது உள்ளது என்றோ அறிந்தது அறியாதது என்றபோதோ இவை முதலிய யாவும் உனக்கு அந்நியமானது என்று நீ உணருகின்றனை அன்றோ? இதுவரைநீ அநுபவித்த காரணகாரியாதிகள் யாவும் கற்பனை அஞ்ஞானமாகும், அறிவையும் அறியாமையையும் உள்ளிருந்து அறியும் பிரம்மாத்ம சைதன்ய சொரூபமும் இயல்புகளையும் விசாரித்து தெளிந்து அநுபவத்தால் உணர்ந்திடுக என்றருளினார்... (எ-று).

அ-கை-சடமாகவும் அசித்தாகவும் தோற்றுகின்ற யாது ஒன்றும் என்னையன்றி இல்லை, சர்வமும் சச்சிதானந்த சொரூபமே தானாய்

(அத்வைதமாய்) விளங்குகின்றது என்பதாம், .. (எ-று).

68. மதுரமாங் கட்டி சுட்ட மாப்பணி யாரம் எல்லாம்
மதுரமாக் கிடினதற்கு மதுரந் தான்சு பாவம் அன்றே
அதுஇது எனுஞ் சடங்கள் அறிவாக அறிவைத் தந்தே
அதுஇது இரண்டு மாகா அகம்பொரு ளறிவாய் நீயே...

அ-வ, உரை = இனிப்புச் சுவையுள்ள சர்க்கரை கட்டியை எந்தத் தாணியமாவுடன் கலந்து சுட்டெடுத்த பணியாரங் (தின்பண்டங்)கள் அனைத்தும் இனிப்பு பண்டங்களே ஆகின்றன அல்லவா? இச் சர்க்கரை மாவுகளுடன் கூடி திண்பண்டங்களாவதற்கு முன்னும் தனது இனிய சுவை அகலவில்லை, தான்சார்ந்துள்ள மாவுப்பண்டங்களுக்கும் தன்சுவையே தந்து இனிப்பதுபோல நீ தானாயிருந்த போதும் சீவேசுவர ஜெகத்தாக விரிந்தபேதும், சேதுமேதும் எதனனும் தன் சுபாவம் மாறாத (சர்க்கரையே போல) சச்சிதானந்த அத்வைத இயல்புடன், அது, இது, எனும் வியஷ்டி சமஷ்டிபேதங்களைக் கெடுத்து, வேறுபாடற்ற (யக்ஷீர்வேத மகாவாக்கியமாம் அகம் பிரம்மாஸ்மி என்றபடி) அறிவே இயல்வடிவாய்த் தரிசித்து இருப்பாயாக! (எ-று).

அ-கை - ஆன்மா பரமான்மாவோடு ஐக்யம் பெறுமதுவே, அன்றி ஆரோப அஞ்ஞான அத்யாசங்களுக்கு, ஐக்யம் கூடுதலில்லை?

69. இந்தநீ துவம்பதத் தினிலக் கியப் பொருளா மென்றும்
பந்தமில் பிரம்ம மேதற் பதந் தனிலிலக்கி யார்த்தம்
அந்தமாஞ் சீவன் ஈசன் அவர்களே வாச்சியார்த்தம்
சந்ததம் பேதமாவார் தமக்கு ஐக்கியம் கூடாதே!

அ-வ, உரை = இத்தன்மையுள்ள நீயே துவம்பதத்திற்கு லக்ஷியார்த்தம் கூடஸ்தன் என அறிவாயாக? சுத்தம் அசுத்தமென்ற இருவகை மாயாகாரியங்களை மனதிற்பற்றாமற் கடந்துள்ள, பிரம்மம் என்னுமறிவு, அதுவே தற்பதத்தினது இலக்ஷ்யார்த்தமாம்! தோன்றி இருந்து அழியும் சீவேசுவரர்களே வாச்சியார்த் தங்களாம் வியஷ்டி விசயமான சீவருக்கும், சமஷ்டி விசயங்களான ஈசுவரனுக்கும் மலைக்கும் மடுவிற்கும், விண்ணிற்கும் மண்ணிற்கும் உள்ள இடைவெளியே போலவெகுபேதமாவார் ஆதலால் இவர்கள்

எக்காலத்தும் ஐக்கியம் அடையமாட்டார்கள்? அஞ்ஞானம் ஆரோபம் ஆவரணம் சிதாபசசன் இவைகளின் ஒழிவில் ஐக்கியமுத்தியினைப் பெற்றுய்வர் என்றறிக என்றருளினார். (எ-று).

(இதுவுமது பற்றிய, குளகம்)

70. பேதமா னதுவுங் கேளாய் பேராலு மிடங்களாலும்
ஓதரு முபாதியாலும் உடலாலும் உணர்வினாலும்
பாதளம் விசும்புப் போல பலதூர மகன்று நிற்பார்
ஆதலால் இவர்க்கென்னாளும் ஐக்யம் என்பது கூடாதே...

அ-வ, உரை = மகாவாக்யத்தின் இலட்சியார்த்தமாயுள்ள கூடஸ்தப் பிரமங்கள் அபேதமாதலால் ஐக்கியம் கூடும். என்றவர் இக்கவியின் மூலம். அம்மகா வாக்யார்த்தமாகிய சீவேசுவரர்களுக்கு, கீழ் காணுகின்ற பேதங்கள் உளதாமாதலின், இவர்கட்கு ஐக்யமென்பது ஒரு காலத்திலும் கூடடாவாம் என்கிறார்.? சீவேசுவரர்களின் பேதமெப்படி என்று நான்கூறவும் கேட்பாயாக? இவர் சீவர் இவர் ஈசுவரர் என்கிற பெயர்களாலும், வியஷ்டி ரூபனான சீவன் பிண்டமென்றும், சமஷ்டி ரூபராயுள்ள ஈசுவரர் அண்டமென்றும் ஸ்தான பேதங்களாகும், தேகங் (விலக்கு)களாலும், சர்வஞ்ஞத்துவம் (யாவுமறிவது) கிஞ்சிஞ்சித்வ (கொஞ்சமறியும் அற்ப அறிவு) என்கிற ஞானபேதங்களாலும், அவர்கள் மலையும் மடுவுமன்ன, மண்ணும் விண்ணும் என்றவாறானமிக்க இடைவெளியுடையவர் களாகுவார்கள் ஆதலால், இவர்கள் பிரம்மத்துடன் கலந்திட மாட்டார்கள். காரணமென்ன? மேற்கூறிய பேதவாத சுபாவங்களின் பிடிவாதகுணமான பற்று விலகாதவர்களாதலால் என்றே மகனே நீ உணர்ந்திருப்பாயாக? என்றார்... (எ-று).

அ-கை, பேதவாத சித்தவிருத்திகளை சேதித்து, மகாவாக்கியப்படிக்கு கூடஸ்தப் பிரம்மம் ஏகம் எனும் பொருள்தோன்றும்படியாய்வரும் மூன்றுவித இலக்கணைகளைக் கூறுகின்றார்!... (எ-று).

71. வடநூல் வல் லவர்கள்சொல்லும் வாசகப் பொருள் சேராமல்
இடராகிற் பொருளாம் வண்ணம் இலக்கணை யுரையார் கொள்வார்

திடமான அதுவும் மூன்றாய்ச் செப்புவர் விட்டதென் றும்
விடலிலா தென்றும் விட்டுவிடாததென்றும் பேராமே..

அ-வ, உரை = வடநூலாசிரியர் நூல் நுவன்ற வல்லுனர்கள் சமஸ்கிருதம் எனும் (நாத) மொழிகளிலேயே செய்துள்ளனர். இவர்கள் கூறியுள்ள வாச்சியார்த்தங்கள் பொருள்விளக்கமாகாமல் தடைப்படின் இதன் அர்த்தம் புரிந்திடுமாறு, இலக்கியார்த்தத்தினால் பொருள் உண்மைகொண்டு, அறிவித்துள்ளனர்.. மூலம் விதையே இலக்கியார்த்தம் எனவும், செடிகொடி மரங்கள் எல்லாம் வாச்சியார்த்தம் என பொருள் கொள்ளவும் குறித்துணர்த்தும் வகையில் அவ்விலக்கணைகள் மூன்று விதமாகக் கூறியுள்ளனர். அவற்றிற்குரிய பெயர்கள், 1. விட்டலக்கணை, 2. விடாதலக்கணை, 3. விட்டுவிடாத இலக்கணை, (அதாவது - இலக்கணை , என்பது குறியீடுகள் என்று நாம் பொருள் கொள்ளவும்.) இக்கவியின்படி இலக்கணைகளின் பெயர்களைக் கூறியுள்ளார் என்றறிக, (எ-று)

(இதுவுமது - குளகம், அவற்றிற்கு உவமை கூறுதல்)

72. கங்கையிற் கோசமென்றும் கறுப்புச் சிவப்போடு தென்றும்
தங்கிய சோயந்தேவ தத்தனென் றுஞ்சொல் வார்கள்
இங்குதா ரணங்களாக்கிய இந்த மூன்றுரைக ளாலே
துங்கநூல் விரோதமான சொல்லெலாம் பொருளாந் தானே.

அ-வ, உரை = மேற்கவியிற்கூறிய மூன்றுவித இலக்கணைகளின் விளக்கம் யாம் கூற நீ கேட்பாயாக? விட்டலக்கணை விடாத லக்கணை, விட்டுவிடாத இலக்கணை (குறியீடு) என்பதில் விட்ட இலக்கணை புண்ணிய ஸ்தல யாத்திரை செய்த ஒருவர், வழியிற்சந்தித்த ஒருவரிடம், ஐயா? வாரணாசி எனும் காசிக்ஷேத்திரம் எங்கே உள்ளது எனக்கேட்கவும், வழிவந்தோர், இராமர் இருக்குமிடமே அயோத்தி என்றாற்போல, நீர்கேட்ட நகரமும் சேத்திரமும் கங்கையில் உள்ளது என்றார், வழிகூறியவர் சொன்ன வாக்கியத்தின் உண்மையைப் புரிந்துகொண்ட யாத்ரீகர், ஓ... அதுசரி, கங்கை நதியில் காசிசேத்திரம் இல்லை, கங்கை நதிக் கரையில்தான் இருக்கும் என உறுதிகொண்டார். வழிவந்தோர் அடக்கி கூறிய சொல்லின் பொருளுண்மையைப் பிரித்து அறிந்து கொண்டார், எப்படி? கங்கை கரையில் வாரணாசி இருக்கின்றது

எனக் கூறாமல், கங்கை என்று மட்டும் கூறி, கரையில் என்ற வாக்கியம் விட்டு கூறியதால், இதுவிட்ட இலக்கணையாக யாத்ரீகர் புரிந்து கொண்டதே, இவ்விட்ட இலக்கணை வாக்கியத்தின் தெளிவாகும்.

2- இதுவிடாத இலக்கணை? ஆநிரை (மாடு) களை மேய்த்துக்கொண்டிருந்த ஓர் விவசாயி, சற்று நிழலில் அயர்ந்து தூங்கிவிட்டு விழித்தபோது மாடுகள் இரண்டுங் காணவில்லை, பதறியபடியே வழியில் தேடிவரும்போது, எதிரே வந்த ஒரு பயணியிடம் ஐயா, ஒருகருப்பும் சிவப்பும் ஓடிவந்ததா? காணவில்லை கண்டிருந்தால் சொல்லுங்கள் என்ற விவசாயி வாக்கிலுள்ள விடுப்பைப் புரிந்துகொண்ட எதிர்வந்த பயணி (எப்படி ? கருப்பு சிவப்பு என்பது, ஓடும் (சிலவர்ண மாயாஜாலக்காட்சிபடுவது) ஓடாது ஆனால் இவர்கேட்டது, கருப்பு, சிவப்பு, நிறங்களையுடைய மாடுகளைத்தான் என்றுள்ளுணர்ந்து, ஐயா? நான் வந்த வழியில், நீர் கூறிய கருப்பு பசுமேய்ந்து கொண்டும் சிவப்பு பசு மெதுவாக நடந்து போகின்றது என்று கூறுமிது அந்தநிறங்களையுடைய ஆன்மாக்களையும், விடாமற் கொள்வது விடாத இலக்கணையின் அந்தரங்க கருத்தின் தெளிவாகும்.

3- விட்டுவிடாத இலக்ஷணை? ஆசிரியர் ஒருவர் தன்பணிநிறைவுக்குப் பின் பூர்வீக ஊரில் சென்று வசித்துவந்தார், இவர்பாடம் நடத்திய பள்ளியில் தன் மாணவனாகிய, தேவதத்தன் என்ற பெயருடையமாணவன் படிப்பு முடித்துக் காவல் துறைப்பணி கிடைக்கப்பெற்று, தான்படித்த ஆசிரியர் வாழும் ஊருக்கு மாற்றலாகிவந்ததும் ஓர் இடத்தில் தனது பள்ளி ஆசிரியர் நேர்வரக்கண்டு அவரவது காலைத் தொட்டு வணங்கி, ஆசிரியப் பெருந்தகையே நலமுடன் இருக்கின்றீர்களா? என்னைத் தெரிகின்றதா? எனக் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிய வாய்குழற கேட்டான். ஆசிரியர், திகைத்தும் உடனே விழிப்புணர்வு எனும் ஞாபகத்தை நெஞ்சில் நிறுத்தி, அன்பனே நீ தேவதத்தன், தானே? என்றார், ஆம் ஐயா உங்கள் தேவதத்தனே தான் நான் என்று குழைந்தான்! மாணவன்? ஆசிரியரும் மாணவனும் ஆரத்தழுவி ஒருவருக்கொருவர் நலம் விசாரித்துக் கொண்டனர்! இதில் ஆசிரியரிடமே பொருள்கொள்வது சரியாகும் தான்

பணியாற்றிய ஊரும் (தேசம்) அந்த காலமும் (காலம்) இந்த மாணவர் அன்று அணிந்திருந்த பிரம்மசரிய (மாணி) உடையும் (வேடமும்) வேறுபட்டதே ஆயினும், அந்த ஊரில், அந்தக் காலத்தில், அந்த மாணவ உடையில் நம்மிடம் கல்விபயின்ற தேவதத்தனே, இந்த ஊரில் காவல் துறைக்குரிய சீருடையில் இந்தக் கால சந்தர்பத்தில் நாம் சந்தித்துள்ள தேவதத்தன் என்றுணர்ந்து புன்முறுவலுடன் ஆசி கூறினார் - இதில்? அந்த ஊர், அந்த உடை, அந்த காலம் என்ற மூன்றையும் விட்ட இலக்கணைகளாக்கி உடன்நீக்கி, அந்த மாணவன் தேவதத்தனே இந்த ஊரில், இந்தக்காலத்தில், இச்சீருடையில் நிற்கும், இம்மாணவரே? அந்த தேவத்தத்தனாகும் என உறுதி கொண்டார். இன்னும் அந்த ஊர், அந்த உடைகோலம், அந்த காலம், அன்றைய மாணவன் என்பதெல்லாமும் இந்த ஊர், இந்தக் காலம், இந்தச் சீருடை இக்காவல்துறையாளர், என்பதெல்லாமும், வாச்சியார்த்தங்களே ஆகும். இவைகளில் எட்டுவித பேதங்களையும் விட்ட இலக்கணை எனநீக்கி, அன்றைய மாணவன் தேவதத்தன், இன்றைய காவல் துறைப்பணியாளரான தேவத்தத்தனே, என்றும் உடன்பட்டுநிற்கும் தேவதத்தனே இவர் எனக்கொள்வதுவே விட்டுவிடாத இலக்கணை எனப் பொருள் கொள்வதே, சாதனசம்பன்னர்களுக்கும், வாசகர்களுக்கும் நன்மையதாகும்! என...

இப்படிச் சம்பவப் பிரமாணமான வெளிப்படையாக விளக்கிய இம்மூவித எடுத்துக்காட்டுகளையும் அடக்கி வைத்தே மூலநூல்கள் பொருள் கூறுவது நூல்செய்யும் ஆசிரியர்களின் மரபாகும். முந்தைய இலக்கியச் செய்யுள்களின் கருத்துச்செறிவுகள் இம்மூன்றுவமையின் வாயிலாகவே அடங்கியிருக்கும், அதிலும் குரு முன்னிலையில் சாஸ்திரபாடம் கேட்பவர்கள் எளிதில் விளங்கிக் கொள்வர் இதுவே சம்பிரதாய மரபுமாகும்! இனி துவம்பதார்த்தத்தை விட்ட இலக்ஷணையால் யூகித்துத் தரிசிக்க வேண்டும். தூலம் முதல் அவித்தை வரையிலும் தொடர்ந்தவு பாதிகாரியங்களான சரீரத்திரயங்களை (மூன்று உடல்களை) யும் வாதனை விசயபரிமானங்களையும் விட்டு இவைகளுக்கு அதிஷ்டானமாய்த் திகழும் கூடஸ்த தலைமைப் பொருளைத் தரிசிப்பதும், தத்பதார்த்தத்தை விடாத இலக்கணையாகத் தரிசிக்கவேண்டும்

என்பதாகும். ஆனந்தானுபவம் இன்றி சைதன்யப்பிரம்மம், விளங்காதபடியால், இவ்வானந்த சைதன்ய ஸ்மிருதியால் (விஞ்ஞானமய கோசாதீதமாய்) பிரம்மத்தை தரிசிப்பதும், அவ்வசி பதார்த்தத்தை, விட்டு விடாத இலக்கணையால் தரிசிக்க வேண்டும் ஏனெனின்? ஆனந்தமின்றி அறிவும், அறிவின்றி ஆனந்தமும் இல்லாதபடியால் மேற்கூறிவந்த பேதவாச்சியார்தங்கள் முழுதும் விட்டு, துவிதபாவனைகளுமின்றி, அபேதஸ்வரூபமான அத்வைத பாவனை மாறாமல் பிரமத்தினுள் இரமிக்க வேண்டுமென்பதாம். (எ-று).

73. பன்னிய சோயம் என்னும் பதங்களின் வாச்சியார்த்தம்
அன்னிய தேசம் காலம் அவனிவன் என்பதெல்லாம்
சொன்னஇவ் விரோதம் விட்டுத் தொடர்வி லக்கியம் விடாமல்
உன்னி டிற் தேவதத்தன் ஒருவனை வெளியாய்க் காட்டும்.

அ-வ, உரை = இது இலக்கணையின் பொருளின் ஒற்றுமையைக் காட்டியது, முற்கவியில் கூறிய பொருளையே தாஷ்டாந்தம் செய்ததாம். முன்கண்ட அவனே இவன் என்னும் பொருள்படுமாறு ஆகவிடாமல், தேசமும் காலமும் வேடமும் போன்ற வாச்சியார்த்தங்களை விடுத்து இலட்சியார்த்தமான தேவதத்தனையே சிந்தித்ததால், அந்த ஊரில் அந்தக்காலத்தில் அம்மாணவரது உடையில் நம்மிடம் பயின்ற தேவதத்தனே? இந்த ஊரில், இந்தக் காலத்தில் இக்காவலர் சீருடையில் இருக்கும், அவனே இந்த தேவதத்தன் என்ற மாணவரை, ஆசிரியருக்குப் பிரத்யக்ஷமாக காண்பித்தது என்றருனிர்.. (எ-று).

அ-கை- மேற்கவிகளிற் கூறிய உவமானத்தையே உத்திரம் (உறுதி) செய்து விளக்குகிறார்!... (எ-று).

74. தத்துவமெனும் பதங்கள் பிரமமாய்ச் சாக்ஷியான
வத்துவை விடாமற் பேத வாச்சியார்த் தத்தை விட்டு
நித்தமு மதுநீ ஆகும் நீஅது ஆகும் என்னும்
அத்தமு மகண்ட மென்றே அசிபதம் ஐக்யங் காட்டும்..

அ-வ, உரை = தத்துவமசி எனும் சாமவேத சாந்தோக்ய உபநிஷத்தின் வாக்கியப்படியே, ஞானாச்சாரியர் உபதேசித்த நீ அது

வாயுள்ளாய் அது நீயே ஆகும், என்ற இலக்கியார்த்தமான கூடஸ்த பிரம்மத்தின் ஒருமையை உணர்த்தியதாகும், மகாவாக்கியம் கூறிய அதுநீ எனும் பதங்கள் பிரம்மாம் சாக்ஷியுமாயுள்ள, அறிவுக்குள் அறிவாயும் உயிர்கட்குள் உயிராயும் திகழும் சேதனபாகமான இலக்கியார்த்தத்தை விடாமல், பேத கர்மவுபாதி தர்மங்களை விடுத்துச் சதாசர்வ காலமும் , பிரம்மமே நீ, நீயே பிரம்மம் எனும் அசிபதத்தின் பொருளாம், ஏகம் அத்வைதம் என்று ஐக்யத்தில் கூட்டும், இது இன்னவாறென்று அறியாத காலத்தும், பலசென்மப் பயிற்சி சாஸ்திரம் குரு கிருபைகளாலும் இப்போது நீ உணர்ந்தபடியே, நீ எப்போதும் இருந்துள்ளாய் என்று நிச்சயமும் கொள்வாயாக என்றருளினார் ... (எ-று).

அ-கை- இந்த அத்துவிதமாய் எல்லாம் தானாய் மருவி நிற்கும் சுகானுபூதியை விலகாமல் தியானம் செய்திருப்பாயாக, (எ-று).

75. கடல்நீரிற் மேகநீ ரிற் கண்டவா னிரண்டும் பொய்யே
குடவானும் பெரிய வானும் கூடிஒன் றாமெப் போதும்
இடமான பிரமம் சாக்ஷி இரண்டு மெப்போ துமேகம்
திடமான சுவானு பூதிச் சிவோகமென் றிருந்திடாயே..

அ-வ, உரை = சில செம்மேகங்களெல்லாம் கூடித்திரண்டு கருத்து நீர் சூழ்ந்த, மேகஜலத்தினுள்ளும், குடத்திலுள்ள நீரினுள்ளும் இருக்கின்ற ஆகாயங்களில், மேகங்கள் இருப்பதற்கான எவ்வளவு இடம் கொடுத்துள்ளதோ அந்தமட்டும் மேகஜல ஆகாயமாகும், குடத்துநீரினுள் பிரதிபிம்பமாய்த் தோன்றும் ஆகாயம், கடஜல ஆகாயமாகும். இவ்விரு ஆகாயங்களும் பொய்த் தோற்றமேயாகும். மேகங்களுக்கெல்லாம் இடங்கொடுத்துள்ள மகா ஆகாயமும், நீரில்லாத வெறுங்குடாகாயமும், அதாவது, மேகங்களை நீக்கியபோதும், குடத்துநீரைக் காலிசெய்தபோதும் அது அதிலிருந்த ஆகாயங்களை மட்டும் ஆய்ந்து பார்த்தால் ஏகமாகும். மேகங்கள் குடங்கள் எல்லாம் உபாதிகள், இதனூடு பொருந்திப் பார்க்கும் (மேகம் குடம் என்றவுபாதி) போது மேகஜல குட ஜலஆகாயமென்றும் குடாகாய மென்றும் பொருள்படும். இதுவே மேகம் குடம் என்ற உபாதிகளை நீக்கி ஆராய்ந்தபோது, எவ்வித உபாதிகளுமற்ற ஒன்றேயான மகா ஆகாயமாகும் எனப்புரிந்திடுக?

ஆதலால், சிதாபாசனே சீவன், சீவனே ஈசுவரன், ஈசுவரனே பரப்பரப்பிரம்மம், பரப்பிரம்மமே மலங்களேதுமற்ற சர்வ சாக்ஷிப் பிரம்மம்! அதுவே நாம் என தெளிவும் உறுதியும் கொண்டு சிவோகம் பாவனையில் லயித்திருந்திடுக? இந்நிலையே சுருதி சாஸ்திரங்கள், குருஞானாச்சாரியர், வாக்கியார்த்தம் (யுக்திப் பூர்வமான விசாரணை)சுகானுபவம், இந்நான்குமே தானாய் விளங்கும், விளங்கவே பேசானு பூதியாம்! மௌனானந்தமாய் இருந்திடு? என்றுபதேசித்த குருவும் மௌனானந்தமாயினார்! என்பதாம்... (எ-று).

அ-கை, குருவுபதேசப் பிரகாரமே சமாதியில் தன்னைத் தரிசித்தல் எனவாம்.

76. தஞ்சமாங்குருவும் சொன்ன தத்துவ வழிதப்பாமல்
பஞ்சகோசமுங் கடந்து பழையுந் தள்ளி உள்ளிற்
கொஞ்சமா மிருப்பும் விட்டு கூடஸ்த பிரம்ம மென்னும்
நெஞ்சமும் நழுவி ஒன்றாய் நின்ற பூரணத்தைக் கண்டான்.

அ-வ, உரை = சீவனை சிவமாக்கும் ஆத்மாவைப் பரமாத்மாவாக பூரணசரணாகதியை தனக்கு வழங்க, திருவருட் சொரூபமே திருமேனி தாங்கி, குருமூர்த்தமாய் எழுந்தருளி இங்ஙனே வந்து நான் தற்பத துவம்பத வாச்சிய இலக்ஷிய சோதனையான விசாரணைசெய்யும் நெறிகளை உபதேசித்தபடியே ஏதும் தவறாமல், சரீரம் மூன்றையும் அவஸ்தைகள் மூன்றையும் அபிமான நாமங்கள் மூன்றையும் இவைகளுடன் உடன்பட்டிருந்த அநாத்மதத்துவங்கள் முப்பத்தி ஐந்தையும், இவைகளின் விரிவுகளடங்கிய, பஞ்சகோசங்களையும் இவைகளை அபிமானித்து அநுபோகஞ்செய்த சிதாபாசனையும், இவனுக்கு ஆதாரமான சீவனையும், இத்துவம் பதங்களின் சாக்ஷியான கூடஸ்தனையும் தத்பதலக்ஷியமாகிய பரமாவையும், நீக்கிநின்ற போதுகண்ட, யாவுமற்ற சூனியத்தையும் நான் அகம் அகம் பிரம்மாஸ்மி என்கிற அநுபவமும் நழுவி, (அதில், புத்திவிருத்தி தங்காமல்) அதீதமாய், எங்கும் நானாக நிறைந்துள்ள பரிபூரண சொரூபமாய்த் தன்னைச் சமம்+ ஆதி (அதாவது, தானான அதுவாய் எதார்த்த சொரூபத்துள் லயித்திருக்கும் சமாதியில் திளைத்திருந்தான்... (எ-று).

அ-கை, அச்சமாதியில் பொருந்திச் சுகாநுபவமயமாய் திளைத்தல்.

77. அநுபவா நந்தவெள்ளத் தழுந்தியே வகண்ட மாகித்
தநு கரண ங்களாகிச் சகலமு மிறந்து சித்தாய்
மனது பூரண மாகித் தேகமா னசற்குருவுங் காண
நனவினிற் சுழுத்தியாகி நன்மகன் சுபாவ மானான்..

அ-வ, உரை = சாஸ்திரங்கள் கூறுகின்ற கருத்துப்படியும் குருபிரான் உபதேசித்த விதிகளின்படியும், அப்யாசித்துநின்ற பெருமுயற்சி யினாலும் சுகாநுபவமெனும், அதிசயம் பேரதிசயமும் கடந்த நிலையான நிரதிசய ஆனந்தக்கடலுள், (பிரம்மத்தினுள்) உப்புக்கட்டி தான் உருவான ஆதாரமாயிருந்த கடலில் விழுந்து கரைந்ததே போல! மூழ்கி, தேகாதி கருவிகரணங்கள் அவஸ்தை அபிமான அஞ்ஞானமான லவணத்துண்டுகள் (உப்புகட்டிகள்) அவ்வானந்தக் கடலுள் விழுந்து கரைந்து, ஒழிந்து அகண்டாகாரமாய்ச் சின்மாத்திரமாய் உணர்வுகள் பொருந்திப் பரிபூரணமாய்த்திகழ, தனது குருவும், எனது தேவையை கருதி தேகமெடுத்து எழுந்தருளி உபதேசித்த சற்குருவும் காணும்படி ஞானபூமிகள் ஏழின், ஏழாவது பூமியாகும் துரியாதீதம் எனும் நனவிற் சுழுத்திநிலை?... விழிப்பு நிலையிலேயே, கருவிகரணாதீதம் மனாதீதம், விஞ்ஞானாதீதம் தேகங்களினதீதம் ஞானாதீதம் பிரம்மமே ஆனந்தாதீதம் என்கின்ற ஒப்பற்ற தனது இயல்பான ஆத்ம சொருபமாய்த் திகழ்ந்தான்!... (எ-று).

அ - கை, - எல்லாம் தானாயிருந்த பூரணசமாதியிலிருந்து வெளிப்பாடடைதல்.

78. அளிமகன் நெடும்போதிவ்வா றானபின் மனது மெள்ள
வெளியில் வந்திட வுணர்ந்தான் விமல தேசிகரைக் கண்டான்
துளிவிழி சொரியப் பாதந் தொழுதுவீழ்ந்தெழுந்து சூழ்ந்தான்
குளிர்முகச் சுவாமி கேட்கக் கும்பிட்டு நின்று சொல்வான்!

அ-வ, உரை = குருவின் உள்ளம் குளிரும்படி நெறி நடந்தவனா தலாலும், தான் அடைய வேண்டிய பொருளின்மீன் நீங்காத பிரியம் கொண்டவனாதலால், அளிமகனாம், மேற்கூறிய நிர்விகற்ப நிஷ்டையில் இருந்தும் உணர்வுமலர்ந்து அதன் மணம்

அந்தக்கரணங்களின் வழியாக ஸ்புரணமாகி (ஆர்ப்பரித்து) வெளிமுகமாயிலங்கும் தேகம், உலகம், குரு, மற்றும் நாமரூபங்களையும், மெள்ள அறிந்தான், துரிதமாய், தன்முன் வீற்றிருக்கும் மலதோஷங்களைச் சீரணம் கொண்டுள்ள குருமூர்த்தியைக் கண்டு, கைகளிரண்டும் சிரசு மேற்குவித்து கடைக்கண்களில் ஆனந்தகண்ணீர் வழிந்திட அவரது ஸ்ரீ பாதங்களில் சாஷ்டாங்க (வெட்டியபின் சாயும் மரமாக) மாய் வீழ்ந்து எழுந்துவலமாகப் பிரதக்ஷணம் செய்தும், பின் பிரம்மானந்தானுபவம் பெற்று விழிப்படைந்து வணங்கிநின்ற மாணாக்கனைப் பூரிப்பால் நோக்கி, அஸ்தமஸ்த சையோகம் அவனது தலையில் குருதனது கையை வைத்து ஆசீர்வதித்து, அன்பனே? உனது முயற்சிப் பெருவலியால் பெற்ற சுகாநுபவத்தைச் சொல்வாயாக எனக்கேட்க, தனது உடல் மனம் உயிர் பொருள் யாவும் குருவுக்கே காணிக்கை எனச் சங்கல்பம் செய்து மீண்டும் வணங்கி நின்றான்... (எ-று).

அ-கை - கைம்மாறு காட்ட அறியாத சீடன் குருவைப் புகழ்ந்து துதி செய்து வணங்கிக் கூறுதல்!....

79. ஐயனே எனது ளேநின்று அனந்த சென்மங்களாண்ட
மெய்யனே உபதே சிக்க வெளிவந்த குருவே போற்றி
உய்யவே முத்தி நல்கும் உதவிக் கோருதவி நாயேன்
செய்யுமாறு ஒன்றுங் காணேன் திருவடி போற்றி போற்றி!

அ-வ, உரை = இவ்வாறு வண்டு ஒன்று மலரினுள்ளிருக்குந் தேனை உண்டு மயங்கிக் கிடப்பது போல்! தானான அமிர்த சாகரத்துனுள் ஆனந்தானுபவம் பெற்று, அதிலே மூழ்கியிருந்து மெள்ளமெள்ள விழிப்புணர்வு பெற்று விருத்திஞானம் வெளிப்பட்டு எதிர் அமர்ந்துள்ள ஞானாச்சாரியரை வலம் வந்து பணிந்து வணங்கிநின்று, ஐயனே எனை ஆளவந்த அதிபனே ஞானவள்ளலே! எனை ஈடேற்றும் பொருட்டு, மானுட வடிவு கொண்டு இங்ஙனே எழுந்தருளிய குருவே, இனிப்பிறவாத பேரின்ப வீடுகாட்டியருளிய நும் கருணைத்திறத்திற்கு, பிரதியுபகாரம் ஏதும்செய்ய இயலாத எளியவன் ஒன்றுங்காணேன்! ஏனெனின், தங்களைச் சரணடைந்த போதே, உடல் பொருள் ஆவி என்ற மூன்றையும் தங்களுக்கு

அர்ப்பணித்துள்ளேன் இப்போது யான்பெற்ற இன்ப சம்பத்தும் தங்களின் அருளுடைமையே ஆதலால், தங்களின் மெல்லிய பூம்பாதங்களிரண்டையும் பற்றி என் சிரசில் சூடி நமஸ்காரம் செய்கின்றேன் போற்றி போற்றி போற்றி எனப்பலமுறை வணங்கி அஞ்சலி செய்தான்!.... (எ-று).

அ-கை- சரீரங்கள் அவஸ்தைகள் அபிமான நாமங்கள், பஞ்ச கோசங்கள், சிதாபாச சீவ ஈசுவரன் ஜெகத்தினது ஸ்மிருதி வாசனைகள்யாவுமிறந்து, ஆத்மானுபவ சுகசமாதியில் லயித்திருந்து வெளிப்பாடடைந்த சீடனைக் கருணையுடன நோக்கி நீ இவ்வானந்தானுபவத்தை விழிப்பு நிலையினும் நீங்காது பயின்று வருவாய் எனின் அதுவே நீ எனக்குச் செய்யும் கைமாறு எனக்கொள்வேன், யாதுதடையுமின்றிய சகசநிஷ்டை யிலிருப்பாயாக? என்றருளினார்.. (எ-று).

80. சிட்டன் இவ்வாறு கூறத் தேசிகர் மகிழ்ந்து நோக்கிக்
கிட்டவா எனஇருத்தி கிருபை யோடருளிச் செய்வார்
துட்டமாந் தடைகள் மூன்றுந் தொடராமற் சொரூப ஞான
நிட்டனா யிருக்கின் ஈதே நீசெய் யுமுதவி யாமே!...

அ-வ, உரை = தனது உபதேச முறைகள் ஏதும் நீங்காதுநின்று, நிருவி கற்ப சமாதிநிலைவரை அநுபவஞ்செய்து மீண்டு, தன்முன் அஞ்சலி அஸ்தனாய் நிற்கும் உத்தமகுணம் வாய்ந்த சீடனை நோக்கி, மனம் மகிழ்ந்து அன்பனே என் அருகில் வா? என அழைத்து அமரச்செய்து மிகுந்த கருணையுடன் இதவுபதேசம் செய்வாராயினார்? மேகம் குமுறல் இடி மின்னல் மழை என்பது போல உனது அநுபவத்தை சீரழிக்கும்படியான துஷ்டவாசனைகள் ஏதும் உன்னைவந்து அநுகாதவாறு, விழிப்புடன், அறியாமை ஆரோபம் அஞ்ஞானம் சந்தேகம் விபரிதப் பிரமைகள் வந்து அடையாதபடி, நீபெற்ற சொரூப சைதன்ய சமாதி அநுபவம் நீங்காமற் தற்காத்துக் கொண்டிருப்பதே நீ எனக்கு செய்யும், கைமாறு என்பததுவே ஆகும் என்றார். (எ-று).

அ-கை-சுவாமி! அநுபவசித்தியான அத்வைத ஞானானந்தம் நீங்கள் குறிப்பித்த தடைகளினால் நீங்குமோ? அவ்வாறு அவைகள் வரும்

முறையும், அவைகளை நீக்கும் உபாயங்களையும் அடியேனுக்கு விளங்குமாறு கூறியருளும் ஐயனே எனப் பணிந்தான்!.

81. நீநானெென் றிரண்டில் லாமல் நிறைந்தபரி பூரணமா யெங்கும்
நானாகத் தெளிந்த ஞானம் நழுவுமோ குருவே என்றான்
தானாகும் பிரமரூபம் சற் குருநூ லால்தோ ன்றும்
ஆனாலுந் தடைகள் உண்டேல் அநுபவ முறைத்தி டாதே...

அ-வ, உரை = நீஎன்றும் நான்என்றும் அறிகின்ற துவைத(வேறுபாடு) ஞானமின்றி, பரிபூரணமாய் (அண்டபிண்ட சராசரங்கள் எங்கும் ஊடுருவி திகழும் அத்வைத வியாபக சைதன்யமே நானாகத் தெளிந்த ஞானம்! என தாச்சாரியரே? நழுவுமோ (நான் இழக்கலாகுமோ? என கேட்ட சீடனுக்கு, மகனே, சீவன் ஏதோ ஓர்பூர்வ புண்ணியவசத்தால் அடையவரும் சாஸ்திரஞானமும், குருவுபதேசங்களைக்கேட்டல் சிந்தித்தல் தெளிதலாகிய ஞானம் புலரும் ஆனாலும், தடைகளாகிய அஞ்ஞானம் சந்தேகம் விபரீதம் முதலிய கேடுகளைத் தருகின்ற அஸ்திர (திடமற்ற) வைராக்கிய குறைவுமான பிரதிபந்தங்கள் உன்னுள் வருமானால், நீமிகவுமுயன்று அநுபவிக்கும் ஞானம் திடப்படாமல் மங்கி மறையும் வாய்ப்புகள் உண்டு என்றறிவாயாக?... (எ-று)

இன்னும் நீ என்பது சீடன்முன்பாக தரிசனம், தரும் குருவுமே ஆனந்தமென்றும், நான் என்றது தன்னிலையாய் விளங்கிடும் அறிவு என்றும் உணர்க? என்பதாம்!.

அ-கை- இடையூறாக வரும் தடைகளையும் அவைகளைத் கெடுத்து ஒழிக்கும் உபாயங்களையும் கூறுகின்றார். (எ-று)

82. தடை எவையெனில் அஞ்ஞா னஞ்சந் தேகவிபரீ தங்கள்
படர்செய்யு மிந்த மூன்றும் பலசென்மப் பழக்கத் தாலே
உடனுடன் வரும்வந்த தக்கால் உயர் ஞானங் கெடும் இவற்றைத்
திடமுடன் கெடுப்பாய்க் கேட்டல் சிந்தித்தல் தெளித லாலே..

அ-வ, உரை = மகனே? அந்தத் தடைகள் ஏதெனின் யாம் கூறக்கேட்பாயாக, அஞ்ஞானம் சந்தேகம் விபரீதம் என்ற இந்த

மூன்றும் கனத்த துன்பங்களை தரவே வரும். இத்தடைப்படுத்தும் ஞானத்தால், காரணமறியும் ஞானம்மறந்திடசெய்யும், காண்பான் காட்சி காணப்படும் பொருள்களும் இதன் வாசனையும் கெடாது ஆதலால், ஞானசாதனமாகிய கேட்டல் சிந்தித்தல் தெளிதல் எனும் உயர்ஞான அநுபவமகலாமல், சொரூப இயல்புடைய மனனத்தியானத்தால், அஞ்ஞானமும் சந்தேகம் ஒன்றை வேறொன்றாய்க் கற்பித்து அறிகின்ற விபரீத புத்தியையும், தெளிதலால் திரிசியங்களையும் நீக்குவாய்?. (எ-று).

அ-கை- இத்தடைகள் வருமாயின் மிகவே முயன்று பெற்ற ஞானானந்த அநுபவம் நிலைபெறாது என உவமை மூலமாக கூறுகின்றார் (எ-று).

83. அக்கினி கட்டுப் பட்டால் அற்பமுஞ் சுடமாட்டாது
மக்கின ஞானத்தாலே வந்தபந் தமும்வே வாது
சிக்கெனப் பழகல் கேட்டல் சிந்தித்தல் தெளித லாலே
விக்கின மடஞ்சந்தேகம் விபரீதம் போக்கு வாயே?

அ-வ,உரை = மந்திர சித்தியால் நெருப்பின் உஷ்ணசக்தியை தம்பன (கேட்டினையும் தராது அதுபோல) நீயும் உனது ஞானாக்கினியைபடரவிட்டு அம்மூன்று விதமாகிய அஞ்ஞானம் சந்தேகம் விபரீதமாகிய மூன்று குற்றங்களையும் சுட்டெரிப்பாயாகில் குற்றங்களுஞ் செய்த போது அவர்க்கு அவ்வுஷ்ணசத்தி கட்டுப்பட்டு எவ்வித உனது ஞானாப் பியாச வலுவினால் யாதொரு கேடும் தடையும் தோஷமும் உண்டாகாது. (எ-று).

அ-கை, அத் தடைகளின் இயல்புகளைக் கூறுகின்றார்... (எ-று)

84. பிரம பாவனையை மூடிப் பேதங் காட்டுவதஞ் ஞானம்
குரவன்வாக் கியம்நம் பாமற் குழம்புவ தாஞ்சந் தேகம்
திரமறுஞ் செகம்மெய் யென்றும் தேகம் நானென்றுமுள்ளே
விரவிய மோகந் தானே விபரீத மென்பர் மேலோர்!...

அ-வ, உரை = திருக்கு எனும் நமது ஆத்மஸ்வருபத்தை நமக்குத் தெரியவிடாமல் நம்முள்ளேயே இருந்துகொண்டு மறைக்குமதுவே ஆவரண காரியமான அஞ்ஞானம், ஞானாச்சாரியரின் உபதேசவாக்கியங்களில் நம்பிக்கை உண்டாகவிடாமற் கலக்கமும்

மனக்குழப்பமும் செய்வது சந்தேகமாகும், ஓயாமற் தோன்றி இருந்தழியும் நிலையாமையே தன்னியல்பாயுள்ள, சகமான உலகமும் அதன் பரிணாமங்களையும் மனதுள் சத்தியமெனப் பதித்துப் பல சென்மங்களுக்கு அது வழிவகுக்குமிதுவே விபரீதம் எனத் தெரிந்து கொள்வாயாக என்று, கூறியுள்ளனர் நூல் (நுவல)-செய்யவல்ல சான்றோர்கள் என்றும் தெரிவாயாக? என்றருளினார். (எ-று).

அ-கை, அவ்வாறான தடையாதிகளைக் கெடுக்கும் முன்பு நீ பழகிவந்த கேட்டல் சிந்தித்தல் தெளிதல் எனும் ஞான சாதனங்களின் இயல்புகளைக் கூறுகின்றார். (எ-று).

85. **தத்துவ அநுபோகந் தான் சாதித்தல் கேட்டல் என்பார்**
ஒத்துள்ள பொருள் ஊகத்தால் உசாவல் சிந்தித்தல் என்பார்
சித்தமே காந்தமான தரிசனந் தெளிதல் என்பார்.
நித்தமிப் படிச்செய் தக்கால் நிருவாணம் பெறுவாய் நீயே.

அ-வ, உரை = மகனே? பிரஞ்ஞானம் பிரம்மம், அகம் பிரம்மாஸ்மி, தத்துவமசி, அயமாத்மா பிரம்மம் எனும் மகாவாக்கியார்த்தங்களை குருமுன்னிலையில் கேட்டுப் பெறுவதையே கேட்டல் என்றுரைப்பார்கள், ஆத்மா பரமாத்மாவுடன் பொருந்துவதையே சதாபாவனையாய் எண்ணுவதையே சிந்தித்தல் எனக் கூறுவார்கள். நினைப்பு மறப்பு இன்ப துன்பங்களைச் சார்ந்திருப்பதே இயல்பு ஆயினும், அம்மனம் யாதொரு குற்றமுமற்றது எப்போதும் குழந்தைபோலத் தூய்மையானது, அது சைதன்ய சுகாநுபவஸ்ரூபமான பிரம்மத்தைத் தரிசித்தலே தெளிதல் என்று தீர்க்கதரிசிகளான சத்துக்கள் கூறுவார்கள். இவ்வாறு சர்வ சதா காலமும் அப்பியாசித்து வருவாயானால், அநாத்ம தத்துவங்கள் 29 - இத் கோசங்கள் அதிகமாய், 5- இவைகள் ஆடும் அரங்கமான தூலவுடல் ஆக 29-தத்துவங்களுக்கும், அன்னியமாய், மோர்த்தாளியுள் வெண்ணை கிடப்பதுபோல், நீயும் நிருவான முத்திபெறுவாய். (எ-று).

அ-கை- முத்தியை விரும்பும் முமுட்சுக்கள் அந்த, அவாந்தர சாதனங்களான, கேட்டல் சிந்தித்தல் தெளிதல் எனுமிவைகளை

எவ்வளவு காலம் வரை, அப்யாசம் செய்ய வேண்டும் என்பதை கூறுகின்றார்!. (எ-று).

86. எத்தனை நாள் ஞாதாவும் ஞானமு மிருக்கு முன்பால்
அத்தனை நாளும் வேண்டும் அப்பாலோர் செயலும் வேண்டா
நித்தமும் வெளிபோற் பற்றா நேயமாத் திரமாய்ச் சீவன்
முத்தரா னவர் விதேக முத்திபெற் றிருப்ப ரென்றும்!..

அ-வ, உரை = காண்பானும் காட்சியும் காணுகின்ற சர்வப்பொருள்களும், என்ற (திரிபுடித் திரிசியங்களின் உறவு) இவைகளுடன் உனது மனம் எவ்வளவு காலம் பொருந்தியிருக்குமோ, அதுகாலம் வரையிலும் மேற்கூறிய அப்யாசங்களைப் பண்ணியே வரவேண்டும், முன் கவி உரையின் நிறைவுப் பகுதியில் கூறியபடியாய், உனது ஆன்மா சங்கம்சாராமல் (அநாத்மதத்துவக் கூட்டுறவுகள் நீங்கியநிலை) மண், நீர், அக்கினி, காற்று முதலிய நான்கு பூதங்களும் ஒன்றோடு ஒன்று கலந்தும் பிரிந்தும் இருப்பதுபோல், அல்லாத வெளி ஆகாயம் எதனோடும் தாக்கற்றிருப்பது போலவே நீயும் மேற்கூறிய, 29, தத்துவங்களுக்கும் அனன்னியமாய், அத்வைத பிரம்ம சொரூபமே தானாய் உள்தெளிந்துணர்ந்து இருப்பாயானால் அவ்வவாந்தர சாதனங்களின் அப்யாசம் செய்யவேண்டுவதில்லை. அப்போது நீ பெற்றுள்ள நிரதிசயானந்தநிலையே சீவன் முத்தியாகும்! இந்நிலையை எய்திய ஒருவர், தேகாதிகளின் சங்காத பந்தங்கள் யாதுமற்ற விதேக கைவல்யத்தை (யாதெனின்? தேகசம்பந்த வாழ்வியலைச் சிறிதும் உள்ளுணராதவர்களாவர்) பெற்றுள்ளவர்கள் எனக்கண்டு கொள்வாயாக?

எடுத்துக்காட்டுகவி,

சிவஞானியர்க்கும், சிவயோகியர்க்கும்
அவமான சாதனம் ஆகாது, தேறில்
அவமாம் அவர்க் கந்தசா தனம்நான்கும்
உவமான மில்பொருள் உள்ளுற லாலே!
(திருமந்திரம்)

அ-கை - அவ்வரிய பெருந்தகைமை வாய்ந்த ஞானியர்களின் வகையும் தொகையும், அவரவர்க்காகும் நாமங்களையும், இயல்புகளையும் வர்ணிக்கத் தொடங்கினார் நூலாசிரியர் என்பதாம்.

87. ஞானமார் சீவன் முத்தர் நால்வகை யாவர் கேளாய்
வாணிகர் பிரம்ம வித்து வரன்வரி யான்வ ரிட்டன்
ஆனவர் நாமமீ தாமவர் களிற் பிரம்ம வித்தின்
தானமும் மற்றை மூவர் தாரதம் மியமுஞ் சொல்வேன்!

அ-வ, உரை =சாஸ்திரம் குரு கூறிய ஞானநெறி பிசகாமற் பயின்று முதிர்அநுபவமும் ஞானதெளிவின் நிச்சயமுங் கொண்டு விளங்கும் சீவன் முத்தர்கள் நான்குவிதமாயிருப்பார்கள்! அவ்வருளாலர்களின், நடையும் பேச்சும் செயலும் அநுபவமும் ஆகாயத்தை ஒத்ததாயிருக்கும், இவர்களுக்கு, பிரம்ம வித்து, பிரம்ம வரன், பிரம்ம வரியான், பிரம்ம வரிட்டன் என்ற பெயர்களாகும். இவர்களுள் பிரம்மவித்தின் நிலையியல்பும், ஸ்தானமும், மற்றய மூவர்களின் ஸ்தான இயல்புகளையும் இவர்களின் தாரதம்மியவேறுபாடுகளையும் யாம்கூற நீ கேட்டறிவாயாக என்றார்!. (எ-று)

அ-கை- நான்குவித சீவன் முத்தர்களில், இது பிரம்மவித்தின், சாங்கோபாங்க இயல்புகளைக் கூறுகின்றனர்... (எ-று)

88. தீரராய்ப் பிரம்ம வித்தாய்த் தெளிந்தவர் தெளியு முன்னம்
வாரமா யிருந்த தங்கள் வருணமாச் சிரமஞ் சொன்ன
பார, காரிய, மானாலும், பலர்க்கு, முபகார, மாக,
நேரதாய் செய்வர் தீர்ந்த நிலைவிடாச் சீவன் முத்தர்!...

அ-வ, உரை = தாம் இவ்வரிய நிலையை அடையுமுன், அநாத்மதத்வக் கூட்டங்களின் அருந்தல் பொருந்தல்களை விட்டுவெகு சாமர்த்தியமாய்ச் செயித்த (இந்திர ஜாலம்போல இவ்வுலகை நம்மிடத்திற் தந்திரமாய்த் தோற்றுவித்தோம் சத்யமல்ல என்றவரோ, என, கீதாச்சாரத்தாலாட்டு கூறுவது காண்க) தீரர்களாம், இன்னும் இகம்பரம் மத்தியமெனும் மூவுலக வாழ்வுகளையும் விரும்பாமல் விலக்கியவர்களுமாகும். இவர்கள் இவ்வனுபவம் பெறுவதற்குமுன், தமது முன்னோர்கள் வழிவழியாய்ச் செய்துவந்த, கர்மகாண்ட நூல்களின் விதிவழியுமது,

இவரது தற்போதைய அநுபவத்திற் கருமங்களையும் அதன் பயன்களையும் லாவகமாக கரைகடந்துள்ள தீரருமாவார், இவைபோக இனி இவரது கருமங்கள் அனைத்தும் அனைவர்க்கும் ஏற்புடையதும் நன்மை தருவதுமாகவே, வெறுப்பும் விருப்புமின்றி, செய்யுங் கருமயோகியாய் திகழ்ந்தும், தம்மை அண்டிவரும் பக்குவர்கட்கு, அவரவர் திறம் கண்டு ஞானோபதேசம் செய்து வழிநடத்துவர், இதனால் இவர்க்கு யாதொரு பந்தமும் கேடும் இழிவும் அண்டிடாது. காரணம்? முடிவான முதற் பொருளாம் பிரம்மத்தைச் சார்ந்தே உள்ளார். நீங்கிடார் எனக் கண்டு தெளிவுந்துணிவும் பெறுக. (எ-று).

அ-கை, - இப்பிரம வித்து உலக உபகாரமாகவே, பஞ்சயக்ஞகர்மங்களையும், பளுவின்றியும் பயன்கருதாதும் செய்திடுவார்கள். (எ-று).

89. காமமாதி கள்வந் தாலும் கணத்திற் போம்மனத்திற் பற்றார்
தாமரை யிலைத்தண் ணீர்போல் சகத்தொடுங் கூடிவாழ் வார்
பாமரர் எனக்காண் பிப்பார் பண்டிதத் திறமை காட்டார்
ஊமரு மாவார் உள்ளத் துவகையாஞ் சீவன் முத்தர்!...

அ-வ, உரை = காமக்குரோதாதி ஆறுகுணங்களும் இராகத்துவேஷாதி ஏழுகுணங்களும், இவர்களுக்கும் அவ்வப்போது தான் விரும்பாத போதும் வரும், இவை அநிச்சாபிராரப்தம் என்றுணர்ந்து அக்கீழ்மைப் படுத்தும் குணங்கள் தோன்றுமவ் விடத்திலேயே, தமது விசாரஞான பலத்தால் அழித்திடுவார்கள்! மனதுள் ஸ்தாபனம் செய்யமாட்டார்கள், தாமரைஇலையின் மேலுள்ள நீர்த்துளிகளே போலவும், உலகியலார்களுடன் கூடியும் அஞ்ஞானிகளைப் போலவும் நடந்துகொள்வார்கள், முத்தியும் இதுவல்லாத துறைகளிலும் தேர்ந்த வித்யாகர்வம் கொள்ளாமல் திறமை காட்டாமல், சத்விசய சம்பந்தமில்லாதவர்களிடம் மௌனமாகி, தன்னுள்ளே உவந்துள்ள நிரதிசயானந்தத்தைத் தரிசித்து மௌனமாயுமிருப்பார்கள். ஞானிகளும் தான் சீவன்முத்தி பெற்ற பின்னும் சுகதுக்காதிகள் (எஞ்சிய சஞ்சிதங்களின் வரவுகளை) வரின், அவை ஆத்மசுகத்தை விளக்கும்படி (வெய்யிலில் நடந்தவனுக்குத் தான் நிழலின் அருமை தெரியுமென்பதாக) வெஞ்சகமாய், விளங்கி அவைகள் உடனே

(உதித்த இடத்தே) நசிக்கும், தான் பரிபூரணானந்தமாய் இருத்தலின் அக்காமாதிகள் தங்கயிடமின்றியுடனே நாசமாகும், எவரெவர்கள் தம்மிடம் வந்து எவ்விதமாய் வஸ்துநிச்சயம் கூறினும், அவரவர் கூறும் எவ்வகைப்பட்ட வஸ்து நிச்சயங்களும், தமது வஸ்துநிச்சய சுகாநுபவத்திற்கு ஒத்திருத்தலின் அவைகளை மறுத்துப் பேசிடார்கள். அவ்வாறு பலரது நிச்சயங்களும் தனது அநுபவ வியாபகத்திற்கு (அத்வைத சான்றான்மைக்கு) அங்கமாகத் தான், அவைகளின் அங்கத்தின் அநுகூதமாயுள்ள அங்கியாக இருந்து கீழாலவத்தை சுழுத்தியில் துரியமாயும் , மேலாலவத்தையில் சாக்கிரத்தில் (விழிப்பு நிலையில்) துரியாதீதமாகவும் மகாமௌனமாகவும், மனம்போகின்ற போகின்ற காரியங்களில் எல்லாம், கற்றாருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பதாக, அறிவுறுஞ்சிதானந்தமாய் உள்ளத்துள்ளே உவகை (ஆனந்தாதீதம்) கொள்வர் என நீஅறிந்துய்வாயாக!?... (எ-று).

(இதுவுமது பற்றியது - குளகம்)

90. பேதகன் மத்தால் வந்த பிராரப்தம் நாநா வாகும்
ஆதலால் விவகாரங்கள் அவரவர்க் கான வாறு
மாதவஞ் செய்யினுஞ் செய்வர் வாணிபஞ் செய்யினுஞ் செய்வர்
பூதலம் புரப்பர் ஐயம் புகுந்துன்பர் சீவன் முத்தர்...

அ-வ, உரை = முன்சென்மங்களில் அறிவின்மையால் செய்தசஞ்சித கர்மங்களால் உண்டாகி இப்பிறவியில் கொஞ்சம் கொஞ்சமாகவே வருகின்ற பிராரப்தம் (அவ்வப்போதும்) இச்சா பிராரப்தம் அநிச்சாப்பிராரப்தம் பரவிச்சா பிராப்தமென பலவிதமாகும், ஆதலால் அவரது அந்தக்கரண விருத்திகள் அச்சஞ்சித கரும விதிப்படியே நியமிக்கப் படுவதாம், இவைகளை தியாகம் செய்த பிரம்மவித்துச் சீவன் முத்தர்களின் நடவடிக்கைகளும் பலவிதமாகும். வேதம் ஓதுவதும் ஓதுவித்தலும் எக்ஞாதி சத்கருமமாதவத்தை செய்பவர்களும், பண்டம் மாற்றிடும் வாணிபஞ்செய்யும் தொழிலை உடைய வருமாவார்கள், தானுமுண்டு தரணியோர்களுக்கும் உணவு வழங்க ஏதுவாயிலங்கும், நிகரற்ற உழவுத் தொழிலையும் செய்வார்கள், மக்கள்மனை சுற்றம் பொருளானவற்றை எல்லாம் விட்டுவெளியேறி எதி தர்மம் - (சந்யாசம்) மேற்கொண்டு, செல்லுமிடங்களில் பசிதாகந்

தணித்துக் கொள்ளும் பொருட்டு, அங்கங்கே சில வில்லத்தார்களிடம் பிக்ஷை ஏற்று உண்டும் தாம் பெற்றுள்ள சீவன் முத்ததரிசன இயல்பை எப்போதும் தக்கவைத்துக் கொள்வார்கள் என்றறிவாயாக? (எ-று).

(இதுவுமது - பற்றிய குளகம்)

அ-கை, - இப்பிரம வித்துக்கள் இவ்வாறு எத்தகைய தொழில்களைச் செய்தாலும், அதுவும் பயனும் பிராரப்தவசமாய் முடியுமே தவிர அவர்க்கில்லை, என்பதாகும்!.

91. சென்றது கருதார் நாளைச் சேர்வது நினையார் கண்முன்
நின்றது புசிப்பார் வெய்யில் நிலவாய் விண்விழுது வீழ்ந்தும்
பொன்றின சவம் வாழ்ந்தாலும் புதுமையாய் ஒன்றும் பாரார்
நன்றுதீ தெண்ணார் சாட்சி நடுவான சீவன் முத்தர்...

அ-வ, உரை = முன்பு வந்து இருந்து அநுபவித்து பிறிந்து போனவைகளை கருதி விரும்பி ஏங்கமாட்டார்கள். இன்னின்னவைகள் நாளை நமக்கு வந்து சேரும் என எண்ணமாட்டார்கள். தன்கண் முன்னே வந்துள்ளவைகளையே அநுபவிப்பார்கள், பகலில் எரிக்கும் சூரியன், தன்னியல்பின்றி பதினாறு கலைகளும் ஒருச்சேர்ந்திலங்கும் பௌர்ணமியே போல் குளிர்ந்திருந்தாலும், ஆலமரத்தின் விழுதுகள் பூமியில் இறங்கியிருக்குமது போலும், ஆகாயத்திலிருந்து பூமியில் விழுதுகள் இறங்கியிருந்தாலும் இறந்து போனர்வர்களின் சடலம் உயிர்பெற்று எழுந்து நடந்தாலும் ஆக, இத்தனை அதிசயங்களா? என்ற அதிசயமும் பிரமிப்பும் அடையமாட்டார்கள், இது நன்று என்றும் இதிது தீமையது என்றும் கருதவோ பேசவோ மாட்டார்கள். மேற்கூறியவைகளில் எதெது வந்தாலும் இருந்தாலும் நடந்தாலும் கண்டும் காணாதவராய் சாக்ஷிமாத்திமாய் சமாதானமும் சாந்தமுமாய் விளங்குவார்கள் சீவன் முத்தர்கள் என்றுணர்ந்திடுவாயாக! (எ-று).

அ-கை- கடந்த நான்கு கவிகளிலும் பிரம்ம வித்து சீவன் முத்தரின் இயல்புகளைக் கூறி, இனி மற்ற மூன்று சீவன் முத்தரது இயல்புகூறல்.

92. பின்னை மூவரி லிரண்டு பேர்களுஞ் சமாதியோகம்
தன்னையுற் றிருப்பார் தேகசஞ் சார நிமித்தந் தானாய்
உன்னுவோன் வரன் வேறோர் ஆற்றாள்உணர்பவன் வரியனாகும்
அன்னியர் தம்மாற் தன்னாலும் அறியா தோன்வ ரிட்டனாமே!

அ-வ, உரை = பிரம்ம வித்து மனம் அடங்கிய அநுபவ நிலையினை அடைந்தவராதலால், தான் ஒன்றை கருதுவதும் பெறுபவதும் அநுபவித்தலும் வியப்புறுதலுமில்லை என்றார்! மற்றுமுள்ள மூன்றுபேர்களில், பிரம்ம வரன் பிரம்ம வரியான் என்ற இரண்டு பேர்களும் எல்லாந் தானாகவுள்ள சமாதி ஞானத்தை அடைந்திருப்பார்கள். தேகத்துடன் கூடி சீவிக்கத் தேகதாரணமான பசிதாகம் தணிக்கும் பொருட்டு தானே முயன்று பிக்ஷை ஏற்றுண்டு, பின் சொருபதியானத்தில் பொருந்தியும், தன்னைநாடி வந்து கேட்டும் பக்குவர்களுக்கே தான் பெற்றுள்ள பேரானந்தப் பெரு வீட்டின் இயல்புகளை முறைப்படுத்தி உபதேசிப்பார், பிரம்மவரன் சீவன் முத்தர், எஞ்சிய பிரம்மவரியன் உணவு உடை உறைவிடம் முதலியவைகளை தானும் முயன்று யாரிடமும் பெறுவதில்லை, பிறர் வந்துவணங்கி வழிபட்டுக் கொடுத்தால் மட்டும் ஏற்றுண்பதுண்டாகும். பிரம்மவரிட்டன் பிறராலும் தன்னாலும் தன்தேவையைப் பராமரிப்பதில்லை? இவர், உடலியல் உயிரியல் உணர்வியல் உலகவியல்களை முற்றும் உறங்கினவன் கைப்பொருள் நழுவியதுபோல் யாவும் மறந்திருப்பார். இவ்வுபசாரங்களை இவர் ஏற்காவிடில் இவருடல் சேதமாகுமோ? ஆகாது, நிராகாரமாய் அநுபவிப்பார் பிராணதாரணமாகிக் காற்றைப்புசிக்கின்றார் ஆதலின் இவருடல் கெடாமலிருக்கின்றன! என்பதாம் என்றருளினார்!.

அ-கை- இந்நால்வரது சமாதிநிலையின் பயன்களை கூறுகின்றார் (எ-று).

93. அரிதாகு மிவர்கள் இவ்வாறு அனேகம் பேரானாலும் முத்தி
சரியாகும் பாடுபட்ட சமாதிக்குப் பலனேது தென்றால்
பெரிதான திருஷ்ட துக்கம் பிரம்ம வித்தனுப விப்பான்
வரியானும் வரனும் மற்றை வரிட்டனுஞ் சுகமாய் வாழ்வார்!.

அ-வ, உரை = இகம் பரம் மத்தியம் என்று மூவுலகிலும் தேடினாலும் தரிசிக்க அரிதாகக் கிடைக்குமிச் சீவன்முத்தர்கள், இவ்வண்ணம் ஒவ்வொருவரும் வெவ்வேறுபட்ட நடைமுறையியல்புகளைக் கொண்டுள்ளவர்களே, என்றாலும், இவர்கள் பெற்றுள்ள ஞானசமாதி நிலையியல்பில் வேறுபாடுகள் ஏதுமில்லாததால், வீட்டின்பப் பெருநெறி ஒருதன்மையுடையதாகும், ஆதலால், இப்பிரம்மவரனும் பிரம்மவரியானும் பிரம்மவரிட்டனும் தேகலோக சஞ்சார காரியங்களில் தாக்குறுதலின்றி நிரதிசயானந்தர்களாய் வாழ்வில் சுகித்திருப்பார்கள்! இவர்களடைந்த இச்சமாதிநிலை வாய்க்காத பிரம்ம வித்துச் சீவன்முத்தர், பிராரப்த வசத்தால் நேரிடும் பல்வேறு வகையான காரியவுபாதிகளோடுங்கூடியே வாழ்ந்துவருதலால் பெருந்துன்பங்களை அநுபவிப்பார், ஆயினும் இவரது சகசசமாதி இயல்பின் பேரின்பநிலைதனை நழுவிடாது இருப்பார்கள் என்றும் அறிந்துகொள் மகனே? என்றார். (எ-று).

அ-கை, இச்சீவன் முத்தர்கூள் பிராரத்தமாய் வருஞ்சுகதுக்காதி நடைமுறை வெவ்வேறாகுமாயினும், இவர்கள் அநுபவிக்குஞ்சமாதி நிலையின்பம் நால்வர்க்கும் ஒருதன்மையுடையதாம், இது எங்ஙனம் பெத்தர் முத்தர்இயல்புகளைக் கூறுகின்றார். எனக்கேட்கும் சீடனுக்கு (எ-று).

94 பிரம்ம ஞானிகளுங் கன்மப் பேதையர் போல் வாழ்ந்திடிற்
திரமுறு மஞ்ஞானம் போய்ச் செனியாத வழியே தென்னில்
பரவும் ஆகாயம் ஒன்றிற் பற்றாது மற்றை நாலும்
விரவின தோடுங் கூடும் விதமிரு வோரும் ஆவார்...

அ-வ, உரை = சாதனங்களோடும் விவேக விசாரணையால் தனது நிசஸ்வரூப தரிசனம் பெற்றுள்ள ஞானிகளும், கர்மவுபாதிகளுடன் கூடி யான் எனதென்கிற அபிமானிகளான அஞ்ஞானிகளும், பேச்சு செயல் பழக்கவழக்கங்கள் எல்லாம் ஒரே தன்மையாயுள்ளனர். நிலையெனத் தோன்றிய அறியாமை நசித்து இனிப்பிறவாத நெறி யாதென்றல், சேற்றில் மலர்ந்த செந்தாமரையே போல! எங்கும் நீக்கமின்றிப் பரவிநிற்கும் ஆகாயத்தினிடம் மற்றய காற்று, தீ, நீர், மண் முதலிய பூதம் நான்கும் ஒன்றோடு ஒன்று கலந்து அது அதன் குணமான தொழில் செய்தும், தோற்றம் இருப்பு அழிவு

முதலியவைகளை நிகழ்த்தி அழிந்தும், இவைகட்கு ஆதாரமாக ஆகாயம் இருப்பதே அன்றி, அப்பூதகாரியங்களே போல ஒன்றோடு ஒன்று கூடுவதும் ஆவதும் அழிவதுமின்றி, அசங்கமாய், இலயமாய் இருக்குமது போல, ஞானிகள் நடைகளினால் யாதொரு சேதமுமின்றிய ஆகாசமாக இருப்பர்! கர்மிகள் நடையில் ஞானிகளை ஒத்திருப்பதானாலும், அந்நான்கு பூதங்களின் இயல்பாய் நாசமடைவர் என்பதும் உணர்க? (எ-று).

அ-கை-சீவன்முக்தர்களின் தரிசன மகிமையும், அவர்களின் விதேக கைவல்யம் பெறும் நெறிகளையும் கூறுகின்றார்!.. (எ-று).

95. சீவன் முத்தரைச் சேவித்தோர் சிவன் அயன்நெடு மாலான
மூவரும் மகிழ நோன்பு முழுவதுஞ் செய்து சென்மப்
பாவனம் ஆனாரென்று பலமறை முழங்குமிப்பால்
மேவருஞ்சீவன் முத்தரின் விதேக முத்தியும் நீகேளாய்!.

அ-வ, உரை = புணர்ந்த பாவமெல்லாம், பரிபூரணம் உணர்ந்த ஞானிவிழிபட ஓடுமே! என்று சுசிவன்ன போதம் கூறும். இப்பேறுபெற்றோர்களைப் பேணி வழிபடுவது பெரியவை கட்கெல்லாம் பெரியதாகும்! இச்சீவன் முத்தர்களை தரிசித்தவர்கள், அந்தப் பிரம்மா விஷ்ணு சிவன் முதலான மும்மூர்த்திகளையும் ஒருசேரத் தரிசிப்பதாகும். இவர்களே யாவர்க்கும் குருவாம், அம்மும்மூர்த்திகளும் இவரின் தகைமை கண்டு மகிழ்ந்து போற்றுவார்கள், தவங்களில் எல்லாம் மேலான தன்னையறிந் துய்வுபெற்ற இவர்களின் பிறப்பு இறப்பு தொடர்பு அற்றவர்களாவர், பாவபுண்ய கருமப் பயன்களையெல்லாம் சீரணம் செய்தசத்துக்கள், இவர்களே என்று வேதவுபநிஷத்துக்களும் புகழ்ந்துள்ளன! இவர்கள் சர்வ உபாதிகளையும் நியதியால் தியாகம் செய்து, சத்தாய் சித்தாய் ஆனந்தமும் கடந்து திகழும் ஞானாதீதஸ்வரூபமே தானாகுவர், இவர் சீவிக்கின்ற போதும் உடல்களின் அபிமானமின்றிப் பழகியவர்கள் ஆதலால், இவரது தூலம் பிணமாகி விழுந்தாலும் இவர்ஞானமே தன்தேகமாயிலங்குவர்! என்பதை நீ உணர்ந்தின்புறுக!. (எ-று).

அ-கை, மூன்றுவகை கருமங்களின் ஒழிவு கூறுதல்... (எ-று).

96. பஞ்சினை யூழித் தீப்போல் பலசென்ம விவித வித்தாம்
சஞ்சித மெல்லாம் ஞானத் தழல்சுட்டு வெண்ணீராக்கும்
கிஞ்சிதா காமியந் தான் கிட்டாமல் விட்டுப் போகும்
விஞ்சின பிராரத் தத்தின் வினையனு பவித்துத் தீரும்...

அ-வ, உரை = பஞ்சுப் பொதிகளை மலைபோலக் குவித்து வைத்திருந்தாலும், அதில் ஒருசிறு நெருப்புப் பொறிபட்டாலும் போதும் அத்தனையும் வெந்துசாம்பலாகிவிடும் அல்லவா? அதுபோல, நம்மை இதுவரை தொடர்ந்து - வருத்திவந்த பிறப்பிறப்பு பிணிகளுக்கு மூலமாகிய சஞ்சித கர்ம பயன்கள் எவ்வளவு இருந்திருந்தாலும் நான்சுத்தப்பிரம்மம் என்று விசாரித்துணர்ந்து தெளிந்த நிச்சயம் குறித்த அக்கணமே (நொடிநேரத்தளவில்) பிறவிவினைகளைத் தருகின்ற சஞ்சித விதைகள்யாவும் ஞானத்தீ நினைத்து போதே அவ்வளவும் வெந்து சாம்பலாகிடும், ஆகாமிய கருமங்கள் இவரிடம் தங்கும் நிலையமின்றிக் கழியும், எஞ்சிய பிராரத்தகர்மமானது அவ்வப்போது மூன்றுவிதமாக வந்துமது அநுபவித்தே தீர்க்கவேண்டுவதாகும். முந்திய பல பிறவிகளில் செய்யப்பட்ட கர்மபயன்களை அநுபவிக்காமல் அநுபவிக்காமல் மிஞ்சியிருந்தது சஞ்சிதமாகும், இது ஏற்கனவே போட்டுவைத்த பிக்செட் முறையாகும், இப்பிறவியில் செய்கின்ற வினையும் பயனும் அதிகமாகி இனிவரும் பிறவிகளுக்கு வித்தாய் காரணமாகி சேமிக்கப்படுவது (S,B,A/C) சேமிப்புக் கணக்கே போன்றது ஆகாமியம், யாதொரு எதிர்பார்ப்புமின்றி அவ்வப்போது அநுபவிக்கும்படி வருவதே பிராரப்தம் (நடப்புக் கணக்கு) ஆகும். (எ-று).

அ-கை-இருவினையும் அதன் பயன்களும் நீங்கும் வகைகூறுதல்!

97. பொறுமையாய் பிராரப்தத்தை புசிக்குநாள் செய்த கருமம்
மறுமையிற் தொடர்ந்திடாமல் மாண்டுபோம் வழியே தென்னில்
சிறியவர் இகழ்ந்து ஞானி செய்தபா வத்தைக் கொள்வார்
அறிவுளோர் அறிந்து பூசித்து அறமெலாங் கைகொள் வாரே.

அ-வ, உரை = ஆரவாரம் ஆர்பாட்டமின்றி அமைதியாய் சகிப்புத் தன்மையுடனிருந்து தன்னை எதிர்கொண்டு வந்த பிராரப்த கருமங்களை எல்லாம், நல்லது கெட்டது சுகம் துக்கமென்று எதுவந்தாலும் இறைவனின் அருளாக, தாம் முன்பு செய்த

விளைகளின் பயனாகவந்துள்ளது எனப் பணிவோடும் பிரசாதம் பெற்றுத் துய்ப்பது போன்று அநுபவிக்குங் கருமயோகத்தால், அப்பிறவியைக் கொடுத்து வந்தது மீண்டும் சீவன் முத்தர்களைத் தொடராமல் தீர்ந்தொழியும், மார்க்கமாக இன்னொன்றுண்டு. இப்பெருந்தகைமையுடைய ஞானிகளை, புண்ணியப் பரிபாகமடைந்துள்ள அறிவுடையோர்கள் இவர்களுக்கு உணவு உடை தங்குமிடம் அமைத்துக் கொடுத்து அவர்கட்கு இதம்புரியும்படி சேவைகளைச் செய்து, அந்தஞானிகள் ஞானமடைவதற்கு முன் தாம் செய்திருந்த தானதர்ம புண்ணிய தவப்பயன் பின்னும் ஈர்த்து உவந்திருந்து நற்பேறு பெறுவர், அங்ஙனமே, அஞ்ஞானிகள் குறிப்பறிய மாட்டா மூடர் மூர்க்கர்கள் அவர்கள் ஞானம் அடைவதற்கு முன் தாம் செய்திருந்த பாவகர்மப் பயன்களைக் கவர்ந்து கேடுகளை அநுபவிக்கும்படி (ஞானிகளின் நடைமுறைவழியில் குறுக்கிட்டு பல்வேறுவிதமான இடையூறுகளையும் நிந்தனைகளையும்) கேடுகளையும் அடைவார்கள் அஞ்ஞானிகள், நீ இதனையும் அறிந்து கொள்வாயாக? என்றருளினார்.

அ-கை - மூன்று சரீரங்களின் ஒழிவியலைக் கூறுகின்றார். . (எ-று).

98. **அரியமெஞ் ஞானத் தீயால் அவித்தையா முடலீறாகும்**
பெயரிதூ லமுங்கா லத்தாற் பிணமாகி விழுமந் நேரம்
உரிய சூக்கும சரீரம் உலையிரும் புண்ட நீர் போல்
துரியமாய் விபுவாய் நின்ற சொரூபத்தி லிறந்து போமே.

அ-வ, உரை = தினந்தினம் நமது (தனது) சொரூப இயல்புகளைக் காட்டி கொண்டும், எதையும் எவரும் அறிந்திடாதவாறு காரிருளைக் காண்பித்தும், சூக்குமதூலவுடல்கள் வந்திருந்து போகவும் இடமாயுள்ளகாரணசரீரம், இதனிதன் இயல்புகள் இன்னின்ன தன்மையது என்று அறியும் ஞானாக்கினியால், அஞ்ஞான இருள் மறைந்து, காரணசரீரம் நாசமாயிடும், காலநியமப்படி பருமையுடைய தூலசரீரமும் பிணமென்றாகி, தகித்தும் மறைத்தும் அழியும், அவ்வமயம், சூக்கும சரீரமானது, உலைக்கூடத்தில் பழுக்கக் காய்ந்த இரும்பின்மேல் விட்ட நீரை எல்லாம் ஒரு சொட்டும் மிளவிடாமல் உள்வாங்கிக் கொள்வது போல, வியாபகமும் துரியமுமாயுள்ள பிரம்மத்தினிடம் முக்குணமாகிய சகல

வாசனைகளுடனும் கூடிய சூக்குமசரீரம், அந்தர்ப்பாவமாய் மறையும், ஞானிகள் தாம் பெற்ற பரவித்யாஞானத்தில், சஞ்சித கருமமும் பயன்களும் காரணசரீரமும் ஒழியும் சூக்குமசரீரமும் ஆகாமிய வினையும் பயனும், சூரியனுதித்தவுடன் பனிமறைவது போலவும், தீப ஒளி ஏற்றிய இடத்தில் இருள் மறைந்ததுபோலவும் ஞானத்தெளிவு நிச்சயத்துள் ஒழியும், தூலதேகசம்ரக்ஷணை களுடனான பிராரப்த கரும பயன்களும் தூல தேகத்திற்கு நியமித்த காலம் வரை இருந்து நீங்கிவிடும் என்று மகனே துணிவும் தெளிவும் வீட்டின்பமும் நீ பெறுவாயாக?. (எ-று).

அ-கை, சீவன் முத்தர்களின் விதேகமுத்தியின் இயல்பு கூறுகின்றார்.... (எ-று.

99. கடமெனு முபாதி போனற் ககனமொன் றானாற் போல
உடலெனு முபாதி போன உத்தரஞ் சீவன் முத்தர்
அடிமுடி நடுவுமின்றி அகம் புறம் மின்றி நின்ற
படிதிகழ் விதேக முத்திப் பதமடைந் திருப்ப ரென்றும்.

அ-வ, உரை = கடஜல ஆகாயம், கடாகாயம் மடாகாயம் என்று கொள்வோமாகா? இதில், சீவனாக விளங்கிய காலத்தில், சீவனது அந்தக்கரண தர்ம காரியங்களை யான் எனதென்று அபிமானம் கொண்டதற்கு (அந்தக் கரணங்களே ஜலமாம், தேகமே கடமாம், இதில் அந்தக்கரண உபாதிகளான ஜலத்(நீரை)தை நீக்கினால், ஜல ஆகாயமில்லை, இப்போது கடாகாயம் மட்டும் உள்ளது. இப்பவும் மடாகாயத்திற்கு கடமே உபாதியாகின்றன? இந்தக் கடமும் (ஞானிகளின் உடலும்) தேகாந்த பிராப்த முடிவில் பிராணனின் தொடர்பினை நிறுத்திக் கொள்ளும் போது, அகத்தில் மட்டும் பிரம்ம பாவனையில் லயித்திருந்த ஞானிகள், உடலைநீக்கி புறமும் தானேயாக எங்கும் நிறைந்ததே கடமெனும் உபாதியும் நீங்கிய இடமாம், இந்நிலை, கடாகாயம் மடாகாயத்துள் உபாதியின்றி அமைந்துள்ளது. இந்த மட ஆகாயமும், தான் பேரானந்த பெருவாழ்வான முத்திநிலையை அடைந்தேன் என்ற விஞ்ஞானமயகோசாதீதனாய் யாவும் தியாகம், சர்வசங்க பரித்தியாகமாவதே, மடாகாசநாசமாம் இம்மடாகாச நாசமே மகாகாசமாய் நிறைந்து இன்புறுவது என்று நீ. நன்குணர்ந்து தெளிந்து நிரதிசயானந்தனாவாயாக? என்றார்!.

அ-கை- மகனே இங்குநீ பெற்ற அநுபவம் இப்போது மட்டுமல்ல? நீ அறியாமை தோய்ந்து பலபிறவிகளும் ஏன் இப்பிறவிவரையும் உன்னுடனேயே தொடர்ந்துள்ளதை நீ அறியவில்லை. இப்பிறவியில் உன்னை நீ அறிந்து உய்வு பெற்றுள்ளாய் அன்றோ? ... (எ-று).

100.சொல்லிய மகனே எங்கும் சூழ்வெளி யிருக்க மண்ணைக்
கெல்லிய பின்பு தோன்றும் கிணற்றி னாகாயம் போல
ஒல்லையாம் பிரம்ம நூலால் உற்றது போலத் தோன்றும்
எல்லையில் நாம்எப் போதும் ஏகம் என்றிருந் திடாயே...

அ-வ, உரை = பரிபக்குவஞ் சிறந்து விளங்கும் குமரா? நீ இப்போது பெற்றுள்ள அநுபவம் ஏதோ சிலபிறவிகளில் முயன்று பெற்றதாகவும் நீ கேட்டுக் கற்ற சாஸ்திர ஞானத்தாலும் எனது உபதேசவாக்கிய விளக்கங்களாலும் இவைகளின் அப்யாசத்தாலுமே பெற்றோம் என்றெண்ணாதே? எங்கும் பரிபூரணமாய் நிறைந்துள்ள ஆகாசமானது மண்ணை தோண்டி அகழ்ந்தபின் தோன்றும் கூபாகாசமாக நீ அறிவது உனது விபரீதபுத்தியின் மயக்கமாகும், மண் என்கின்ற உபாதியுடன் கூடியிருந்தபோதும் ஆகாசம் அங்கேயே இருந்தது. மண்ணை அகழ்ந்து அப்புறப்படுத்திய போதே, கூபாகாசம் கண்டது பிரமை, விசாரணைக் குறைவினால் என அறிவாயாக? ஏனெனில் யாதொரு உபாதிகளுமின்றியது, எட்டுவகைப் பிரமாணங்களுக்கும் (உவமை) எட்டாதது, ஆதிநடு அந்தமற்ற அநாதியது! சாதனாதிகள், நூல், குருவுபதேசம் பெருமுயற்சியினாலும் தோன்றியதன்று, ஆயினும், தோன்றாத் துணையாய் உன்னுள் துலங்கிக் கொண்டிருந்தது என்று உறுதியுடனறிவாயாக?... (எ-று).

அ-கை-சத்து அசத்துக்களின் உண்மையியல்புகளை உவமைகளின் மூலம் விளக்கி அறிவித்து தத்துவ விளக்கப்படலத்தை நிறைவு செய்கிறார்! (எ-று)

101. கானல்நீர் கிளிஞ்சில் வெள்ளி கந்தர்ப்ப நகர் கனாவூர்
வானம்மை கயிற்றிற் பாம்பு மலடிசேய் முயலின் கோடு
ஈனமாம் அறிபு மானேயிப் பிரபஞ்ச மெல்லாம் பொய்யே
ஞானம்மெய் மகனே உன்னை நம்மாணை மறந்தி டாதே!...

அ-வ, உரை = முன்கவியின் படி, அடிக்கடி பிறந்திறந்தது அஞ்ஞானம் சூழ்ந்திருந்த சீவன்நான், துக்கமே எனது மூலதனம், இவைகளினின்றும் விடுபட்டுய்யவே, சரியாதி நெறிகள் சாதனாதிகளின் பயிற்சி சாஸ்திரம் குருவுபதேசங் களால் இப்போது நான் பிரம்மம் என்று எண்ணுவதுண்மையல்ல. மேற்கண்டவைகட்கெல்லாம் முன்பே, நீ சத்சித்தானந்த பிரம்மம் என்பதை உணர்ந்தாயில்லை. அஞ்ஞானத்திலிருந்த போதுள்ள ஆத்மாவேதான். இருளைக் கிழித்துக் கொண்டுபுலரும் கதிர்போல, நீ ஞானசூரியன் ஆகவே இருக்கின்றாய். இவ்வரிய ஞானானுபவமே பிறவியின் பயனாகும் இதுதுணை நிற்கவும், இனி, வெயின் மிகுதியால் தகதக என்றிலங்கும் கானல் நீரும், சிப்பி அல்லது கண்ணாடியில் சூரியஒளிபடவும் அது வெள்ளியாகவும், பாரதத்தில் கடலினூடே கண்ணன் எழுப்பியதுவாரகை போன்ற மாயாநகரங்களும், கனவினிற்கண்ட (தேவதச்சன் நிர்மானித்த) தேவநகரம் போலவும், ஆகாயத்திற் தோற்றுகின்ற நீலநிறம்போலவும், கயிற்றிற் பாம்பு தோன்றியதும், இவன் மலடியின் மகன் எனக் கேட்டதும், முயலுக்குக் கொம்புள்ளது என்று கேட்டதும் நட்டுவைத்த பருத்தகட்டையே கள்வனாக (ஆள்என்று) கண்டதும், ஈனமாம் இழிவுமான இவைகள் இட்டுக்கட்டிய பொய்யே ஆகும் என மனதினின்றும் தள்ளுவாய், இல்லாதபொய் இவை என்றும், நீக்கிடுக? எப்போதுஞ் சத்தியமாகத் துலங்கும் பிரம்மத்திலிருந்தே (பொருளற்ற பொருளாக, கடலினின்றும், அலை திவலை நுரை குமுழி சேறு கலங்கள் பாசி என்ற ஏழுவுபாதிகள் தோன்றியதே போல) சீவேசுவர ஜெகத்துக்கள் அத்யாச கற்பனைத் தோற்றமென்றும் இவைகளைக் காணுகின்ற நீயே சத்திய வஸ்துவாம் பிரம்மமென்றும் அறிவே உள்ளது என்றும் அவ்வறிவினாற் கண்டவைகள் அனைத்தும் பொய் பொய் பொய்யே, என்றுள்ளுணர்ந்த ஞானமே உண்மை என்பது எம்மீது ஆணையிட்டுபதேசிக்கின்றேன். இந்த ஞானத்தை மறவாதிருந்து உய்வு பெறுவாயாக என்றருளினார்!.. (எ-று). (கைவல்யநவநீதம், தத்துவ விளக்கப்படலமும், அமிர்தவர்ஷினி உரையும் நிறைவுறுகிறது .

ஹரி ஓம் தத்ஸத்! திருச்சிற்றம் பலம்!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி ஓம்.

கைவல்ய நவநீதம் சந்தேகந்தெளிதல் படலமும் அமிர்தவர்ஷினி உரையும் !.

இது சந்தேகம் தெளிதல் படலத்தின் முன்னுரையாகும் (அ-கை) இந்நூலாசிரியர், நா, ஸ்ரீ-லஸ்ரீ, தாண்டவராய சுவாமிகள் தாம் கூறிவரும் கைவல்ய நவநீதம் நூலின், முதற்படலமான தத்துவ விளக்கத்தை, அழியாத ஆனந்தத்தைப் பொழியும், அறிவானந்தம் கொண்டு தாம் கூறவந்த தத்துவமுறையை நேர்த்தியாக வரிசைப் படுத்திகூறி நிறைத்து, இனிச் சாக்ஷாத்கார சொரூபதரிசனமாம் வஸ்துமிருதிப் பிரக்ஞையினால், முன்தோற்றமானவைகள் அனைத்தும் கற்பனைக்காட்சிகளாம் சீவேசுவர ஜெகத்துக்கள், அறிவானந்த ஸ்வரூபங்களாகத் திகழ்கின்றன என்பதை விளக்கும் பொருட்டுச் சந்தேகம் தெளிதல் எனும் படலவகையை கூறுகின்றார்! (எ-று).

அ-கை, தாம் முமுட்சுக்களுக்கு கூறவந்த விசயம், 101-கவிகளில் தத்துவ விளக்கம், என்ற படலத்துள், கூறினார், இப்படலத்தின் விசயவித்யானந்தம் பெற்ற பக்குவர்கள், தாம் பெற்ற நித்ய நிமல நிர்க்குண அத்வைத நிரதிசயானந்த அநுபவத்தை நழுவிடாமல் வைராக்யம் விடாமல் பராமரித்து ஒப்புரவு செய்து, இப்பேரானந்தப் பெருவீட்டு நெறியை தக்கவைத்துக் கொள்ளும்படியாகிய, 180-பாடல்களின் மூலமாக சகல சந்தேகங்களையும் நீக்கி, சகச நிஷ்டையில் சகலபக்குவர்களின் புத்தியில் ஆழமாய்ப் பதிந்திடுமாறும், இப்பேரனுபவசித்திதனிற் கணிந்துருகிப் பிரம்ம சொரூபத்தில் கரைந்திடுமாறும் அன்புமிகக் கொண்டு அநுக்ரகம் செய்தருளியுள்ளார். இதனை ஊன்றி விசாரித்துணர்ந்து உய்வு பெறுவோமாக! ஓம் சாந்தி ஓம்!

(சந்தேகம் தெளிதல் படலம்)

1\. **நார்குழி பறித்து மெள்ள நாட்டிய நெடிய கம்பம்**
உரமுறக் குத்திக் குத்தி யுறப் பிக்கு முபாயம் போல
பரமசிற் சொரூபந் தன்னிற் பற்றிய மனோவிருத்தித்
திரநிலை பெறச் சந்தேகம் தெளிதலை மொழிகின் றேனே!

அ-வ, உரை = இந்நூற் பாயிரம் முதற்கவியின்படி, மாணவ நீ எடுத்துவந்த, நாலுவகையோனிகளின் மூலமாக ஏழுவகைத் தோற்றங்களில் எண்பத்துநான்குலக்ஷம் சீவர்களாகப் பிறந்தபோதும் நீசச்சிதானந்த சொரூபமே அன்றி வேறில்லை, ஆயினும் அவைகளை அறியும் பக்குவமும் ஈசுவர கிருபையும் குருகிருபையும் கூடியுள்ள இப்பிறவியில்தான், நீ உன்னையாரென்று தெரிந்து கொள்ளும் பாக்கியம் பெற்று வந்துள்ளாய். நீ எடுத்த அனைத்துப் பிறவிகளிலும் நித்யாநித்யவஸ்துக்களிலும் அறியாமை சூழ்ந்திருந்த காலத்து நித்யாநித்ய வஸ்துவிவேகம் அடைந்துள்ள இக்காலத்தும் யாதொருமாறுபாடுமின்றி சாக்ஷிமாத்திரமாய், உனது ஆத்மஸ்வரூபம் தொடர்ந்தேவந்தும் இப்பிறவியில் இப்போதே உன்னை உனக்கு உள்ளபடி காட்டும் காலமும் கருணையும் உண்டாகியுள்ளது எனவுள்ளுணர்ந்து வீடுபேற்றின் விருப்பமும் அதில் வைராக்யமும் கொள்வாயாக? என்பதாம், முகூர்த்தக்கால் மற்றும் கம்பம் நடுதற்கு உலகியலார்கள் குழிதோண்டி, அதில் கம்பத்தை நட்டு நிறுத்திப் பலகற்களை குழியினுள் கம்பத்தைச் சுற்றிப் போட்டு கம்பியால் குத்திக்குத்தி நட்டகம்பம் சாயாதவாறு உறைத்திடச் செய்யும் முறைமையேபோல, சாதனசம்பன்னரான முமுட்சுவின் ஆத்மாவிற் பற்றிய, பிரம்ம சொரூப சித்த விருத்தியை நிலைபெற்று இருந்து பயனளித்திடுமாறு, பல்வேறு உவமானங்களுடன் கூடிய இச்சந்தேகம் தெளிதற் படலத்தைக் கூறுகின்றேன். ஆத்மசாதகர்கள் மட்டுமின்றி அனைத்துத் துறை அலுவல்களில் உள்ள எவர்க்கும் சந்தேகம் வரலாகாது. அது வந்தால் கொள்கை கடமைகளை புறக்கணிக்கச் செய்தும் பொருள் புகழ் இழப்புடன், அவமானம் துக்கங்களையுமே தரும் என்பதால் 101 கவியிற் சொல்லிய தத்துவ விளக்கப் படலத்திற்கு, இவ்வுண்மை பக்குவர்களின் ஊடகத்துள் நின்று நிலைபெற முமுட்சுக்களும் பக்குவர்களும் பனுவலை நிச்சயம் கற்றுணர்ந்து பயன்பெறுவார்களாகவும் இதனை தூணாகனன நியாயம் என, உபநிஷத்துக்கள் கூறியுள்ளன? தூண் - கம்பம், கநநம் - புதைத்துத் திரப்படுத்துதல், நியாயம் - உபமானம் (போல) எனவுமாம் (எ-று).

இன்னும் அநாத்ம தத்துவ விசயார்த்த விருத்திகளை நீக்கி தானாகிய பிரம்மத்தில் இணைந்த மனம், அப்பிரமம் விரிவாகிப் பரிபூரணமாய் (எங்கும் இடையின்றி நிறைந்து) சஞ்சரிக்குமிடத்தில் சர்வம் பிரம்மமயம் எனும் சாக்ஷாத்கார அநுபவம் தடையின்றி விளங்கும், அதுவே காரியப்படுவதாயும் காரியப்படாததுமான நிலையாம் ஆதலின் அதற்குத் தடையானவைகளைக் களைய வேண்டும் அதனால்தான், சொரூபந்தன்னில் பற்றிய மனோவிருத்தி ஸ்திரநிலை பெறச் சந்தேகம் தெளிதலைக் கூறுகின்றேன்! (எ-று).

அ-கை-குருகுலவாசம் பயிலும் தன்மையைக் கூறுதல் எ-று.

2. நற்கருத் துடையோ னாகி ஞானவா னாகி நின்றோன்
மர்க்கட நியாயம் போல மகாபூத விகாரந் தொட்டு
நிர்க்குண விதேக முத்தி நிலைபரி யந்தஞ் சொன்ன
சற்குரு வினைவிடாமற் சந்ததம் அனுசரித் தான்...

அ-வ, உரை = அகலாத ஆனந்த சிந்தனையில் நிலைத்திருப்பவனாயும், பிரம்ம சைதன்ய சொருபனாயும் உணர்ந்திருந்த சீடன், தாய்க்குரங்கு தாவுமிடமெல்லாம் தாயின் குறிப்புணர்ந்து அதன் அடிவயிற்கை கெட்டியாகப் பற்றிக்கொண்டு செல்லும் அதன் குட்டிக்குரங்கின் செயலைப்போல, பஞ்சீகரண பஞ்சபூத காரியங்களான தூலதேகம் முதல் மூன்று குணங்களின் இயல்புகளைக் கடந்த, விதேக கைவல்யம் வரை, முறைப்படுத்தி உபதேசித்த ஞானாச்சாரியரை விட்டுப் பிரியாமல் சதாசர்வ காலமும் தொடர்ந்து நின்றான். இது மர்க்கட நியாயம் என சீடனின் (குருவுடன்) அணுகுமுறை குரங்கின் குட்டி பற்றியது போலிருக்கவேண்டும் என்பதாம். பக்குவர்களில் சிறந்த (மந்தர், மந்ததரர், தீவிரர், தீவிரதரர்) வர்கள் இருக்குமிடம் தேடிச் சென்றுபதேசித்து ஆட்படுத்துமுறைமையை மார்ச்சால நியாயம் என உபநிஷத்துக்கள் கூறியுள்ளன. மார்ச்சாலம் - பூனையும் அதன் குட்டிகளின் இயல்பே போலவாம்!

அ-கை- சீடனின் மனதுள் அநுபவம் எவ்வாறுள்ளது? என ஞானாச்சாரியர், சீடனை கேட்கிறார். (எ-று).

3. **சந்ததம் புருடன் தன்னைச் சாயைபோல் விடாமல் அன்பாம்**
மைந்தனை நோக்கிச் சாக்ஷி மாத்திர மாய்நின் றாயோ
சிந்தையி லையமெல் லாந் தீர்ந் தனவோ தெளிவி னுள்ளே
அந்தரங்கலந்த துண்டோ அநுபவ முரைசெய் வாயே...

அ-வ, உரை = குரங்குகுட்டிபோலும், ஊசிசென்ற இடமெலாம் சரடும் (நூலும்) பின்செல்வதுபோல, குருவின் திருமேனி தரிசன பாவனையும் நீங்காமல், அவரது உபதேசநெறியும் வழுவாமல், எதனாலும் ஒருபுருடனை நீங்காது தொடரும் நிழலைப் போலவும் தனது ஞானாச்சாரியரைப் பிரியாமல், அன்பே இயல்பாய் நிற்கின்ற சீடனைக் கருணையால் கண்மலர் சாத்தி, அங்கிங்கு அதுஇது எனும் துவித (பாவனை) ஞானமின்றி உனது ஆத்ம சொருபமாக இருக்கின்றனையோ? உன்மனத்துள் எழுந்த அஞ்ஞான ஆவரண மயக்கம் விபரீத சந்தேகங்கள் ஒழிந்தனவோ? உனது தெளிவினிடத்து இன்னும் சீவேஸ்வர செகத்து நாமரூபதேசங்கள் வந்தணைகின்றதோ, உனது இப்போதை அநுபவத்தைக் கூறுவாயாக? என்றருளினார் (எ-று).

அ-கை- முற்கவியில் எழுப்பிய கேள்விகள் மூன்றுக்கும் விடை கோருகூறுகின்றனன்.

4. **எனவுரைத் தருளுமா சான் இருபதம் வணங்கி எந்தாய்**
சனனவன் காட்டின் மோகத் தமத்தெழும் பேதப் பேய்கள்
உனதரு ளுதயவெற்பி லுபதேச அருக்கன் தோன்றி
மனவிழி தெரிய ஞான வான்கதிர் பரந்தா லுண்டே?...

அ-வ, உரை = சீடன் தனது அநுபவம் எவ்வாறுளது என்ற குருவைப் பணிந்து வணங்கி, எனது ஞானபிதாவே, வலிமையுடைய சனனங்களை தொடர்ந்து எனக்குத் தந்து கொண்டிருந்த அஞ்ஞான இருள்சூழ்ந்த அடர்ந்தவனம், பேதங்கள் நிறைந்த பிசாசுகள், அனைத்தும் தேவரீர் கருணைக் கிரியில் (மலையில்) உதித்த, பிரம்மோப தேசமென்னும் (ஞானசூரியன் உதித்த அளவிலேயே, புறஇருள் ஆவரணம் அஞ்ஞானம் பிறவிசூழ்இருள் அனைத்தும்) என்னுள் அறிவுக்கண் விழிக்கவும். மேலான சித்பிரகாசம் படரவும், அவைகள் ஏதும் நிலைபெற்று இருக்குமோ? இருக்காதன்றோ?

குருமூர்த்தியே என்றான், சாக்ஷிமாத்திரமாய் திகழ்கின்றேன். தங்களது உபதேச ஞானபானு என்னுள் உதித்தது, இந்தஞானச்சுடரொளியால் அஞ்ஞான இருள் மறைந்தது, அஞ்ஞானம் சந்தேகம் விபரீதம் முற்றும் ஒழிந்தது. எனது ஞானக்கண் விழித்துள்ளது. அதனால் அவாந்தரமாகிய பேதங்களுமுபாதிகளும் தோன்றவில்லை. ஞானசூரியன் உதிக்கவும். அவ்விருட்கூட்டம் நின்று நிலை பெறுமோ? ஐயனே எல்லாம் தங்களின் கருணை!.

அ-கை-உரை: சாமதியில் தடை இல்லை ஆயினும் சகசத்தில் அவைகளின்றி நிற்பதற்கு ஆலோசனை பெற வேண்டும் என சீடன் விண்ணப்பிக்கின்றான் (எ.று)

5 மந்திர மூர்த்திதன்னால் மாற்றிய பேய்போ னுலும்
எந்திர மெழுதிக்கட்டி இனிவரா வகைசெய் வார்போல்
முந்தியுன் னுபதே சத்தால் மோகம் போனுலு மையா
புந்திநின் றுரைக்க இன்னும் புகலும் விண்ணப்ப முண்டே

அ-வ, உரை = என்னை எனக்குகாட்டி ஈடேற்றவந்த ஞானாச்சாரியரே, மாந்திரீகரால் விக்கினம் செய்து வந்த அவிசாரதோக்ஷ பேய்களை ஒட்டி அப்புறப் படுத்தினாலும், அவைகள் மீண்டும் அங்ஙனே அவ்விதம் வராமலிருக்க, எந்திரம் எழுதித் ஸ்தாபனம் செய்து கட்டி வைக்கும் உலகாயதர்களின் உபாயம் போல முன்னமே தாங்கள் அநுக்ரகித்ததனால், மயக்கம் விபரீதம் அஞ்ஞானம் சந்தேகம் முதலிய பீடைகள் மாறியதே ஆனாலும், அடியேன் பெற்றுள்ள, அறிவார்ந்த அநுபவம் நிலை பெறும்படிக்கு சில முன்னெச்சரிக்கைக்காகவும் தங்களிடம் சில கேள்விகளை முன்வைக்க இசைகின்றேன் ஐயனே? அதாவது தூலவுடலும் விழிப்பு நிலையும் பொருந்திய சகசயீநிலையில் தடையால் வரும் சந்தேக பரிணாமங்களை நீக்கி விழைப வனாய் கேட்டனன் (எ-ம்).

அ-கை-சீடன் தனக்கு அநுபவமாகிய பிரம்ம தரிசனம்! மனதினுலும் வாக்கினுலும் (அகோசரமா கோசரமா) எட்டுமா? வசப்படுமா வசப்படாதா) என அறியும் நிமித்தமும்? இவ்வாறு கூறிய சாத்திரங்களின் கருத்தை இரண்டு வகை ஐயமாகக் கேட்கிறான் (எ.று).

6 ஆகமப் பிரமா ணத்தால் அறியென்றும் வாக்குக் கெட்டாது
ஏகமாம் பிரமமென்றும் இதயத்தா லுணர்வா யென்றும்
சோகமாம் மனத்திற் கெட்டாச் சுயஞ்சோதி என்றுஞ் சொன்னீர்
மோகமாம் இரண்டு சங்கை முளைத்தன பறித்தி டீரே.

அ-வ, உரை = வேதங்களின் முடிவான அத்வைதப் பிரமத்தை மகாவாக்கியப் பிரமாணங் (எடுத்துக்காட்டு) களின் துணை கொண்டு அறிவாயாக என்றும், இது இவ்வேதமகா வாக்கியத்துக்கு எட்டாதது என்றும் இச்சுயம்பிரகாச சொரூபத்தை மனதினாலறிவாய் என்றும், உபாதிபேதஞ் சூழ்ந்துள்ள துன்பமான மனதுக்கு அறிவதற்கு அரியது என்றும் அருளினீர்கள் இதில் இரண்டு சந்தேகங்கள் எனது நெஞ்சத் தடத்தில் மலர்ந்த அவைகளை உமது உபதேசத்தால் களைந்திடுவீர்களாக என்றனன்.

அ-கை-முதற்சந்தேகம் பிரமம் சுருதிகட்கு அகோ (எட்டாது) சரமாகும்! என்றதற்கு விடை கூறுதல். (எ.று)

7 மற்றைமுப் பிரமாணத்தால் வஸ்து நிரணயங் கூடாதே
உற்றதோர் விடயபூதம் உபய மன்று ஆத லாலே
குற்றமாங் குணவிசேடங் கூடாம லிருக்கை யாலே
இற்றது வாக்குக் கெட்டாது என்பது மறிவாய் நீயே.

அ-வ, உரை = மகனே? உனது சந்தேகம் இரண்டில் முதல் சந்தேகத்திற்குரிய பதிலைக் கூறுகின்றேன் கேட்பாயாக? மெய்வாய் கண் மூக்குச் செவி என்கிற ஞானேந்திரியங்களுக்கு விசயமாகின்ற சப்தம் ஸ்பரிசம் ரூபம் ரசம் கந்தம் என்ற ஐந்தும் பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் என்ற பூதங்களைந்தும் உவமானம் உவமேயம் (ஆகிய இரண்டும் (அசலும் நகலும்) அன்றாகும் ஆதலால் பிரத்யக்ஷம் (நேத்திரங்களால் காணப்படுவது) அநுமானம் (புகையிருக்குமிடத்தில் நெருப்பிருக்கும் எனக்குறிப்பால் அறிவது) உபமானம் (குதிரையைப் போன்றுள்ளது கழுதை) என்ற இம்மூன்று பிரம்மாணங்களாலும் பிரம்ம சொரூபத்தை நிச்சயஞ்செய்திட முடியாததாகும். அறிவரிய பரப்பிரம்மம், இவ்வகைக் குற்றவிசயமான தோஷங்கள் பொருந்தாமல் இருப்பதாலே சப்தரூபமாகிய வேதத்துக்கு எட்டாது என்று நீ அறிந்து கொள்வாயாக? பிரம்மம்,

ஆகமம் உபமானம் அநுமானம் பிரத்யக்ஷம் முதலிய எடுத்துக்காட்டு களின் மூலம் அகோசரம் வசப்படாது - எட்டாது - என அறிவித்தோம் எனவுமறிக (எ.று)

அ-கை-உனது சந்தேகத்தின் இரண்டாவது கேள்வியில் பிரம்மம் சுருதிகட்கு கோசரமாகும் வசமாகும் என்றதற்கு பதில் கூறுதல்.

8 வாக்கியந் தனக்கு எட்டாத வஸ்துவென் றுரைத்த வேதம்
வாக்கிய விருத்தியாலவ் வஸ்துவைக் காட்டிற் றன்றோ
வாக்கியங் களிலே மானம் ஆவதே தென்றாயாகில்
வாக்கிய மிரண்டும் மெய்யே மறைகள் பொய்யா நீகேளாய்.

அ-வ, உரை =வாக்குக்கு எட்டாதது அப்பிரம்மம் என்றவேதமானது, மகாவாக்கிய விசாரணையால் தன்னையுள்ளவாறு காட்டியது, இவ்விரண்டு வாக்கியங்களில்(எட்டும் எட்டாது) பிரமாணமாவது யாதென்பாயாகில், இவ்விரண்டு வாக்கியங்களும் அநுபவத்தில் உண்மையே ஆகும். வேதங்களும் அதன் மகாவாக்கியங்களும் பொய்யாக வசனிக்கமாட்டாது என உறுதியுடன் நம்புவாயாக (எ.று)

அ-கை-பிரம்மம் சுருதி வாக்கியங்கட்கு எட்டவுமாட்டாது, எட்டவுஞ் செய்யும் என்று உவமைதந்திரம் ஒன்று கூறுவோம் (எ.று)

9 தன்பதியல்லாப் பேர்கள் தமையல்ல அல்ல வென்றாள்
அன்பனைக் கேட்ட நேரம் அவள் வெட்கிமௌன மானாள்
என்பது போலநீக்கி யீதன்று யீதன் றெனச்சே டித்த
பின்பரப் பிரம்மந் தன்னைப் பேசாமற் காட்டும் வேதம்!

அ-வ, உரை = திருவிழாக் கூட்டத்தில் கணவனைப் பிரிந்த பெண் அழுது புலம்புவதைக் கண்ட விழாவின் சேவைக்குழுவினர்கள் அப்பெண்ணுக்கு ஆறுதல் கூறி உங்களின் கணவனை உங்களிடம் ஒப்படைப்போம் எனக்கூறி அழைத்து சென்று பலபேர்களை வரிசையாக நிறுத்தி ஒவ்வொருவரையும் அப்பெண்ணுக்கு காட்டி இவர் உன் கணவனா? இவர் உன் கணவனா? என்று கேட்கவும், இவர் என் கணவன் இல்லை, இவரில்லை இவரில்லை எனக் கூறியபின் அந்த வரிசையில் தன் கணவனைக்காட்டிய போது, அவள் நாணமடைந்து தலை குணிந்து மௌனமாகி (இவர்தான் என்கணவர் என்று சொல்லாமல் மௌவுனமே சம்மதங்காட்டினாள்

இது போல், சீவன் அனந்தகன்மங்களால் தன்னை (ஆத்மாவை) மறந்திருந்தான் ஆயினும் சத்திநிபாத பக்குவம் அமைந்து சாதனங்கள் பழகி குருவை அடைந்து சிரவணாதி அவாந்தர சாதனம் பயின்று தத்துவ விசாரணை செய்த போது, சீவன் தனது நாயகமான பிரம்மத்தை விசாரிக்கும்போது, அநாத்ம தத்துவங்கள் முப்பத்திஐந்தையும் கண்டு ஒவ்வொன்றையும் இது நானல்ல இதுநானல்ல என நீங்கி சாக்ஷிமாத்திரமாய் எஞ்சி நின்ற ஆன்மா எல்லாந்தானாகத் துலங்கும். அதுவே நான் எனத்தேர்ந்து தெளிந்தபோது, அது இது நீ நான் எனது உனது என்ற பேதங்கள் தொலைந்து, அத்வைதஞானானந்த சொரூபமே, தானாய் அமைந்து அமைதி(மௌனம்) ஆனது சுருதிகள் சாஸ்திரமே எனும் சப்தப்பிரமானத்தால் அறிவிக்காமல் அர்த்தாபத்தி பிரமாணத்தால் அறிவித்தது என்று உணர்ந்து கொள்வாயாக? (எ.று)

அ-கை-இரண்டாவது சந்தேகத்தில் பிரம்மவஸ்து மனதிற்கு எட்டும் எட்டாது என்றதற்கு உத்தரம் (பதில்) கூறுகின்றார் (எ.று)

10 முந்திய சங்கை தீர மொழிந்ததை அறிந்து கொள்வாய்
பிந்திய சங்கைதீரப் பேசும் உத்தரம் நீகேளாய்
இந்ரியங் களுக்கு ராஜன் இதயமா மதில்எண் ணங்கள்
புந்தியு மனமு மென்றே புறத்தகத் துலாவியாடும்.

அ-வ, உரை = முன் 6வது கவியில் நீகேட்ட கேள்விகளில் முதற்கேள்விக்கு, 7-ம் கவிமூலம் விடைகூறினது அறிந்துகொண்டாயன்றோ? இனி இரண்டாவது கேள்விக்கு பதில் கூறுவோம் அதற்கு முன் மனதின் சொரூப இலக்ஷண இயல்புகளை கூறுகின்றோம் கவனமாய்க் கேட்டுப் பயன்பெறுக? வாக்கிற்கு ஆத்மா எட்டும், எட்டாது என்று இருதன்மையாக (உகபத்கிரமசிருஷ்டி) கூறியது போலவே, உடல் இந்திரியங்களுக்கு எல்லாம் அரசன் பிராணவாயு, உடல் பிராணன் கர்மேந்திரிய ஞானந்திரியங்களுக்கு எல்லாம் ராஜா சீவன், சீவனுக்கு போக்கியங் (அநுபவிப்பு)கள், பஞ்சகோசங்கள் பஞ்சபூதங்கள் ஆகிய நாமரூப காரியாதிவஸ்த்துக்கள், இதில் சித்சடங்களை அறிவதுவே விசாரணையோடு உடனாகிய ஞானமாகும். சரி, சீதோஷ்ண சம்பவங்களை உடம்பு அறிகிறதே? அறியாது ஏனெனில் உடல் சடம் விழிப்பு நிலையில் உடலோடுங் கூடிய காலத்தில் ஆன்மாவின்

துணையினால் தான் உடல் அறிகிறது போலத்தோற்றும் அதுண்மையல்ல, சடமாகிய உடல், பல நேரகாரியங்களில் சவமாகவே கிடக்கின்றது. அதனால் எப்போதும் சடமே, ஆயின் இந்திரியங்களை அறிபொருள் என்னலாமோ? எனின் அதுவும் அறிபொருள் அல்ல? சீவன் சாக்கிராவஸ்தையில் மனதோடும் கருவிகரணங்களோடும் கூடியபோதே அறிபொருளாகத் தோன்றுகிறது. அதனால் இந்தக்கருவிக்கரணங்களும் சடப்பொருளே ஆகும். ஆனால்? மனம்புத்தி முதலிய அந்தக்கரணங்களை அறிபொருள் என்று கூறலாமோ? எனில், அந்தக்கரணங்களையும் அறிவுப்பொருள் என்று கூறலாகாது எனினும் சீவன் சம்பந்தகாலத்தில் மட்டும், அந்தக்கரணங்கள் அறிவதுபோலத் தோற்றுகிறது. சுழுத்தியவஸ்தை (நல்ல உறக்க நிலையில் அந்தக் கரணங்கள் நாசமாகிவிடுகின்றன அதனால், அந்தக்கரணங்களும் சடமேயாகும். அதுசரி சீவனை அறிவுப்பொருள் எனக் கூறலாமே! எனின் கூறலாம், கிளிஞ்சலில் வெள்ளிதோற்றுவது போல ஆத்மா அஞ்ஞானத்தில்பட்டு, சித்துப்போல் இலக்ஷணமின்றி அந்தக்கரணங்களில் பிரவேசித்து, சிதாபாசனுமாகி (அந்தக்கரணதோஷங்களை யுடையவன்)ய சீவனே ராஜன் எனப்படுவான்? சரீரமே (தூல உடல்) தேர்கருவிகளோடுங்கூடியது, ஞானேந்திரியங்களே குதிரை களாகும். பிராணாதிவாயுக்களே, குதிரைகளை நடத்துபவன் அந்தக்கரணங்களே மந்திரிப்பிரதாணிகள், சீவனே பயணிக்கும் அரசனாவன் இவ்வரசனே ஆன்மாவே பேரரசனாகிய பரமாத்மா! பரப்பிரம்மம் சீவன் என்றும் சிவனென்றும் வேறு வேறில்லை, சீவனார் சிவனாயிட்டிருப்பாரே! என்பது திருமந்திரம் காண்க? ஆகவே இச்சிதாபாசனே புத்திமனம் முதலிய கரணங்களோடு கூடி, அகமும் புறமும் இசைந்து சஞ்சரிக்கின்றான்! ஆதலால் சீவனை அறிவுப்பொருள் என்பது கூடும் என அறிவாயாக? என்றருளினார் (எ.று)

அ-கை-முற்கவியில் மனதின் உற்பத்தியினைக்கூறி இனி சீவனது உற்பத்தியின் இயலும் எது ஞானம் எனவும் கூறுகின்றர்! (எ.று)

11 **உன்முகம் போற்கண் ணுடிக்குள் ளொருமுகம் கண்டாற் போல
சின்மய வடிவின் சாயை சித்துப் போற்புத்தி தோன்றும்
நின்மனோ விருத்தி யந்த நிழல் வழியாய் உலாவும்
தன்மநன் மகனே இத்தைத் தானன்றோ ஞானம் என்பார்!**

அ-வ, உரை = தருமகுணமே வடிவாய்த்திகழும் நன்மகனே? நிலைக்கண்ணுடிக்குள் உன்முகத்தை நீ பார்க்கும் போது அக்கண்ணுடிக்குள் உன்முகம் பிரதிபலனமாய்க்கண்டது போல இங்கு உன்முகமே சைதன்யம்-பிம்பம், கண்ணாடிக்குள் இங்ஙனமே, சைதன்ய மூலத்தின் நிழலே, அறிவைப்போலப்புத்தியில் பிரதிபலனமாகும், மூலமான சைதன்யப்பேரறிவும் புத்திவிருத்தியாகி அச்சாயையின் வழியாகவே சஞ்சரிக்கும், இம்மனோவிருத்தியையே மனோமயமான அறிவென்று சான்றோர்கள் கூறியுள்ளனர்! இன்னும் சீவன் அந்தக்கரணங்களோடு கூடியபோது சித்தாபாசன் எனப்படுவான்,

புத்தியில் சிந்சொரூபம் தங்கியபோதே விஞ்ஞானவிருத்தி என்பர், அவ்விருத்தி சிதாபாசனுக்கு மட்டும் திகழும் இது உடல் உயிர் உடமை, உரிமைகள் உலகம் எல்லாம் சுழுத்தியில் நல்லுறக்கத்தில் அழிந்ததன்றோ? எதிரே தோன்றியிருந்தது அழிவதற்கு ஏதுவாகியவிருத்தியின் ஸ்புரணமே(இலக்ஷணதுரிய வெளிப்பாடே ஞானம் என்று சான்றோர்கள் கூறியுள்ளனர் என்றறிவாயாக? (எ.று)

இதுதுமது பற்றியது குளகம்

12 **உருக்கிதராநீர் நாநா உருவங்க ளானாற் போல
விருத்தியின் கடபாதிகள் விடயமாய்ப் பரிண மிக்கும்
மருப்பல விடயமெல்லாம் ஆபாசன் தோற்றுவிக்கும்
இருட்டினில் விளக்குங் கண்ணும் இல்லாமற் பொருள்காணாதே**

அ-வ, உரை = கொல்லன் உலைநெருப்பில் வைத்துருக்கிய உருக்குக் குழம்பானது அடைகல் (கூடம்)லில் வைத்து கனத்த சுத்தியால் அடிக்கும்போதும், ஆயுதங்களாக்கிய போதும் பல்வேறு விதமான வடிவங்களாவதுபோல, அந்தக்கரண விருத்திகளே, இது கடம் படம், இது மடம் என்ற (கடம்-குடம்+படம்-வஸ்திரம்+மடம்-வீடு) நாமரூபப் பரிமாணங்களாகத் தோன்றும், இப்படி

வேறுபாடுகளை அடைந்த காரியவுபாதி விசயங்களனைத்தும் அரும்பலம் என்கின்ற சிதாபாசன்(ஆபாசசகிதன்) தோற்று விக்கும் இருட்டறை யுள்ளிருக்கும் பொருளை கண்பார்வை உள்ளவனும் உள்ளபடி காணமுடியாது ஏன் விளக்கின் ஒளியும் வேண்டும் இன்றேல் காணமாட்டாது அல்லவா? என்றருளினார்! (எ.று)

(இதுவுமது பற்றியது குளகம்)

13 எரிகின்ற விளக்கால் கண்ணால் இருட்டுப் பொருள் காணவேண்டும்
தெரிகின்ற பரிதிகாணச் சென்றிடிற் கண்ணே போதும்
விரிகின்ற செகத்தைக் காண விருத்தியும் பலமும் வேண்டும்
புரிகின்ற விருத்தி ஒன்றே போதுமெய்ப்பொருள் காண்போர்க்கே

அ-வ, உரை = கண்பார்வை சரியாக இருந்தால் மட்டும் இருட்டறையில் உள்ள பொருளை எடுத்துவிட முடியாது? தீபஒளியும் கூடவே இருக்க வேண்டும். இதுநிற்க சூரியனைக் காண்போருக்குத் தீபஒளி வேண்டுவதில்லை கண்பார்வை மட்டுமே போதும், அதுபோல பரந்து திரிகின்ற உலகத்தையும் அதன்விசயங்களையும் பார்க்கவும் அநுபவிக்கவும் அந்தக்கரண விருத்தியும் பலாபலன்களை இச்சிக்க விரும்பும் சித்-ஆபாசனும் வேண்டும். ஆன்மாவுக்குப் புறம்பில் உள்ளவைகளை நீக்கி அகத்துள் திகழும் பிரம்ம (சிவம்) சோதியை தரிசிக்க விரும்பினோர்க்கு முற்கூறப்பட்ட விருத்தியின் ஞானம் ஒன்று மட்டுமே போதுமன்றோ? விசயாதி அஞ்ஞானங்களைப் போக்குவதற்கு விருத்தி ஞானமும், இதையறிவதற்குப் பலரூபமான சிதாபாசனும் வேண்டும், உலகவிசயகாரியங்களை அறிய, விருத்தியும் பலமும் (சிதாபாசன்) வேண்டும். ஆத்மாவை தரிசிக்க விருத்தி ஞானமும் சிதாபாசனும் சேர்ந்துலவியது சுழுத்தி அவஸ்தையில் இவ்விரண்டுமில்லை ஆனால், அங்கே நமது ஆன்ம சோதியே விஞ்ஞானாதீமாய் கண்டு அநுபவித்தது உண்டு அல்லவா? (எ.று)

அ-கை-மனத்தினது உருவங் கூறுகின்றார் (எ.று)

14 விருத்தியும் பலமும் கூடும் விகாரமே மனமென்பார்கள்
கருத்தெழும் விருத்தி வேண்டும் கணக்கினால் மனத்திற்கெட்டும்
வருத்திய பலமா மிந்த மனதினுக் கெட்டாது கண்டாய்
அருத்தமிப் படியென் றையமகன்று நீதெளிந்திடாயே?

அ-வ, உரை = சிதாபாசமும் விருத்தியும் ஒன்றுபடுவது மனமென்று உபநிஷக்களும் கூறியுள்ளன நிச்சயவஸ்து என்றறிய, விசாரஞானமானது சித்தை அறியத்தலைப்பட (முயன்றிட) வேண்டும். இவ்விதவிருத்திஞானத்திற்கே (மனத்திற்கே) சித்து எட்டும், வருத்தத்தை தருகின்ற விசயங்களை அடையும் பலரூபமான மனதிற்கு இச்சித்து எட்டாது, மனம் சடவடிவமாகும், இம்மனத்தை சித்துடன் சம்பந்தப்படுத்துவது விருத்தியாகும். இதேமனம் சடத்துடன் சம்பந்தப்படுகின்ற ஞானமே பலமாகும். ஆதலால் சடாம்சம் பொருந்திய மனம் பிரம்மத்தை அறியாது. சித்விருத்தி கூடிய மனதிற்கே பிரம்மம் (உன்னை-உண்மையை) அறியப்படுவதாகும்! இன்னும் அகமுக மனோவிருத்திக்கே பிரமம் அறியலாகும். பகிர் (வெளி) முகமாகும் மனோவிருத்தி பிரமத்தை அறியமாட்டாவாகும் என்றும் உனது அந்த இரண்டு கேள்விகட்கும் பொருளிதுவாகும் என உள்நினைத்து சந்தேகம் நீங்கி நீதெளியக்கடவாய்? (என்றருளினார்) (எ.று)

அ-கை-முற்கவிகளின் படியான, கேள்வி பதில்களால், வாக்குக்கு எட்டும் - எட்டாது மனதுக்கு எட்டும் - எட்டாது, கோசராகோகரம் இன்றிச் சுத்தப் பிரம்மதரிசன சுவானுபூதியே தானாயறிந்து அதில் உதிக்கும் மனதை, அதிலேயே அங்ஙனே அதில் கரைந்திடு மாறாகும், மீண்டும் ஒரு சந்தேகத்தை கேட்டனன் சீடனானவன் (எ.று)

15 **வஞ்சகமில் பரமார்த்தகுருவே சொன்ன வழிகளறிந்தேன்**
இனியோர் வசனங் கேளீர்.
சஞ்சலமற்ற கண்டபரி பூரணமாய்ச் சிந்தந் ததாகார
மாவதன்றோ சமாதியோகம்
ஊஞ்சலைஒத் தலைவதுவே தன்சுபாவ மாகி ஒருகணத்திற்
பலவுலகாய் உதிக்கு மிந்த
நெஞ்சகம் வஸ்த் துவிலசையாத நிவாத தீபநிலை
அடைவது எப்படியோ நீர் சொல்லுவீரே.

அ-வ, உரை = எனது பூர்வ புண்ணியமெல் லாந் திரண்டு ஓர் திருமேனிதாங்கி எழுந்தருளிய குருவே தங்களைப் பணிந்து சரணடைந்த என்னை வஞ்சிக்கும் கருத்தின்றி இடித்து உரைத்து

விளக்கி ஈடேற்றுகின்ற தேவரீரே! தாங்கள் உபதேசித்த நெறிகளை உணர்ந்துகொண்டேன், இன்னுமொரு விளக்கம் கேட்க விழைகின்றேன். மனமானது அகண்டபரிபூரண சொரூபத்தில் கரைந்ததன் மயமாவதன்றோ? ஞானநிஷ்டைக்கு இலக்ஷணம் அவ்வாறின்றி காற்றினால் அசைக்கப்படும் கடலலை போலவும், ஊஞ்சலின் நிலை போலும் காற்றின் முகம்வைத்ததீபம் போலவும், அலைக்கழிக்கப்பட்டு நொடிப்பொழுதில் நாநாவிதஉலகைப் பலமுறைவலம் வருகின்ற இந்தமனம் பிரம்ம சொருபத்தில் அசைவின்றி காற்றில்லா இடத்தில் ஏற்றியுள்ள நிவாத தீபம் (சலனமின்றியது) போல, அதில் நிலைபெறுவது எக்காலம் எவ்வண்ணம் ஐயனே? (எ-று)

அ-கை-மனதினிடத்தில் வேறுபாடு இன்றிய மூன்று குணங்களும் அவைமாறுபடுமியல்பும் அதனால் உண்டாகும் பயனும் கூறுகின்றார். (எ.று).

16 கருதும்மனோ குணமூன்று மூன்றிலொன்று கதித்தெழுந்தால்
மற்றையிரண் டுங்கரந்து நிற்கும்
தருமமிகு சத்துவகுண மேலானபோதில் சன்மார்க்கமான
தெய்வசம் பத்துண்டாகும்
மருவுமி ராசதகுண மாகில் உலகதேக வாதனையாஞ்
சாத்திர வாசனையு மாகும்
அருண்மகனே தமோகுண மேலானபோதில் அசுரசம்பத்து
உண்டாகும் அறிந்து கொள்ளே.

அ-வ, உரை = சத்து அசத்து சதசத்து சாவயவம் நிரவயவம் சாவயவநிரவயவம் பின்னம் அபின்னம் பின்னாபின்னம் என்ற ஒன்பது விதமாகவும் நிர்ணயிக்கமுடியாத தன்மையில் இலட்க்ஷண சூனியமாகவும், சத்துவம் ரஜசுதமசு எனும் மூன்று குணங்களும், இதில் கரைந்து, ஒன்றோடு ஒன்று கலந்து அவ்வியக்தமாய் மறைந்திருக்கும் இதுசீவர்களிடம், அம்மூன்று குணங்களும் வேறுவேறாய் பிரிந்தும், அவரவர் வினைகட்கு ஏற்ப, ஒவ்வொரு குணமும் கூடுதலும் குறைவுமாகக் காணப்படும். இதில் எவர் ஒருவருக்கு, சத்துவ குணம், மேலோங்கி செயல்படும்போது மற்றய இரண்டு குணங்களும் அதற்குள் அடங்கியே இருக்கும்

இக்குணகாரியங்கள் யாவும் அவர்க்கு, தெய்வாம்சமுடைய நல்ல பயன்களையே வழங்கிவரும். இதேபோல் ஒருவர்க்குரசோகுணம் மேலோங்கி செயல்படும் போது முன்போலவே மற்றய இரண்டு குணங்களும் அதற்கு அடங்கியே இருக்கும். அப்போதவர்களுக்கும் தேகத்தைபேணுவதிலும் சாஸ்திர ஆராய்ச்சிகளிலும் உலகவிசய விவாரங்களிலும் ஈடுபடுத்திடும். இது உயர்வும் தாழ்வுமின்றிய நடு நிலை குணம், இங்ஙனமே தமோகுணம் ஒருவர்க்கு மேலோங்கி செயல்படுமாயின் அது அவர்க்கு அசுரத்தனமான பேச்சு செயல்பயன்களையே தரும்? சத்துவகுணம் சார்ந்திருக்கும் சீவர்கட்கு தெய்வகதி பயன்களை அநுபவிக்கச் செய்து தெய்வப்பிறவியைத் தரும். ரஜோகுணம் சார்ந்து நின்ற பேர்கள், பாவமும் புண்ணியமும் கலந்தவாறு கருமம் கூட்டி வைக்கும் இதனால் இவர் சீவன் முத்தி அடையும் வரை மாநுடப்பிறவியே தரும், தமோகுணம் சார்ந்து செயல்படுவோர்கள், பாவகர்மமே பயனாளிகள் ஆதலால் இவர்கள் வாழ்வும், அறியாமை இன்பம் தண்டனைகளிலே சுழன்றும் இதனால் விலங்கினங்களாகவே பிறப்பார்கள். இவர்கள், மகனே? இவைகளில் நீ எதைத் தள்ளியும் எதைக்கொள்ளவும் விரும்புகிறாய் உன் அறிவும் தெளிவும் கொண்டு தேர்ந்து செயல்படுவாயாக? இது பற்றிய விரிவான விளக்கத்தை பகவத்கீதையில் குணத்திரய விபாகயோகத்தில் காணலாம்! என்றருளினார்! (எ.று)

அ-கை-சிந்திக்கின்ற கரணம் பதைபதைப்பின்றி சமாதானமாய் சத்துவகுணத்தில் ஸ்திரமாய் நின்றால் மனம் சித்தாகிய ஆன்மாவினுள் அசைவின்றி லயமாகும்! (எ.று).

17 மனதுசத் துவசொருப மற்றிரண்டும் வந்துகலந்தன
அவற்றை மாற்றினாற் போம்
தனதுசன் மார்க்கத்தை விடாதிருந்த போது தாமதமும்
ராஜதமுஞ் சமிக்கும் பின்னைக்
கணபரிணா மஞ்சலனம் போம் போனாக்காற் களங்கமற்று
நின்றவாகாயம்போல்
நினதுளம் அப்படியாய் பிரம்மத்து ஒன்றாய் நிருவிகற்ப
சமாதியிலே நிற்குந்தானே!

அ-வ, உரை = புண்ணியம் நிறைந்துவந்த புத்திரா? மனம் வாயு பூதஅம்சம், ஒழிவின்றி சலனமே சுபாவமாகும் ஓரவஸ்தையில் இது சடமும் கூட(சுழுத்தியில்) ஆனுலும் இது இயற்கையாகவே சத்துவகுணாம்சமுடையது. முயற்சி உடைய அனைவர்க்கும் இது நன்மையே செய்யும் இத்தகைய மேலான சத்துவகுணத்தினிடம் இடையில் வந்து பொருந்தியவைகள் தான்ரசோ குணமும் தமோகுணமும் முன்பு செய்த கருமப் பயன்களின் அளவாகவே... வந்திடும் என்றும் அறிந்திடுக? ஆனுலுமிது. சத்சங்கம் சாஸ்திர பயிற்சி குருவுபதேசம் இவைகளின் அநுகூலங்களினால், நீக்கிடவேண்டி முயன்றால் அது நீங்கிவிடும், இப்போதும் நாம் பிறக்கும் போதே இயல்பாககூடவே இருந்தது சத்துவகுணம் அதனை இழக்காமல் இருப்பின் ரசோகுணதமோகுணங்கள் வலுவிழந்தும் நமக்குதீமைதராமலும் அடங்கும், இதுவாகவே? காண்பான் காட்சி காணப்படும் பொருள் என்கிற பல்வேறு வகைகளிலான காட்சிகள் கருத்துள் பதியாது? (தெரிந்தவர்க்குத் தோற்றுவது தெக்தபடம் போல்வதல்லால், பரந்தசகம் காரியத்திற்பயன்படாது என்றவரோ, எனும் கீதாச்சாரத்தாலாட்டு) உபாதிகளுக்குஎல்லாம் தானே காரணமாயினும் யாதொருவுபாதியும் தன்னைக் கட்டுப்படுத்துவதில்லை பரிசுத்தமும் குற்றதோஷமேதும் இன்றிய ஆகாயத்தைப்போல் உன்னுள்ளம் (வெள்ளைச்சுவர் போன்றது உன்மனம் சிவப்புக்கருப்புச் சாயங்களினால் பல ஓவியங்ககள் தீட்டலாம் தேவையில்லை என்றால் அழித்துவிடலாம் (ஓவியமும், ரசோகுணம் சிவப்பு தமோகுணம் கருப்பு) ஆதாரமாயிருக்கும் சுவர்போன்றது உன்மனதின் மாண்பு! அத்தகைய மனம், பிரம்ம(ஆத்ம) சொருபத்திற்கரைந்து உப்பு நீரில் கரைந்ததுபோல ஏகம் அத்வைதமாம் அதுவே நிருவிகற்ப சமாதியிலே இயல்பாகவே நிலை பெற்றிருக்கும் என்றுணர்ந்து இன்புறுவாயாக? என்றருளினார் (எ.று) (இதுவுமது பற்றியது குளகம்)

18 களங்கமற்ற கண்ணாடி தன்முன் வேறோர் களங்கமற்ற
கண்ணாடி காட்டும் போது
விளங்கியதன் பயமாகி அபேதமாகி விகற்பமின்றி
நிருவிகற்ப மானாற் போல

அளந்தறியப் படாவிபுவாய்ச் சத்தாய் சித்தாய்
ஆனந்தமாம் பிரம்மத்தைக்ய மான
உளந்தெளிந்த படியிருந்தால் உலகமெங்கே
உலைவெங்கே என்றுசங் கைஒழிந் திடாயே!

அ-வ, உரை = சுத்தமான ஓர்கண்ணாடியின்முன் வேறே ஓர்சுத்தமான கண்ணாடியை அக்கண்ணாடியின்முன் நேர்பட வைத்து அங்கிருந்து இங்கும் இங்கிருந்து அங்கும் ஏதும் இருகண்ணாடி என்பது எதுவும் தோற்றாமல் ஏகமாய் ஒரு தன்மையாக தோன்றுமன்றோ? சர்வம் பிரம்மயமும், சமஸ்டித சொரூபமுமான பிரம்மம் ஒரு கண்ணாடி இதன் பரிபூரணாம்சமான, வியஷ்டி சீவர்களின் ஒவ்வோர் ஆத்மாவும் ஓரோர் கண்ணாடி இதில் எந்தக் கண்ணாடியானாலும் அந்தக்கண்ணாடி முன்காட்டினால் இது அது என்றபேதமின்றிப் பதசொரூபலக்ஷணத்தில் ஒரு தன்மையை காட்டும், இப்போததில் கலந்திடவே ஆன்மா - பரமான்மா எனும் பேதமிராது. அந்த சக்தி காரியமும் ஆர்ப்பரிப்பும் அடங்கிய நிலையாமது சர்வம் (சிவ-பிரம்ம) சித்சித்தானந்தமயமாய்த், திகைப்பற்று திரிசியங்களற்று தெளிந்த நீரினுள் தம்முகம் இலக்ஷணமாய்த் தோற்றுவதுபோல இதயாம்பரத் (இருதயத்) தில் பிரம்மஸ்வருபத் தோற்றத்தில் (சமாதியில்) நிலை பெறுவோமாயின் அங்கு உலகவிரிவு விசயங்களும் மனவிரிவு உலைச்சல்களும் இல்லை என்றாகும்! இதில் ஒவ்வொரு வீட்டிலும் ஏற்றிய விளக்கு எனவும் மலையின் மேல் ஏற்றிய பெருவிளக்கு எனவுமாம் இவை இரண்டினது தொழில்களும் வேறுவேறு இன்றி ஒன்றே ஆகுமன்றோ? காண்பாயாக? என்றருளினார் (எ.று)

அ-கை-சித்ருபஆன்மாவும் மனமும் இயல்பில் ஒன்றாம் என்று தங்கள் உபதேசப்படி உணர்ந்தேன். ஆயினும் மேற்கூறிய சடாம்சமான மனமும் அதன் தொழிலும் எவ்விதமாயிருக்கும் என அறியும் பொருட்டு மனம் சித்தில் (ஆன்மாவின்) இறக்கில் சீவன்முத்தர் எவ்விதமாய்ச் சஞ்சரிப்பார்! மனமிருந்தால் ஞானியல்ல? மனமிறந்தால் பிராரப்தத்தை எவ்வாறு அநுபவிப்பார் எனும் மாணவரது கேள்விக்கு குருவானவர் முறைப்படியாக விளக்கம் அருளுகின்றார் (எ.று) (இதுவுமது பற்றியது - குளகம்)

19 ஏகமாய் மனமிறந்தாற் சீவன்முத்தர் இருக்கு மட்டும்
பிராரப்தம் எதனால் உண்பார்
போகமானது புசித்துத் தொலைப்பதன்றோ புசிப்பன்
என்றால் மனந்தானும் போனதன்றே
சோகமாம் மனமிறந்தாற் போகமில்லை தோன்றுமெனில்
முத்தரென்று சொல்லக் கூடாதே
மோகமாமிது தெளியக் குருவே நன்றாய் மொழிந்தருள்
வேண்டுமென் றான்முழுது மானோன்!

அ-வ, உரை = ஞானாச்சாரிய சுவாமிகளே தங்களின் திருப்பாதங்கட்கு வணக்கம், தாங்கள் எமக்குப தேசித்த வண்ணம் தெளிவடைந்துள்ளேன் ஆயினும் ஓர் ஐயமுண்டு, ஐயனே, பிரம்மஸ்வரூபமே தானாய் விளங்கும் சீவன்முத்தர்கள் மனநாசம் செய்தவர்கள் என்றீர். இவரது தேகவாழ்வு முடியும் பரியந்தம் எவ்வாறு பிராரத்தத்தை அநுபவிப்பார்கள், இப்பிராரப்தம் எவ்வளவுகாலம் அவ்வளவும் அநுபவிக்க வேண்டுமன்றோ? அப்பிராப்த பயன்களை அநுபவித்திடுமெனில் மனம் நாசமாகவில்லையன்றோ, தொடர்வாதனைத் துன்பம் செய்யும் மனம் உண்மையிலேயே இறந்திருந்தால் பிராரப்தப் புசிப்புஅனுபவம் கூடாதே. இவரை சீவன் முத்தர்கள் என்றும் மனம் இறந்துள்ள ஞானிகள் என்றும் எப்படிக் கருதியறிந்து நிச்சயித்துதெளிவது இச்சந்தேக மயக்கத்தை தெளிவுபடுத்தி உரைத்தருளும் சுவாமி என்றான் சீடன் (என்றவாறு).

அ-கை-சீடனின் கேள்விகேட்கும் யூகமும் திறமையும் கண்டு பூரித்துப்போன ஞானதேசிகர் அவனது கேள்விக்குப் பதில் கூறவுத்தேசித்து மனோநாசம் இரண்டு வகைப்படும் என்று விளக்குகின்றார்! (எ.று)

20 மனநாசம் சொரூபமென்று மருபமென்றும் வகுத்துரைப்பார்
இருவகையாய் வருமிவற்றில்
வினவாத சீவன்முத்தர் இடத்தில் ஒன்றும் விதேமுத்தர்
இடத்தில் ஒன்றும் மேவும் கண்டாய்
தனதான சத்துவமாய் மனஞ்சேடித்துத் தாமதமிராசதம்
நசித்தல் சொரூப நாசம்
மனநாசஞ் சத்துவந் தானதுலிங்க தேகம் அடங்கும்போது
அடங்குவ தேயருவ நாசம்

அ-வ, உ_ரை = எமது மனதுக்குவந்த மைந்தா, மனநாசம் என்பது, உருவநாசம் என்றும் அருவநாசமென்றும் வகுத்துக்கூறியவற்றுள், அஞ்ஞான சந்தேக ஆவரணங்களில் மனதுபற்று வைக்காமல், நிர்மல நிர்மோக நிர்ச் சிந்தையராய் தெளிவுபெற்ற சீவன்முத்தர்களிடம் (நாமரூபமான சர்வபதார்த்தங்களும் பஞ்சபூதங்களின் மித்திய - பொய்யாகிய - காரியங்கள் என, பொருட்படுத்தாது இருப்பர்) இதுவே உருவநாசம் ஆகும். இவர்களின் தேகாந்த (சரீர முடிவில்) காலத்தில், அருவரூபமான அந்தக்கரண தர்மங்களான சர்வசங்கல்ப விகற்பமாகியதான அருவ மனோகாரியங்கள் என யாவும் விதேகமுத்திக்காலத்தில் நாசமாகும். தனது இயல்பான சத்துவகுணம் எஞ்சிய போது இராஜ சதாமச குணங்கள் நாசமாயிடும். இப்படி நசிப்பதே உருவ நாசமாகும். அச்சத்துவ குணமும் நடுநிலையான சூக்கும ஒளியுடல் நாசமாகும் போது உடலை இரும்புண்ட நீர்போல அன்றி ஆன்மாவுடன் சாராமல் நாசமாகிடுமிதுவே அருவநாசமாகும் என்றறிந்து கொள்வாயாக? (எ.று)

தொடர்: உருவங்களில் பந்தத்துவம் விடுபட்டதே சீவன்முத்தர்களின் உருவநாசமாகும். அம்மனமாகிய அருவநாசமே விதேக முத்தியுமாகும் என்றறிந்திடுக? (எ.று)
அ-கை-உருவமன்றிய அருவமாய் அறிவுருவமான மனத்தினால் எதையும் அநுபவிக்கலாம் (என்கிறார்)

21 சுத்தமாஞ் சத்துவமே உண்மையாகுந்துகளிருள்போனால்
மனமென் சொல்லும் போம்போம்
வர்த்தமானத் தில்வந்த உணவையுண் பார்வருவதும்
போவதும் நினைத்து மகிழார்வாடார்
கர்த்தரா மகந்தையை விட்டகர்த்த ராகிக்கரணவிருத்திகள்
அவஸ்தைக் காண்பா ராகி
முத்தரா யிருக்கலுமாம் புசிப்புங் கூடும் முட்டில்லை
என்றறிந்து சங்கைமோ சிப்பாயே

அ-வ, உ_ரை = குற்றமற்ற தோஷரகித தூய சத்துவகுணமே உண்மைத் தத்துவம் என்று சத்துக்கள் கூறியுள்ளனர். வேற்றுமைகளை கற்பிக்கின்ற ரசோ தமோ குணங்கள் நீங்கிய பின்

மனம் என்ற இலக்கும் நீங்கிடும், நிகழ்காலத்தில் தமக்கு எதிர்வரும் உண்டி உறைவிடம் உடை முதலியவைகளைப் புசிப்பார்கள் எந்தப்பொருள்களும் வருங்காலத்தில் அநுபவிப்போம் எனக் கருதி மகிழ்ச்சியடைய மாட்டார்கள். கடந்த காலத்தில் அநுபவித்த அநுபவிக்கத் தவறிகைகடந்த பொருள்களைப் பற்றி வருத்தமடையவுமாட்டார்கள், எதனிடத்தும் எவரிடத்தும் எப்போதும் யான் எனது எனும் அகந்தை மமதைகளை நீக்கி மூன்றுசரீரங்கள் மூன்றுஅவஸ்தைகள் மூன்ற பிமானநாமயங்களையும் தனக்கன்னியமாய்க்கண்டும் சாக்ஷிமாத்திரமாய் அறிந்துகொண்டும் பிராப்தந்தரும் புசிப்புகளைத் தடையாதுமின்றி சீவன்முத்தர்கள் அநுபவித்திருத்தல் கூடும் என்றுணர்ந்து நீயும், இது பற்றிய சந்தேகங்களை அகத்துள் அகற்றி இன்புற்றிருப்பாயாக? (எ.று). இன்னும் தனது எதார்த்தமான சத்துவகுணமனத்தினால் யாது புசிப்பினும் இவைகளால் வருஞ்சுகந் துக்கம் இவர்க்கில்லை எனவுமாம்.

அ-கை-சத்துவ குணமனமும் பல்வேறான காரியங்களில் ஈடுபாடு கொள்வதாகுமானால் சமாதிநிலை எவ்வாறுண்டாகும். என்ற கேள்விக்கு விடை கூறுகிறார்! (எ.று)

22 விவகார வேளையெல்லாஞ் சமாதிஎன்றால் விகற்பமன்றோ
மனம் அலைந்துவிடாதோ விட்டால்
அவதானம் நழுவுமன்றோ என்றாயாகில் அதற்கொரு
திருஷ்டாந்தங் கேளாசை கொண்டு
நவமாகப் பரபுருடன் தன்னைக் கூடி நயந்துசுகம்
அநுபவித்த நாரிநெஞ் சந்
தவமான மனைத்தொழில் செய்தபோதும் தழுவியனுவித்த
சுகம் தன்னை விடாதே!...

அ-வ, உரை = சுவாமி சீவன் முத்தர்கள் உபாதிசகிதராயிருந்து அனைத்துக் காரியங்களிலும் ஈடுபடுவார்களாயின் சமாதிநிலை அகன்றுவிடுமே? திரிசிய வேறுபாடுகள் தோற்றுவிக்குமே இது இவ்வண்ணமாயின் மனம் சஞ்சலத்தை அடைய நேருமே? அதனால் ஞானானுபூதி

கலைந்திடுமே? என்று கேட்பாயானால் அதற்கு நாம்ஒரு திருஷ்டாந்தம் (உவமை) கூறுவோம் கேட்பாயாக? இதற்குப் பதில்கூறுமுன், ஒருவமையாதெனின்? புணர்ச்சியை தாம் பெற்ற அச்சுகத்தை விரும்பியபெண், எவருங் காணாதவாறு சோரத்தனமாகத் தன் கணவனுடன் கூடிப்புணர்ந்து பெற்ற அவ்விசயானந்தத்தை, தவத்திற்குரிய மனைக் காரியங்களைச் செய்துகொண்டே, தன் கணவனுடன் கூடிய விதமான சம்பவங்களையே அடிக்கடி இல்லை எப்போதும் அவ்விசயானந்தங்களையே நீங்காமல் நினைவிற்கொண்டிருப்பாள், அப்பேதை இயல்பு இதுவாம்? அதுபோல, நெஞ்சம் சுகத்தைவிடாது என்பதைவிட மனதைச் சுகம் விழுங்கியிருக்கின்றது. அவரது சர்வ விவகாரங்களையும் சத்துவகுணவுதயமாஞ் சுகபோதம் விழுங்கி இருக்கின்றன ஆதலால் அது சமாதிநிலையே! சீவன் முத்தர்கள் விவகாரங்கள் யாவும் சமாதியே ஆகும் என்றருளினார்!. (எ-று).

அ-கை- விவகார காரியங்களில் தான் தனது எனும் அகந்தையை நீக்கும்விதமாக, அறிவானந்த சொருபமே தானாயிலங்கும் சீவன்முத்தர்களது சத்துவாம்ச மனதிற்கு அகந்தை கூடுமோ? என்ற கேள்விக்கு, (விரதத்திரயகதை - ஞானக்கதைகள், நூல் எம்மால் 2007-ல் வெளியிடப்பட்டது விரதத்திரய (கதை) எனும் நூதன ஞானவாசிட்ட சாராம்சத்தை எடுத்துபதேசிக்கின்றார்!.. (எ-று).

23. தேகத்தன் அலனாகி யகர்த்த னாகிச் சீவனின்
நிப்பிரமமாய்த் தெளிந்த முத்தன்,
போகத்தை உண்பன் என்றால் கர்த்தாவாமே பூரணமா
கர்த்தனுக்குப்போக முண்டோ
சோகத்தை அறுத்தருளுங் குருவே யிந்தத் துகளறுக்க
வேண்டுமென்று சொல்வாயாகில்
மாகர்த்தன் மாபோகி மாத்தியாகி வகை மூன்றாம்
அவரிருக் கும்மகிமை கேளாய்!...

அ-வ, உரை = எனை அனேக சென்மங்களாய்த் தொடர்ந்து வந்த பிறவித் துன்பத்தைக் கெடுத்து, இனிப் பிறவா நெறியில் நடத்துகின்ற ஞானாச்சாரியரே? உடலை உயிரை உடமை உரிமை உறவுகளையே நான் என்றிருந்த அகந்தையுடனாகிய அறியாமைக்

கூட்டங்களை அடியோடு நாசம் செய்து, எதுவும் எங்கும் எப்போதும் தானல்ல தன்னதல்ல என விலகி, இலங்கும் (கர்த்திருத்துவ புத்தி நீங்கிய) அகர்த்தா வாய்ச்சீ வேசுவரத்துவம் இன்றிய, கூடஸ்த பிரமத்தில் ஐக்கிய மாகித்தெளிந்துள்ள சீவன் முத்தர்கள் விசய சுகபோகங்களைப் புசிப்பன் என்றால், யான் எனது எனும் அகந்தாமமதா புத்தியுடையவனாமே? பரிபூரணமான (எல்லாம் விழுங்கித் தானாய் திகழும் அகர்த்தாவுக்கு விசயசுகபோகப் புசிப்புகள் உள்ளவாகுமோ? இந்தக் குழப்பத்தை நீக்கவேண்டுமென்று கேட்கின்ற நன் மாணவ? மாகர்த்தன் மாபோகி மாத்தியாகி என்ற மூவரின் நூதனமான அரிய விரத மகிமையைப் பொருந்தி விளங்கிய சீவன்முத்தர்களின் விரதப்பெருமை முறைகளை யாம் கூறக் கேட்டு நீயுணர்வாயாக? (எ-று).

அ-கை- விரதத் திரயசீலர்கள் மூவரில் மாகர்த்தனின் இலக்கணம் கூறுகின்றார். (எ-று).

24. செய்கையுஞ்செய் விக்கையு மற் றிருக்கும் காந்தச்
சிலை மலைமுன் இரும்புகள் சேட்டிக்கு மாபோல்
செய்கையுஞ் செய்விக்கையு மற்றிருக்கு மென்முன்
சடமானஉலகமெலாஞ் சேட்டை செய்யும்
மெய்கலந்த இந்திரிய விகாரரூப விவகார விருத்திக்கு
விருத்தி தானாய்
மெய்கலந்த சமாதிக்கு சாக்ஷியே நான் வெயில்போல்
என்றுரைத் தவனே விபுமா கர்த்தன்?

அ-வ, உரை = தான்யாது தொழிலைச் செய்தாலும், பிறரை எத்தொழிலில் ஈடுபடுத்திச் செய்வித்தலும், இல்லாதிருக்கின்ற காந்தக் கல்லிடத்தருகே சார்ந்த இரும்பு, காந்த சக்தியைப் பெற்றுத்துடிக்கின்றதுபோல, யாதொரு இச்சையும் இயலும் இயக்கமும் இல்லாதிருக்கின்ற என்முன் (சந்நிதியில்) தோன்றி இருந்து அழிகின்ற (உடல், உயிர், மனம், உடமைகள்) சடங்கள் எல்லாம், எனது சத்சித்தானந்த விசேஷம் பெற்று, உலகாதிகளும் அசைந்தியங்கிக் கொண்டுள்ளன! சரீரத்திற் பொருந்தியுள்ள, மெய் வாய் கண் மூக்கு செவி என்ற ஞானேந்திரியங்கள் ஐந்தும், பாதம் குதம் குறி வாய்கை போன்ற கர்மேந்திரியங்கள் ஐந்தும், இவைகள்

ஒன்றுக்கொன்று ஒவ்வாத பேதரூபங்களாகிப் பிரேரக பிரேரிகம் என்ற விருத்திகட்கும், அவ்விருத்திகள் அடங்கித் தன்மயமாகிய உண்மைச் சக்திகள் கலந்திருக்கும் சொரூபசமாதிக்கும், பொதுவாகச் சூரியப்பிரகாச கிரணமே போல, சர்வத்திற்கும் சாக்ஷியே நான் என்ற புத்தியில், விஞ்ஞானமயாதீத, கோசாதீதனும் ஆகி, எங்கும் எதிலும் எப்போதும் இசைந்துள்ள (சர்வவியாபகனும்) நானே என்று திரமானவனே மாகர்த்தனாவன்? அத்துவித சொரூபமான எனது சந்நிதியின் முன் நடக்கின்ற, உலக தேக சுகபோக காரியங்கள் நடந்தபோதும், இவைகள் இயக்கமின்றி இறந்துகிடக்கின்ற போதும், (அதாவது - ஞான சமாதிக்கும் நடுவாகி இவைகளின் அவாந்தரப் பயனளித்துக் கூடியும், அவைகளோடு பொருந்தாமலிருக்கும் அவனே மாகர்த்தனாவன் என்றருளினார்... (எ-று).

அ - கை - இனி மாபோகி மாத்தியாகிகளின் இலக்கணம் கூறுதல்.

25. அறுசுவையின் குணங்குற்றம் அசுத்தஞ் சுத்தம்
அபத்தியம் பத்தியமென ஊண் ஆய்ந் திடாமல்
பொறுமையுடன் கிட்டினதைக் காட்டுத் தீபோல்
போகங்கள் புசிப்பவன்மா போகியாவான்
சிறிது பெரிதுகள் அதன்றின் ணயங்கள் நன்மை
தீமைகள்சே ரினும் படிகச் செயல்போற் சித்தம்
வெறிதிருக்கு மவனேமாத் தியாகியா வான்விரதமிம்
மூன்றுடையவ ரேவீடுள் ளாரே!...

அ-வ, உரை = இனிப்பு, கசப்பு, புளிப்பு, துவர்ப்பு, கார்ப்பு, கரிப்பு மற்றுமுள்ள பல்வேறு சுவைகளின் குணங்களையும், சுத்தம் அசுத்தம் சுத்தாசுத்தம் பத்தியம் அபத்தியம் (பத்தியமின்மை) என்று பேதங்காணாமல், தன்னை வந்தடைந்த உணவு அன்னபானாதிகளைப் பொறுமையோடும் பணிவோடும் பெற்றுவந்து. வனத்தில் தீபற்றிக்கொண்டால், இதுசாலிமரம் இது முள்வேலிமரம், கடப்ப மரம் இது வேங்கைமரம், ஜவ்வாதுமரம், இது சந்தனமரம், மற்றும் நறுமணம் இவையற்ற கொடி செடி யாவையும் சுற்றிவளைத்து பற்றி எரித்து அழிக்கின்ற தீயினது செய்கைபோல, உணவிலும் உடலியலினும் உலகவிசய விவகாரங்களிலும்,

வெறுப்பும் விருப்பும் கோபமும் மோகதாபமும் துவேஷமுமின்றி, இவை நமக்கு எப்படி எதனால் யாரால் வந்தது என்றாராயாமல், எல்லாம் திருவருள் இசைந்தருளிய இது ஈசுவரப் பிரசாதம் என்றெண்ணிக் கருணையும் நம்மை ஈடேற்ற வந்தது என்ற மனநிறைவோடும் அநுபவிப்பவனே, போகங்களைப் புசித்தவனாயினும் புசியாதவன் இவனே மாபோகி எனப்படுவான்!...

... இன்னும், இது அற்பமானது, மகத்துவமுடையது, சிறியது பெரியது இது தன்னுடையது இது பிறருடையது, புண்ணியமும் பாவமும் உடையது, மானமிக்கது. இது அவமானமுடையது இது சுகமுடைய நல்லதென்றும், இது துக்கம் தரக்கூடிய கெட்டது என்றும் பகுத்துப் பேதம் காட்டி வெறுப்பும் விருப்புமின்றி நேர்பட வந்தவைகளை பற்றின்றி ஏற்று, படிகமணியை சுற்றியுள்ள புஷ்பங்களின் பலவண்ணங்களாயினும், அந் நிறங்கள் எதுவும் படிகமணியுள் பதிந்திடாமல் அந்தந்த மலர்களின் நிறங்களை அதுவதன் நேரில் காட்டும் அதன்றி அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சிற், கடுத்தது காட்டும் முகம், எனுந்திருக்குறளின் பொருளின்படி மாசின்றியும் படிகத்தின் இயலைப்போலவும், தன்னையடைந்த யாவையும் தான் அநுபவிக்கும்முன் சர்வமும் பிரம்மார்ப்பணம் கிருஷ்ணார்ப்பணம் - ஈசுவரார்ப்பணம் என்று, சங்கல்பஞ்செய்து நெஞ்சில் நினைத்து, நீரும் பூவும் இறைத்துவணங்கி நிவேதனம் செய்து உண்பவன் எவனோ அவனே! சர்வ சங்கபரித்தியாகி எனும் மா..த்தியாகி யாவான், நன்மாணா? இம்மூன்று விரதங்களையும் கடைப்பிடித்தல் (எவர்க்கும் சுலபமானது) கூடுமவர்களே சர்வசித்தியுமுடைய சீவன் முத்தர்கள் என இம்மூன்று கவிகளின் பொருள்கள், தனதியல்பின் இரசமும் தனக்கு அந்நியமின்மையும், தானே சுயமாஞ்சோதி அறிவும் எனக் கொள்வது சீவன்முக்தர்களின் கிருத கிருத்தியத் தன்மைகள் என்றும் கூறியருளினார்! (எ-று).

அ-கை- சீவன் முக்தர்கள் காரண காரியங்களைச் செய்து கொண்டிருக்க; இவர்கள் கிருதா கிருத கிரத்தியராவது எவ்வாறு என விண்ணப்பஞ் செய்தான் சீடன்... (எ-று).

26. மெய்யுங் கொண்டு பிராரத்தந் தரும் விதிவழி நின்றிடவும்
உய்யுங் கன்மிகட் கணுகுணமாய் உறுதொழில் செய்திடவும்
செய்யுஞ் செய்கை முடிந்தவ னென்றுரை செப்புவ தெப்படியோ
நைய்யுந் துன்ப மகற்றிய குருவே நலமாய் அருள்வீரே!.

அ-வ, உரை = அனேகபிறவிகளாகத் தொடர்ந்து கடும் துன்பங்களையே கொடுத்துவந்த பிறவித் தொடர்ச்சியை வேரறுத்த.. ஞானபிதாவே! உடலைச் சுமந்துகொண்டு, அவ்வப்போது வரும் பிராரப்த (நேர்படுங்) கருமங்களாக வருகின்ற நெறிமுறையில் வழுவாமல் நின்றிருந்து, மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரம், மற்றைய பக்குவர்கள் யாவரும் முத்திவழியில் சாதனஞ்செய்து பயன்பெறவும், கேட்டல் சிந்தித்தல் தெளிதல் முதலிய அகருமங்களில் பக்குவர்களை ஈடுபடுத்தும், அநுக்கிரக காரியங்களில் அச்சீவன் முத்தர்கள் செயல்படுவதை எப்படி கிருதாகிருத்தயர் ஆவார்களோ? ஆம். (நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம், வான்பற்றி நின்ற மறைப்பொருள் தன்னை ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம், தான் பற்றப்பற்றத் தலைப்படுந் தானே! எனும் திருமூலரின் திருமந்திரம், காண்க.) ஆனந்தப் பொருளினின்றும் வெளிப்பட்டு வந்த சராசரமும் சீவேசுவர சீவராசிகளும், ஆனந்த வடிவங்களே ஆகுமன்றோ? சீவன் முக்தர் செய்கின்ற அகருமங்கள்யாவும் தவயோக எக்ஞுமயமே! அதிலும் சிறந்தது, கருமிகளை ஞானிகளாக்குவது ஓதியதும், தான் ஓதிய வண்ணம் பிறர்க்கு ஓதுவிப்பதும் இவ்வகர்மாதீதமான ஞானியர்களை, கிருத கிருத்திய கிருதார்த்தர் என்பது மிகப் பொருத்தமாகும் எனத் தெளிந்து நிச்சயம் கொள்வாய்! என்றார் (எ-று).

அ - கை - (கூறியது கூறல் குற்றமன்று என்பதாக, இதுவுமது - குளகம்).

27. ஆடவர் செய்தொழில் மூவகை யாகும் அவித்தை வசத்துறும் நாள்
ஏடனை மமதை அகந்தை உள்ளார்க்கே இகபர விவகாரம்
வீடணுகுவமெனு மிச்சையுள் ளார்க்கே வித்தை படிப்பதெலாம்
பாடன்மிகுந் தொழிலாற் பயனுளதோ பரிபூரண மானால்!..

அ-வ, உரை = உத்யோகமே, புருஷலட்சணம் என்பது கருமசாத்திரங்களின் துணிவு, உயிரினங்களைவிட மனிதர்களே தேவர்களினுஞ் சிறந்தவர்கள் ஏனெனில், இகம்பரம் மத்தியம் என்ற மூவுலகமும் மித்தை (பொய்) எனவும், அறிவு (ஆத்மாவே) சத்தியமெனவும் அறியும் ஆற்றலுடைவர்கள் மனிதர்களாவர், இவர்செய்கின்ற கருமங்கள் மூவகையாகும், இதில் கடந்த காலங்களில் அஞ்ஞானவசப்பட்டு செய்த கருமங்களே, மண் பெண் பொன் ஆசைகளும், தானே இவைகளுக்குரிமையுடையவன் என்ற மமதாவிருத்தியும் யானே இவைகளை எல்லாம் அநுபவிப்பேன் எனும் அகந்தையும் மூவேடணை என்பதாகும். இவர்களுக்கே அந்த மூவுலக காரியங்களாகும். மோக்ஷ இச்சை விருத்தியால், சடமிது சித்திது ஆனந்தமிது எனப்பகுத்தறிந்தும், சத்சாஸ்திரப் பயிற்சிகளின் முதிர்ச்சியுமுடைய தானே, எங்கும் நிறைந்துள்ள பரிபூரண சச்சிதானந்தரூபன் என்ற நித்திய திருப்தியை அடைந்த அநுபூதிமான்கள், மீண்டும், சிரவணாதி சாஸ்திர தியானாதிப் பயிற்சிகள் செய்திட வேண்டுமோ? எனில் வேண்டவாம். இவைகளாற் பயனேதும் இச்சீவன் முத்தர்களுக்கு இல்லை என்றறிந்திடுக? (எ-று).

அ-கை, அச்சீவன் முக்தர்கட்கு உலகவிவகாரங்கள் இல்லையாயினும் சாஸ்திர சிரவணமனன விவகாரங்கள் வேண்டாமோ? எனின். அஞ்ஞான அவஸ்தை தசையில், உலகவிவகாரங்களும், முமூட்சு அவஸ்தையின்போது சிரவணசாதனாதி காரியங்களும், முத்தியில் பொருந்திநின்ற காலத்தில் பிரதிபலனைக் கருதாமற்செய்கின்ற சத்காரிய விருத்திகளைச் செய்தல். ஆயினுமிவர் செய்திலர்!

**28. குரவர் சிகாமணியே கேளீர் நீர் கூறிய வழி ஒக்கும்
பரமுடன் இகமும் இகழ்ந்தவ ரன்றோ பழகுவர் மெஞ்ஞானம்
விரவுமுயற் சியின்மீண் டவரதை யினிவேண்டுவரோ வேண்டார்
சிரவண மனனாதிகள் வேண்டாவோ சித்தமுறைத் திடவே!...**

அ-வ, உரை = எனது சிரசின் அமர்ந்தருளும் தேசிக உத்தமரத்தினமே! தேவரீர் அருளிச்செய்த நெறிமுறை மிகவும் சரியே. பரலோக காரியாதி இச்சைகளும், இகலோக காரியங்களின்

இச்சைகளையும் விட்ட முமுட்சுக்களன்றோ, உண்மை ஞானநெறியை அப்யாசிப்பார்கள், கலக்க மயக்கங்களைத் தருகின்ற முயற்சிகளிலிருந்தும் நீங்கினவர்கள் மீண்டும், இம்மை மறுமைப்பயன் தரும் இச்சைகளை விரும்புவார்களோ? விரும்ப மாட்டார்கள், ஆயினும் அந்தக்கரணாதி விருத்திகள் தத்துவத்தில் (ஆன்மாவில்) நிலைபெறும் பொருட்டுச் சிரவண சாதனங்களை அப்யாசிக்க (பயில) வேண்டாமோ?.... (எ-று).

(அ-கை- 28-வது கவியின் பொருளிதுவாகக் கூறுகிறார்!.)

**29. கிளர்மக னேகேள் தத்துவ மறியார் கேட்டல் செயக்கடனே
தளர்வறு சிந்தித் தலின்முயல் வார்சிலர் சந்தேகங் களுளார்
தெளிதலில் நிற்பார் விபரீதப் பேய்தீரா வாதனை யோர்
வெளியுரு வாயரு வாய்நிறை வாயினர் றவேண்டுவ தொன்றுண்டோ.**

அ-வ, உ-ரை = குருசீட சம்பிரதாய நெறிநின்ற, என் மனதுக்கு வந்த வாரிசே? கவனமாக இதைக் கேட்பாயாக?... சிரவணாதி சாதனங்களும் அப்யாசமுதிர்வும் இல்லாத மந்தமந்ததர பக்குவர்கள், சிரவண மனனஞ்செய்ய வேண்டியது அவசியமே ஆகும். தனது ஆத்ம சொரூபத்தைத் தேடிப்பெற வேண்டிய நிச்சயஞ்செய்வதில் சந்தேகமுடையவர்கள், தாம்நிலை தவறாதிருக்க வேண்டி இடைவிடாது மனனபாவனை கொள்வார்கள். ஒன்றை வேறொன்றாக அறியும் விபரீதப் புத்தியை உடையவர்கள். சவிகற்ப சமாதி எனும் நிதித்தியாசனத்தை பொருந்தியிருப்பார்கள். வெளிக்குள் வெளிகடந்ததாய் (கடாகாசமான ஆத்மா - மகாகாசமாயுள்ள பரமாத்மாவுடன் ஏகீகபாவனாசாமர்த்தியமுடைய சீவன்முத்தர்கள் மேற்கூறிய எதுவுஞ்செய்ய வேண்டியது உண்டோ? அவசியமில்லை என்றருளினார். (எ-று)

அ-கை-விவகாரம் நீங்கிய சீவன் முத்தர்கட்கு, அகம்பாவம் எவ்விதம் உண்டாவதாகும், எனச்சீடன் கேட்கிறான்? (எ-று)

**30. ஐயா கேளீர் தத்துவ ஞானியு மஞ்ஞானிகள் போலச்
செய்யா நின்றேன் கண்டே னுண்டேன் சென்றேன் எனலாமோ17
பொய்யாம் விபரீதங்கள் அவர்க்குப் போயின என்றீரே
மெய்யாம் பிரம்ம விசாரமி தென்றே வெளியா யுரையீரே?**

அ-வ, உரை = எனதாருயிரினுள் நிறைந்தருளும் ஞானாச்சாரியரே! மெய்யுணர்வைப் பொருந்தியுள்ள சீவன்முத்தர்களும் அஞ்ஞானிகளைப் போலவே இதைப் பார்த்தேன். இதைச்செய்தேன் இதைக் கூறினேன், இதைப்பு சித்தேன் இங்ஙனம் சென்றேன் என்று சொல்லலாமோ? அச்சீவன் முத்தர்களுக்கு அசத்தியமான திரிசிய பேதபாவனைகள் இல்லை என்றீரே, இப்படி இருவித முரண்பாடுகளோ? எனச் சந்தேகம் எனக்கு உண்டாகின்றன. இதில் எப்போதும் நழுவாத பிரம்ம விசாரதெளிவின் இருப்பு எவ்வாறுளது எனத்தாங்கள் விளக்கியுபதேசித்தருளும் சுவாமின்?... (எ-று).

அ-கை-30-வது கவிக்கு விடை விளம்புகின்றார்!... (எ-று).

31. ஓய்ந்த கனாவிற் கண்டப ழங்கதை ஓதுவன் வாதனையால்
ஆய்ந்தறி வுற்றவன் அப்படி செப்புவ னாபாசனு மாகான்
மாய்ந்த தன்னுடல்வே மளவும் விண்ணவன் மனிதன்எனப் படுவான்
வீய்ந்தசி தாபாசன் போமளவும் விவகா ரந்தொடரும்.

அ-வ, உரை = உலகியலாரில் ஒருவன் தான்கண்ட ஒருகனவின் சம்பவத்தை, விழிப்பு நிலையை அடைந்ததும் கூறிமுடிப்பான். இங்ஙனமே சீவன் முத்தனும், வேதமுடிவாயுள்ள மகாவாக்யார்த்தத்தை ஆராய்ந்தபடி ஒப்பிட்டு தன்னையுணர்ந்த ஞானியும், பூர்வம் செய்திருந்த வாசனைபழக்கங் காரணமாகவே, இதைக்கண்டேன் அதைச் செய்தேன் இதைக் கூறினேன் இன்னின்னதைப், புசித்தேன், இங்கிங்கே சென்றேன் எனக்கூறுவான் ஆயினும், இவனிடத்து ஆவரணமில்லை அபரோக்ஷமாய் தன்னையுள்ளவாறு அறிந்தனுபவித்த நினைவை நீங்காதிருப்பன் , இவனுக்கு வாச்சியார்த்தங்களாகிய ஒன்பதும், சிதாபாசனும் ஆக, பத்தும் - பகலில் ஏற்றியுள்ள விளக்குப் போலப் பயனைத்தராது, தேவனானவன் இனித் தேவதத்துவத்தையே அடைவோம் என்று, அக்கினியில் வீழ்ந்து தேகம் தீயினால் எரிந்து சாம்பலாகும் கால அளவுவரையும், இவனை தம்மை போல் மானுடன் என்றே மற்றோர்களால் புகலப்படுவான். இது இவ்வாறாயினும், சிதாபாசன் நசித்து சித்ரூப ஞானதேகத்துடனே விதேகமுத்தியைப் பொருந்தியிருப்பான், இவனது இயல்பாயுள்ள விவகார காரியங்களை தொடர்ந்து செய்து வருவான், மகனே கேள்? ஓர் அரசன், தான்

தூங்கும்போது வீதியில் வீடுதோறும் சென்று பிச்சை ஏற்று உண்பதாகக் கனவு கண்டான், பின் விழித்து எழுந்தபோது தான்கண்ட கனவின் சம்பவம் ஏதும் நடக்காத அப்பட்டமான பொய் எனத் தெரிந்து கொண்டான். சொப்பனித்திற் கண்டவாசனை அவ்வப்போதுவரினும், தான் பிச்சகன் என நினைவில் வந்தாலும், பிக்சகனாகப் பிறர் கூறினும், அரசன் (ஞானிகள்) தான்பிக்ஷாடனன் இல்லை என்பது உள்விடாதிருப்பர்கள், அன்றோ? சீவன் முத்தனும் தனது காரிய சேவைகளை செய்த போதும் தான் சிதாபாசன் என்று எண்ணம், தான் தனது அகம் மமதை அகங்காரம் இல்லாதபடியால், சிதாபாசனல்ல, ஞானியே ஆவன் என்றுன்னி சந்தேகத்தை விட்டொழிப்பாய்? என்றருளினார். (எ-று).

அ-கை- உலக காரியங்களை நீக்கிடவே, உடலின் செயலை நிறுத்தி மனதினால் தியான சமாதி கூடுவானாயினும், அதுவும் மனதின் செயலன்றோ? அது தூலமாயும், இது சூக்கும மாயும் உள்ளதால் இவனை நிருவிகாரி (தொழில் செய்யாதவன்) என்பதே பொருந்தும் எனத் துணிவு பெறுவாயாக?... (எ-று)

32. ஆனால் ஐயா குருவே காண்பது அசத்திய மானாலும்
நாநா விவகாரந் துயரல்லவோ ஞான சுகந் தருமோ
போனா லன்றோ நின்றாய் நிஷ்டை புரிந்திடல் வேண்டாவோ
தானாய் நிட்டை புரிந்தால் செய்கை தவிர்ந்தவ னெப்படியோ

அ-வ, உரை = தேவரீர் எனது ஆச்சாரியரே, சீவன் முக்தர்கட்கு உடலாலும் மனதாலும் விவகாரங்கள் தொடரும் என்றீரே, ஆனால்? திரிசியம் (காண்பான், காட்சி, காணப்படும் பொருள், இவர்க்குப் பொய்யாயினும், இதனியல்பிலுண்டான பலதொழில்களும் துன்பத்தை தருமல்லவா? சத்சித்தானந்தத்தை எப்படிக் கொடுக்கும்? இத்தொழிலாதிகள் முற்றும் ஒழிந்தால் அல்லவோ நன்மையைக் கொடுக்கும், அவை நீங்கும் பொருட்டேனும் சமாதி பயில வேண்டாமோ இப்படி, தன்மயமாஞ் சமாதி கூடினால், எவ்வாறு இவன்தொழில் விடுதலைபெற்றவன் எனக் கூறுவதேது? ... (எ-று).

(இதுவுமது பற்றியது - குளகம்)

33. தெரிதரு மகனே ஆரம்பத் தொடும் தீரும் விவகாரம்
உரியச மாதியும் விவகாரங் களுமுள்ளத் தொழில் அன்றோ
துரியய ரம்பொருளானவர் வேறொரு தொழில்செய் வதுமுண்டோ
அரியச மாதிகள் பழகுவனேல் அவன் ஆருடனு மன்றே.

அ-வ, உரை = மானுடரும் தேவரும் அறிவதற்கு அரிதாகிய உண்மைப் பொருளை அரியவிரும்பும் புத்திரனே கேள்? சீவன் முத்தர்களின் உடலும் மனதும் அதனதன் தொழில்களும் பிராரத்த கர்மம் உள்ளளவு மட்டுமே தொடரும், அப்பிராரப்த கருமமும் உடல்பிணமாகுங்காலம் வரை மனனம் சிரவணம் தியான சமாதிகள் தொடரும், இவைகள் எல்லாம் கேட்டல், சிந்தித்தல், தெளிதல் எனும் அந்தரங்க சாதனங்களால் தீருமன்றோ? துரியமாயும் பிரம்மஸ்வருப மாயுணர்ந்துள்ள ஞானிகள், உடலாலும் மனதாலுமாகின்ற கிரியைகளைச் செய்வார்களோ? அருமை என்றும் தனக்குத் தகுதியானது என்றும் ஞானநிஷ்டைகளைச் செய்வார்களானால், அவன் சாதன அப்யாசிதான், சாத்தியன் எனும் அநுபவி ஆருடனல்லன், அதாவது - இரசோ குணாம்சமாகி உலகதேக சாத்திர வாசனைகள் எல்லாம், சமாதி ஞானத்தாலும், சமாதி விவகாரங்கள் எல்லாம், நான் அதுவாயிக்கின்றேன் எனும் சாக்ஷாத்கார ஞானத்தால் தீரும் எனக்கொள்க என்றருளினார். (எ-று).

அ-கை- சித்து விவகாரமான சகசசமாதிகள் எல்லாம் மூவகைப் (மந்தன், மந்ததரன், தீவிரன் முதலிய) பக்குவர்கட்கே அன்றி, சதாசிவானந்த ஆருடனுக்கில்லை என அறிக?.

34. உத்தம குருவே ஆருடனு மாய்ஒரு தொழில்அற்றவனும்
சித்தமடங் குந்தியா னாதிகள்சில செய்குவ தேனென் றால்
இத்தல மருவும் பிராரப்தப் பிரிவெப்படி அப்படியே
முத்தரும் வெகுவித மாவார் என்பதை முன்னே சொன்னேனே.

அ-வ, உரை = மேன்மையுடைய மாணிக்கமாம் எனது ஞானதேசிகரே அச்சீவன் முத்தர்கள், முக்கரணங் (உலகியல் உயிரியல் உடலியல் உடமையியல்) களில் யாதொன்றும் தன்னதல்லாதவர்களும், சுகாநுபவமுள்ளவர்களும், பின்னும் மனம் அடங்கும் ஏதுவாகின்ற சாதனஞ் சமதமஞ் சமாதிகளைச் செய்வார்

கள், அதேது எனின்? முன் தத்துவ விளக்கப் படலத்தில் 90-வது கவியின் விளக்கப்படியே, இவர் எடுத்துள்ள ஞானதேகப்பிறவியின் எச்சமாய் (மிஞ்சிய வினைவசமாகி) நின்ற முற்பிறவியின் வினைப்பயனான கர்மங்கள் சேமிப்பில் சஞ்சிதமாயிருந்து இப்பிறவியில் அவ்வப்போது வரும், அதுவும் சுபாசுபம், நன்மை தீமை இகபர காரியங்கள் எதுவாயினும் வருமவைகளில், இவரது பிராரத்தமும் அப்படியே ஆகும். சீவன்முத்தர்கள் நாநா (பல்வேறு) விதமாயிருப்பார்கள் என்றும் அங்குக் கூறியுள்ளேன். அல்லவா? கண்டுகொள், (எ-று).

(இதுவுமது பற்றியது குளகம்)

35. நல்லவ னேகேள் உலகுப காரம் ஞானிகள் விவகாரம்
அல்லது மற்றொரு பெரும்பே றில்லை யதனாற் பிணியுமில்லை
வல்லசி ருஷ்டிமுதற் பலதொழிலால் வரும் புண்ணியபாவம்
எல்லவ ருக்கும் அநுக்கிர கஞ்செயும் ஈசனடைந் திலனே!.

அ-வ, உரை = வாழையடி வாழையாய் நிற்கும் சம்பிரதாயஞ்சிறக்க வந்துள்ள சற்புத்திரா? கேள், உடலுள் உலாவிய ஒப்பற்ற மெய்ப்பொருளை உள்ளுணர்ந்த ஞானிகள் செய்யுங்காரியங்கள் யாவும், கிரம சிருஷ்டியின் முதற்பூதமான ஆகாசத்தினம்சமாகவே, இயலுந் தன்மையும் கூடியதாகும்! உலக சேமமும் உயிர்களுக்கு நன்மையும் தருவதாயிருக்கும். உடலோடுகூடியுள்ள பிராரத்த காலம் தீரும்வரை, பஞ்ச எக்ஞகருமங்களைத் தன்னலமற்று பொதுநலஞ் சார்ந்து இவராற்றுங் கடமைகள் யாவும், ஈசுவரர்களின் சிருஷ்டி திதி சங்காரம் என்ற மூன்று தொழிலும் செய்யும் அதுபோலவாம். இம்மூர்த்திகளின் அநுக்கிரகங்களில், உயிர்கட்கு எப்பயனாயினும் அது ஈசுவரர்களைச் சென்றடையாதது போல! இந்த ஞானிகளின் செயலும் பயனுமாகும், இக்கருமங்களை இவர் செய்திடில் யாதொரு தோஷமும் பயனும் சேதமும் இல்லை என வேதங்களும் அதன் வாக்கியங்களும் புகழ்ந்துள்ளன! ஏன் தனக்காக அன்றி ஈசனது கிருபா கிரியை உலக உயிர்களின் நன்மையை எண்ணியே ஞானியின் செயல்திறம் என்று அறிக? (எ-று)

அ-கை, ச.தெ.ப. 15-வது கவி முதல் இதுவரை வந்த 20 கவிகளின் பொருளும், ஆன்மா பேரறிவின் உபாதியாய் வந்த அச்சித்தின் சலனமின்றிச் சித்தாக (நிருபாதிகமாகவே) விளங்குகின்றதையே விளக்கிவந்தது, இனிச்சித்தின் வியாபக (விரிவு) நிலையை விளக்கும்படியாய் அச்சீவன் முத்தர்களின் அரிய ஞானானுபவம் வாய்ந்திருப்பர் ஆதலின் இவர், (ஈசனுக்கு எப்படி ஒப்பாவான் என்ற கேள்விக்கு பதில் வழங்குகிறார்) ஈசனுக்கு நிகராவார் என அறிந்திடுக? (எ-று).

36. ஈசனுமா யருவாயுருவாகி எழுந் தருளுங் குருவே
ஈசனும் ஞானியும் ஒப்பென் றீரேஎப்படி ஒப்பென்றால்
ஈசனும் ஞானியும் மமதை அகந்தை யிகழ்ததினால் ஒப்பாம்
ஈசனுமாம் பலசீ வருமாம் உலகெல் லாமிவ னாமே!.

அ-வ, உரை = இவ்விடம் அவ்விடம் என பாகுபாடு அற்றதாய் மும்மூர்த்தி (பிரம்மா விஷ்ணு சிவன்) யுமாய் மானுட வடிவுடையவனாயும் எனை ஈடேற்றும்படி எழுந்தருளிய குருமூர்த்திகளே? மாயையோடு எவ்விதத்திலும் சம்பந்தப்படாத மும்மூர்த்திகளும் ஞானவானாகிய பிரம்ம வித்தும் (சீவன் முத்தன்) சகலத்திலும் சமானம் உடையவர்கள் என்றீரே? அதெப்படிச் சமானம் ஆகுவர். எனக்கேட்பாயாகில், அவ்வீசுவரனும் இந்த ஞானியும் அகம் மமதை (தான் தனது நானே செய்வேன் - நானே அநுபவிப்பேன் எனும்) இழந்தவர்களாதலால் சமானமுடையவர்களாகுவர். இந்த ஞானியே, ஈசுவரனும் பஞ்சபூத உலககாரியம் மற்றும் அளவிறந்த சீவர்களும், எல்லாவுலகங்களுமாவான் என்பது திண்ணமே ஆம் என அறிந்து கொள்வாயாக என்றருளினார் (என்றவாறு).

அ-சை- தன்னையறிந்துள்ள ஞானி ஈசுவரனாயினும், பின்னும் சீவர்களாக விளங்குவன் என்பது எங்ஙனம்? ... (எ-று).

37. எல்லாச் சீவருமிவனாம் என்றீர் இவன்தான் முத்திய டைந்து
எல்லாச் சீவரும் முத்திபெறா மல்இருப் பான்ஏனையா
எல்லாச் சீவரும் வெவ்வேறானால் இவனெல்லா மல்லனோ
எல்லாப் பொருளு முரைத்தருள் குருவே இதைநீர் மொழியீரே.

அ-வ, உரை = எனது ஆசிரியரே! இந்த ஞானியே சகல சீவர்களுமாவான் எனக்கூறினீரே, இந்த சீவன் முத்தன் முத்தியின் வீடுபேற்றை யடைந்திருக்க ஏனைய சீவர்கள் எல்லாம் முத்தியிற் சேராதிருப்பது ஏனாம்? ... சகலசீவர்களும் வியஷ்டி (தனித்தனியாய் இருப்பாராயின், இந்த ஞானி அனைத்துச் சீவர்களுமாய் எப்படி ஆவான் ஆகமாட்டானே, எனது ஐயங்களை எல்லாம் எளிதினில் அகற்றிச், சர்வார்த்தங்களையும் அருளுகின்ற தேசிகோத்தமரே இச்சந்தேகத்திற்கும் தக்க பதிலுரையை அருளிச்செய்வீர்களாகுக? என்று கேட்டனன், (அ-து) ஞானிஒருவன் வீடு பேறடையவும், ஏனைய உயிர்களது பெறாமையால், இவனே எல்லாம் ஆவன் என்பது எவ்வாறு கூடும் என்பதாம்.... (எ-று).

அ-கை- 37-வது கவிக்கு உத்தரம் - பதில் கூறுதலாம்.. (எ-று).

38. அகமெனு மான்மா பூரணம் ஏகம் அனேகவி தஞ்சீவர்
அகமெனு மந்தக் கரணவு பாதிகள் அளவிலை யாதலினால்
சகமுமு துங்குளிர் சந்திரனேகஞ் சலசந் திரர்பலவாம்
சகமதி லேரிகுளஞ் சிறுகுழிசால் சட்டி குடம்பல வால்!...

அ-வ, உரை = நான் நான் எனும் அகம் சத்தார்த்தமான பிரம்மம் சர்வம் நான் என்றாகும் ஆத்மா பரிபூரணசொருபமாயுள்ள ஒன்றாகும். இதுஅகர்த்தத்வம், கர்த்திருத்துவமான அகம்நான் என்கிற சிதாபாசர்களின் மனோவுபாதிகள் அளவுகடந்துள்ளது. ஆதலால் சிதாபாசன் பல்வேறு வடிவ குண தொழிலியல் யாவும் வெவ்வேறானவைகளாகும், இது எப்படி எனின்? மகனே, உயிர்கள் மற்றும் உயிர்களுக்கும் குளிர்ச்சியைத் தருகின்ற சந்திரன் ஒன்றே ஆகும். உலகினுள், ஏரிகள் குளங்கள், தடாகங்கள் சிறிய பெரிய பள்ளங்கள் குழிகள் சால்கள் சட்டிகள் குடங்கள் எனப் பலவாகும் அல்லவா?... நீர்நிலை இவைகளுள் பிரதிபிம்பிக்கும், சந்திரர்களுக்கும் அனந்த விதங்களாகும் என்று நீ அறிந்திடுக? என்றார்! (எ-று).

(இதுவுமது பற்றியது குளகம்)

39. சட்டிகுடங்களில் ஒன்று நசித்திட வதனுள் சலசந்திரன்
ஒட்டுமு தற்சந் திரனொடு கூடும் ஒழிந்தவை கூடாவே
கட்டுமு பாதிநசித் திடுஞ்சீவன் காரண வான்மாவில்
கிட்டும் ஐக்யம் உபாதிகெ டாதவர் கேவல மாகாரே!...

அ-வ, உரை = சட்டி குடம் சால் ஏரிகுளம் தம்ளர் ஆட்டுக்கால் குழம்படி தடங்களில், தங்கியுள்ள நீரினுள் வானத்துச் சந்திரனின் பிம்பம், பிரதிபிம்பம் (தெரியும்) இதில் மேற்கூறிய நீர்நிலைகளில் உள்ள நீர் வற்றிவிட்டால் அதில் சந்திரனது பிரதிபிம்பம் தெரியாது, அதில் காணப்பட்ட (நீருள்ளபோது) சந்திரனின் பிரதிபிம்பம் எதார்த்த வானத்துச் சந்திரனோடு இணைந்துவிடும். மற்றபிற நீருள்ள நிலைகளில் தோன்றிய வானத்துச்சந்திரனின் பிரதிபிம்பங்களிருந்து தெரிந்து கொண்டேயிருக்கும் இந்நீரென்ற உபாதியுள்ளவரை வானத்துச் சந்திரனின் பிம்பத்துடன் இவைகள் சென்றடையாது! என்பது போல,

சீவப் பிரம்மத்தை, சிதாபாசம் வளைந்து பஞ்சகோசமும் சூழ்ந்துள்ளதால், ஆவரணம் அறியாமை அஞ்ஞானம் நிறைந்துள்ளதால், தனக்காதாரமான பரமாத்மஸ்வருபத்தில் ஐக்யமுத்தி அடையாது, தன்னை மறைத்திருக்கும் அவித்யா உபாதிகள் நீங்கிநிற்கும் சீவன் மோக்ஷ கைவல்யத்தினை (கடமென்ற உபாதி நீங்கி மடாகாயம், மகாகாயம் ஆவது போல) எய்தித் திளைக்கும் என்றறிவாயாக? மகனே இது. பிம்பப் பிரதிபிம்ப நியாயம் என்று வேதவுபநிஷத்துக்கள் கூறியுள்ளன என்றும் அறிந்திடுக?... (எ-று).

அ-கை- குருவே முன்பு தன்னை அறிந்துள்ள ஞானியை ஈசுவரனுக்கு ஒப்பு என்றீர், அப்படியானால் ஈசுவரனின் மகிமைகள் ஞானிக்கு ஏன் வரவில்லை என்று கேட்கிறான். (எ-று).

40. இவனயன் மால்சிவன் ஆகியமூவ ரோடெப்படி ஒப்பா வார்
சிவன்முதல் மூவரும் அகில சிருஷ்டி திதி நாசங்கள் செய்வார்
அவர்பிறர் மதிகளும் முக்கா லங்களும் அறிவார் விபுவாவார்
தவமிகுங் குருவே இவனுக் கவையிலோர் சற்றுங் காணேனே..

அ-வ, உரை =மாதவமிக்க எனது ஞானாச்சாரியரே வணக்கம்! இச்சீவன் முக்தஞானி, பிரம்மா விஷ்ணு உருத்திரன் என்ற மும்மூர்த்திகளுடன் எப்படி ஒப்பாவான்? அம்மும்மூர்த்திகள் சீவேசுவர செகத்துக்களை உண்டாக்கியும் இரட்க்ஷிக்கவும் சம்காரஞ்செய்வதும், பிறவுயிர்களின் வினை பயன் பரிபாகங்களையும் மூன்று காலமும் அறிந்திருப்பர். எங்கும் எதிலும் எல்லாவற்றிலும் இடையின்றிப் புணர்ந்திருப்பார்கள். இம்மூர்த்தி

களைப்போல இந்த ஞானிகள் இடத்தில் ஒருசிறிதும் நிகழ்ந்திடக் கண்டிலேன் ஐயனே?. (எ-று).

அ-கை- 40, கவியின் சீடனின் கேள்விக்கு 41. கவியின்மூலம் விடைதருகின்றார்.

41. தடத்து நீர்நிலாத் திரியொளி உபயமுந்
தழுவுமூர்தனைக் காக்கும்
குடத்து நீர்விளக்கி னொளியிரண் டுமோர் குடும்ப
மாத்திரங் காக்கும்.
அடுத்த மைந்தனே ஈசனும் ஞானியும்
அறிவினாற் பிறிவில்லை
கெடுத்த மாயையின் குணங்களால் மேலென்றுங்
கீழென்றும் பிரிவாமால்.

அ-வ, உரை = எனை அண்டிச் சத்வித்யா விசயஞானங்களைச் சீரணம் செய்துவரும் நற்குமாரா? சாலையின் சந்திப்பில் உள்ள நீர் நிறைந்த குளமும், குளிர்ந்த சந்திரனின் ஒளிபடர்ந்த வெளிச்சமும் ஓர் ஊரையும் அங்கு வாழும் மக்களையும் காத்து இதஞ்செய்யும், இது போல, குடத்துநீரும் தீபஒளி வெளிச்சமும் ஓர் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு மாத்திரம் பயனளித்திடும், (காக்கும்) ஞானியும் ஈசனும் ஞானத்தினால் வேறுபாடல்ல... ஒன்றுபட விடாமற்கெடுக்கும் மாயையின் விளையாட்டால், தன்மைகளில் உயர்வென்றும் தாழ்வென்றும் வேறுபடுகின்றது. குளத்து நீரும் குடத்துநீரும் ஊரையும் குடும்பத்தையும் காக்கும்போதில், சிறிது பெரிதென்பது காரியமான தொழிற்பேதமே அன்றி காக்கும் தன்மையில் ஒன்றாவதுபோல, மாயையால் ஈசுவரனுக்கும் அவித்தையினால் ஞானிக்கும் தாரதம்மியம் இருக்கினும், அறிவின் தன்மையில் இருவரும் ஒரு தன்மையரே ஆகுவர் என நீ உணர்ந்திடுக? என்றருளினார்! (எ-று).

(இதுவுமது பற்றியது குளகம்)

42. நரரின் மன்னரைச் சித்தரைப் போலவே
நாரணன் முதலான
சுரர்கண் மாயைவல்லவ ரணிமாதிகள்
ஒக்கமாதவ மிக்கோர்
தரணிமா னிடர்க் கலைகளில் லாமையால்
தாழ்வுளோ ரானாலும்
பிரமபா வனையால் இவரவர் எனும்
பேதமொன்றிலை பாராய்!

அ-வ, உரை = மானிடர்களில் மன்னனும் சித்துகலையில் தேர்ந்த சித்தரும், முறையே அதிகார பலத்தாலும் அற்புத மகிமைகளாலும் எப்படி. மேம்பட்டுள்ளார்களோ? இவர்கள் போலவே பிரம்மா விஷ்ணு உருத்திரரும், மற்றுந்தேவர்களும், மாயையில் வல்லமையுடையவர்களாதலால், அணிமா மகிமா இலகிமா கரிமா பிராத்தி பிராகாமியம் ஈசத்துவம் வசித்துவம் முதலிய அட்டமா சித்திகளும் மிகுந்த மகாதவத்தினை உடையவர்களாவர், பூமியில் பிறந்துவாழும் மானுடர்களுக்கு அச்சித்திகளேதும் இல்லாமையால் தாழ்வுடையவர்களே ஆனாலும், பிரம்ம சிருஷ்டி அம்சத்தால், அவர்கள் தேவர்கள் என்றும், இவர்கள் மாநுடர் என்றும் வேறுபாடுகள் ஒன்றுமில்லை எனக் காண்பாயாக? மற்றுமொன்று,

சிறப்பு விளக்கம் :

1. அணிமா, என்பது? மிகவுஞ் சிறிய உயிர்களாய்தான் மிகவும் நுண்ணியதாய்ச் சென்று சேர்ந்திருக்கும் அதிநுண்மை!

2. மகிமா - மண்முதல் மகாதேவர் வரையிலான முப்பத்தாறு தத்துவங்களின் உள்ளும் புறமும் பரவிப் புணர்ந்து நீங்காதிருக்கும் பெருமை தங்கியதாம்!

3. இலகிமா - மேரு (இமயம்) மலைபோலக் கனமாயிருப்பினும் பரமாணுவைப்போல எடுத்தற்கு எளிதாயிருப்பதுவாம்!...

4. கரிமா - பரமாணு போன்று வடிவுடையதாயினும் மேருமலைபோல எடுத்தற்கு அரியதாய் கனமாய் இருப்பது!

5. பிராத்தி - பாதாளத்திலிருந்து சத்யலோகம் வைகுண்டம் கைலாயமென்றும் அனைத்து அண்டங்களுக்கும் போய் சஞ்சரித்து

மீண்டும் பாதாளம் வரத்தக்கது - இதையே ஆகாய கமனமென்றுங் கூறுவர்.

6. பிராகாமியம் - தான்விரும்பும் வேறு உயிரின் உடலுள் பிரவேசித்தும், தான் இருக்குமிடத்திலேயே தான் நினைத்தவண்ணம் சுகபோகங்களை வருவித்து அநுபவித்தலும் விண்ணுலகங்களிலும் சஞ்சரித்தலும், வல்லதாகும்!

7. சிருஷ்டி திதி சம்மாரம் என முத்தொழிலை நடத்துதலும், சூரியன் முதலிய கிரகங்களை, தனது ஏவலுக்கு நடக்கச்செய்தலும், ஈசத்துவம் வல்லதாம்!.

8. வசித்துவம் - புல்பூண்டு மரம் செடிகொடி முதலிய தாவரங்கள், மனிதர்கள் அரசர்கள் பறவைகள் மிருகங்கள் பூதயக்ஷர்கள் இந்திரனுள்ளிட்ட அஷ்டதிக்குப் பாலகர்களையும் தன்வசப்படுத்திக் கொள்ளுதலாம்!.

அ-கை-குருமூர்த்தியே அணிமாதி அட்டமா சித்திகள் ஈசனுடைய தாயின், மனிதருள் ஞானிக்கு மட்டும் எவ்வாறுண்டாயிற்று? எனின், அவ்வீசுவரர்களைக் கருதி உபாசனையும் பூஜையும் மந்திரஜெபமும் செய்து பெற்றுள்ளனர் என்றார் - (எ-று).

43. **முத்தி நல்கிய சற்குருவே பலமுனி களுக்கு அணிமாதி**
சித்திபூமியிற் கண்டிருக் கவும் அந்தச் செல்வம் ஈசனதென்றீர்
புத்தி ஒத்திட உரைத்தருள் என்றிடிற் புகழுமீசனை வேண்டிப்
பத்திசெய் திடுந்தவத் தால்யோ கத்தால் பலித்த தென்றறி வாயே..

அ-வ, உரை = பிறப்பு இறப்பு எனும் நெடும்பயணத்தைத் தடுத்து அறியாமை இருளகற்றி என்னுள் ஞானவிளக்கேற்றிப் பேரின்ப வீடு வழங்கிய ஞானகுருவே! ஞானபரம்பரை வியாசராதியருக்கும் சித்தபரம்பரை விஸ்வாமித்ரர் துருவாசராதியோருக்கும், அணிமா முதலிய அட்டமாசித்திகளும் உண்டாயிருப்பதைக் கண்டிருந்தும், இவ்வுலகத்தவர்களும் பார்த்திருக்கவும் அந்தச் செல்வமானது ஈசுவரர்களுக்கே உரிமையும் உடமையும் இருப்பதென்று கூறினீர்கள், அச்செல்வங்கள் அவ்வீசுவராதியருக்கு எவ்வாறு வந்துள்ளன என்பதை எனது புத்தியிற்படும்படியாக யான் ஒப்புக்கொள்ளும் விதமாகச் சொல்லவேண்டுமெனக் கேட்பாயாகில்,

துதித்து வணங்கி வழிபடும் ஈசுவரனை முக்கரணங் (மனம் வாக்குதேகங்) களாலும் தொண்டுகள் பலவுஞ் செய்தும் கிரிச்சரம் சாந்திராயணம் தவம் அஷ்டாங்கயோகமும், செய்து பலகாலமும் முயன்று பெற்றனர் என்று அறிவதே உத்தமம்.

சாந்திராயண விரதமென்பது? சந்திரனின் சோடச (பதினாறு) கலைகளும் ஒருநாளைக்கொரு கலையாய் குறைவதும் தேய்வதும் போல, தேய்பிறையில் பிரதமை (1-ம்) நாள் தொடங்கிப் பதினாறு நாளும் ஒருகலைக்கு ஒரு கவளம் - (பிடி) சாதம் குறைத்துச் சாப்பிட்டும் வளர்பிறையில் ஒவ்வொருநாளும் ஒருபிடி - (கவளம்) உணவைக் கூட்டியும் சாப்பிட்டு வருமதுவே சாந்திராயண விரதமாகும்.

அஷ்டாங்க யோகமென்பது :- இயமம் நியமம் ஆசனம் பிராணாயாமம் பிரத்யாகாரம் தாரணை தியானம் சமாதி என்பனவாகும். என்றுணர்ந்து மனதுள் இருத்திடுக?... (எ-று).

அ-கை- முன்காலத்தில் வாழ்ந்திருந்த ஞானிகளைப் போல, இக் காலத்து ஞானிகளுக்கு அவ்வணிமாதி சித்திகள் ஏன்வரவில்லை என்று சீடன் கேட்டனன் (என்றவாறு).

44. சிவசொருபமாந் தேசிக மூர்த்தியே சித்திமுத்திக ளிரண்டும்
தவமுளோ ரடைகுவ ரெனில் அவர்கள் போற்சகலரு மடைவாரோ
அவர்கள் பூர்வஞ் சித்தியும் ஞானமும் அடைந்ததூங் கண்டோமே,
இவர்கள் ஞானிகள் என்றிடிற் சித்திகள் இவர்க்கிலா வகையேதோ?

அ-வ, உரை = மங்களாகாரமாய் என்னெதிரில் தரிசனம் நல்கிடும் குருமூர்த்தியே, அவ்வணிமாதி சித்தியும் மோக்ஷமுமாகிய இவ்விரண்டும், தவஞ்செய்தவர்களே அடைகுவரென்றால் வியாசர் விசுவாமித்திரர் துருவாசரைப் போன்று, இக்காலத்து ஞானிகளும் அடைவார்களோ? அத்தவமுடையவர்கள் முன்புள்ள அணிமாதி சித்தியும் முத்தியும் பெற்றது ஆகமப் பிரமாணத்தால் எனப் பார்த்தோம்!

அ-கை.., கடந்த 44-வது கவிக்கு விடைகூறுதல்.

45. காமியத் தவங் காமியமொன் றையுங் கருதிடாத் தவமென்றும்
பூமியிற் றவமிரு வகைச் சித்தியும் போதமுந் தருமைந்தா
ஆம்இவற் றிலொன் றியற்றினால் ஒன்றையே அடைகுவரிது தீர்வை
யாமுரைத்த அவ்விரண்டையுமியற்றினா ரன்றுள்ள பெரியோரே.

அ-வ, உரை = குருசீட சம்பிரதாயம் தளைக்கவந்த தனயா? அந்த ஞானியர் - தான் விரும்பிய பொருள் போகங்களைப் பெறக் கருதி இயற்றுமதுவே காமியத்தவமாகும். இப்புசிப்பு போகங்களை, உலகம் உயிர்களுக்கு சேமம் விளையச் செய்வதே நிஷ்காமிய கருமங்களாகும், தன்னலம் கருதாத இச்செயல்களே ஞானத்தையும் முத்தியையும் கொடுக்கும், காமியத்தவம் இயற்றிடில் அஷ்ட (வசியம் மோகனம் தம்பனம் ஆகர்ஷணம் உத்வேஷணம் பேதனம் உச்சாடணம் மாரணம் போன்ற) கருமசித்துக்களையே தரும், அவ்வளவே ஆகும். விசுவாமித்திரர் வியாசர் துர்வாசர் போன்ற தீர்க்கதரிசிகளுக்கே அணிமாதி முதலியர் அஷ்டமாசித்திகள் வாய்த்திடும் ஆயினும் இவ்விரண்டு தவநெறிகளில் ஏதொன்றை யார் இயற்றுவரோ, அவருக்கு அதுகிட்டும் ஒன்றை இயற்றினால் இயற்றிய ஒருவகைப் பயனையே அடைகுவர் இதுசத்தியமாகும், ஆனால் யாமுரைத்த காமியத்தவமும் காமியமிகழ்ந்த தவமுமாகிய அவ்விரண்டு தவங்களையும் இயற்றினார். அக்காலத்தில் வாழ்ந்த முனிசுவரர்கள் என அறிந்துணர்ந்து இன்புறுவாயாக? என்றார். (எ-று).

அ-கை, (இதுவுமது பற்றியது - குளகம்)

46. அனக மைந்தனே முத்திஞா னத்தையே அடைந்தன ரல்லாமல்
சனகன் மாபலி பகீரதன் முதலினோர் சித்திகள் பயின்றாரோ
இனிய சித்தியை விரும்பினர் சிலர்சில ரிரண்டையும் முயன்றார்கள்
முனிவர் சித்திகள் வினோதமாத் திரந்தரும் முத்தியைத் தாராதே.

அ-வ, உரை = குற்றங்கள் ஒன்றுமற்ற என் மைந்தனே?... சனகமகாராஜன் மகாபலிச்சக்ரவர்த்தி பகீரதன் முதலியோர்கள் ஞானநெறியைப் பயின்று தெளிந்து நிச்சயித்து, மோக்ஷர்த்தத்தை பெற்றார்களே அன்றி, அச்சித்திகளை வேண்டிப் பயின்றார்களோ? சில முனிவர்கள், உயிர்களுக்கு சிச்ருக்ஷைசெய்து உதவும்படியான

இனிய இதமான சித்தியையும் விரும்பிப் பெற்றார்கள், சில முனிவர்கள், அச்சித்தியும் முத்தியும் பெற மிகவும் முயன்றார்கள், இம்முனிவர்களின் சித்திகள், விசித்திரவினோதமும் நன்மதிப்பு மரியாதையும் தருவதே ஆயினும் ஞானவீட்டின் மோக்ஷார்த்த கதியைத்தரவல்லதல்ல, என்றுணர்திடுக? (எ-று).

அ-கை- சுவாமி, சித்திகளால் யார்க்கும் நிலையான நன்மை ஒன்றுமில்லை என்றறிந்தும் சிலஞானிகள், ஏன் அதை விரும்பினார்கள் என்று கேட்ட சீடனுக்கு குருவானவர் பதில் கூறுகிறார் (எ-று).

47. யோக ஞானமே முத்தியைத் தரும்எனில் ஒழிந்த சித்திகள் வேண்டி
மோகமா யுடல் வருந்தினார்சிலர் சிலமுத்தர் கனேனென்றால்
போகமாய் வரும் பிராரத்த கர்மங்கள் புசித்தன்றோ நசித்தேகும்
ஆகையா லந்தச் சித்திகள் பிராரத்த மாகுமென்றறிவாயே..

அ-வ, உரை = மகனே? சில ஞானிகள் அணிமாதி முதலிய சித்திகளை ஏன் விரும்பினர் எனில்? அதுவும் அவரது பிராரத்த கருமவினைபயனே ஆகும். பலகாலம் முயன்றும் சில முனிகளுக்கு சித்திகை கூடாமல் மெய்வருத்தமும் மனக்கிலேசமும் அடைந்தார்கள் அன்றோ? அவ்வருத்தமும் மனவுலைச்சலும் வீண்முயற்சியும் கூட அவருக்கு அதுவரவேண்டியும் நிகழ வேண்டியுமான பிராரத்த கர்மங்களின் நியதியாகும் அதிலிருந்து அவரும் இல்லை எவரும் தப்பமுடியாதுதானே? ... அதுவும் அவர் பெற்றதும் பெறாததுமான சித்திகள் அநுபவித்தே தீரவேண்டும் என்பதே நியதியாம். அவர்கள் பெற்றிருந்த சர்வ சித்திகளும் அவரவர்களின் இச்சைப்படியே வந்த பிராரத்த கர்ம பலமே ஆகும் என நினைவிற்கொள்வாயாக? (எ-று).

அ-கை - அடுத்தடுத்து வந்த ஐயந்திரிபு (சந்தேகம் - மயக்கம் ஆணவம் அறியாமை அகந்தைகட்கு, ஆகாய வாக்காய் அநுபூதிபதமாய் எடுத்துக்காட்டிய குருவின் பாத தரிசன மகிமையைப் பாராட்டியும் மகிழ்ந்தும் வினோதித்தும் ஞானாச்சாரியரைத் துதித்ததாம்!.

48. இலக்க மாயிரஞ் சுருதியால் ஊகத்தா
லென்மன மசையாமல்
பெலக்க வேண்டுமென் றருள்குரு மூர்த்தி யகப்பிராந்தி
போய்த் தெளிவானேன்
துலக்க மானகண் ணாடியை அடிக்கடித்
துலக்கினாற் பழுதன்றே
அலக்கண் மாற்றிய தேவரீர் எனக்குரை
அமுதங்கள் தெவிட்டாவே.

அ-வ, உரை =நூற்றி எட்டு உபநிஷத்துக்கள், நான்குவேதங்கள், ஆறு அங்கமான சாத்திரங்கள், இவைகளுடையதில் மன ஈடுபாடுடைய யுக்தியினாலும் என்மனம் சலனமின்றித் திரமாயிருந்திட வேண்டி, எனது சந்தேகங் களுக்கெல்லாம், தக்க உவமைகளோடும் பொருள் விளக்கவுபதேசம் வழங்கிய எனது ஞானாச்சாரியரே! எனது மனதுள் தோன்றிய மயக்கங்கள் முற்றும் நீங்கித் தெளிவடைந்தேன், அடுத்தவைகளை அப்படியே காட்டுகின்ற துல்லியத் தூய்மையான கண்ணாடியை அடிக்கடி துடைத்துச் சுத்தம் செய்வதால் குற்றமொன்றும் இல்லையன்றோ? சுவாமின் எனது பிறவித் துன்பங்களை எல்லாம் வேரொடுங்களைந்து என்றுமின்ப வீட்டினுள் இருத்திய குருமூர்த்தியே தாங்கள் அடியேனுக்கருளிய உபதேசவாக்யாமிர்தம் புசிக்கப் புசிக்கத் தெவிட்டா தினிக்கின்றனவே!....

அ-கை-சீவேசுவர செகத்துக் கிரமசிருஷ்டி விவகாரங்களை குருமூலமாய் அறிந்துணர்ந்ததே ஞானப்பிராரத்தம் என்றறிந்தசீடன், அதற்கு வித்தாக உகபத் சிருஷ்டியில் அமைந்திருக்கும் சஞ்சிதத்தை அழிக்கும் பொருட்டு, அதுநசிக்கும்படியான இரண்டு வகையில் எது உண்மை எனக் கேட்டனன் சீடன். (எ-று).

49.கைதவங் களைச் சாத்திரஞ் சொல்லுமோ கருணையா லெனையாண்ட
ஐயனேகுருவே எவராகிலும் அநுபவித்தா லன்றிச்
செய்தகன் மங்கள் விடாவென்ற வசனமுஞ் சென்மசஞ் சிதம்வேகத்
துய்ய ஞானத்தீ சுடுமென்ற வசனமுந் துணிவதுஎப் படிநானே?.

அ-வ, உரை = கருணையினால் எனையாண்டுகொண்டருளும் ஞானாச்சாரிய சுவாமிகளே! சத்தியமல்லா விசயங்களைப் புராண

இதிகாசங்களும் சாத்திரங்களும் கூறுமோ? தான் முன்செய்த கர்மபலன்கள் சஞ்சிதமாயிருந்து, இப்பிறவியிலது பிராரத்தமாய் வந்து கொண்டே யிருக்கும். இது தீரும்வரை செனனங்கள் தொடரும் அநுபவித்தே தீர்க்கவேண்டும் எனவும், இதன் காலமும் பழுவும் தொடர்ச்சியும் மலைபோலக் குவிந்திருந்தாலும் பஞ்சுப் பொதியில் நெருப்பட்டு அது எரிந்து ஒழிவதுபோல ஞான அக்கினியினால், நினைத்த மாத்திரத்தில், அச்சஞ்சிதங்கள் யாவும் அவிந்தொழியும், எனவும் இருவகையாக கர்மவுபாசனாகாண்ட நூல்கள் கூறியுள்ளனவே? இவ்விரு வகை அப்யாசத்தில், நான் எதைத் தள்ளுவது, எதைக் கொள்ளுவது, எனவும் வாஸ்தவம் ஈது என்றும் உறுதியுபதேசம் செய்யுங்கள் ஐயனே?.

அ-கை- 49-வது கவியின் கேள்விக்கு பதில் கூறுகிறார் (எ-று).

50. சீவபே தங்கள் அளவில்லை மைந்தனே செய்கையு மளவில்லை
ஆவரா மவரதி காரங்கள் அறிந்து பக்குவம் நோக்கிப்
பூவலர்ந் தபின்பலன் கள்காட்டுவன போற்பூர்வஞ்சித் தாந்தம்
காவல்வே தங்கள் இரண்டையும் வசனிக்கும் காண்டமும் மூவகையாலே.

அ-வ, உரை = அருகிவந்து அப்யாசிக்கும் முறைமையால் எனது மனதுக்குவந்த மாணவ?... சீவர்களின் வினைப்பதிவு வேறுபாடுகள் இன்னின்னவிதம் இவ்வளவு அவ்வளவு என்று வரையறுத்துக் கூறமுடியாதவாறு அளவுகடந்த ஒன்றாகும். அவரவர்களுக்கு அதுவது அப்படியப்படியே வந்துபொருந்துவதாகும். ஆதலால் அவரவர்களின் பரிபக்குவ காலப் பருவமறிந்து, வித்து ஒன்று முளைவிட்டு இலைவிட்டு பூமலர்ந்து இதுபிஞ்சாகிக் காயாகிக் கனிந்து பயனை கொடுக்க வருவதற்குச் சற்றுக் கால அவகாசம் தேவைப்படுகிறதல்லவா? அதுபோல, நம்மைக் காத்து இரட்சிக்கவே வந்த காவல் தெய்வங்களாம், கருமம் பத்தி உபாசனை ஞான காண்டநூல்களான சுருதிகளின், நான்கு (சரியை, கிரியை, யோகம், ஞானம்) பகுப்புகளினால், ஆரம்ப (பூர்வம்) வாக்யா மிர்த உபதேசங்களும், இறுதி உபதேசங்களும் என்றிரண்டு வகையாகவுஞ் சொல்லியுள்ளன என்றறிவாயாக? (இது சீடர்களின் பக்குவத்தை முன்னிட்டே வேதங்கள், ஆதியும் அந்தமுமான வாக்கியங்களாம் (எ-று).)

(அ-கை- இதுவுமது பற்றியது - குளகம்)

**51. ஆனபாவிகள் அடைவன நரகங்க ளவசிய மானாலும்
தானமந்திர விரதவோ மங்களாற் தவிருமென்பதுவும் பொய்யோ
ஈனமாம் பலசஞ் சிதவினைக ளெத்தனை யானாலும்
ஞானமாங் கனல் சுடுமென்ற மறைமொழி நம்பினால் வீடுண்டே!**

அ-வ, உரை = பாவங்களையே கொஞ்சமும் கூசாமல் தொடர்ந்து செய்துவந்த கொடியமாபாவிகள் நரகங்களையே தப்பாமல் அநுபவிப்பர் என்பது, கருமகாண்ட வாக்யப் படி முற்றிலும் உண்மையே ஆகும். ஆனாலும் இது, தானம் தருமம் மந்திர செபம் யக்ஞாதி கர்மங்கள் விரதங்களால் நிச்சயம் அழியும் அதாவது அதன்பலம் குறைந்து வந்து விரைவில் வரும் செனனங்களில் நற்கதியுண்டாகத் தக்க நெறியிற் செலுத்திப் பயன்தரும் என்பதாகும். இருப்பினும்? இழிவான அனேக சென்மங்களைக் கொடுக்கின்ற சஞ்சிதவினை எவ்வளவு சேர்ந்திருந்தாலும், தான் ஞானஸ்வரூபன் என்ற நிச்சயமுண்டான அந்தச்க்ஷணமே அநுபவ ஞானாக்கினி, சஞ்சிதங்களை எரித்து அழிக்கும் என்ற வேத உபநிக்ஷத் வாக்கியத்தை நம்புவானாயின், அப்போதே மோக்ஷார்த்த முத்தியுண்டாம் என அறிவாயாக என்றார். இன்னும், இது அநுபவித்தே தீரும் என்ற முறையை நீக்கி, ஞானாக்கினியாற் கெடும் என்ற, அறிவின் முடிவானபடியே அப்யாசித்து வந்தால் சஞ்சிதங்கெடு மதுபோல் பிறவிஒழியும் பேரின்பம் விளையும் என்றருளினார் (எ-று).

அ-கை-சஞ்சிதத்தை அழிக்கின்ற ஞானம் இருக்க கர்மத்தை விரும்புவது ஏன் எனசீடர் வினாவினனாம்? ... (எ-று).

**52. என்மனந் திருக்கோயி லாய்த் தினங்குடி யிருந்தருள் குருமூர்த்தி
சென்ம சஞ்சித வினைவேரறுத் திடுங் தேவரீர் மெஞ்ஞானமாந்
தன்மயந் தருமகிமை யைவிபுத ராம்சமர்த் தருமறியாமல்
கன்ம மாங்குழியில் விழுந்தழி கின்ற காரண முரையீரே!...**

அ-வ, உரை = அடியவனின் இருதய சிதாகாசமே கோயிலாய் எழுந்தருளி வாசம் செய்யும் தேசிகசிரோ இரத்தினமே! தாங்கள் அருளி செய்த உண்மை ஞான உபதேசமானது, சனனதுக்கங்கட்கு காரணமாகின்ற சஞ்சித கர்மங்களின் மூலமாகிய அவித்தையை

அழித்து நிற்கும் ஆற்றல் குறைந்த பக்குவர்களும், தனது நிஜசொரூபத்தில் சாரும்படி உய்வுசெய்யும் பெருமை! வானவராம் தேவரும் உலகத்தாரும் தெரிந்தடையாமல் கீழான நெறியாம் கருமங்களின் குழியினில் வீழ்ந்து விடுதலைபெறாது கெட்டொழிகின்ற காரணத்தை எமக்கு உரைத்து அருளிச்செய்வீராக சுவாமி எனக் கோரினன், (எ-று).

அ-கை = 52-வது கவிக்கு பதிலாக வரும், எனலாம்

53. அழிவிலாத தற்பதந் தனைமந் தனேஅக முகத்தவர் சேர்வார்
வழிநடப் பவர்பரா முகமாகி னான்மலர்ந்த கண்ணிருந்தாலும்
குழியினில் வீழ்வர் காணப்படி வெளிமுகங் கொண்டு காமிகள் ஆயினோர்
பழிதரும் பிறவிக் கடலழுந் துவர் பரகதி அடையாரே?...

அ-வ, உரை = உள்முக நாட்டமின்றி வெளிமுகமாய்க் கருதிச் செல்வதுவே கன்மங்களில் புத்தி அழுந்தினவர்களாவார், சீலமிக்க புத்திரனே? பிரம்மமாயுள்ள சச்சிதானந்த பத சொரூபத்தை அகமுக நாட்டமுள்ள முமுட்சுக்கள் அடைவார்கள் உறுதியாக, எதையும் கண்டுகொள்ளாமல் பராமுகநாட்டமாய் வழிநடப்பவர்களின் இமைவிரிந்தும் மலர்ந்த கண்ணிருந்தாலும் படுகுழிக்குள்ளே வீழ்ந்தழிவார்கள்? அப்படியே வெளிமுகமாயுள்ள விசயசுகபோக அப்யாசகாரியங்களை விடாது விரும்பிப் பயனில்லாப் பயனில் சுகங்கண்டுழலும் காமியர் (ஆசைவயப்பட்டவர்)கள், தீராப்பழிக்கே வழிகூட்டும் கர்ம பந்தங்களிலேயே சிக்குண்டு சுழலுவர். பிறவாப் பேரின்ப முத்தியைப் பெறமாட்டார்கள் என்று உபநிஷத்துகளும் புகழ்ந்துள்ளன பாராய்? (எ-று). மேலும் அகமுகம் விட்டு, பகிர் (வெளி) முகப் பயிற்சியே கர்மங்களிற் செல்லுவதற்கேது வாகும், என அறிந்திடுக.. (எ-று).

அ-கை-இது சிவச்செயல் என்றும் இது சீவச்செயல் என்றும் தெரியாத பாமரர்கள், சீவன் வெளிமுகமாவதும் சிவனின் செயலன்றியும் பாவமும் பழியும் தீரமும் தெளிவும் என இச்சீவர்கள் எங்ஙனம் அறிந்து செய்வார்கள் எஞ்ஞான்றும் எல்லாம் சிவன் செயலன்றோ? எனும் சீடனுக்குப் பதில் கூறுகிறார்... (எ-று).

54. சிறந்த நன்மையுந் தீமையும் ஈசனார்
செய்விக்குஞ் செயல்களன்றோ.
பிறந்த சீவர்கள் என்செய்கு வாரவர் கள்மேல்
பிழைசொலும் வகை ஏதோ,
துறந்த தேசிக மூர்த்தியே என்றிடிற்
சுருதிநூ ண் பொருள்,மார்க்கம்
மறந்த மூடர்கள் வசனிக்கும் பிராந்தி
காண்மைந்தனே அதுகேளாய்.

அ-வ, உரை = நூல்களின் நுண்மான் நுழைபுலம் இயல்பாயுடைய எமதாச்சாரியரே! சர்வமாகியப் பற்றுக்களையும் விடவேண்டிய நேரத்தில் இடத்தில் விதத்தில் நீத்த தீரத்துறவியே, நின்மலரே! சிறந்த நன்மையும் தீமையுமது சிவனார் செய்விக்கும் செயல்களல்லவா? அறியாமையே மூலதனமாகக்கொண்டு பிறந்தும் இறந்தும் திரிகின்ற சீவர்கள் மேல் ஏது பிழையாகும், இதிலேது காரணம் எனக் கேட்பாயாகில் மைந்தா இப்படிப் பிதற்றுவது வேதசாத்திரங்கள் கூறிய கருத்தையுணர முடியாத அஞ்ஞானிகளின் கூற்றாகும். எல்லாம் தான் என்ற அகம்மமதை ஆணவஞ் சந்தேகங்களினால் இந்த விபரீத புத்தியின் வலிமைமிக்க விமர்சனம் இதுஎன்றறிவாயாக?... (எ-று).

(அ-கை- இதுவுமது பற்றியது - குளகம்)

55. திகழ்ந்த யீசனார் சிருஷ்டியுஞ் சீவனார்
சிருட்டியும் வெவ்வேறே
சகந்தனிற் பொதுயீசனார் சிருட்டிகள் சராசரப்
பொருள் எல்லாம்
அகந்தை யாம்அபிமானங்கள் கோபங்கள்
ஆசைகள் இவை எல்லாம்
இகழ்ந்த சீவனார் சிருஷ்டிகள் ஆகுங்காண்
நிமலனார் செயலன்றே.

அ-வ, உரை = இவைகளில் ஈசுவர சிருஷ்டி எது சீவசிருஷ்டி எது எனப் பிரித்துக் காட்டியதாகும்? மாயாவுபாதி ரகிதன் கட்டுப்படாதது சர்வசராசரமும் சகலசீவர்களும் சேர்ந்த ஓர்வடிவாம் சமஷ்டிருபனான ஈசுவரனது சிருஷ்டியும், அவித்தியாசகிதன்

(பொருந்தியிருப்பவன்) ஆன சீவர்களின் சிருஷ்டியும் வெவ்வேறானதாகும்? அதாவது, பஞ்ச பூதங்கள் (நிலம், நீர், தீ, காற்று, ஆகாசம் என்ற ஐந்தும் சந்திரன், சூரியன், எல்லாவுயிர்கட்குள்ளும் இருந்து நாதஒளியாய்த் திகழும் பிரம்மம் (சிவம் உணர்வு பேரறிவு) என்ற இந்த எட்டும் சகல உயிர்க்கும் பொதுவான அநுபோகங்களிதுவே! ஈசுவர சிருஷ்டியாகும்! மகனே? சீவ சிருஷ்டி என்பது பொல்லாதது பார்? நான் எனதென்று மமதை அகந்தை ஆணவம் மூவாசை, இராகத் துவேஷங்கள் மிதுனம் என்பதான இனவிருத்திகள் கோபம் போன்றவைகள் எல்லாம் சீவனார்களின், சிருஷ்டிகளாகும், இவைகள் ஈசுவர சிருஷ்டி எனக்கொள்வது சாத்திரஞான விசாரணை இன்மையால் என்றறிக? (எ-று).

(அ-கை-இதுவுமது, பற்றியது - குளகம்)

56.மூவராம் பரன் சிருஷ்டிகள் உயிர்க்கெல்லா முத்திசாதனமாகும்
சீவனார் செய்யும் சிருஷ்டிகள் தங்களைச் செனிப்பிக் கும்பிணியாகும்
தாவராதி கள்நசித் திடில்ஒரு வர்க்குஞ் சனனங்கள் நசியாவாம்
கோபமா திகள்ந சித்திடிற் பந்தமாங் கொடும் பிறவிகள் போமே.

அ-வ, உரை = திருமூர்த்தி வடிவினரான, பிரம்மா விஷ்ணு ருத்திரன் ஆகிய ஈசுவரர்களின் சிருஷ்டிகள் அனைத்தும், உலகில் வாழ்கின்ற உயிர்கள் யாவர்க்கும், உண்ணல், உடுத்துதல், உறைவிடம் நன்மை தீமை காரியங்கள் அதன் புண்ணிய பாவவினைகளைச் சுமத்துதல், அதன்பயனாக, பிறப்பிறப்பில்லாப் பேரின்பம், அல்லது பிறந்திறந்துழற்றிப் பெருந்துன்பத்தையும் மாரிபோல் வழங்குவதாகும்! சீவனார் சிருஷ்டி சஞ்சிதத்தைப் பெருக்கிக்கொள்ளும் ஓர் தணியாத நோயாகும், சீவசிருஷ்டிகள் யாவும் உயிர்வாழ்ந்துய்வதற்கு காரணமாயுள்ள, தாவர ஜங்கமங்களான, புல், பூண்டு, கீரை, செடி, கொடி, மூலிகை, மரம் தாண்ய மணிகள் ஈசுவரசிருஷ்டியாலானவைகள், இவைகள் எதுவும் சீவர்கட்கு கிடைக்காமல் இறந்தாலும் (பட்டினிச்சாவுகள்) யுகப்பிரளயமேயானாலும் சீவர்கள் அழிவதில்லை? இராகத்துவேஷாதி அந்தக்கரணங்களின் மலின (குற்றமுள்ள) வாசனைகள் இறக்க வழியறிந்து கடைப்பிடிக்காததே

இச்சீவர்களின் பிறப்புத் துன்பங்கட்டு காரணமாதலால், சீவசிருஷ்டி உபாதிகளை குருமுன்பாக கேட்டுணர்ந்து ஆணவமாதி கோபம் அறியாமை அகமமதைகளை அகற்றினால் விரைவில் வரும் முத்திநிலை என்பதையும் நீ அறிந்திருப்பாயாக? (எ-று).

(அ - கை - இதுவுமது - பற்றியது - குளகம்)

57. ஈசர்க்காரியம் பிரளயத் தொழியவும் எவர்பவம் ஒழிந்தார்கள்
தேசகால தேகாதி களிருக்க வுஞ்சீவ காரிய மோகம்
நாசமாகிய விவேகத் தினுயிரோடு ஞானமுத்தர் களானார்
பாசமோ கங்கள் பசுக்களின் செயலன்றிப் பசுபதிசெய லன்றே!

அ-வ, உரை = ஆசை, கோபம், ஆணவ அபிமானங்களான சீவசிருஷ்டி நாசமான அப்போதே வீடுபேறுண்டாம், உயிர்கள் புணரமைப்புக்கு ஏற்புடையதாக ஈசுவரசிருஷ்டி உதவிடும், அதனால் நசிக்க வேண்டுவதில்லை எனவுமறிக?... பிரளயகாலத்தில் ஈசுவரசிருஷ்டிகளான பஞ்சபூத பௌதிகங்களும் உயிர்களும் தாவராதிகளும் கூட நாசம் ஆகும், ஆயின் அப்போதும், அவ்வீசுவர சிருஷ்டிகள் அழியாத போதே, சீவர்கள் சிரவணாதி சாதனங்களாலும் கேட்டல், சிந்தித்தல் , தெளிதல்களினால் இராகத்துவேஷாதிகளாகின்ற சீவசிருஷ்டிகளை நசிக்கச் செய்தால் இவ்விவேகத்தால், ஞானமும் முத்தியுமடைவார்கள் என்பது திண்ணமே, இதன்படியே சீவச்செயல் சிவச்செயல் ஈதீது இன்னின்னது என்று கண்டுகொள்வாயாக? (எ-று).

58. அச்சுவத்தம் என்றொரு மரம் அதிலிரண் டரும்பறவைகள் வாழும்
நச்சும் அங்கொரு பறவை அம்மரக் கனிநன்று நன்று எனத் தின்னும்
மெச்சு மங்கொரு பறவை தின்னாதென விளங்குமப் பொருளாக
வெச்சு மாமறை சீவனை யீசனை வகுத்தவா றறிவாயே!.,

அ-வ, உரை = தாவரம் மற்றும் மரங்களுக்கெல்லாம் தலைமைப் பேறுபெற்றது அரசமரம்! என்று சான்றோர்கள் கூறியுள்ளனர். இவ்வரச மரத்தை குடியிருப்பாக கொண்டு அரியவகைப் பறவைகள் இரண்டு வாழ்ந்து வருகின்றன. இவ்விரு பறவைகளில் ஒன்று அம்மரக்கொம்பு கிளைகள் தோறும் தாவித்தாவி இம்மரக்கனிநன்று நன்றெனத் தின்னும், இப்பறவை தாவி திரிந்து கனிகளையுண்டு

மகிழ்வதை மற்றொரு பறவை தின்னாமலிருந்து சாக்ஷிமாத்திரமாய்ப் பார்த்துக் கொண்டிருக்கும் என்று குறிப்புக் காட்டி உவமை கூறியுள்ளது. வேதவுபநிஷத்துக்கள், மகனே, இதில் எவ்வாறு பொருள்கொள்வது எனில், மரத்தில் தாவி நின்று மகிழும் பறவை சீவனென்றும், திண்ணாது கண்டிருந்த பறவையை ஈசுவரனென்றும் கூறியுள்ளவாறு நீயும் உன்னுள் இருக்கும் அவாந்தரப் பறவைகள் இரண்டையும், எது எது? என்னென்ன செய்கின்றது என விசாரித்து உள்ளுணர்ந்து தெளிந்து அறிவாயாக? என்றருளினார் (எ-று).

இதுவரை கூறிய பறவை வாழ்ந்த மரம் அரசு சரி? இது வேர்கீழும், தலைமேலும் உள்ளது. ஆனால் அவ்வேதம் கூறிய சீவேசுவரப் பறவைகள் வாழும் மரத்துக்கு தலைகீழாகவும் வேர் மேல்நோக்கியும் உள்ளது என்பதையும் உய்த்துணர்க?.

(அ-கை-இதுவுமது பற்றியது - குளகம்)

59. இந்தச் சீவனால் வருமறு பகை எல்லாம்
இவன்செய லல்லாமல்
அந்தத் தேவனால் வருமென்ற மூடர்கள்
அதோகதி அடைவார்கள்
இந்தச் சீவனால் வருமறுபகை எல்லாம்
இவன்செய லல்லாமல்
அந்தத் தேவனால் அன்றெனும் விவேகியே
அமலவீ டடைவாரே!

அ-வ, உரை = இச்சீவனே விரும்பிச் செய்த இராகத்து வேஷாதிகள் பதின்மூன்றினது குற்றஞ்செய்கைகளும் இவன் செய்கையால் உண்டானது அன்றி, அவ்வீசுவரனால் உண்டானது என்னும் அஞ்ஞானிகள் கொடிய நரகத்தையே அடைவார்கள் இது திண்ணம், இந்தச் சீவன் நிகழ்த்திய வினைகளும் அதன்பயன்களும் (இராகத்துவே ஷாதிகள் உட்பகை ஆறும் இராகாதிகளேழ் என்றதும் தன்னால் தான் வந்தது அவ்வீசுவரனால் வந்ததல்ல என்று எண்ணும் விவேகிகளே, நிர்மலமான மோக்ஷகதியினை உறுதியாகச் சார்வார்கள். புண்ணியத்தால் பாவத்தையும் தான்தனதெனும் அகந்தையையும் ஈசுவரச் செயல் என்று கருதாமல்

விசாரணையால் சீவசிருஷ்டி என்று துணிந்து அதனைக் கெடுத்தால் முத்திநிலையுண்டாம் என்றறிக? (எ-று).

அ-கை- குருவே ஈசுவர சிருஷ்டி பொதுவுடைமை என்றீர்கள் அவரும் அனைத்துயிர்க்கும் பொதுவானவரன்றோ? அங்ஙனமானால் சீவர்களிடத்து தாரதம்மிய பக்ஷபாதம் நிகழ்வானேன் என்ற கேள்விக்குப் பதில் தருகின்றார்... (எ-று).

60. நலமெய் ஐயனே எல்லவர்க் குந்தெய்வ
நாயகன் பொதுவானால்
சிலரை வாழ்வித்துஞ் சிலரோடு கோவித்துஞ்
செய்குவதேன் என்றாயாகில்
குலவுமைந் தரைதந்தை போற் சிட்டரைக்குளிர்ந்
துந்துட்டரைக் காய்வன்
களைகண்நல் வழிவரச் செய்யுந் தண்டமும்
கருணை என்றறிவாயே?.

அ-வ, உரை = சீவர்களை வெளிமுகப் படுத்தி, வருத்துவதும் பக்ஷபாதகமன்று, பிள்ளாய் கருணையே ஆகும். மெய்ப் பொருளே முன்னிலைச்சுட்டாய் திருமேனிதாங்கி எழுந்தருளிய ஆசிரியரே, அவ்வீசுவரன் அனைவர்க்கும் பொதுவுடைமையானவன் ஆனால், சிலரை இன்புறச் செய்வதும், சிலரைத் துன்புறச் செய்வதும் ஏனென்றாயாகில், தன்கவனிப்பில் மகிழ்ந்திட வந்த மக்கள் என்றும் நற்பயனையே அடையும்பொருட்டு, பக்குவப்படுத்திடவே பிதாவானவன், நேசிப்பதும் கோபிப்பதும் போல, அவ்வீசுவரனும் சிஷ்டபரிபாலனமும் துஷ்ட நிக்ரகமும் செய்வான். சாத்திரங்கூறும் நெறியை சீவர்கள் கடைப்பிடிக்கச் செய்யுந் தண்டிப்புகளும், கிருபையாகும் எனவுறுதி கொள்வாயாக?.....(எ-று).

அ-கை- அவ்வன்னமாகுமானால், ஈசுவரன் யாவரையும் ஏன் இரக்ஷிக்கவில்லை, என்றுவரும் சந்தேகத்திற்கு பதில் கூறுகிறார். (எ-று)

61. மனைவி லங்கறு மைந்தனே கற்பகமரங்
கனல்புனல் மூன்றும்
தனைய டைந்தவர் வறுமையுஞ் சீதமுந் தாகமுந்
தவிர்த் தாளும்
அனைய வீசனும் அடைந்தவர்க் கருள்செய்வான்
அகன்றவர் க்கருள்செய்யான்
இனைய குற்றங்கள் எவர்குற்றமாகும்
என்றெண்ணி நீ யறிவாயே?..

அ-வ, உரை =இது காலமும் உன்னைப் பிறவிப் பிணியில் பிணித்துவந்த சம்சார விலங்கை விசாரணைத் தெளிவால் நீக்கி நிற்கும் சற்புத்திரனே? தன்னைச் சரணடைந்து பிரார்த்தித்த தரித்திரர்களின் வறுமைகளைப் போக்கி வளமான வாழ்வுக்கு தேவையானவைகளை அப்போதே வழங்கும் கற்பகமரமும், தன்னைநெருங்கிநிற்கும் அன்பர்க்கு சீத மிகுந்த குளிர்பனியின் துன்பத்தை போக்கும் அக்கினியும், தன்னை அள்ளிப் பருகிய (குடித்த) வர்களின் தாகத்தை உடனே போக்கிடும் தண்ணீரும், இதேபோல, எல்லாம் வல்ல ஈசுவரனும் தன்னைச்சரணடைந்த பேர்களுக்கு கருணையுடன் அநுக்கிரகஞ்செய்வான், தன்னை அறிந்து சரணாகதி அடையாதவர்க்கு ஈசுவரன் அநுக்கிரகம் செய்யமாட்டான். எதுபோல எனின், தேவையான செழுமைநலம் தரும் கற்பக (மனம்) மரத்திடம் சரணாகதியாகாதவன் வறுமைத் துன்பம் தீருவதில்லை, அக்னியை அணுகாதவனுக்குச் சீதமும் குளிரும் தீருவதில்லை, தண்ணீரை அள்ளிப் பருகாதவனுக்குத் தாகமும் வெப்பமும் தீருவதில்லை. இதனை நன்றாக யூகித்துப்பார் மகனே, அரிய அம்மூன்றையும் அணுகி அநுபவிக்காதவனின் வறுமையும் குளிரும் தாகமும் எப்படித் தீரும் இதில் கற்பகமரம், அக்நி, தண்ணீரை அடைந்து அநுபவிக்காதவனின் குற்றமா? குற்றம்தான், தங்களை வந்து அடைந்து அநுபவிக்க முயற்சியில்லாதவனின் வறுமையும் குளிரும் தாகமும் தீர்க்காதது கற்பகமரம் அக்னி நீர், இவைகளின் குற்றமா? இவைகளிடம் குற்றமில்லை (எ-று). (அ-கை-ஞானம் உண்டாக சீவனுக்கு முயற்சிகளின் வழி முறைகளைக் கூறுகிறார்!. (எ-று).)

62. ஒன்று கேள் மகனே புமான் முயற்சியால் மானிடர்க் கீசன்
அன்று செய்யவே காட்டிய நூல்வழி நடந்து நல்லவர் பின்னே
சென்று துட்டவா தனைகளைவிட்டு விவேகியாய்ச்
செனித்தமா யையைத் தள்ளி
நின்று ஞானத்தை அடைந்தவர் பவங்கள் போம்
நிச்சயமிது தானே!... (எ-று).

அ-வ, உரை = குற்றங்களை எல்லாம் களைந்து நின்ற குமரா? யான் ஓருபாயம் கூறுவதைக் கவனமாகக் கேட்பாயாக? ஒவ்வொரு புருடனும் (சீவன்) மிகவும் பிரியாசைப் படும் முயற்சிகளின்றி இகலோக காரியமோ? பரலோக காரியமோ கைகூடாது, அவரவர் விரும்பும் பயனுக்கேற்ற முயற்சிகளை அவசியம் செய்ய வேண்டியதாகும். மானிடர்களுக்கு நன்மையுண்டாவதற் கென்றே அன்று ஈசுவரன் கருணையுடன், கருமம் பக்தி உபாசனை முதலிய சுருதிகளின் வழியாகவும் சென்றும், ஞானியர்களின் பின்சென்றும், இதுகாறும் தம்மைப் பிணித்திருந்த காமக்குரோதி துர்க்குணங்களை நிவர்த்தித்து, ஆன்மா எது அநான்மா எது சித்து சடம் ஆனந்தம் என்பதேது, நான்யார், அது என்ன்? தத்துவம் அதத்துவம் என்றால் என்ன? இவைகளில் நித்தியமெது அநித்தியமெது என்று விசாரணை செய்து விவேக முண்டாகி கற்பனையாலுண்டாகிய சடம், சிதாபாசம், மாயை, அஞ்ஞான ஆவரணம் மயக்கம் சந்தேகம் விபரீதபாவனாதோஷ புத்திகளை ஒழித்து, கூடஸ்தனாயிருக்கும் பிரம்ம சைதன்யத்தை உள்ளுணர்ந்து உய்த்தவனுடைய பிறவித்துன்பங்கள் நீங்குமிதுவே சத்தியமென்றறிவாயாக?

இன்னும், இக்கவியின் உபதேசவழி நிற்கும் சாதகன், விரைவில், ஈசுவரகிருபை, வேதகிருபை, குருகிருபை முதலியவைகளால் அந்தக்கரண கிருபையும் கிடைக்கப்பெற்று, நின்மலாவஸ்தையும் சாந்தமும் வாய்த்த பின்னர், ஞானத்தெளிவின் நிச்சயமும் உண்டாகும்!. பிறப்பு இறப்புப் பிணிதீரும் முத்தி என்பதுவுமிதுவே, என்றும் அறிந்திடுக?... (எ-று).

(அ-கை-யாதினால் இந்த ஞானம் உதிக்கும்? பதில் கூறுகிறார்)

63. இந்தஞா னந்தான் வருவதெப் படியெனில்
இடைவிடா விசாரத்தால்
வந்தடைந்திடும் விசாரந்தானேதெனில்
மனாதியாம் சரீரத்துள்
இந்த நானெவன் சித்தெது சடமெது
இரண்டுமொன்றாக் கூடும்
பந்தமேது வீடேதுவென உசாவுதல்
பகர்விசார மதாகுமே!

அ-வ, உரை = வித்தியானந்தமான இப்பிரம்ம ஞானமென்பது எனக்கு எப்படிவரும் எனில், இடைவிடாத ஆத்ம விசாரணையால் வரும் விசாரணை என்பது ஏதெனின், அந்தக்கரணங்களின், தொழிலை உய்த்துணர்ந்து, மனமும் புத்தியும் சித்தமும் அகங்காரமும் இவைகளினியல்பு தாரதம்மியங்களை அறிந்தும் தூலவுடல் எது, சூட்சுமவுடல் எது காரணவுடல் என்பதேது. உயிர்தான் எது சிதாபாசம் என்றால் என்ன? சீவன்யார். ஈசுவரன் எங்குளான் பிறப்பு இறப்பை அடைவது எது. பிறவாத பேரின்ப முத்தி எது? சித்து என்பது எது, சடம் எது, சித்து சடம் ஆனந்தம் இவைகளின் சம்பந்தமுடையதெது, பந்தமென்பதேது, இவைகளில் அநித்தியமாவது எது, நித்தியமாவது எதுஎன்று தனக்குள்ளேயே கேட்டு கேட்டுத் தேடுவதே (அகமுகமாய்) விசாரணை செய்தலாகும் என அறிந்து உன்னை (நான் நீ என்றில்லாத) பகுத்தறிந்து கொள்வதே ஆகும்! இவ்வுபாயங்களே ஞானம் உதிப்பதற்கான முறைமை எனவுமாம். (எ-று).

அ-கை-கர்மங்களே முக்கியம் என்னும் கொள்கையைத் தவிர்க்கவும் ஞானம் உண்டாகிட, சற்கருமங்கள் இருக்கவும், இவைகளைவிட விசாரணைபலம் என்பது யாதுக்கெனின், விடை கூறு கூறுகிறார். (எ-று).

64. போனசென் மங்கள் தம்முள் ளனுஷ்டித்த நற்புண்ணிய பரிபாகமே
ஞானமாக் குமேல்விசார மேன்என்றிடில் யாமுரைத்திடக் கேளாய்
ஆனபுண் ணிய மீசுவரார்ப் பணஞ்செயில் அசுசிபோம் சுசிபாகும்
மானதம் பினைவிசாரித்து ஞானத்தை மருவும் என்றறி வாயே!

அ-வ, உரை = கருமங்களின் பயனும் பாகுபாடுகளின் இரகசியமும் இங்கே கூறப்படுகிறது? சுவாமி முந்திய சென்மங்களில் பயின்றுவந்த வேதாகமங்கூறிய சத்கருமங்களின் பரிபாகபயனே ஞானமுதிக்கும் என்றிருக்க, நித்யா நித்யமெனும் ஆத்ம அநாத்ம விசாரணை வேண்டுவது எதுக்காம், என்றாயாகில் மகனே கேள்? தத்தம் வருணாச்சிரமங்கட்குரிய சத்கருமங்களே சிறந்ததாயினும்? இவைகள் பலப்பிராப்தியின் சார்பாகவே செய்யப்படுவதாகும். இதனால் புண்ணியமுமதன்மிகுதிப்பயனுமே வருவதாகும். இப்புண்ணியப் பயனை அநுபவிக்க மீண்டும் மீண்டும் பிறப்பு இறப்பே வரும், இதிலிருந்து விடுபடவும் விசாரணையுடன் வீடுபேறும் கிடைக்க வகை செய்யுங்கருமம்! புண்ணியம் கருதாது ஈசுவரார்பணமாகச் செய்யும் நிஷ்காமிய கருமமாகும்! இதனால், மனதின் தோஷங்கள் யாவும் தீர்ந்து அந்தக்கரணங்களின் தூய்மையும் அதனால் உள்ளது உள்ளவாறு விளங்கும் (மனத்துக் கண்மாசில னாதல் அனைத்தறன் ஆகுலநீறபிற), என்பது குறள், இதனாலேயே முந்திகூறிய நான்கு கிருபைகளும் முழுமையாக வாய்க்கப் பெற்றும், விசாரணை எனும் இரண்டாவதான ஞானபூமியும் வாய்த்து, சீவன் முத்தர்களாவது உறுதி என்றும் அறிவாயாக, (எ-று).

அ-கை-விரும்பிய பல்வேறு இன்பப் பேறுகளை தருவதற்கு பெருமையுள்ளதான கருமம், ஞானத்தைத் தராதோ? எனவினவுதல். (எ-று).

65. பத்தி யும்வயி ராக்கிய மும்பர லோகமும் அணிமாதி
சித்தி யுந்தவ நிட்டையும் யோகமுந் தியானமுஞ் சாரூப
முத்தியுந்தரும் விசித்ர கருமங்கள் மோகமாத்திரந்தள்ளும்
புத்தி தந்திட லருமையோ விசாரமேன் புண்ணிய குருமூர்த்தி!.

அ-வ, உரை = தருமமெல்லாம் ஒருவாய்த் திரண்டெழுந்தருளிய குருவே, ஈசுவரபக்தியும், நிராசையும், சுவர்க்கலோகங்களையும் அட்டமாசித்திகளையும், தியானந்தவமும், இயமநியமாதி அடயோகங்களையும் மூர்த்திதேவதா உபாசனைகளையும் சமாதியையும், சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம், முதலிய பதமுத்திகளையும் பல சத்சம்பத்துக்களைத் தரவல்லதான

கர்மங்கள் அஞ்ஞானத்தை கெடுக்கின்ற இதற்கு, அகம் பிரம்மாஸ்மி என்னும் அறிவையும் தர அரியதோ? இவைகட்கு மேலும் விசாரணை என்பதும் எதற்கு? எனக்கேட்ட சீடனுக்குக் குருபதில் கூறுகிறார்... (எ-று).

அ-கை- மேல்கண்ட கவிக்கு உவமைகூறி பதில் கூறுகிறார்.

66. வேடம் மாறிய பேர்களை அறியவே வேண்டினால் மகனே கேள்
கூடமா மவர் சுபாவங்கள் சீலங்கள் குறிகளாய்ந் தறியாமல்
ஓடியுங் குதித்துந் தலைகீழ் நின்று முயர்ந்தகம் பத்தேறி
ஆடியு ம்பலகர் மங்கள் செய்யினு மவருண்மை தெரியாரே.

அ-வ, உரை = முத்தியினிடமும் அதனைத்தருகின்ற வேதாகம சாத்திர சித்தாந்தத்திடமும், இதனை விளக்கி உபதேசிக்கின்ற குருவினிடமும் நீங்காத அன்பை நாட்டி நிழலாய்த் தொடர்கின்ற மாணியே (மாணவனே) அடிக்கடி மாறுவேடங் கொண்டு பசப்பித் திரிகின்ற நடிகர்களின் ஆர்ப்பாட்டங்களை அறிய விரும்பின்? அவர்களின் குணங்களும் நடைமுறைகளும் அடையாளங்களும், ஆராய்ந்தால் இவர்யாரைப் போன்றவர் என அறியமுடியாது? குறுக்கு நெடுக்குமாய் ஓடுவதும் துள்ளிக் குதித்தாடுவதும், தலைகீழாய் கரணம் போட்டும் உயரமான கொடிக் கம்பத்திலேறி ஆடியும், இன்னும் பலவான கூத்தும் கொக்கரிப்பும் காமெடிகள் பல செய்தாலும், இவர்களின் நிஜவடிவத்தை, நூடி உணரும் தன்மையை (தன்னை) அறியமாட்டார்கள் (எ-று).

அ-கை- (மேற்கவிக்கு உத்தரம் - பதில் - கூறுகிறார்.)

67. இன்னவா றந்தப் பிரம்மத்தை யறிவிக்கு மிலக்கணமாம் வேதஞ்
சொன்ன ஞானமும் விசாரத்தால் வருமன்றிச் சுருதி நூல் படித்தாலும்
அன்னதானங்கள் தவங்கள் மந்திரங்க ளாச்சாரங்கள் யாகங்கள்
என்னசெயி னுந்தன்னைத் தானறிகின்ற திவைகளால் வாராதே!...

அ-வ, உரை =இதேபோல, பிரம்ம ஸ்வரூபமாம் சர்வ இலச்சியார்த்த சொருபத்தை அறிவிக்க வேதாந்த மகாவாக்கியார்த்த நிருபகமும் நித்யமெது அநித்யமெது உலகமெது உயிரெது உடலெது உடமை உரிமைகளெது, இவைகளுக்கும் உள்ள சம்பந்தம் எது எப்போது இது வந்தது எதுவரையிருக்கும், எதனால் தீரும், இவைகளில் நான்

என்ற அபிமானம் ஏன் வந்தது, இவைகளிற் சத்தியமாயுள்ளது எது என்றடிக்கடி உள்ளுசாவி (விசாரணையி)னால் தன்னையுள்ளவாறு அறியலாம்! அன்றி, வேதபுராண சாஸ்திரங்களைக் கேட்டாலும் பாடம் செய்தாலும், அன்னதானம் பல செய்தாலும், பஞ்ச எக்ஞாதி கருமங்களைச் சரியாக செய்தாலும் தவம் இயற்றினாலும், ஆசாரங்கள் சீலங்கள் நோன்புகள் யாகங்கள் யோகங்கள், மந்திர ஜெப உச்சாரணங்களாலும் ஆகிய எவ்வகைக்கருமங்களைச் செய்தாலும் ஆத்மாவாகிய தன்னைத் தரிசிக்க முடியாது என்று உறுதி கொண்டறிவாயாக? ... ஒருவன் உண்மைப் பொருளை அவனுக்கு அறிவிக்குஞ்சத்தி, உணர்வொளி ஒன்றுக்கே ஆகுமன்றி, எத்தொழிலுக்குமாகாது? ஞானத்தையூட்டி உய்வுபடுத்துவது விசாரணைக்கே அன்றி கருமங்களுக்கு நிச்சயம்இல்லை என அறிந்திடுக?... (எ-று).

அ-கை-ஞானம் தோன்றிட அஞ்ஞானத்தை நீக்கவேண்டும் ஆயின், விசாரத்தால் மட்டும் (கருமமின்றி) எங்ஙனம் நீங்கும் ஐயனே! எனக் கேட்டனன் சீடன்!. (எ-று).

68. **துளங்குந் தர்ப்பண மழுக்கறக் கைக்கொண்டு துலக்கினாற் போமன்றி விளங்கும் புத்தியால் உலகிலார் துலக்கினார் விமல தேசிக மூர்த்தி களங்க மாகுமஞ் ஞானமும் அப்படிக் கருமத் தாற் கழுவாமல் உளங்கு றித்த ஞானத்தி னாலெப்படிஒழியு மீதருள்வீரே!**

அ-வ, உரை = திரிமல மற்றுவிளங்கும் தீர்க்கதரிசியே, முகம் பார்க்கும் இரசம்பூசிய செப்புக்கண்ணாடியில், நீரும் தூசியும் படிந்து அழுக்காகினால் முகம் உள்ளவாறு சரியாகத் தோன்றாது அவ்வழுக்கை ஏதேனும் உபாயமாக கருவியுங் கையும் கொண்டு துலக்கினால், தூசுழுக்கு தீர்ந்துசுத்தமாகி, முகம் சரியாகத்தோன்றும், அதுபோல, உலகில் உள்ளவரும், ஞானத்தால் துலக்கவில்லை அன்றோ? இவ்விதமே களங்கப்படுத்திவந்த அஞ்ஞானத்தையும் ஏதேனும் முற் கருமத்தாற் போக்கிட முயற்சி செய் என்னாது, மனத்தினறிவினால் எங்ஙனம் நீங்கிடுமிதைக் கூறுவீராக? சுவாமி என்றான் சீடன்... (எ-று).

அ-கை- (ஆன்மாவை மறைக்கும் அஞ்ஞானத்தை நீக்குவது விசாரணையால் மட்டுமன்றி, ஞானமுதிக்க, கருமங்களினால் கூடவே கூடாது எனல்.)

69. தர்ப்பணத்தினிற்களிம்பு சகசவாஸ்தவ மலஞ்சகசமாத லின்மைந்தா
கற்பளிங் கினிற் கருமைநிறஞ் சகசமாக் கருத்ததன்று ஓராரோபம்
தர்ப்பணத் தினிலழுக்கற வேண்டினால் சாதனத்தொழில் வேண்டும்.
கற்பளிங்கினி லாரோபமே கருப்பெனக் கண்டிட மனம் போதும்

அ-வ, உரை = குழந்தாய்? முகம்பார்க்கும் கண்ணாடியில் தூசு களிம்பு போன்றவை சகசமாகப் படிந்துள்ள அழுக்காகும். ஆனால் படிகக்கல்லின் கருப்புநிறம் சகசமாய்க் கருத்ததன்று கற்பித ஆரோபம், செப்புக் கண்ணாடியில் சகசமாய்ப் படிந்து உள்ள அழுக்குகளைப் போக்கவேண்டுமெனின்? உபகரணகருவிகளும் கரமும் கொண்டு செயல்பட வேண்டியது அவசியமாகும். படிகக் கல்மணியில் தோன்றும் கருப்புநிறம் வாஸ்தவமன்று கற்பிதமாயுண்டாகும் ஆரோபம் எனக் கண்டிட மனம்போதும் சாதனம் செயல் எதுவும் வேண்டாமே.? (எ-று).

அ-கை-69-வது கவிக்கு உவமையுடன் பதில் கூறுகிறார்.

70 இங்கு மப்படிச் சச்சிதானந்தத்தி லிடர்சடம் பொய்மூன்றும்
தங்கும் மாயையின் கற்பித மன்றிச் சகசவாஸ் தவமன்றே
பங்கமா குமஞ்ஞா னத்தைக் கருமங்கள் பகைசெய்யா உறவாக்கும்
துங்க ஞானமே கரும அஞ்ஞானத்தைச்சுடு கின்றநெ ருப்பாமே.

அ-வ, உரை = இங்ஙனமாகும் உவமானத்தைப்போல, அந்தஉறுதியான வாக்கியத்திலும், சத்து சித்து ஆனந்த சொரூபமாகிய தன்னிடத்தில், திருசியங்களாகின்ற தடைகளும், உணர்வற்ற சடமும், துக்கந் தருவதாகிய பொய்யும், இருப்பதாக இருந்ததாக எண்ணுவது, மயக்கத்தில் வந்த விபரீத கற்பனை (மாயா சகிதமே) யே அல்லாமல், சுபாவீகமான உண்மையல்ல.. கேடுகளையே தருகின்ற அஞ்ஞானத்தை, புண்ணிய கருமங்களாயினும் பகை செய்யாது, உறவுடன் படிந்த உரிமை செலுத்தும்? மேலான மகாவாக்கிய நிச்சய ஞானமே கருமங்கள் எனும் அடர்ந்த பெருங்கருங்காட்டினை எரித்துத் தன் மயமாக்கும் ஞானத் தினது (நினது நிஜவடிவ இயல்பு) என்று உறுதிகொண்டு சந்தேகங்களை ஒழித்திருப்பாயாக? என்றார். (எ-று).

அ-கை- மேற்கூறிய பதிலையே உறுதிப்படுத்திடவற்புறுத்தியே மீண்டும் ஒரு உவமை உருபு அணிகலன் சூட்டுகிறார்!. (எ-று).

71. மனைக்குள் வைத்த பண்டங்களை மறந்தவன்
வருடம்நூறு அழுதாலும்
நினைத்து நினைந்துணர்ந் தபின் கிட்டு மப்படியிந்த
நிர்மல ஆன்மாவும்
அனர்த்தமான மறதியைக் கெடுத்துத் தன்னறிவாள்
தனைக்காணாமல்
கனத்த கன்மங்கள் நூறுயுகஞ் செய்யினுங்
காணுமோ காணாதே?.

அ-வ, உரை = இக்கவியின் உவமையை உபநிஷத்துக்கள் கண்ட சாமீகர நியாயம் என்று கூறியுள்ளது! ஒருவர் வீட்டிற்குள் யாதானும் ஓர் பொருளை வைத்துவிட்டு, மறந்துவிட்டு, பின் அப்பொருள் தேவைப்படும்போது கிடைக்காமல், வைத்த இடம் மறந்து பெரும் அவதியுடன் தேடினார் ஆயினும் கிடைக்கவில்லை. (நேற்று ஒரு சுபநிகழ்ச்சிக்கு சென்று திரும்பிய பெண் ஒருத்தி தான் அணிந்தருந்த ஆபரணங்களை எல்லாம் கழற்றி (ஒன்றைத்தவிர) வைத்தாள், மறுநாள் ஒரு நிகழ்ச்சிக்குப் போக, ஆபரணங்களை எல்லாம் எடுத்து அணிந்து கொண்டாள் மேலும், ஒரு ஆரத்தை (நெக்லஸ்) தேடினால் கிடைக்கவில்லை? தேடும் பொருள் கிடைக்கவில்லை என்றால் வீடுகாடாகும் அலங்கோலப்படும் யாரும், அந்நேரம் பிள்ளையோ கணவனோ மாமன்மாமி உறவினரோ குறுக்கிட்டு என்ன ஏது என்று கேட்டுவிட்டால் போதும் கோபத்தின் உச்சியிலே நின்று சீறுவர். அலங்காரம் எல்லாமிப்போது தலைவிரிகோலமாய், வீட்டுவாசலுக்கு வந்தாள், இவள் நிலையைப் பார்த்த எதிர்வீட்டு பெண் ஒருத்தி அக்கா ஏன் இவ்வளவு பதட்டமாயிருக்கிறாய் என்றால்? பதிலாக, அவள் ஒரு ஆரம் (நெக்லஷ்) காணோம் தேடித்தேடியும் காணவில்லை என்றால், இந்த ஒரு நகையை அவள் கழுத்திலிருந்து நேற்று கழற்றி வைக்காத அந்த ஒரு நகைதான் அது, உடனே எதிர் வீட்டுப்பெண் அதுதான் உன் கழுத்திலேயே இருக்கிறதே என்றாள், வெகுநேரம் அந்த நகையைத் தேடித்துவண்டவள், தன் கழுத்தைத் தடவியதும் ஆமாம்! அட நானொரு பைத்தியக்காரி கழுத்திலேயே வைத்துக்கொண்டு வீடுமுழுவதும் தேடிக் காலத்தை வீணடித்துக் கவலைக்கும் ஆளானேன் என்று பொருமிப் பெருமூச்சுவிட்டுப் பின் கவலை ஒழிந்தால் என்பதே அந்த, கண்ட சாமீகர நியாயம்

எனப்புரிந்து கொள்வாய்! மகனே + கண்டம்-கழுத்து, சாமீகரம் - ஆரம் நியாயம் உவமை + இப்படி அழுந்தாமல், நேற்று எங்கே எப்போது எப்படி வைத்தோம் என ஒவ்வொரு அலசலாக உள்நினைந்திருந்தால் மறதி கலைந்து நினைவு வரும், வரவே நாம் தேடிய பொருளும் கிடைக்குமே அல்லாமல், பல்வேறாகிய கருமங்களால் நூறுயுககாலம் தேடினாலும் கிடைக்குமோ? கிடைக்காது, மறதி எனும் அஞ்ஞான ஆவரணம், நினைவு வந்தவுடன் நீங்கிவிடும், துக்கம், அதுபோல? அன்பனே உனது நிஜவடிவாம் சுயம்பிரகாசப் பிரம்மச்சுடரை, உனது மறதியினால் ஒழிந்திருந்தாய், மேற்கூறிய உவமைபோல என்றார். நீ உன்னைத் தேடித் தெளிந்துணர்ந்து இன்புறுவாயாக? .. என்றார் (எ-று).

அ-கை-பிரம்மானந்த சுகத்தை விசாரணை ஞானமே கொடுக்கும் என்ற வேதம், இச்சுகத்தை கர்மங்களும் கொடுக்கும் என்றுங் கூறியுள்ளது ஏன் என கேட்டனன்?... (எ-று).

72. நன்மை யாங்குரு வேசுகந் தருவது ஞானமே எனும்வேதம்
தன்மபாவ மச்சிரங்களால் தேவர்கள் தருவிலங்குகள் மாந்தர்
சென்ம மாகுவசாதி யாச்சாரமே செய்தவஞ் சுகம் என்று
கன்ம காண்டத் துள்விதித்த தேன் விதித் துள்ளகாரண முரையீரே.

அ-வ, உரை = எனக்கும் என்போன்றோருக்கும் நன்மையை வழங்கிடும் எனதாசிரியரே! பிரம்மானந்தத்தைத் தருவது வித்யானந்தப் பேரறிவே என்கின்ற சுருதி சாத்திரங்கள் எல்லாம், புண்ணிய கருமங்களை மிகுதியாய்ச் செய்தால் தேவர்களாகவும், பாவகர்மங்களை மிகுதியாய்ச் செய்தால் செடிகொடிமரம், மிருகம் பறவை முதலிய ஜந்துவகைத் தோற்றங்களாவும், பாவ புண்யக் கலப்பாகிய மிஸ்ரகருமங்களை மிகுதியாகச் செய்தால், மனிதர்களாகவும் பிறக்கவேண்டியது அவசியம் வரும். என்றும், இதில் வருணாச்சிரம தருமப்படிச் செய்வதே சிறந்த கர்மயாகமும் நிலைத்த சுகமும், என்று கரும காண்ட நூல்களில் கூறியிருப்பது ஏன்? இவ்வாறு விதித்த காரணத்தை யான் தெரிந்துய்ந்திடுமாறு அருளிச்செய்யுங்கள் சுவாமி என்று கேட்டனன்.. (எ-று).

அ-கை- வேதங்கள் அவ்வாறு விதித்த அபிப்ராயம் (உள்கருத்து) மறைப்பொருளான நன்மைதருவதே கருத்தாகும். என அறிக,,, (எ-று)

73. தினமுமண்ணுகர் பிள்ளைநோய்க் கிரங்கியே
திண்பண்டமெதிர் காட்டி,
கனமருந் துகள்ஒழித்து வைத்தழைக்கும்
கருணையாம் தாய்போல
மனையறங் கள்செய் மகங்கள் செய்நன்றென்று மலர்ந்த
வாசகம் சொல்லும்
நினைவு வேறுகாண் சுவர்க்க காமிகள் இந்த
நிர்ணயம் தெரியாரே

அ-வ, உரை = தவழ்ந்திடும் பருவமான குழந்தை அடிக்கடி கைக்குக் கிடைத்த மண்ணைத்திண்பது போல, இக்குழந்தைக்கு அசீரணக் கோளாறுகண்டு துன்புறுவதை யுணர்ந்த தாயானவள் பல்வேறு சுவையான மருந்துகளை தேனிலும் பாலிலும் சர்க்கரையிலும் மறைத்து (கலந்து) மருந்து என்று குழந்தையிடம் கூறாமல் இதோ? தேன் பால் சர்க்கரை என்றும் பிரியமான பொருளின் பெயரால் கொடுக்குமது, வீணாக குழந்தையை ஏமாற்றுவதற்கல்ல, குழந்தையின் நோய் தீரவேண்டுமென்ற கருணையினாலாம். அதுபோல, இல்லறத்திலும் நல்லறமாக வேண்டிச் சீவர்கள் அவசியம் உய்வுபெறக் கருதியே, ஒழுக்கம் கடைப்பிடி, பெரியோரை பேணுதல் செய், தானதருமங்கள் செய், கல்வியைக் குற்றமற கற்றுக்கொள், அன்னைபிதா மக்கள் மனைவி உறவினரையும் நேசித்திரு யாகயக்ஞ ஓமங்கள் பூஜை தியானம் செய் நித்யம் அநித்யம் அறிந்திரு? இதுவே உனது பிறவிப்பயனை அடைய வழிகூட்டும் என்ற, அன்பினால் மலர்ந்த வேதங்கள் கூறியுள்ளதின் கருத்து இதுவாகும், மேல்நோக்காகக் கருதிச் செய்யும் சுவர்க்க போகாநுபவப் பிரியமுஞ்சுயநல விரும்பிகள், இவ்வாக்யத்தின் நுண்ணுண்மையை உணரமாட்டார்கள் என்றே அறிந்திடுக? என்றருளினார்! ... (எ-று). இன்னும் இம்மை இன்பத்தை நீக்கவும் மறுமை இன்பத்தைச் சேர்க்கவும், இவை நீங்கவும் அதையும் நீக்கி பரமானந்தப் பிராப்தியை வழங்கக் கருதியே அவ்வாறு கூறியுள்ளது வேதம்!...

அ-கை. சுகபோக சம்பத்துக்களை அநுபவிக்க வேதம் விதித்துள்ள உபாயம் யாதென, அதற்கீடான உவமை, கூறுதலாம்.

74. **போகமா ருயிர் கண்டதை யுண்பதும் புணர்வது மியல்பே காண்**
ஆகமங் களுஞ்சு பாவத்தை விதிக்குமோ அத்தனை தெரியாதோ
காகமே கருத்திரு நெருப்பேசுடு கசந்திடு வேம்பே நீ
வேகவா யுவே அசையென வொருவரும் விதித்திட வேண்டாவே

அ-வ, உரை =பசியை உடைத்தான சீவர்கள், தன்முன் எதிர்ப்பட்ட உணவு திண்பண்டங்களைப் புசித்திடுவதும், அருந்துவதும், தன்னைவிரும்பி நெருங்கிய பெண்களைக் கூடிப்புணர்வதும் எவ்விதமான உயிர்கட்கும் சுபாவீகமாயுண்டாகும் இயல்புகளே ஆகும். இவ்வுயிராதிகட்கு மேற்கூறிய விசயசுகபோகங்களை மறுத்துகுறுக்கீடு செய்யுமோ இதுகூட வேதத்திற்கு தெரியாதோ? காகமே நீ கருத்திருப்பாயாக, அக்நியே சுட்டெரிப்பாயாக? வேம்பே நீகசந்திடுவாயாக மந்தமாருதமே (காற்றே) நீ வேகமாகச் செல்வாயாக என்று ஒருவரும் உத்தரவு போட வேண்டாமே? (எ-று).

அ-கை-கர்ம காண்டம் என்பது பூர்வபட்சமென்னும் உத்தியை (ஆரம்பகால நியமவுபாயமாய்) கூறுகிறார்.... (எ-று).

75. **கள்ளுமூணும்நீ விரும்பினால் மகங்கள்**
செய்கா மத்தின் மனதானால்
கொள்ளும் பெண்டொடுகலவிசெய் எனிலிவன்
குறையெலாம் தொடானென்றே
தள்ளும் வேதத்தின் சம்மதம்
சகலமுந் தவிர்வதே கருத்தாகும்.
விள்ளுமிவ் விதியென் னனிற்
பூர்வநியமாம் விதியன்றே...

அ-வ, உரை = பொருள்நிறைச் செல்வனே? சீவர்களுக்கு வேதங்கள் கட்டளையிடவில்லை. விலக்கவேண்டியவற்றை விலக்கிடு மாறும் கைக்கொள்ளப்பட வேண்டியவற்றையே கொள்ளுமாறு நெறிமுறைகளை கூறியுள்ளதே அன்றி, எவ்விதக் கட்டாயமும் செய்யவில்லை என்றறிக? மதிமயக்கந்தரும் கள்ளை (மதுபான வகைகளை)யும் உடல் ஆரோக்யம் மனநலம் பாதிக்கச்

செய்யும் மாமிச உணவையும் சாப்பிடாதே என எச்சரிக்கின்றது வேதம். இவைகளை நீ உபயோகிக்க விரும்பினால், எக்ஞம் யாகம் இவைகளை முன்னிட்டு முறையே செய்து மதுமாமிசங்களை தேவர்களுக்கு அவிசாக (உணவாக) வேதனம் பண்ணிப் பின் உண்பாயாக, என்றும், உடல் உறவு எனும் கலவியை நீ விரும்பினால், நீ உன் மனைவியிடம் கூடி இன்புறுவாயாக என (மனிதனுக்கு (கருமகாண்டநூல் நெறிமுறைகளை வகுத்து வழி நடத்துவதால்) கிடைத்தற்கரிய பொக்கிஷம் வேதம் என்றுணர்க? ஆயினும், மேற்கூறியவைகளை அவசியத்தேவை ஏற்பட்டால் பயன்படுத்துக? அவசியமும் வேண்டாததுமானவைகளை இயமம்செய் (விட்டுவிடுக) அவசியத் தேவைகளை மாத்திரம் ஏற்புடையதாய்க் கொள்க, (நியமம்) என உபாய நுண்மையை கூறும் வேதம் சர்வாபராத உபயோகங்களையும் விடுக என ஆரம்பரது கூறுவதே கருத்தாகும்! எவ்வுயிர்களின் விருப்பம் எதுவாயினும், கண்டிப்பதே அன்றி கட்டாயப்படுத்திடவில்லை, என்றும் ஆய்ந்துணர்ந்திடுக? என்றருளினார்.. (எ-று).

அ-கை-இவ்விதிகளும் உயிர்கள் ஈடேறும் பொருட்டுக் கருணையினால் பூர்வ பக்ஷம் (நமது எதார்த்த நிலை அறியும் பொருட்டுக் கூறப்பட்டது (இடிப்பாரை இல்லா எமரா மன்னன் கெடுப்பா ரில்லானுங் கெடும், எனும் திருக்குறள்) என்றறிக?... (எ-று).

76. மதுவிறைச் சிகள் உண்ணென்ற சுருதி பின்
மணந்து பாரெனல் பாராய்
மிதுனவிச்சையும் புத்திரோற் பத்தியால்
விரும்பென்ற விதிபாராய்
அதையும் விட்டொழி அதிநைட்டிக வன்னிக்
கிகழ்ச்சி யற்றதும் பாராய்
இதையறிந்து கன்மங்கள் ஆசைகள்
ஒழிந்தானந்தமடைவாயே!

அ-வ, உரை = மது மாமிசங்களைப் புசி என்ற வேதமும் பின்பு நீ அவைகளை தன்னிச்சையாகப் புசிக்காமல், தேவாராதன நிவேதனமாக்கிப் பின்பு சித்திடு என்பதைப் பார். மனைவியுடன் கூடி மட்டும் புத்திரப் பேற்றினுக்காக ஈடுபாடு கொள் என்னும் விதியையும்

பாராய்? இவ்விதியையும் விட்டொழிந்த பிரம்மசாரி சன்னியாசிகளுக்கு வருத்தமும் இழிவு மற்றதையும் பாராய், இவ்வாறு கூறியதன் உட்கருத்தையுள் உணர்ந்து, அகம்புறம் வளைந்து வரும் கர்மங்களைச் செய்துள் துறந்து, யாகம் செய்து கர்மாதீதனாய் பேரானந்தமடைவாயாக? இன்னும்

விதித்த கருமங்கள் மாந்தர்க்கு நன்மையே பயக்கும், நிஷேத (தள்ளிய) கருமங்கள் துக்கமும் பிறவித்துன்பங்களையே தருவதாகும்? புத்திரன்வேண்டியே மனைவியொடு மட்டும் கூடி இன்புறுக? அன்னிய ஸ்திரீகளுடன உடலுறுவு கூடாது? இம்மையிற் பழியும் மறுமையிற் பாவமும் இதனால், மறுமைக்கண் நரகமுந் துக்கமுமுண்டாம் என எச்சரிக்கிறது. விதிவிலக்குத் தினங்களில் மனைவியோடும் கூட சம்மதிக்காதே? ஏனெனின், துர்ப்புத்திரர்கள் உண்டாகும், அதனால் பாவமும் பழியும் நரகமும் துக்கமுமே சம்பவிக்கும். விதித்த தினங்களில் மட்டும் மனையாளொடு கூடின் சற்புத்திர பாக்கியம் பெறுவாய்! அவர்களால் மிக்க புகழும் பொருளும் பெறுவதுடன் உன் குலத்துக்கும் பெருமைசேர்க்கும் என்ற விதியும் உணர்ந்திடுக?

(அமிர்த வர்ஷிணியின் சிறப்பு விளக்கம் வருமாறு)

வேதம் கர்மகாண்டத்தில் கூறும் விதி விலக்கு இரகசிய அநுபவம் முறைகளை எப்படி? எதற்காக கூறிற்று? சூத்திரன், வைசியன், சத்ரியன், பிராமணன் என்ற வருணத்தார்களும், பிரம்மசாரி கிரகஸ்தன் வனப்பிரஸ்தன் சந்யாசி எனும் ஆசிரமவாசிகளும், அநுபவிக்கின்ற சுகபோகங்களினால், இன்பம் போன்று தோன்றிப் பின் துன்ப மயமாகவே முடிகின்ற இவைகளை விடுத்து, நித்ய பரமானந்த சுகத்தையே உயிர்கள் (மாநுடர்கள்) அடைந்திடுவதே அதன் கருத்தாகும். செய் என்பதேவிதி? இதனைச் சீர்மைப் படுத்துவதே விலக்கு! என அறிவாய். இல்வாழ்வான் ஒருவன் தன் மனைவியொடும் கலவிபெற விதித்த தினங்கள் ஏதெனின்?..

ஒருமுறை பெண்களின் மாத(விடாய்) ருதுவாவதிலிருந்து, 16-ல், இந்நான்கு விலக்கு நாட்கள் போக மீதமுள்ள, 12- நாள் மட்டும் சேமம்! இந்த ஒப்புதலிலிருந்தும் மிஞ்சிய - 14- நாள்களும் மத்திம பலனே சேருமென்றறியவும். பதினாறு நாட்களுக்கு ஒருமுறை, இதில்

மாதவிடாய் நாளிலிருந்து, ஏகாதசி, திரயோதசி, அமாவாசை, பௌர்ணமி, திதிகளான இந்நான்கு தினங்களிலும் கூடினால், செல்வச் சிதைவும் ஆரோக்ய நாசமும், பெரியோர்களின் சாப தோஷமும் துர்ப்புத்திர வர்க்கங்களும் உண்டாகி இதனால் இம்மையிற் பழிபாவந் தீவினைப் பயன்களும், மறுமையிற் (கீழான தொடங்கி), ஆறு எட்டு பத்து பனிரெண்டு பதினான்கு பதினாறாந்தினங்களில் கூடினால், ஆண்குழந்தைகளும், இவ்விரட்டை நாட்களை விட்டு, ஒற்றைபடும் நாள்களில் கூடினால் பெண்குழந்தைகளும் உண்டாகும. இப்படி விதிகளை மீறாமல் நடந்து கொள்ளும் கிரகஸ்தனும் சந்நியாசியே ஆவான் அவன் வாழ்வின் வழி முழுதும் இன்பமயமேயாகும்!. என்றருளினார். (எ-று).

அ-கை-முற் கூறிய வாறே ஞானம் அஞ்ஞானத்துக்குச் சத்துரு ஆனால், அதுவும் இதுவுங்கூடி ஒரு தொழிலைச் செய்வதாகுமோ?

எனக் கேட்டனன்......................(எ-று).

77. உலக மானவஞ் ஞானமும் கருமமு முறவுஎன்ற வழிகூடும்
பலவு மானவஞ் ஞானமும் ஞானமும் பகையென்ப துளதானால்
நிலவிலே மருப்போல அஞ்ஞானமும் நிமலஞா னத்தோடே
குலவிநின் றிந்தச் சிருஷ்டிகள் செய்யவுங் கூடுமோ குருமூர்த்தி!

அ-வ, உரை = ஞானாச்சாரிய சுவாமிகளே., உலகியல் வடிவமான அறியாமையும், தானதர்ம ஞக்ஞாதி சற்கருமங்களும் நட்புள்ள தாயிருக்கும் என்றதை ஒப்பக்கொள்வேன், ஆயினும் பல்வேறு விதவடிவங்களாயுள்ள அஞ்ஞானமும், ஒரே தன்மையாயுள்ள பிரம்மஞானமும், ஒன்றுக்கொன்றில் உடன்படாத சத்துரு (பகை) என்றும் உள்ளதானால், குளிர்ந்து ஒளிவழங்கும் சந்திரனை மேகம் சூழ்ந்து மறைப்பது போல, அஞ்ஞானமாகிய குற்றம், ஞானத்தோடுஞ் சேர்ந்திருந்து, இகபர உலகியல்களின் சிருஷ்டி முதலிய ஐந்தொழில் (படைத்தல், காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல்) களைச் செய்திடவுங் கூடுமோ? ஐயனே.. சுயமல்லாத எட்டுப்பிரகாசங்களும் சச்சிதானந்தனாகிய எனையன்றிப் பிரகாசித்திடாதே என்பது சீடனின் சந்தேகக் கேள்வியாகும்.. (எ-று).

(அ-கை-மேற்கவிக்கு விடை (உத்தரம்) கூறுகிறார்)

78. சொரூப ஞானமும் விருத்திஞா னமென்றுஞ்
சோதிஞானம் இரண்டாம்,
சொரூப ஞானமே விருத்தியின் ஞானமாய்த்
தோன்றும் வேறில்லை மைந்தா,
சொரூப ஞானமோ அஞ்ஞான சத்துரு வன்று
சுழுத்தியிற் கண்டாயே,
சொரூப ஞானத்தின் மருவுமஞ் ஞானத்தைச் சுடும்
விருத்தியின் ஞானம்.

அ-வ, உரை = மாணவ? எட்டுப் பிரகாசங்களுக்கும் தலையாய பிரகாசமான சுயம்சோதிப் பிரகாசமே பரஞானமாகும்! இதனையே சொரூபஞானமென்பர், விசாரணையுடன் கூடிய அந்தக்கரண சகித விருத்தியையே விருத்திஞானம் என்பர், இதில் சொரூப ஞானமே விருத்தியின் ஞானமாய்த் தோன்றும், அதுவும் இதுவும் வேறுவேறு அல்ல, சொரூபஞானம் அஞ்ஞானத்திற்கு பகை என்று நீ சுழுத்தி அவஸ்தையில் கண்டாயல்லவா? ஆகாயத்தை மேகக் கூட்டங்கள் மறைத்தாற்போல, ஆகாயம் போன்ற சொரூப ஞானத்தை அஞ்ஞானமாகிய மேகக் கூட்டங்கள் சூழ்ந்துள்ளனவே? இதனை விசாரணையுடன் கூடிய விருத்திஞானம் (காற்றடிக்கவும் மேகங்கள் கலைந்ததன்ன, அஞ்ஞானத்தைச் சுட்டெரிக்கும், அதாவது, தன்னைத் தானாகக் கண்ட சுழுத்தி ஞான அநுபவத்தில் தான் எவ்வண்ணம் அவ்வண்ணமே சமாதியின் விருத்தி ஞானமென்று அறிவாய் மைந்தனே? சமம் + ஆதி, தன் உண்மைச் சொரூபநிலையினை அறிவதே ஞானசமாதி என்றும் உணர்ந்திடுக? (எ-று).

அ-கை- காரணத்தால் கெடாத அஞ்ஞானம் காரியத்தால் எவ்வாறு கெடும், எனக் கேட்டனன் சீடன்... (எ-று).

79. துருத்தி மாயையைச் சுழுத்தியிற்
சுடாதது சொரூபஞானந்தானே,
விருத்தி ஞானமாய்ச் சுட்டதெப் படியெனில்
வெய்யிலால் உலகெங்கும்.

பரித்த சூரியன் சூரியகாந் தத்திற்
பற்றியக் கினியாகி,
எரித்த வாறுபோல் சமாதியில் விருத்தியா
லெரிக்கு மென்றறிவாயே.

அ-வ, உரை = கொல்லன் உலையில் நெருப்பை வளர்க்க துருத்தியை ஊதுவதுபோல, சுவாசத்தை உள்ளிழுத்தலும் வெளிவிடுதலுமாய் இயங்கும் சடமாகிய அஞ்ஞானத்தைச் சுழுத்தியினிடத்திலே கெடுக்காதது சொரூபஞானந்தானே? அதுவே விருத்தி ஞானமாய்க் கெடுத்தது எப்படிஎனின், உலகம் முழுவதும் பரவிச் சூழ்ந்து எரிக்கும் சூரியன், தனது உஷ்ணகிரணத்தால் காரணமாயிருந்தும் துரும்பையும் எரித்திடவில்லை, காரணமாகிய சூரிய கிரணம், காந்தக்கல்லில் சார்ந்திருந்து காரியப்பொருளான காந்தக்கல்லின் மூலம் அக்கினியாகி சகல வஸ்துக்களையும் ததிக்கின்ற தன்மையே போல சொரூப அநுபவ ஞானநிஷ்டையில் உதிக்கின்ற விருத்திப்பூரண ஞானத்தினால், காண்பான் காட்சி காணப்படும் பொருள்களாக திரிவுபடுத்திக்காட்டும் அஞ்ஞானத்தை எரித்திடும் என்றறிவாயாக? .... (எ-று).

அ-கை-விருத்தி ஞானமும் அந்தக்கரணங்களின் காரியமாயிற்றே, ஆதலின் இதனைக் கருமம் என்றும் கூறக் கூடாதோ?...

80. அருளு மையனே திரிவித கரணத்தா
லாகியதொழி லெல்லாம்
கருமங்க ளல்லவோ விருத்தி ஞானமுமந்தக்
கரணகாரியமன்றோ
உரியகர்ம மஞ்ஞானத் தைக்கெடுக்கு
மென்றோதினா லாகாதோ
பெரிய ஞானமென்று அதற்கொரு பெயரிட்ட
பெருமையை யுரையீரே.

அ-வ, உரை = அஸ்திர மனோபாவமுடைய அடியவனின் சந்தேகங்களுக்கெல்லாம் உடனடியாய் தக்கவுவமைகளோடும் எடுத்துக் கூறி, விளக்கிடும் குருமூர்த்தியே! .. மனம் வாக்கு காயமெனும் மூன்று கரணங்களாலும் செய்யப்படுகின்ற காரியங்கள்

அனைத்தும் கருமங்களாகும் அல்லவா, அவ்வாறே அகம் பிரம்மம் என்கிற விருத்திஞானமும் அந்தக்கரணங்களின் (மானசீக கர்மந்தானே) தொழில்கள் தானே? இவ்விதக் காரியமாவதற்குரிய விருத்திஞானமான மனதின் தொழிலே அஞ்ஞானத்தை கெடுக்கும் என்றே ஓதினாலாகாதோ? இக்கர்மத்திற்கு மகத்தான ஓர்பெயரிட்ட விநோத மகிமையை எனக்குக் கூறுவீர்களாக சுவாமிஜி என்றான் (எ-று). (அ-கை-மேற்கவிக்கு விடை கூறுதல்)

81- விருத்தி ஞானமும் அந்தக் கரணத்தொடு விருத்தியாகிலுமைந்தா,
ஒருத்தி மக்களே தங்களிற் பகைக்கின்ற துலகெங்கும் கண்டோமே,
கருத்த னாகியபுருட தந்திரங்க ளாம்கருமங்க ளவைபோல,
வருத்த ஞானமோ புருடதந் திரமன்று வத்துதந் திரமாமே!

அ-வ, உரை = மாணவ?.. ஒருதாயின் பிள்ளைகள் ஒருவருக்கொருவர் தங்களுக்குள் பகைத்துக் கொள்வதை... உலகியலில் பார்த்திருக்கின்றோம் அல்லவா? அவ்விதமே நான் பிரம்மமாயிருக்கின்றேன் எனும் விருத்தி ஞானமானது மனதின் விருத்திதான் ஆனாலும், நான் எனதெனும் அகம்பாவமுள்ள கர்மங்கள் யாவும் புருடதந்திரங்களாகும், விசாரப் பிரயத்தனத்தால் உள்மனதில் உதிக்கின்ற விவேகஞானமானது, அதனைப்போல, புருடதந்திரமன்று, வஸ்துவினது தந்திரமாகும்! விருத்திஞானமும்! கர்மமும் அந்தக்கரண காரியங்களே? ஆயினும், பூரணவிருத்தி ஞானங்கொடுக்கும், அதனாலிது கர்மம் ஆகாது என்றும் அறிவாயாக? என்றருளினிரா்!... (எ-று)

அ-கை-65-வது செய்யுள் தொடங்கி இதுவரை, கர்மங்களால் ஞானமுதிக்க ஏதுவுஅல்ல, என்று விசார ஞானத்தால் நீக்கிப் பின் அவ்விசார ஞானத்தையும் நீக்குவதற்கேதுவாக அதை யோகஞானமென்றும், விவேக ஞானமென்றும் இருதிறனாகக் கூறுகின்றார் என்பதாம்! (எ-று).

82. வகுத்த கன்மங்கள் செய்யவுந் தவிரவும்
மற்றொன்றை யாக்கவும் கூடும்
மிகுத்த ஞானமப் படியன்று தியானமும்
விவேகஞான மும்வேறே

செகத்தி லொன்றை ஒன்றாய் இவன்பா விக்குந்தியா
னமுங்கற்பிதயோகம்
முகத்த மாய்க்கண்ட ஞானமே வாஸ்த் தவம்
மோகமாய் மயங்காதே.

அ-வ, உரை = உலகியலில் சமுதாயமாகிய மாநுடர்களில் ஒவ்வொருவரும் ஓரோர் பல்வேறு கர்மங்களை (செயல்களை) யாதானும் ஓர்படித்தாய் வகுத்து வரைவுசெய்வதும், பின்னொரு சமயம் அக்கருமங்களை மாற்றி திருத்தி வேறுவிதமாய் செய்வதும், இப்படித் தொடர்ந்து செய்வதும் நிறுத்துவதும் இன்னும் வேறோர்விதமாய்ச் செய்வதும், இவ்வாறு தாம் விரும்பியபடியெல்லாம் கர்மங்களை ஒழிவதும் சேர்வதும் செய்வதும் தவிர்வதுவும், கூடும் பூர்வமும் பரிபூரணமுமான ஞானமென்பது, அக்கர்ம இயல்புபோல் மாற்றித் திருத்தி வேறுபடுத்திட முடியாததாகும். தியானமும் விவேகஞானமும் வெவ்வேறாகும். இவ்வுலகில் ஒருவன் ஒரு பொருளை மற்றொரு பொருளாக இவன் கருதுகின்ற, கற்பனையோகமானது தியானமெனப்படும், பிரத்யக்ஷமாய்த் தரிசித்த ஞானமே உண்மையுள்ள விவேக ஞானமாகும், இவற்றினிலக்கணங்களை யறியாமல் விபரீத புத்தியால் மயங்காதே?... மகனே கற்பிதமாயுதித்த யோகஞானம் பரோட்க்ஷம்ஆம், உள்ளுணர்வு விருத்தியின் உண்மை ஞானமே அபரோக்ஷம் என்றும் அறிந்திடுக?... (எ-று).

(அ-கை- இதுவுமது பற்றியது - குளகம்)

83. கண்டறிந் ததுஞானங் கேட்டது தனைக்கரு
தும்பாவனையோகம்
கண்டபேர் சொல்லக் கேட்டது மறந்துபோம்
கண்டது மறவாதே
கண்டவஸ்து மெய்தியான வத்துக்கள்பொய்
கருவியஞ் ஞானத்தைக்
கண்டவக் கணங்கொல்வது ஞானமே
கருமமன் றென்றறிவாயே.

அ-வ, உரை = கேட்டதும் பின்பார்த்ததும்பின் அறிந்துணர்ந்து அநுபவமானதே ஞானமாம் கேட்ட அளவில் அதைத்தியானிப்பது

(கருதுவது - பாவனை) யோகமாகும். பார்த்தவர் சொல்லக் கேட்டவைகள் அவ்வப்போது மறந்துபோம், நேரில் கண்ட அநுபவம் எதுவும் எப்போதும் மறக்காது, பார்த்து அநுபவமான பொருள் உண்மையாம், பாவிக் (கருது) கின்ற எப்பொருளும் மித்தை (பொய்) யே ஆகும். அறியாமையினால் கோபமுண்டாகியதைப் பார்த்த அந்தக்ஷணப் பொழுதிலேயே கெடுப்பது ஞானமேயாம் அன்றி, கர்மங்கள் அல்லவே என்றுணர்வாயாக? கேட்ட பொருளை பாவித்திருத்தல் தியானயோகம், பாவித்த வண்ணம் நேரில் கண்டுணர்ந்தது விவேக ஞானமாகும்!... இதுவே உண்மைநிலையாம் (எ-று).

அ-கை. தியானயோகம் கற்பிதம் (பொய்) எனின் அதனால் அடையப்பெறும் முத்தியும் கற்பிதமாமே என்ற கேள்விக்கு விடை கூறுகின்றார். (எ-று).

84. சருவமுத்தியைத் தருகின்ற தியானமுஞ்
சத்திய மன்றென்றால்
சருவ முத்தியுஞ் சத்திய மன்றெனச்
சங்கியாதே நீகேள்
உருவங் கேட்டவன் தியானிக்கும் பொழுதில்
அவ்வுருவம் வாஸ்த்தவமன்றே,
உருவமாகு மப்பொழுது கண்ணால் கண்டவுருவம்
வாஸ்த்தவமாமே.

அ-வ, உரை = சர்வமும் பிரம்மமயம் எனும் முத்திப்பெருவீட்டை வழங்குகின்ற தியானத்தையும் உண்மை அன்றென்று கூறினால்... அத்தியானத்தால் வரும் பூரண ஞான அநுபவமும் உண்மை அன்றோ என நீ சந்தேகமடையாதே? இதற்கு ஒரு சமாதானங் கூறுவோம் கேட்பாயாக? ... பிரம்ம சொரூபத்தைக் கேள்வியுற்றவன் சிந்திக்கும்பொழுது அதன் பாவனா ரூபமாகிய சொரூபம் உண்மை அன்று, அப்பாவனையில் அதீதமாய் திரிபுடியற்ற (எஞ்சியதான நிலையே ஸ்வரூபமாகும்போது, ஞானதிருஷ்டிப் பார்வையில் நின்ற பிரம்ம சொரூபமே! உண்மையாகும் என யூகித்துத் தெளிந்திடுவாயாக? பாவனைமித்தையே, அதனால் அநுபவப்படும் முத்தி சத்தியமே! ஆகுமென்று அறிந்திடுக (எ-று).

அ-கை- பொய்க்கு மெய்யை உருவாக்கும் சக்தி எவ்வாறு உண்டாகும், எனச்சீடன் கேட்கிறான் .... (என்பதாம்)

85. சடம தாகிய தியானமு மெய்யாகிய சர்வமுத்தியை நல்கும்
திடமதான தெப்படியெனில் அவரவர் தியானமே பிறப்புகளாகும்
உடல்களா சையாற் தியானிக்கிற் தியானித்த உடல்களாகுவர் மைந்தா
தொடர்பவங் கெடச் சொரூபபே தியானிக்கிற் சொரூபமாகுவர் மெய்யே!

அ-வ, உரை = மாணவர்களிற் சிறந்தவனே! ... பொய்யாகிய தியானமானது சத்தியமும் பரிபூரணமுமான கைவல்ய முத்தியை கொடுக்கும், திடமுள்ளதாயிருப்பது எவ்வாறெனக், கேட்பாயாகில், அவரவரின் மரண தருவாயில், எந்த உருவத்தை கருதியிருப்பாரோ, அச்சிந்தனாரூபமுடைய பிறவியையே அடைகுவரிதுண்மையே? ஆதலால் தேகங்களின் இச்சையால் சிந்தித்தால் சிந்தித்த தேகமாகவே பிறவியை அடைவார்கள், இதுவரையும் உன்னை தொடர்ந்துவந்த பிறவிப்பிணி மீண்டும் உண்டாகாமல் பிறவிக் கருவழியை அடைத்திட நீ சச்சிதானந்தமாய்த் திகழும் ஆத்ம சொருபத்தையே சிந்தித்திருப்பாயானால், அப்பிரம்மாத்ம சொருபமே ஆவதுண்மையே!. தியானம் சித்சட உருவமாகும். இதன் வழியாகவே, தியானித்த உடல்களாகுவர் என்றும், இதில் தியானாதீதமெனின் ஆத்மஸ்வரூபமாகுவர் என்றும், கைவல்ய நவநீதம் நூல் ஆசிரியர், ஸ்ரீலஸ்ரீ தாண்டவராய சுவாமிகள் கூறியுள்ளார். (எ-று). என அறிக?...

அ-கை- தியானத்திற்கும் மகத்துவமான இச்சத்தியிருக்க, மேல் விசாரணை ஞானம் என்பதேதுக்கு? எனின்... (எ-று).

86. பிரம்ம ரூபத்தை தியானித்த பேர்களும்
பிரம்ம மாகுவரென்றால்
நரசரீரமாங்குரவனே விசாரமேன் ஞானமேன்
எனவெண்ணாதே
பிரம்ம பாவனையே பரோட்சமாம் பின்பந்த
பரோட்சமே அபரோட்சமாம்
திரவிசா ரமேஞானமா முத்தியாந் தீர்வையீ
தென்ற தறிவாயே!.

அ-வ, உரை = கருணைக்கடலே என்னை எனக்குக் காட்டி ஈடேற்றவே, மாநுடவடிவந்தாங்கி எளிமையாய் உபதேசிக்க எழுந்தருளிய குருவே. பிரம்ம சொரூபத்தை தியானித்தவர்களும் அப்பிரம்மமே, ஆகுவார்களென்று சொன்னால், விசாரணையும் இதனால் ஞானமும் ஏதுக்காகும், என்று கேட்காதே.. பிரம்மஞானந்திடமில்லாமல் முன்பு தியானிக்கும்போது பரோட்க்ஷஞானமாகும். சிரவண மனன நிதித்யாசன நிஷ்டாவஸ்தை பரிபாகமாகி, இவ்வுபாசனா பலத்தால் அப்பரோட்சமே அபரோட்ச ஞானமாம்! இதுவும் திடமான விசாரணையினால் உதிக்கும் இவ்வபரோக்ஷஞானமே முத்திமோக்ஷ கைவல்லியமாம், தியானகாரியமே யோகமும், இதன் காரணமாகவே, விசாரணை ஞானந்திடமும் என உறுதியான வரைவுமென்றறிவாயாக? என்றருளினார்!... (எ-று).

அ-கை- விருத்திஞானம் உண்டாமெனில் அபரோக்ஷ அநுபவ ஞானம் எங்ஙனம் கூடுமென வினவுதல், (எ-ம்)

87. வீடதாம் பரிபூரண சொரூபத்தில் விருத்தி ஞானமுங் கூடிச்
சேடமாயி னாலகண்ட மாமனுபவ சித்தியெப்படி யென்றால்
சாடிநீர் மண்ணைப் பிரித்த தேற்றாம் பொடிதானும் மண்ணோடுமாயும்
ஊடிஞா னமும் அறிவிலாமை யைக்கெடுத் தொக்கவே கெடுந் தானே.

அ-வ, உரை = உணர்வே முத்திவடிவாம் பரிபூரணமான பிரம்மஸ்வரூபத்தில், அந்தக்கரண சகித விருத்தி ரூபமாகிய தத்துவஞானமும் சேர்ந்து பிரகாசிக்குமானால், அகண்டாகாரஅநுபவம் எவ்வாறு சித்திக்கும் எனில் சாடியில் வைத்துள்ள மழைநீரின் கலங்கல் (நிறம்சேறு) தன்மைவேறு பிரித்து கீழே படியச்செய்து தானும் அங்கே படிந்துவிடும், தேற்றாங்கொட்டையின் தூள்களும், அங்ஙனம், பகைத்துவந்த அஞ்ஞானத்தை விருத்திஞானம் கெடுத்தும், உடனே அவ்விருத்தி ஞானமும்கெடும் என்பர் சான்றோர்கள் என்று நீ அறிந்திடுக?.(எ-று). இன்னும்... விருத்தியால் எழுந்த விசாரஞானம், அறிவுதயம் ஆகும்பொருட்டு, அறிவின்மையைக் கெடுத்து, அதனோடுங்கூடவே தானுங்கெடும் அன்றி (எஞ்சுவதில்லை) சேடிக்கமாட்டாது. (எ-று).

அ-கை-49 - கவிமுதல் இக்கவி 87-வது வரை உண்டு என்பதுபோல் இல்லை என்றும் இல்லை என்பதுபோல் உண்டு எனும் பொருளைத் தருகின்ற உகபத்சிருஷ்டியால் உண்டாகிய சஞ்சித வினைகள் பரஞானத்தால் கெடும் என்றும், அதனால் உண்டாகும் மனோகாரியங்களை அதன், காரணமான விசாரஞானம் கெடுத்து, அ...துவும் இதனோடும் கெட்டொழியும் எனக்கூறி, வரும் 88-வது கவியில், அவ்வனுபவமுள்ள சீவன் முத்தர்களின் இயல்புகளைக் கூறுகிறார்.

88. இந்த நிச்சய முத்தருள் அநுபவ மிருப்பது
எப்படி யென்றால்
சிந்தையற்ற பூமண்டல இராஜனுஞ் சிசுவும்
போற் சுகமாகுவர்
பந்தம் முத்திகள் மறந்துபோ முண்டென்று
பலர்சொலின் நகையாவர்,
அந்தரத் தையுண்டு உமிழ்ந்த தோர் கொசு
வெனுமவர்களை நகையாரோ?....

அ-வ, உரை = நீ சச்சிதானந்த சொரூபம் என்றபடியே இந்நிச்சயமும் அகண்டாகார அநுபவமும் சீவன்முத்தருக்குள் இருப்பது எவ்வாறு எனில், நம்மைவெற்றி கொள்பவர் எவருமில்லை என்றிருக்கும் மகா ராஜாவைப்போலவும், செயலும் வினையும் பயமும் அறியாத குழந்தையை போலவும், அவர்கள் நித்யசுக சொரூபராயிருப்பர், பந்தம் முத்தி நன்மை தீமை இறப்பு பிறப்பு முதலிய இருவினைகளின் பாவனாரூப விகற்பங்கள் எழாது ஒழிந்துபோகும், இல்லை அவரிடத்தில் இவ்விவகார பேதமும் பயனுமுண்டாகும் எனப்பலரும் கூறிடில், உலகில் வாழ்வோர் நகுவர் (சிரிப்பர்) ஏனென்றால் ஒரு கொசுவு ஆகாயத்தை விழுங்கிச் சீரணமாகாமல் கக்கியது எனுமவர்களின் கூற்றைக் கண்டு சிரிப்பார்கள் அல்லவா? யார்தான் சிரிக்காம லிருப்பர்! எப்போதும் ஒரு தன்மையாய்த் திகழும் பிரம்மானந்தசுகாநுபூதியில் தனக்கு அறியாமையால் பந்தம் வந்ததென்றும், சத்பாவகாரிய சற்குரு சத்சங்க உறவினால் முத்திவந்ததென்றும், இவை அப்போதில்லை இப்போது வந்ததென்றும் கருதிடாதார்! சீவன்முத்தர்களின் இயல்பு என்றார்!. (எ-று).

அ-கை- இகம் பரம் என்றிடுமவை அவாந்தரமாகத் தோன்றும் கற்பனைகளைக்கண்டு மயங்காதிருக்க வேண்டி ஓர்கதை உவமை கூறல்? (எ-று).

89. மலடிமைந் தனுந் தாணுவிற் புருடனும்
வான்மலர் முடிசூடி
இலகுகந் தர்ப்ப நகரிலே சுத்திகா
யிரசிதம் விலைபேசிக்
கலகமாய் முயற்கொம் பினாற்குத்திக்
களைத்திருவரு மாண்டு...
அலகையாயினார் எனுமவர் விவகாரத்தை
யறிந்தவன் மயங்கானே.

அ-வ, உரை = மாணியே... 89-வது கவியின்படியே ஒருவர்க்கு விதேகமுத்தி சித்திக்கச் செய்யவேண்டிய பாவனையாதெனின்? ஐந்துவகையாகும் மலடியின் மகன், கட்டையில் கள்வன், ஆகாயத்தில் மலர்ந்த தாமரை, கந்தர்வநகரில் பூத்தவெள்ளி, முயற்கொம்பினாலான கத்தி, ஸ்ரீல ஸ்ரீதாண்டவராயசுவாமிகள் வழங்கிய இந்த உவமைக்குப் பொருள் யாதெனின், தன்னை சீவனாகப் பாவித்தவனே மலடி மகனாம், கட்டையில் கள்வனைப் போன்றவனே ஈசுவரனாகும், ஆகாயத்தில் பூத்தபல வண்ணமலர்களைப் போன்றவளே மாயையாம், நாமரூபமாகிய உலகமே கந்தர்வ நகரமாம், அந்த உலகத்திலே, தமோகுணபூதத்தின் இரண்டாவதான விக்ஷேபசத்தியாலுண்டாகிய பொருள்களெல்லாம் கிளிஞ்சலில் தோன்றுகின்ற வெள்ளிகளாகும். இதில் முயற்கொம்பினாற் குத்திக்கொண்டு இருவரும் மாண்டார் என்பதுபோல, இந்த ஆத்மஞானத்தால்... மாயையும் இதனாலுண்டாகிய சீவேசுவரர் இருவரும் மாண்டுவிடுகின்றனராம் இப்படிக் காட்டிவந்த அனைத்தும் சுத்தப் பொய்யே என்று எண்ணியவாறு, செய்யுந்தியானத் தாலேயே சீவன்முத்தி அடையப்பெறுகிறது எனவும், இக்கவியின் மூலக்கருத்துணர்ந்தவன் இவைகளினால் எப்போதும் மயக்கமடையான் என்று முணர்க (எ-று).

அ-கை- இதுவரையிலும் அவித்யாவசத்தனாய் காரியவுபாதியாலுண்டான மயக்கத்தை நீக்கியும், இதற்குகாரணவுபாதியான

மாயையாலுண்டாகும், மயக்கங்களையும் களையும் பொருட்டு அதுவும் மித்தையாமாதலின், இவைகளால் அடையப்பட்டுவந்த பெத்தமும், முத்தியும், பொய்யே பொய் என்று உறுதிபூண்டு உள்ள கற்றி நீ சுகாநுபூதியாய் விளங்குவாயாக? எனக்கூறுகிறார் (எ-று).

90. மாயை என்பதும் பொய்யே எனிலது பெற்ற
வகையெலாம் பொய்யாமே,
தாயையன்றி மக்களுக் கோர்பிறவியுஞ்
சாதியும் வேறுண்டோ
சேயசொர்க் கமும்நர கமும்நன் மையுந்
தீமையும் பாராமல்,
தூயசத் துச்சித் தானந்தபரி பூரண
சொரூபமா யிருப்பாயே!...

அ-வ, உரை = எதார்த்தத்தில் எப்போதும் இல்லாதது எதுவோ அது மாயை (மித்தையும் - பொய்யும்) ஆகும். என்றால், அதனாலாகிய பொருள்களனைத்தும் மித்தை (பொய்) யே ஆகுமன்றோ? அது எங்ஙனமெனின், தாயின் பிறப்புஞ் சாதியுமன்றி, அவளின் புத்திரருக்கு வேறு ஒரு பிறப்பும் சாதியுமுண்டோ? இல்லையே ஆதலால் சம்சர்க்காதி சுவர்க்கம் முதலியபதங்களும், கொடிதான ரௌரவாதி நரகங்களும், நன்மைகள் தீமைகள் என்பதும், பகுத்து இவை இன்னின்னவை எனப்பாராமலே, பரிசுத்தமாயும் சச்சித்தானந்தமாகிய பரிபூரண ஸ்வரூபமாய் இருப்பாயாக! நாமரூபமாய் வந்த காரியங்கள் அனைத்தும் பொய் ஆதலின் இதன் காரணமாய் நிகழும் மாயையும் பொய்யே ஆகும், என்றார்...

அ-கை-மாயையும் அதன் காரியங்களும் பொய்யே ஆமாயின் பிரம்மா விஷ்ணு ருத்திரன் முதலிய மூர்த்திகளும், பொய்யாகுமே, இவ்விதங்கூறின் குற்றமில்லையோ? என கேட்டனன்..

91. பங்கயா சனன்முதற் பலதேவரும் பாருள்ள பெரியோ ரும்
கங்கை யாதியாந் தீர்த்தமுந் தேசமுங் காலமுமறை நாலும்
அங்கமா றுமந்திரங் களுந் தவங்களு மசத்தியமெனச் சொன்னால்
எங்கள் நாயகனே அதனாற் குற்றங்களில்லையோ இதைநீர் மொழியீரே...

அ-வ, உரை = எனையாண்டருளும் குருமூர்த்தியே, பிரம்மன் முதலிய மும்மூர்த்திகளும், சர்வமான தேவர்களும், பூமியிலுள்ள பெரியோர்களான ஞானிகளும் யோகிகளும், கங்கா சரசுவதி யமுனா போன்ற புண்ணிய நதிகளும், ருக் யசுூர் சாமம் அதர்வணம் என்ற நான்கு வேதங்களும் ஆறங்கங்களும் மந்திரங்களும். தவங்களும் சாங்கியம் யோகம் நியாயம் வைசேடிகம் மீமாம்சைவே தாந்தம் எனும் சாத்திரங்களாறும், பிரணவமகா மந்திரமும், பொய்யே எனக்கூறியும் கருதுதலுமானால்? அதனால் பிழையல்லவோ தோஷம் சம்பவிக்காதோ நடுக்கத்தைப் பொருந்தியவனின், ஐயமும் பயமும் தீர்த்தருளுங்கள் சுவாமி என்று கேள்வியை எழுப்பினான்? (எ-று).

அ-கை-91-வது கவிக்குப் பதில் கூறுகிறார் - (என்பதாம்).

92. சொற்பனந் தனிற் கண்டதைப் பொய்யென்று
சொல்வது பிழையானால்
அற்ப மாயையிற் தோன்றிய சகங்களும் அசத்தெனல்
பிழை யாமே
சொற்பனந் தனிற்கண்டதைப் பொய்யென்று சொல்லலா
மெனின் மைந்தர்
அற்ப மாயையிற் தோன்றிய சகமெல்லா
மசத்திய மெனலாமே!...

அ-வ, உரை = சற்சீடனே! .. கனவில் காணுகின்ற உடல்உயிர் பொருளுடைமைகளை எல்லாம் விழித்தபோது அநுபவத்தில் பொய் என்று கொள்கிறோம். இதைபொய் என்றது பிழையாகுமாயின், அற்பமு (சிறிது முண்மையில்லாத) மான மாயையினாற் தோன்றிய சகலமும் சர்வபதார்த்தமும் அசத்தெனல் பிழையாகும் தான். ஆனால் அக்கனவிற் கண்டவைகளை எல்லாம் பொய்யென்று கூறலாமெனின் மகனே, சிறுமை காட்டிச் சீரழிக்கவந்த மாயையினின்றும் உண்டான சர்வசகத்துச் சகலமும் மித்தை (பொய்யே) என்று துணிந்துரைக்கலாமே! சொப்பனம்போல மாயா காரியமானவைகளின் இயல்புகளை மித்தை என்று கூறுவது குற்றமொன்றும் இல்லை என அறிக?.

(அ-கை-சத்து அசத்துக்களின் உண்மை இன்னின்னது எனல்)

93. பொய்யை மெய்யென்ற மூடரைப் புண்ணியரென்று
புராணங் கூப்பிடுமானால்
மெய்யை மெய்யென்ற ஞானிக்கு குற்றங்கள் விதித்த
சாத்திரமுண்டோ
பொய்யது ஏதேனின் நாமரூபங் களாம்பூத
காரிய மாயை
மெய்யது ஏதெனிற் சச்சிதானந்தமாய் வியாபிக்கு
மான் மாவே!

அ-வ, உரை = போகமாய் வந்த பொய்த்தோற்றங்களை எல்லாம் மெய் என்று கூறும் அறிவிலாதோரை, இதிகாசங்களும் பதினெட்டுப் புராணங்களும் புண்ணியரிவரென்று புகழ்ந்துரைக்குமானால்? மெய்யை மெய்யென்ற ஞானிகட்கு குற்றமென்று நியமித்த நூல்கள் ஏதேனுமுண்டாமோ? இல்லை எனவாம். பொய் என்பது ஏதெனின் பஞ்ச பூதாம்சமான நாமரூப காரியங்களாகும் மாயையாம், இவைகளில் உண்மைதான் ஏதெனின், தத்துவமது சத்சித்தானந்த ஸ்வரூபமாய் எங்கும் பரவிப் பூரித்துத் திகழும் ஆத்ம ஸ்வரூபமே யாகும். என ஆத்மா அநாத்மா இலக்கணம் கூறியது என அறிந்திடுக? என்றார் (எ-று).

அ-கை (மாயையின் தன்மைகளை ஆறுவகையாகப் பிரித்து கேட்டனன்).

94. மாயை என்ப தேது உடையர் யார் எப்படி
வந்தது வருவானேன்
மாயை என்பதும் பிரம்மமும் வேறெனின்
வஸ்த்துவு மிரண்டாமே
மாயை என்பதும் பிரம்மமும் ஒன்றெனின்
வஸ்துவும் பொய்யாமே
மாயை என்ற மேகங்களுக் கொருசண்ட
மாருதகுரு மூர்த்தி...

அ-வ, உரை = மாயையின் உற்பத்தியையும், மாயை ஏதெனவும், அதனுருவத்தையும், இதனையுடையவர் யாரெனவும் உண்டான

காரணம் யாதெனவும், அது பிரம்மத்திற்கு வேறானதெனின் வஸ்த்துவும் பலபட்டதாமே (துவிதமே) அதுவும் இதுவும் - மாயையும் பிரம்மமும் ஒன்றெனின், வஸ்துவும் மித்தையாமே, இப்படி இதனுண்மை தெரிய வினாவினதாம், மாயை என்ற மேகங்கள் எனது இதயாம்பரத்தை சூழ்ந்திடவும், இதனை ஒழித்தற்குச் சண்டமாருதமெனுங் காற்றாய் வந்து கலைத்து விளங்கிடும், தேசிக மூர்த்தியே இவ்வறுவகைக் கேள்விகட்கும் உத்தரமருளும் சுவாமி? மாயையும் பிரம்மமும் வேறு வேறு என்றால், வஸ்து இரு(பல) வகையாகுமோ பிரம்மமும் மாயையும் ஒன்றே என்றால், மாயையைப் போலப் பிரம்மமும் அசத்தியமாகுமே? இதனை அருளிச் செய்வீர் சுவாமி! (எ-று).

(அ-கை- மேற்கவியின் ஆறுகேள்விக்கு, நான்கின்பதில் கூறுகிறார்)

95- அதனை யின்னதென் றுரைத்திடப் படாமையால்
அவாச்சிய வடிவாகும்.
இதுதனக் குள்ளது உடலேயான் உலகுமெய்
எனுமருவடையோர்கள்
கதையிலாத பொய்வந் ததிப்படி யென்று
கண்டபேரிலை மைந்தா
விதன மாயை ஏன்வந்த தென்றாற்
புத்திவிசார மற்றதனாலே..

அ-வ, உரை = புத்திரனே? ... சந்தேகம் மயக்கம் குழப்பம், பல்வேறு விதநாமரூபமுடையதாய் தோன்றும் மாயை, இந்த தன்மையினையுடையதென்று சுருதிகள் அவாச்சியமாகும் (சொல்லால் வர்ணிக்கமுடியாததாகும்) என்றும், இந்த தூலவுடலே நான், இது என்னுடையது இவ்வுலகம் சத்தியம், என்று இவ்வகை அபிமானங்களையுடையவர்களே மாயையின் வசமானவர்கள், காரணமில்லாக் காரியவுபாதியாகும் இம்மாயை தோன்றிடக் காரியகாரணம் இவ்விதம் என்று கண்டும் கூறியும் எவரும். உத்தரமில்லை, இவ்வாறான துன்பங்களைத் தொடர்ந்து தந்த மாயை ஏன்வந்தது என்றால் புத்திவிசாரணையில் சென்று அறிந்துணரமுடியாததினாலே என்று அறிந்து கொள்வாய்? (எ-று). உருவம், அருவம், உருவாருவம், என மூவிதமாகவும்

இதனைக்குறிப்பிடமுடியாததால் இதனை அவாச்சியம் (வாக்கினாற்பேசி முடியாதது) என்றார்.

(அ-கை-இனி ஐந்தாம் கேள்விக்குப் பதில் கூறுகிறார்)

96. அருவ மாகுமாயா அவித்தை கள்விளையாடு
முன் தெரியாவே
உருவ மாம்பல கந்தர்ப்ப சேனையாய்
உதித்தபின் வெளியாகும்
பிரம்ம சத்திகள் அனந்த மாமதைக்
கண்டுபிடித்திடல் கூடாதே
பரவுபூ தங்கள் கண்ட அநுமா னத்தாற்
பலருக்கும் வெளியாமே.

அ-வ, உரை = இந்ரஜால வித்தைக்காரன் பம்பை உடுக்கைகளை அடித்து சப்தத்தால் ஜனங்களைக் கவர்ந்துகூட்டி, விளையாட்டு வித்தையை தொடங்குமுன், கற்பனா சைகை வாய்ஜாலம் காட்டிப் பின் அவனின்செப்படி வித்தைகள் தோன்றும் முன்பே தோற்றுவதில்லை. அதுபோலவே, பிரம்மத்தின் சத்திகள் காண்பவர்க்கு அனந்தமாகத் தரிசனம்தரும் அம்மாயா சத்திகள் இன்னவிதம் எனக்கண்டு பிடித்திட முடியாததாகும். விரிவாகிடும் பஞ்ச பூதங்களையும் அதன் காரண காரிய நுண்மைகளையும்! அறிந்திட, பிரம்மத்தினது உத்யோக சத்திகள் அநுபவ அநுமானமாகவும் யாவரும் அச்சத்தி உண்டென்று கூறும்படி விளங்கும், என அறிக. பொய்யாய் வந்த உடலும் உலகமும் தோற்றுகிறதே, இங்ஙணந்தோற்றுவிக்கின்ற மாயாசத்தியும் ஒன்றுளது என்று உணர்ந்தால் போதும். (எ-று).

(இதுவுமது பற்றியது குளகம்)

97. காரியங் களுஞ்சத் தியாதாரமுங் காணு
மற்றது மாயம்
பாரினின்ற மாயாவியுஞ் சேனையும் பார்ப்பவர்
கண் காணும்
வீரியந் திகழ்வித் தையாயின சத்திவெளிப்
படாதது போலப்
பேரியல் பிரமத்திற்கும் உலகிற் கும்பிறிது
சத்திக ளுண்டே

அ-வ, உரை = அனந்தமாகிய சத்திகளுக்கு ஆதாரமான பிரமத்தினிடமே சிவேசுவர செகத்தும் அற்பமாயா சகித சத்திகளும் இந்திரஜாலமே போல மாயமாய்த்திகழும், பூமியினிடம் நின்று மாயாஜாலவித்தை செய்தவனும் அவன்காட்டிய வித்தைகளும் பார்ப்பவர்கள் கண்காணும்படியிருக்கும், நுண்மையால் சத்தியமாய் கெம்பீரமாய்த் திகழும் பிரம்ம சத்தி, அற்பமாயா சத்திபோலன்றி, மகத்துவமாய்த் தோன்றுமதுபோல, உணர்வே, உறங்கா, பரிணாமம் பெறுகின்ற இயல்புள்ள பிரம்மசத்திகள் விசேக்ஷமாய்ச்சிலவுண்டு நீ அறிந்து அநுபவித்து உணர்ந்திடுக? என்றும், அற்பமாயா சிற்சத்திகள் அளவிலது ஆனாலும், இவைகள் ஒருதனிமுதலாக இல்லாமலும், இவைதாம் தோன்றிடப் பிரம்மமே காரணியாகவும் உள்ளதே உண்மையாகும். (எ-று).

(அ-கை-இனி ஆறாம் கேள்விக்குப் பதில் கூறுகிறார் (எ-ம்)

98. சத்தி சத்தனைத் தவிரவே றன்றுகாண் சத்தனாம் மாயாவி
வித்தை காட்டிய இந்ரஜாலம் பொய்வித் வான்மெய் போலப்
புத்தி மைந்தனே சத்திமா னாகியப் பூரண ஆன்மாவின்
வத்து நிர்ணயஞ் சொன்ன திருஷ்டாந் தத்தின் வழிகண்டு தெளிவாயே.

அ-வ, உரை = சத்தனைத் தவிரச் சத்தி என ஒருவஸ்து எங்கும் இல்லாததாலும், அச்சத்தி இல்லாத இடத்திலும் சத்தன் இருப்பதாலும், அச்சத்தனும் சத்தியும் ஒன்றுமென்பது எப்படி? வெல்லமே சத்தன் - குணி, தித்திப்பே சத்தி - குணம், இதனாலே அதுஇதுவாக, இது அதுவாக? எனினும் அறிவுள்ள மகனே, இந்ரஜால சத்தியானது அதனைக் காட்டிய வித்தைகாட்டிய வித்துவானைவிட வேறு இல்லை. அன்றோ? இச்சத்தனால் நடத்திய சத்தி (வித்தை) எல்லாம் விட்டு, சத்தனை மட்டும் உண்மை எனக் காண்பதுபோல் சர்வ சத்திகளையும் தன்னகத்தே கொண்டிருந்தும், நீக்கமற்ற பரிபூரண சச்சிதானந்த மயமான சத்தனின் ஸ்வரூப நிச்சயத்தை, இவ்வுவமானத்தால் இதயத்துள் இருத்திக் கொள்வாயாக? (எ-று).

அ-கை- பிரதி பிம்பமான மாயாசத்தியை நீக்கிப் பிம்பமான சித்சத்தியை வெளிப்படுத்துவான், அசத்தான மாயா சத்தியை

உள்ளது என்பது எங்ஙனம் எனக்கேட்டனன், - பிம்பம் - நிஜம், பிரதி பிம்பம் - நிழல் எனவாம்! (எ-று).

99. இல்லையாகிய சத்தியை உண்டென்ப தெப்படி
எனக் கேட்கில்
புல்லையாதி யாமசேதனப் பொருள்எலாம்
பூத்துக்காய்ப் பனபாராய்
நல்லையா மகனே அதிற்சிற்சத்தி
நடந்திடா திருந்தக்கால்
தொல்லையாய் வருஞ்சரா சரவுயிர்க் கெல்லாஞ்
சுபாவங்கள் வேறாமே.

அ-வ, உரை = நற்குணங்களைப் பொருந்திய மைந்தனே, பொய்யாகிய மாயாசத்தியை உள்ளது என்பது எப்படியென்று நீ கேட்பாயாகில், புல்பூண்டு செடிகொடி மரம் முதலிய தாவர சடவஸ்துவாம் வர்க்கங்கள் அனைத்தும், துளிர்ப்பதுவும் பூப்பதுவும் காய்ப்பதுவும் அந்தந்த காலத்தில் அதுவது வடிவம் குணம் தன்மைநிறம் சுவை மணம் போன்றவைகள் மாற்றமின்றி பெரிதும் ஒருதன்மையதுவாக வளர்ந்து வருவதைப் பார்த்திருப்பாயன்றோ? அவ்வப்பொருள்களினிடத்தில் உறங்காது உணர்வை ஊட்டி நின்ற அச்சிற்சத்தி புணர்ந்திடாவிட்டால் தாவரம் முதல், ஈ எறும்பு புளு, மீன் பறவை கால்நடைகளாகிய விலங்கினம் ஆரறிவுள்ள மனிதர்கள் தெய்வசம்பத்து முயன்று பெற்று அநுபவிக்கும் தேவர்கள் மும்மூர்த்திகள்வரை, ஒன்றுக்கொன்று அதனதன் தன்மை குணம் பொருப்பு முதலியவைகள் முன்னுக்குப்பின் முரணான வித்யாசங்களைப் பெற்று நியமங்கடந்தாக... விளங்குமன்றோ? (எ-று).

(அ-கை- இதுவுமது - பற்றியது குளகம்)

100. கருப்பை முட்டையுள் பறவைகள் பலநிறம் கலந்தவிசித் திரம்பாராய்
அருப்பமாஞ்சிற்சத்தி நியமில்லா விடிலரசிலா நகர்போலாம்
நெருப்பு நீரதாம் கசப்புமே மதுரமாம் நீசனுமறை ஓதுவான்
பொருப்பு மேகங்க ளாங்கட லெலாம் மண்களாம் புவனமிப் படிபோமே

அ-வ, உரை = பக்ஷி பறவைகள் ஒவ்வொரு நிறமாகவும், அதன் கருப்பையுள்ளிருக்கும் முட்டைகளும் ஒவ்வொன்றிலும் பலவண்ணமாகவும், முட்டையுள்ளிருந்து வெளிவந்த, பறவைகளும் கன்றுகளும் குஞ்சு குட்டிகளும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிறமாகவும் இருப்பது கண்டுள்ளோம் அன்றோ? என்னே விசித்திரம் பார்! இவைகளில் அருளின் அளப்பரிய சிற்சித்தி புணரும் இயல்பு இல்லாதிருக்குமானால், அரசன் இல்லாத நாடுநகர்போலவும், வேற்றுமையும் விபரீதமும் கோரத்தாண்டவமாடும், அக்கினி தண்ணீர்போலக் குளிரும், வேம்பும் இனிப்பாகும், பஞ்சமாபாதங்களை கூசாமற் செய்தும் கோ (பசு)வைக்கொன்று உண்ணும் சண்டாளர்களும் சதுர்வேதம் ஆரங்கமும் வேதாகம அத்யயனங்களும் செய்வான் நிமிர்ந்து உரமாய் நிற்கின்ற மலையும் பஞ்சுப்பொதிபோலப் பறந்து திரியும், சமுத்திரங்களும் அடையாளமின்றி மண்திட்டு மண்மேடுகளாகும். இவ்வாறு சகவுலக நடைமுறை சம்பிரதாயமின்றிப் போகுமே?.. சூரியனின் உஷ்ணகிரணங்களே வெளிமுகத்தில் நீராகவும் மனோராஜ்ஜியமாம் அகமுகநோக்கில், கானலாகவும், தோற்றுவதுபோல, சத்தனாம் பிரம்மப் பிரகாசத்தினால் வெளித்தோற்றத்தில், பொய்யாகிய மாயாசத்தியாகவும் அகமுக நோக்கில் உண்மையாஞ் சிற்சத்தியாகவும் தோன்றிடும் இச்சத்தியே அனைத்தாருயிரிடத்துள்ளீடாயிருந்து நடத்துவதால், இ∴தனை அதன்மேல் வைத்துக் கூறினதென்க? .. நிஷ்கிரியையே, கிரியையாகி தோன்றுகிறது. (எ-று).

101. **ஆர்க்குங் காணவும் அறியவும் படாதென்று**
அவாச்சிய வடிவமென்றும்
சேர்க்கும் நாமரு பப்பயிர் வித்தென்றுஞ்
செப்பிய சிற்சத்தி
பேர்க்கு மாறதெங்ஙன் பிரித்திடப் படாதெனில்
பிரம்மபாவனையொன்றாய்ப்
பார்க்குமாறதெங்ஙன் முத்தியாகுவ தெங்ஙன்
பரமசற்குரு மூர்த்தி.

அ-வ, உரை = உன்னதமான பொருளை உரியவிதம் உபதேசித்தருளும் தேசிகோத்தமரே (தேசிகர் சற்குரு)

யாவரொருவரும் பார்க்க முடியாததும், உணரக்கூடாதவாறும், இதுஇன்ன தன்மையதென்று உணர்த்திட முடியாத வடிவமென்றும், கற்பனையாகச் சேர்க்கின்றதாகி நாமரூபப் பிரபஞ்சமாகிய பயிருக்கு எல்லாமிதுவே வித்து(விதை) என்று கூறியுள்ள சிற்சத்தியை நீக்கிடுவது? எப்படி, நீக்கமுடியாதது என்றால், தான்தானாய்காணும் சொரூப சமாதியில், அத்வைத ஸ்வரூபமாய்த் தரிசிப்பது எவ்வாறு? வீடுபேறாம் முத்தியடைவதுதான் எப்படி? என மூன்று கேள்விகளை கேட்டனன்... (எ-று).

(அ-கை- முதல் விடை கூறுகிறார்!.)

102வாயுத்தம் பனஞ்சலத் தம்பன மணிமந் திரமருந் தாலே
தேயுத் தம்பனஞ் செய்திடில் அதிற் செறிந்தசத் திகளெங்கே
நீயச் சச்சிதானந்தமாய் வேறொன்றும் நினைந்திடாதிருப்பாயேல்
மாயைச் சத்திபோ மீதன்றி மந்திர மறைகளிற் காணோமே..

அ-வ, உரை = ஒப்பற்ற மனவசிய மெனும் மனோன்மணியைக் கைவசமாக்குதலாலும், இதன் துணையால், வாசியை கட்டுப்படுத்தி வசியம் செய்வதாலும், சிகார உச்சாடணத்தால், நெருப்பைக் கட்டுப் படுத்தினாலும் மகாரநாமதாரணையால், நீரினைத் தடிப்புறச்செய்தாலும், இம்மூன்றிலும் இயல்பாகவே அடங்கியிருந்த, மாருதம் (காற்று) நெகிழ்ச்சி உஷ்ணம், என்ற (முறையே) சத்திகள், அந்த உபவாசியைக் கட்டுப்படுத்தவில்லை, அச்சத்திகள் அவரை அணுகாது மறைந்தன, அதுபோல், நீயும் உனதியல்பாயுள்ள சத்துச் சித்தானந்த சொரூபத்துள் திரபாவனையாய்ப் பொருந்திடுக? வேறு எதையும் எதற்காகவும் எப்போதும் நினையாதிருப்பாயானால், அம்மாயா சத்திகள் நீங்கும் இதைத்தவிர, (வேதாகம சாத்திரம் உபநிடதங்களிலும்) வேறு உபாயம் ஒன்றுமிருக்கக் கண்டிலோம், மகனே? என்றார்... குருசுருதிகளின் உபதேசப்படி உண்மையுடைய சச்சிதானந்த ஸ்வரூபமே தானாகச் சிந்தித்திருக்கின், அதன்மயமாவதே கூடும், பின் வாஸ்தவத்தில் தன்னிடத்தில் இல்லாததான மாயாசத்திகள் இருந்தாகவே நினைவிலும் வாராது ஒழியும், என்றருளினார், (எ-று).

அ-கை- இரண்டு மூன்றாவது கேள்விக்குப் பதில் கூறுகிறார். (எ-ம்)

103. மேவும் மண்ணி லவ்வியத் தமேவியத்தமாம்
விவகரித்திட வேண்டில்
நாவினால் மண்ணைக் குடமென்பர் அக்குடம்ந
சிப்பதும் நாவாலே
பாவுநாம ரூபங்களை மறந்து மண்பார்ப்
பதேபர மார்த்தம்
சீவபேத கற்பிதங்களை மறந்து நீ
சின்மய மாவாயே!...

அ-வ, உரை = பக்குவப் படுத்திய மண்ணை குயவன் சக்கரத்தில் வைத்திருந்த போது அதிற் கடமும் குடமும் தெரியவில்லை மண் மாத்திரமாகவே தெரிகிறது. பலநாம ரூபங்களைத் தனக்குள்ளே தோன்றாதிருந்த நிலை கொண்டுள்ள இந்நிலையே அவ்வியத்தமாகும், குயவன் தன்தொழிற் கலையை மண்ணிடத்தே பண்ணியபோதே வயிறும் வாயும் விளிம்பு மான சட்டி குடம் பானை என்ற ரூபங்களும் அதற்கேற்ற பெயரும் கண்டு பேசப்படுகின்றன. இந்தச் சட்டிகுடங்கள் உடைந்து சிதறியபோது வயிறும் வாயும் விளிம்பும் என்ற நாமரூபங்களும், மறைந்து மண்ணே காணப்படுகின்றன. வயிறு வாய் விளிம்பு முதலிய சட்டி குடங்கள், உண்டாவதற்கு முன்னும் உண்டாயிருந்த காலத்தும் உடைந்து சிதறி உருக்குலைந்துகிடந்தபோதும், என மூன்று காலத்திலும் நிருபாதிகமாகிய மண்ணே காரணமாயுள்ளது.

இது சட்டி குடம் என்று கூறிய நாக்கே (வாய்) நாமரூப கற்பனைகளின்றிய போது மண்ணே என்று கூறியுள்ளது. நாமரூபங்கள் உண்டாவதற்கு, முதற்காரணம் மண், இரண்டாம் நிமித்த காரணம் குயவன், துணைக்காரணங்களோ எனின், சக்கரம் தண்டம் துணி நீர் கத்தி எனவாம், இதுபோல இவ்வுலக மாயா வடிவங்களும், செகத்து ஈசுவரன், சீவன் என்ற நாமரூபங்கள் தோன்றுகின்ற காலத்தும், மகாபிரளயமாகின்ற காலத்திலும், நாசமாகிய (நாமரூபங்கள்) காலத்தும், யாதொரு உபாதியும் சேதமும் நாசமும் மாற்றமும் அடையாத பிரம்மமே நீஆகுவை, தவிர, நாமரூபமாயும் சீவேசுவர செகத்தாகவும் தோற்றுகின்ற கற்பனைஜாலப் பொய்ப் பொருள்கள் என்றே நீதிடமாக எண்ணி,

உன் அறிவுவடிவே தியானபாவனை நீங்காதிருப்பின் இதுவே நீகேட்ட, (மூன்றாவது கேள்வியின்விடை) முத்திநிலை என்று உறுதியுணர்வு பெறுவாயாக? என்றருளினார்!... (எ-று). (இதற்கேற்றதோர் எடுத்துக்காட்டு - திருமூலரின் திருமந்திரம், காண்க) பொன்னை மறைத்தது பொன்னனி பூடணம் - (அஞ்ஞான ஆவரணம் காரியோபாதி) பொன்னில் மறைந்தது பொன்னனி பூடணம் - (காரண விசாரணை அபவாதம்) தன்னை மறைத்தது தன்கர ணங்களே - (ஆரோபதரிசனங்கள்) தன்னில் மறைந்தது தன்கர ணங்களே - எனவாம். (காரியகாரணம் நீங்கிய எதார்த்த நிலை!) (இது எண்வகை ஆனந்தங்களில் அத்வைதானந்தமாகும்!)

அ-கை-அம்மாயா சத்திகள் நீங்கிய போதும், அதன் காரியோபதிகளான திரிபுடி தரிசனங்கள் நீங்காமையால், இதனை நீங்கி நிற்கும் உபாயத்தை அநுக்கிரகிக்க வேண்டினான் சீடன் அருளுரை கூறுகின்றார் குரு.

104. பூரிக்குங் கனசச்சி தானந்தத்திற் பொய்சடந்
துயர்மூன்றும்,
தூரத் தாயினும் தோன்றும்பாழ் விபரீதந்
துடைப்பதெப் படியென்றால்
நீரிற் தோன்றுந் தன்னிழல் தலைகீழதாய்
நின்றலையினு நேராய்ப்
பாரிற் தோன்றிய தன்னை நோக்கிடி
லந்தப் பாழ்நிழல் பொய்யாமே!

அ-வ, உரை = தன்னைத் தரிசித்தால் தனது நிழல்களாகிய திரிபுடி உபாதிகள் தானாகவே நீங்கும், இடைவெளியின்றி எங்கும் நிறைந்துள்ள சத்து சித்து ஆனந்தம் எனும் மூன்றுபதங்களும், ஒருமித்துள்ள சச்சிதானந்த சொரூபத்தில் அசத்திய காரியோபாதிகளின் திரிசிய துக்கங்களாகுவது இல்லையாம், மெய்யேபோலத் தோற்றுகின்ற பாழாம் விபரீதத்தை கெடுப்பது எவ்வாறெனின், தெப்பக்குளத்துக் கரையில் நின்று நீரைப்பார்பவனின் உருவம், தலைகீழும் கால்மேலுமாய்த் தோன்றுவதுடன் நீர்ச்சலன அசைவினால் இவனின் உருவமும் அலைமோதுவதாய் காணும் மயக்கமும், இதுஎன்னே இப்படி என

அதிசயிக்கவைக்கும் ஆனால் இவன் நீரினுள் கண்டதைவிட்டு தான் நிற்கும் கரையிலேயே தன்னைக் கண்டால், தனது உண்மையான உருவத்தை உள்ளபடி காணும், மயக்க விபரீதமும் தோன்றாதன்றோ? ஒன்றைவேறு ஒன்றாய்க் காட்டும் ஆரோபவஞ்ஞானம், சர்வகாரியவுபாதிகளையும் நீக்கி காரணாகாரணமாகிய நிருபாதிகஸ்வரூபமாம் தன்னை (ஆத்மாவை) இங்கு கூறிய உவமை யுக்தியினால் எளிதிற்கண்டு இன்புறலாகும் என அறிவாயாக?... (எ-று).

(அ-கை, இதுவுமது பற்றியது - குளகம்)

105.ஞானங் காரணம் அறிபொருள் காரிய நாருபப் பேர்கள்
ஆனது எப்படி யழிந்த தெப்படி எனவாய்குதல் பலனன்றே
மானமைந் தனே தீர்க்க சொப்பன சகம் வந்த தும்பாராமல்
போனதும் நினையாமல் உன்போத மாய்ப் பூரணமா யிருப்பாயே.

அ-வ, உரை = பெருமையுடைய பொருளை அறிந்து அநுபவிக்கும் அவா மேலீடுடைய என்பிரிய மகனே? காரிய காரணங்களையும் ஊடுருவிக் காரணாதீதமானவற்றை அறிவிக்கும் ஆயுதமாகப் பக்குவர்களுக்கு ஞானம்படுகிறதென்பதே! அநுபவமாகும். நாமரூபாதி காரியங்களும் சீவேசுவர செகத்தும் ஆகும். இவைகளின் உற்பத்தியும் இருப்பும் ஒழிவும் எவ்வாறு என அறியமுயன்று நேரங்காலத்தை வீணாக்காதே நீ, அது (புற்புதநியாயம்போல) கடலில் ஒருநாள் ஒன்றுக்கு எத்தனை அலைகள் எழுந்தது என்ற பயன்தரா ஆராய்ச்சி ஆகும். அஃதைவிட்டுவிடு, நீண்டுபெருகும் கனவுபோன்ற இவ்வுலகங்களும், அதன் வினைப்பாடுகள் பயன்கள் வந்திருந்து போனது எவ்வளவு என்று எப்படி எங்கு எதுவரை என ஆராய்ந்திடாமல், எல்லாமாய் பூரணமாய் பிரகாச ஸ்வரூப பிரம்மமாய் இருந்திடுக? காரணமாகிய சிற்சொரூபமே தானாய்க் கருதிக் காணின், காரியமாகிய யாவும் சச்சிதானந்தமயமாகவே விளங்குமன்றோ, (எ-று).

அ-கை, சிந்திக்கும் முறையும் அதிற்தோன்றும் அத்வைதானந்தமும் கூறுகிறார்! ... என்பதாம் (எ-ம்)

106.அசத்தி லெம்மட்டு முண்டோ அம்மட்டும் பராமுக
மாகினா லம்மட்டும்
நிசத்தி லுள்விழிப் பார்வையா யிப்படி
நிரந்தரப் பழக்கத்தால்
வசத்தி லுன்மனம் நின்றுசிந் மாத்திர
வடிவமாகிடின் மைந்தா
கசத்த தேகத்து ளிருக்கினு நீயானந்தக்
கடல்வடி வாவாயே!

அ-வ, உரை = அன்புள்ள மகனே சிதாபாச அவஸ்தையில் மெய்போலத் தோற்றுகின்ற இச் சகசீவபரம் என்பது சுத்தப்பொய் வடிவங்களே ஆகும். இவைகளில் எவ்வளவு காலம்வரை அபிமானமும் சம்பந்தமும் உன்னிடத்திருக்குமோ அவ்வளவு காலம்வரை பகிர்முகனாவாய், இப்படிப் பகிர்முக அவஸ்தையினை அப்படியே அவ்வறிவினை உள்முகமாய், உண்மைப்பொருளில் பார்வை (பாவனை)யை அழுத்தியிடைவிடாது அப்யாசிப்பாயானால் துர்நாற்றமே கொள்கலனான, வெறுக்கத்தக்க சரீரத்துடனேயே கூடி வாழ்ந்தபோதும் நீ பிரம்மானந்த சாகரஸ்வரூபனாவாய்!... இப்படியே சிந்தித்திருந்து சித்துருவம் ஆவானாயின், அவ்வத்வைதானந்த தஸ்வரூபமே தானாகிவிளங்குவன்!.. என்றருளினார்... (எ-று).

அ-கை- மாயை அவித்தை முதலிய சீவேசுவர சடபாவனா அபிமானங்களை நீங்கிச் சிற்சத்தியாகிய சித் உற்பத்தியான விதமே அவ்வாறு ஆத்மாவில் கரைந்து அதன்பின், அவ்வாத்மாவே பரபரமாத்ம சொரூபம் நீ என்று உணர்த்தியருளிய ஞானாச்சாரியரை நோக்கி, சுவாமி அவ்வாறாயின் சத்தையும் சித்தையும் போல ஆனந்தமும் அதனிடத்தே ஏன் காணப்படவில்லை எனக் கேட்கிறான். எ-ம்)

107. தானன்றி வேறொன்று மில்லாத பூரண
சச்சிதா னந்தகுணமாய்,
ஊனின்ற உயிர்தோறு மொன்றாகு மென்றா லது
ஒக்கின்றபடி கண்டிலேன்.
நானென்ற சீவர்கள் சத்தான வகையொக்கும் ஞானங்கள்
வெளிகண்டதாம்,
ஆனந்த மிவைபோல வெளியாக உதியாத
அடைவேது குருநாதனே!

அ-வ, உரை = தேசிகஞானாச்சாரியரே... ஆன்மா தன் மாத்திரமாய் இருப்பதன்றித் தன்னைத்தவிர, இதரவேறொரு வஸ்த்துக்களற்ற பரிபூரணமாகிய சச்சிதானந்த சுபாவமாய், தேகம் பெற்றுவாழும் சீவர்கள் தோறும் ஏகமா (ஒன்றாய்) யிருக்குமாயின், அவ்வான்மாக்கள் அங்ஙனம் ஒத்திருக்கும் தன்மையைப் பார்த்திலேன்? ஆனாலும் அகம்மமதை உடைய சீவர்களிடம், சத்தும் சித்துமாகிய தன்மைகள், ஒத்திருப்பது விளங்குகின்றது இது அநுபவமுமாகும். இவற்றைப் போல சீவர்களிடமும் விளங்குகின்றது இது அநுபவமுமாகும். இவற்றைப்போல சீவர்களிடத்தில் ஆனந்தமானது வெளிப்படையாகத் தோன்றாத காரணம் யாது எனக் கேட்டனன்... (எ-று).

(அ-கை-107-வது கவிக்கு விடை கூறுகிறார் ஞானாச்சாரியர்!)

108. உருவங்க ளிரதங்கள் பரிசங்கள் ஒருபூவி
லொன்றாகு மென்றாலுமே
கரணங்க ளோரொன்றில் ஓரொன்று தெரியுங்
கணக்கின்றி வாராதுகாண்
அருமந்தச் சச்சிதா னந்தச் சுபாவங்க
ளான்மாவின் வடிவாயினும்
பிரபஞ்ச மயமாம் விருத்திபே தத்தினாற் பே
தங்களாம் மைந்தனே.

அ-வ, உரை = விவேகமிக்க புத்திரனே?.. ஒருமலரின் நிறத்தை, கண்டசட்க்ஷிந்திரியம் (கண்) இதழ்கள் வெண்மையும் காம்பு பச்சையாயும் உள்ளதென அறியும், அம்மலரின், மிருது கடின தன்மைகளை துவக்கிந்திரியமெனும் தொடுவுணர்வு அறியும், அம்மலரின் மணம், ஆகா நல்லநறுமணம் என ஆக்கிராணம் எனும் மூக்கு அறியும், பார்? மகனே, ஞானேந்திரியங்களில் மூக்கு, துவக்கு, கண் ஒவ்வொன்றும் (தனித்தனியே) மணம் - பரிசம் - ரூபம் ஒவ்வொன்றையும் தனித்தனியே அறிகின்றன அன்றோ? அல்லாது இவைகள் மாறுபட ஒன்று வேறு ஒன்றை அறிய மாட்டாதன்றோ? அதாவது, கண், மணத்தையும், மூக்கு ரூபங்களையும், தொடுவுணர்வு மேலிரண்டில் யாதொன்றையும் அறியமாட்டாது. அப்படியே அருமருந்தன்ன! சச்சிதானந்த இயல்புகள் ஆத்மசொருபமே

ஆனாலும், உலகவடிவிலும் அதன் விசயங்களிலும் பிரவிருத்தியாய்ச் செல்லும் மனோபேத வேறுபாட்டு கற்பனைகளினால், அச்சச்சிதானங்கள் ஒவ்வொன்றும் வேறுபட்டே இருக்கும் இது துவைத விசிஷ்ட சேதன விசாரணையின் ஸ்மிருதி என... அறிவாயாக என்றார்! (எ-று).

(அ-கை-இதுவுமது பற்றியது - குளகம்)

109. **தாமதமிராசதஞ் சாத்துவீக முக்குணத்**
தால்வரும் விருத்தி மூன்றாம்
ஆமவைகண் மூடமுங் கோரமுஞ் சாந்தமு
மதனபிமான மாகுமகனே
எமுற விருக்கின்ற சச்சிதானந்தங்கள்
என்றென்று மொன்றாகிலும்
நாமுரைக் கும்விருத் திப்பிறிவி னாற்
சொரூபஞானாதிபிரி வாகுமே..

அ-வ, உரை =புத்திரா?.. சாத்வீக குணமும் இராஜதகுணமும் தாமச குணமும் என்ற முக்குணங்களால், வரும் உபாதி விருத்திகள் மூன்றாகும் ஆமாம், அவைகளின் இலக்கணம், சாந்தமும் கோபமும், மூட விருத்தி (மறைக்கும்) யுமாகும், இதன் பெயர்களை இப்படி பெற்றுள்ளது? இன்பங்கட் கெல்லாம் இன்பந்தரும் மூலபீடமாய் விளங்கி ஒளிரும் சச்சிதானந்தங்களானது எக்காலத்தும் ஒன்றேயாகும், ஆனாலும் முன்பே யாம் கூறிய விருத்திபேதங்களினால் தான், அவ்வப்போது சச்சிதானந்தங்கள் வேறுபாடாய்த் தோன்றிடும் என்றறிக?... (எ-று).

(அ-கை- இதுவுமது பற்றியது - குளகம்)

110. **சடமான மூடத்தருக்குக் கல்லுமண் களிற்**
சத்தொன்றுமே தோன்றுமால்
விடமான காமாதி கோரத்திலானந்தம் விளையாது
மற்றவை களாம்
திடமான ஒழிவாதிசாந் தத்திலே சச்சிதா
னந்தமூன்றும் வெளியாம்
மடமான மூடங்கள் கோபங்கள்
விடுஞ்சாந்த மனமாகி லானந்தமே!

அ-வ, உரை = சடமாகிய கல் மண் மரங்களிடத்தே, தமோகுணாம்ச மூடவிருத்தியில் சத்துமாத்திரமே தோன்றும் விஷமமான காமக்குரோதாதி முதலிய கோரவிருத்தியில், ஆனந்தந் தோன்றாது, சத்தும் சித்தும் தோன்றும், தோஷ மற்றதும் உறுதியும் உள்ளபடியுமான சாந்தவிருத்தியில், சத்து சித்து ஆனந்தமென்ற மூன்றும் வெளிப்படும், அஞ்ஞானமும் அறிவின்மையுமான மூட விருத்திகளையும் கோரவிருத்திகளையும் விட்டுநிற்கும் (தியாகித்த-பற்றின்றி) மனமானது, சாந்த விருத்தியை பொருந்தியிருப்பின் குறைவிலா ஆனந்தமே வெளிப்பாடுபெறும்! ஆத்மஸ்வரூபமே யான சச்சிதானந்தம் விருத்திகளின் மனவிகற்ப பேதங்களால் மறைந்துவிட்டது போலவும் வெளிப்பட்டது போலவும் தோன்றினதே அன்றி அவைகளிடத்தும் அச்சச்சிதானந்தம் இல்லாதது அல்ல, அவைகளிலும் அது இருக்கிறது, என யூகித்துணர்வாயாகா என்றருளினார்... (எ-று).

அ-கை- அச் சச்சிதானந்த இலக்கணம் யாது? என்ற கேள்விக்கு உத்தரம் - விடை - கூறுகிறார்.. (எ-ம்)

111. **இகமான குருநாத னேசச்சி தானந்த**
மெனுமிலக்கண மறிகிலேன்
அகலாத சத்தாவ தேதுசித் தாவதேது
ஆனந்தமே தென்றிடின்
மிகுகால மூன்றுங் கெடாதிருப் பதுசத்து
வேறுபாடறி தல் சித்தாம்
மகிழ்காம நுகர்போது சுகமாகு மனுபூதி
வாழ்வென்ப தானந்தமே!...

அ-வ, உரை = எல்லாவகையிலும் எனக்குப் பொருத்தமும், எளிதாகவு முபதேசிக்க இம்மானிட வடிவங்கொண்டருளும் குருவே. சச்சிதானந்த மென்கின்றதற்கு இலக்கணம் அறிகின்றேனில்லை. நீங்காதுள்ள சத்தென்ப தேது, சித்தென்பது யாது, ஆனந்தமென்பது ஏது? என்று கேட்பாயாகின் கடந்தது நிகழ்வது வருவதென்னும் முக்காலங்களிலும் கெடாமலிருப்பது சத்தாகும். நித்ய அநித்திய சித் சடங்களைப் பகுத்தறிகின்றதே சித்தாகும். விரும்புகின்ற பொருளை

பெற்று அநுபவிக்கும் போது உண்டாகும் இன்பசுக அநுபவமே ஆனந்த இலக்கணம் என்று அறிந்திடுக? என்றார்.. (எ-று).

அ-கை- ஐயனே! ஆன்மா சச்சிதானந்தம் என்பதற்கு அநுபவம் என்பது எவ்வாறு எனகேட்டனன் (எ-ம்).

112. நாசச் சரீரத்திருக்குஞ் சரீரிதனை நால்வேத
மகா வாக்கியம்
நீசச்சிதானந்த மென்றிடினு மாசிரியர்
நீபிரம்ம மாவை யெனினும்
மாசற்ற சச்சி தானந்தம்நா னென்னவிவன்
மன்னுமநுபவம் எங்ஙனே.
கோசப் புரங்களை இடித்துத் தகர்த்த
மதக்குஞ்சரக் குருநாதனே

அ-வ, உரை = மூன்று, தூலம், சூக்குமம் - காரணமென்ற தேகங்களையும் விழிப்பு கனவு உறக்கம் என்ற அவஸ்தை மூன்றையும் விசுவன்தைசதன் பிராக்ஞன் என்ற அபிமானப் பெயர்களையும், இவைகளுடன் தகாத உறவு கொண்டிருந்த சிதாபாசனையும் (என்னை) இவைகளைஎல்லாம் போர்த்தி மூடியிருந்த பஞ்சகோசங்களையும், தங்களின் உபதேசவாக்கியத்தின் பலத்தால், இடித்துத் தகர்த்துத் தூள்தூளாக்கிய, மதயானை போன்ற என் குருமூர்த்தியே! மண்ணுள் தீயுள் மறைந்து கருகிப் போகும் எனதுடம்பில், உறுபொருளாம் தேகியை (என தாத்மாவை) நான்கு வேதங்களின் மகாவாக்கியங்களும், குருபரனாகிய தாங்களின் உபதேசத்தாலும், நீயே அச்சச்சிதானந்த சொரூபன் என்று கூறினும் நிர்மலரூப பிரம்மம் நீயே என்று சொல்லினும், அருமைமிகு சச்சிதானந்த சொரூபமே நான் என இம்மாணவர் பொருந்துகின்ற அநுபவமாவது எவ்வாறு உள்ளது எனச் சீடன் கேட்டனன்... (எ-று).

(அ-கை- ஆன்மா சத்தென்பதற்கு அநுபவங் கூறுகிறார்!. (எ-ம்)

113. சென்மாந் தரஞ்செய்த வினைகளுடல் தருமெனிற்
செல்காலமிவ னுண்டலோ,
கன்மாநு பவநரக சொர்க்கமெனில் வருகின்ற காலத்தும்
இவனுண்டலோ,
உன்மாத யாதனாவுடல் கடவுளுடல்
மனிதவுடல் மாறிமாறி அழியும்
தன்மாய உடல்கெடினும் இவனிருப் பதுகொண்டு
சத்தென்ப தொக்கும் மகனே..

அ-வ, உரை = அன்புடைய மைந்தா, ஒருசீவன் முந்தியப்பிறவிகளில் செய்த, புண்ணியபாவ மிசிர (கலந்தது) கர்மங்களைச் செய்துள்ளனர்? அதாவது புண்ணிய கருமங்களை மிகுதியாக செய்த சீவர்கள் தேவர்களாகத் தோன்றுவர். பாவங்களையே மிகுதியாகச் செய்தவர்கள், ஈ எறும்பு புளுமீன் வண்டு பறவை ஆடுமாடு புலிகரடி யானை முதலிய தேகங்களை அடைவார்கள், புண்ணியமும் பாவமும் கலந்து செய்தவர்கள்தான் மாநுடப்பிறவிகளாய்ப் பிறந்திடுவர், இதுவேதங்களின் தீர்வை ஆகும், இன்னும் வினைப்போகமே ஒரு தேகங் கண்டாய் என, பட்டிணத்தடிகளும் கூறியுள்ளார். சங்கல்பமே வடிவமாகும்! முந்திய பிறவிகளிற் செய்த கருமம் இப்போது இந்த தேகத்தைக் கொடுத்திருக்கிறது என்றால், இவன், சென்ற காலத்திலும் இருந்திருக்கின்றான் அல்லவா? இப்பிறவி இத்தேகத்தில் செய்தகர்மங்களின் பயனை அநுபவிக்கத்தக்க சொர்க்க நரகங்களை அடைவன் என்றால் இனிஉளவாகும் எதிர்காலத்திலும் இவன் இருப்பான் அல்லவா? சித்த பிரமைக்கு காரணமான யாதனா சரீரமும் (நுண்ணுடல் - சூக்குமவுடல்), தேவசரீரங்களும் மாநுடசரீரமும், மற்றபிற சீவர்களாகவும் மாறி மாறிப் பிறந்திருந்து நாசமானது எத்தனையோ அளவில்லை, இப்படியிப் பிறவிசரீரம், முந்திய பிறவிசரீரம், இனிவருங்கால சரீரம் எனப்பிறந்திறந்து அழிந்துள்ளது ஆயினும், ஒவ்வொரு பிறவிதோறும் பிறந்து இருந்து இறந்தது அந்தந்தச் சரீரங்கள் தானே? தவிர இவனது ஆத்மா தொடர்ந்து அழியாமல் இருந்துள்ளது அல்லவா? அதனால் உணர்வு வடிவனான ஆன்மா! இவனே சச்சிதானந்தன்,

இவ்வநுபவமே சத்து என்பது யார்க்கும் சம்மதமாம்! என அறிக?.. (எ-று).

அ-கை-இது ஆன்மா சித்து என்றதற்கும் ஆனந்தம் என்றதற்கும் அநுபவங் கூறுகின்றார்!... (எ-ம்)

114. இருளாக மூடுஞ்சுழுத்தி யிலிராத்திரி
யிலிரவிசுடரற்ற பொழுது
மருளாம லிருளையும் பொருளையும் தெரிகின்ற
வகைகொண்டு சித்தாகுமே,
பெருவாழ்வு மிக்கதானே தன்னிடத்திற்பேராத
பிரிய மதனால்
அருகாத பிரியஞ் சுகத்தில் வரு மாதலால்
ஆனந்தமா மைந்தனே!

அ-வ, உரை = குமாரா? உனது பேருறக்கத்தில் சுழுத்திய வஸ்தையில தினப்பிரளயமாகும் அஞ்ஞான அந்தகார இருள் மூடிக்கொண்டிருப்பதையும், சூரியப் பிரகாசமில்லாத போதும் மயங்காமல் ஏனைய பொருள்களையும் இருளையும் காணுகின்ற வகையினால் ஆன்மா சுயம்பிரகாச வடிவுடைய சித்தாகும். பல்வகை ஆனந்தங்களுக்கெல்லாம் கொள்கலமாய், பேரானந்தமிக்க தானே தன் இடத்தில் அகலாத (மாறாத) பிரியம்கொண்டிருப்பதால், அதுகுறையாத பிரியமே தனது சுகத்தில், வருவதே அநுபவமாதலால் ஆன்மாவே ஆனந்தமாகும், அறிவு அறியாமை ஒளி இருள் என்பதின்றி அறிவதற்கெல்லாம் அறிவாயிருந்து அறிதலால் சித்தாகும் அநுபவிக்கின்ற விசயங்கள் அனைத்தினுமுள்ள பிரியங்கள் நீங்கினும் தனது பிரிய நீங்காதிருப்பதால் ஆன்மாவே ஆனந்தமாகும் என அறிக? என்றருளினார்!...

அ-கை- சுகசாதனங்களில் பிரியமிருப்பதுபோல ஆத்மாவிலும் பிரியமிருப்பதால், அதே ஆனந்தத்திற்குச் சாதனமாகாதோ, எனின் அங்ஙனம் ஆகாது என்பதற்கு அநுபவம் கூறுகிறார்.. (எ-ம்).

115. அன்ன பானாதிசுக சாதனம் அதாகையால் யார்க்கும் வெகுபிரிய மாகும்

இன்னவா றான்மாவு மானந்த சாதனமெனக் கருதுதல் பொருளல்லவே,

சொன்ன வான்மாவை ஒருசுகசாதனங்க ளோடுஞ் சொல்லுவாயாகின் மகனே

உன்னதா னந்தம் வேறநுபவிப்ப தாமுபய வான்மாவு முளவோ

அ-வ, உரை = பிரிய மைந்தனே ? திண்பன குடிப்பன கடிப்பன நக்குவன என்கிற பேருண்டி சிற்றுண்டி முதலியவைகள் யாவர்க்கும் சுகசாதனமாம், சிலர் சில உண்டி வகைகளை விரும்பி அடிக்கடி வெகு பிரியமாய் சாப்பிடுவர், இவர்களுக்கு இது பிடிக்கும், பலருக்கு இது அறுதியாகப் பிடிக்காது இருப்பினும் உணவுவகைகளில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று பிரியமாகும். இவைகள் ஆனந்தமல்ல ஆனந்த சாதனங்களாகும். இவ்வானந்தங் கட்கெல்லாம் ஆத்மா சாதனமென்று கருதுவது பொருத்தமல்ல. மேற்கூறிய உண்டிவகை ஆனந்தங்கள் யாதொன்றோடும் ஆத்மாவை ஒப்பிட்டுச் சொல்வாயாகில் உனதானந்தமானது உன்னைவிட வேறாயிருக்கின்றதோ? - உண்டிவகையை அலது, ஆத்மாவை என்றவைகளை அநுபவிக்க தனித்தனி அதுஅதெற்கென இரண்டு ஆத்மாக்கள் இருக்கின்றனவோ, யூகித்துணர்ந் திருப்பாயாக? சாதனாதி அப்யாசங்களிறந்து சாத்தியமாம் அநுபவமும் நழுவிநின்ற ஸ்தானத்தில் எஞ்சியிருக்கும் ஆத்மாவும், அஃதனை அநுபவிக்கின்ற ஆத்மாவும் வேறுவேறு இல்லையே? ஆதலினால் அவ்வாத்மா, ஆனந்தமாவதேயன்றி, அவைகட்குச் சாதனமாகாது என்றறிந்திடுக? (எ-று).

அ-கை-ஆத்மா ஆனந்த சொரூபமாயின் எதிரிட்டநுபவிக்கும் ஆனந்தம் அஃதாகாதோ? எனின், அது விசயானந்தமாதலின் அஃதாகாது என்பதற்கு அநுபவங் கூறுகின்றார்... (எ-ம்)

116.விடயசுக மதில்வருதல் பிரியமாத்திரமாகும்
வெகுபிரிய மான்மாவிலாம்
விடயசுகம் வரும்பிரிய மாறிவரும் ஆன்மாவில்
வெகுபிரிய மாறாதுகாண்
விடயசுகம் விடலுமாங் கொளலுமாம் ஆன்மாவை
விடுவதெவர் கொள்தெவர்பால்
விடயசுக போகங்கள் விடுமவனை அவனால் விடப்,
படா தொருநாளுமே,

அ-வ, உரை = விசயானந்தங்கள் எவரொருவருக்கும், தாம் அவரிடத்தும் அவர்தம்மிடத்தும் விரும்புகின்ற அளவிலே அமைவனவாம் ஆத்மாவினிடத்துள்ள பிரியம் வெகுபிரியமாம், அளவிலதாகும் அகலாததும், உடலால் மனதால் பொருள்வகைகளாலும் குறைவுபட மாட்டாததாகும். மேற்கூறிய மூவகைகளும், வந்து பெருகி அணுகிய போது ஆனந்தமும், இவைகள் வாராமலும் குறைந்து நீங்கிய போது துன்பமும் தரும். ஆத்மாவின் மேலுண்டான பிரியம் நீங்காது விசயானந்தத் திடமுண்டான பிரியம் நிலைமையுடையதல்ல, விசயசுகமானவைகளை, விரும்பி ஏற்றுக்கொள்ளவும், வெறுத்துவிட்டுவிடவுங் கூடும். இவ்விதம் ஆத்மானந்தத்தைக் கொள்கின்றவரும், விடுகின்றவரும் யார்? எங்கேனும் எவராலும் எதற்காகவும் விடுவதுங் கொள்வதுமில்லாத நித்யானந்தமே தனது ஆத்மானந்தம், நன்றாகயூகித்து அறிந்திடுக? விசயானந்தங்களை ஒருவர் வெறுத்துவிடக்கூடும் அவ்வெறுப்பினால் விட்டவன் தன்னால், தன்னை வெறுத்துப் புறப்படுத்திட முடியுமோ, ஒருநாளும் ஒருபோதும் ஒருவராலும் நீக்கமுடியாத பேரானந்தம் தவிர, அவ்விசயானந்தங்கள் எதுவும் ஆத்மானந்தம் ஆகாது என உறுதியுணர்வு பெறுக, என்றார். (எ-று).

அ-கை-ஆத்மா ஆனந்தவடிவமாகிடின் அதனிடத்தில் வெறுப்பிருக் கின்றதே எனின், அவ்வாறில்லை என்பதற்கு அநுபவங்கூறுகிறார். (எ-ம்).

117.வேகின்ற கோபங்க ளாலென்னை நான்கொன்று
விடுகின்றே னென்று சிலபேர்
சாகின்ற படியினாற் தன்னையே தான்கொன்று
சாவேனெனல் சங்கையல்லவே,
தேகந்தனைக் கொல்லும் அவனால் விடப்பட்ட
தேகமவனல்ல மகனே
ஆகந்தனைக் கோபமலது தனைஒருநாளும்
ஆன்மாவெறுப்ப தில்லையே..,

அ-வ, உரை = அறியாமையும் ஆவேசமும் கொண்டு கொதித்தெழுந்த கோபங்களால், என்னையே நான் (தற்கொலை) கொன்றுவிடுகின்றேன் என்று சிலர்சொல்லி இறந்து விடுகின்றபடியால், ஆத்மாவானது தன்னைத்தானே கொலைசெய்து கொண்டு சாவதுஎனச் சங்கிப்பது (சங்கை - சந்தேகம்) சரியானது அன்றாம், உடலைக் கொன்ற அப்புருட (சீவ) னால் நீக்கப்பட்ட அத்தேகமானது ஆத்மா அன்றாம், தீயை ஒத்த கோபத்தால் தன் உடலை அழித்தானே தவிர ஆத்மாவை, எவரும் எப்போதும் அழிக்கவில்லை அதுமுடியாததும் ஆகும். உடலை வெறுத்தது போல ஆன்மாவை ஒருவராலும் ஒருநாளும் வெறுக்கமுடியாது மகனே.. என்றார்! (எ-று).

அ-கை-உடல் கருவிகரணங்களாலும் சிதாபாசனாலும் வருகின்ற ஆனந்தங்கள் ஆத்மானந்த மாகுமோ? எனில் அவ்வாறு ஆகாதெனக் கூறி, ஆத்மானந்தமே முக்கியம் எனக்கூறுகின்றார். ..(எ-ம்)

118.தாகப்ப டும்பொருளி லும்மகன் பிரியமாந்
தனயனிலு முடல்பிரியமாம்
ஆகத்தி லும்பிரிய மிந்திரியங்
கரணமதனி லும்பிரியமுயிராம்,
ஏகப்பிரா ணனிலும் வெகுபிரிய மிந்தவான்மா
விலாமிந்த ஆன்மா முக்கியம்
ஊகத்தினாற்கௌன மித்தைக் கர்த்தா மூன்றுமொன்றி
லொன்றதிகமகனே,

அ-வ, உரை = சிறந்தவைகளில் எல்லாம் சிறந்தவற்றைச் சிந்திக்கின்ற செல்வா?.. உலகியலில் ஒருவன் பெரிதும் முயன்று பாடுபட்டுத் தேடிச் சம்பாதித்த தனங்கள் பிரியமானதாயிருக்கும். தன் புத்திரனுக்கு நோய்பீடை வந்தபோது அவற்றைப் போக்கிட தனமுழுதும் செலவானாலும் ஆகட்டும் என்றபோது, புத்திரனே மிகவும் பிரியமானதாயிருக்கும், அப்புத்திரப்பிரியமும் தன்தேகவாழ்வுக்கு ஊறு (அசௌக்கியம்) வந்தபோது புத்திரனை கைவிட்டுத் தன்தேகம் பேணுவதுவே வெகுபிரியமாகும். இத்தேகத்திலும், இந்திரியங் (கை-கால்-கண்-செவி, முதலியவுடலுறுப்புகள் முக்கியப் பிரியமாம். அவ்விந்ரியங்களினும் மனாதியாம் அந்தக் கரணங்கள் மிகமிகப் பிரியமாம், இவ்வந்தக் கரணங்களையும் விட உயிர் மிகப்பிரியமாகும் இவ்வுயிரையும்விட சீவன் பிரியமாகும், இந்தச் சீவனையும்விட துவம்பத சாக்ஷியான கூடஸ்த ஆன்மாவே மிகுந்தபிரியம் ஆதலின், இவ்வான்வாவே மிகமிக முக்கியம் எனக்காண்போமாக? இத்தகைய ஒழுங்குவிசாரணையால், கௌணாத்மா மித்தையாத்மா, கர்த்தாத்மா ஆகிய இம்மூன்றிலும் ஒன்றுக்கொன்று, உரிமையும் பெருமையும் அதிகம் (ஆயிரம் இலட்சம் கோடி என) ஆகும்அறிக? தனம் முதலிய, இவ்வேழும் கௌணாத்மகம்? ஆத்மாவை கருதிநின்ற பிரியமே முக்கியப் பிரியமாகும் என்றும் அறிந்திடுக? (எ-று).

அ-கை- ஆத்மானந்தமே முக்கியமாயிருக்க, புத்திரன் முதலிய ஏழும் அங்கங்கே அதுஅதனை ஆத்மா என்றும் பிரியம் முக்கியம் என்றும் கூறியதேன்? எனின் அதற்கு விடை கூறுகின்றார்... (எ-ம்).

119.கெடலான பொழுதிவன் காணிக்கு மகனான
கௌணவான்மா முக்கியம்
விடலாத உடலம் மரிக்குநாளுடலான
மித்தையான் மாமுக்கியம்
திடமான நன்மைகதி வேண்டினாற் கர்த்தனாஞ்
சீவவான்மா முக்கியம்
சடமாயும் முத்தியினின் ஞானவான்மா
வானதானேம காமுக்கியம்..

அ-வ, உரை = இவனின் மரணகாலத்தில் இவனுக்கு ஈமக்கிரியை களைச் செய்பவனாயும், சம்பிரதாயமாக குலம்விளங்க வந்தவனாகவும் தேடிய பூமி திரவியம் முதலியவைகட்கு உரிமையுடையவனாதலாலும் புத்திரனையும் கௌணவான் மாமுக்கியம் என்றும், தான் தாங்கிவந்த தேகத்தை பேணுகின்ற காலத்தில் அத்தேகமும் மித்தையான ஆத்மாவும் முக்கியமாம், பலமாகிய (பிறவாப் பெருநெறியாம்) நற்கதியை விரும்பும் காலத்தில் நான் எனும் சீவாத்மா முக்கியமாம், காண்பான் காட்சி காணப்படும் பொருள் எனும் திரிசியங்கள் ஒழிந்த மோக்ஷகதியில் ஞானாத்மஸ்வரூபமே தானாகிய ஞானான் மாவே மகா முக்கியம் ஆகும். புத்திரன் முதலிய ஏழும் முக்கியம் என்றது பூர்வபக்ஷம் (ஆரம்ப நிலைகுறிப்பு - இதுவே ஆத்மப் பிரீதி உண்டாகிடவாம். உலகியற் பன்மையும் கூட)!... உபசாந்தமாகக் கூறியது இவைகட்கெல்லாம் இலட்சியார்த்தமாயுள்ள, ஆத்மாவே மகாமுக்கியம் என்றதே சித்தாந்தமெனக் கொண்டு அமைவு பெறுக? என்றார். (எ-று).

அ-கை- விரும்பியிருந்த கௌணம் மித்தை கர்த்தா, ஆகிய மூன்றும் நீங்கிய ஆனந்தமே ஆத்மஸ்வரூபானந்தமாகும் என்கிறார்!. (எ-ம்)

120. புலியமனு கூலமெனில் இஷ்டமாம் பகைசெயிற்
புதல்வரெனினும் வெறுப்பாம்
உலகில் இருவகையு மல்லாத புல்லாதியி
லுதாசீனமா மாதலால்
மலினமுறு சின்மயன் பலவகையு மிப்படி மகிழ்ச்சியில்
விருப்ப மிகழான்
அளவிலா ஆனந்தவடி வாகும்உன் சொரூபத்தை
ஆராய்ந்துபார் மைந்தனே

அ-வ, உரை =மாணவ? அஞ்சி வெறுக்கும்படியான கொடிய மிருகம் புலியும் கூட மிருகக்காட்சிசாலை நடத்துபவனுக்கு சினேகமாகும் அநுகூலம் செய்வதால், விரோதமும் வெறுப்பும் காட்டுமானால் புத்திரனும் பகையாவான், துவேஷம் கொள்வர், உலகியலில் இவ்விரண்டு இயல்புகட்கும் இலக்காகாத புல்முதலிய ஓரறிவுத் தாவரங்களிடம், யாரும் விருப்பும் வெறுப்புமின்றிய உபேக்ஷையுடன்,

அ-து, உதாசீனமாய்க் கடைப்பிடிப்பர், ஆதலால் யாதொருதோஷமு மற்ற ஞானஸ்வரூபனானவன், மேற்சொன்ன எவ்விதத்திலும் ஆத்மானந்தத்தில் பிரியமகலான், இவ்வன்னமாகிய அளவில்லாததான உனது ஆத்மசொரூபத்தை ஆராய்ந்து தெளிந்து அதுவே நீ என்று நிச்சயித்தின்புறுவாயாக? உதாசீனம் விருப்பு வெறுப்பு ஆகிய மூன்றும் ஆத்ம சுகத்திற்கு மாறுபாடுடையது ஆதலின், இவ்விதமற்ற அச்சுகம் மாறுபடாதிருத்தலாலும், இவ்வானந்தமே ஆத்மசொரூபமாம் என்பதாம் இது, இனக்கூறும் எட்டுவித ஆனந்தங்களில் ஒன்றாகிய ஆத்மானந்தமாகும் என்பதும் நீயறிவாயாக?... (எ-று).

அ-கை-நிரதிசயானந்தமே ஆத்மா என்பது அநுபவமாகும் பொருட்டு அதிசயானந்தங்கள் எட்டுவிதமாகக் கூறத்தொடங்கி ஆனந்தம் எத்தனைவிதம் என்ற கேள்விக்கு பதில் கூறுகின்றார்.. (எ-ம்).

121. **மானஞ்சி றந்தகுரு நாதனே ஆனந்த வகைகள்**
எத்தனை யென்னிலோ
ஞானந்தி கழ்ந்தபிர மானந்தம் வாசனானந்தம்
விடயானந்த மென்று
ஆனந்த மூன்றுவித மெட்டுவகை யென்பார் சிலரவ்வைந்து
மிதிலடக்கம்
ஆனந்த வகைசொல்ல கேள்மைந்த னேயெட்டு மி∴தின்ன
தின்னதெனவே.

அ-வ, உரை = பெருமைகளெலாம் ஒருங்குதிரண்டு எழுந்தருளிய குருவே! ஆனந்தப் பாகுபாடுகள் எவ்வளவுளதென்று நீகேட்பாயாகில்? சித்துக்கள் மிகுந்தொளிரும் பிரம்மானந்தம் என்றும், வாசனானந்தமெனவும், விசயானந்தமென்றும் ஆனந்தம் மூவகையாகும். இதனைச் சிலர் எட்டுவிதமென்பர். இவர்கள் கூறிய பிற ஐந்து ஆனந்தங்களும் அம்மூன்றினுள் அடக்கமாயுள்ளது. சாத்திரங்கள் கூறும் எட்டுவித ஆனந்தங்களுமிங்கே, இதுஇது இன்னின்னதென அப்பகுப்புகளை நாம் கூறுவோம்நீ கேட்பாயாக? முக்கியானந்தமும் நிசானந்தமும் ஆத்மானந்தமும் ஞானானந்தமும் அத்வைதானந்தமும், ஆகிய இவ்வைந்தானந் தங்களும், பிரம்மானந்தத்துள் அடங்கியிருக்கிறது என்பார்

நூல்வல்ல சான்றோர்கள், ஒருமைபடக் கூறியுள்ளனர் என, அறிவாயாக?... (எ-று).

அ-கை- அவ் வஷ்டவித ஆனந்தங்களின் பகுப்புவகைகளின் பெயர்களை, காரிய ஏதுவுடன் கூறுகின்றார்... (எ-ம்)

122. போகத்தில் வருஞ்சுகம் விடயசுக நித்திரைப்
துளதுபிரம்சுகமாம்,
மோகத்தனந் தலிற்சுகம் வாசனைச்சுகம் முழுப்பிரிய
மான்மசுகமாம்
யோகத்தி லுள்ளது முக்கிய சுகமுதாசீன
முற்றசுக நிஜசுகமதாம்,
ஏகத்தை நோக்கல் அத்வைதசுகம் வாக்கியம்
எழுந்தசுகம் ஞானசுகமே!..

அ-வ, உரை = உலகியலார் ஒவ்வொருவரும் செய்யுங் கர்மங்களும் அதன் பயன்களையும் அநுபவிக்கும்போது அது விசயசுகானந்தமாகும், சுழுத்தியி (பேருறக்கத்தி)ல் அநுபவிப்பது அதுவே பிரம்மானந்தமாகும், ஆழ்ந்த நித்திரை கலைகின்ற மயக்கத்தில், நித்திரைதெளியவரும் போதுளவாகும் அது வாசனானந்தமென்றாகும், எங்கும் எதுவும் எல்லாந்தன் பிரிய வடிவாயுணரும்போதது, ஆத்மானந்தமாம், சமாதியில் லயமாயிருந்போ தது முக்கியானந்தமாகும், விருப்பு வெறுப்புகள் அற்ற திருப்தராயுதாசீனராயுள்ளபோது அதுநிஜானந்தமாகும். ஏகபாவனையில் எல்லாம் தானாய் அறிந்து நிற்கும் அது அத்வைதானந்தமாகும். சுருதிகுருவுபதேசமான மகாவாக்கிய விசாரணையாற்பெறுகின்றதுவே பெருமைகள் பொதிந்துள்ள வித்யானந்தமாகும்!.. இவ்வாறு சுருங்கக் கூறிய ஆனந்தங்களின் நாமம் (பெயர்கள்) கூறப்பட்டது. என்க.

இவற்றுள் விடயானந்த இலக்கணங் கூறுகின்றார்.

123. இவ்வாறுரைசெயுஞ் சுகபேதங் களினியல்பா
மவைசொல்ல மகனேகேள்
ஒவ்வா நனவினி லுழல்வா னிடர்கெட வுறங்குஞ்
சயனமதுறுநேரம்

செவ்வாமன மகமுகமா மதில் ஒளிர்சித்தின்
சுகநிழல் சேருங்காண்
அவ்வாறிவ னுள்ளமகிழ்வா மனுபவ மதுதான்
விடயசு கானந்தம்.

அ-வ, உரை = மைந்தா? இந்தப்படியாக கூறிய ஆனந்த வேறுபாடுகளில் ஒவ்வொன்றின் இயல்புத் தன்மைகளை யாம்சொல்ல நீகேட்பாயாக? இன்பம் வந்தடையாத விழிப்பு? (சாக்கிரம்) நிலையில் சுழல்பவனுடைய துன்பம் நீங்கும் பொருட்டும் படுக்கையில் நித்திரை செய்யுஞ் சமயத்தில் சிறப்பாக செயல்பட்ட மனமானது அந்தர் (உள்) முகமாகும் அம்மனதில் பிரகாசிக்கின்ற, அறிவானந்தத்தின் சாயை (நிழல்) யானது அமைந்துகூடும், அவ்வாறே இவன் மனமானது மகிழ்ச்சியை அநுபவிக்கும் அதுவே விசயானந்தமாகும்... அறிவு அறியாமைகளில் சுழலும் பவத்துன்பம் நீங்கும்படியாய், சமாதி (பேருறக்கத்தில்) யைச் சார்ந்தபோது, தனது நிஜஸ்வரூப தரிசனம் செய்யச் சுகமுண்டாகுமதுவே விசயானந்தமாகும் என்றார்! இதிலும் அச்சுழுத்தியவஸ்தைச் சமாதியில் அநுபவித்தது பிரம்மானந்தசுகமே!. அவ்வுறக்கம் கலைந்த போது, அச்சுகத்தை இழக்காது ஆயினும் அதை எதிரிட்டு அறிந்து மகிழ்தலால் அது ஸ்மிருதி (நினைவுண்டாதலாலது) விசயானந்தம் என்றது மகனே...

(அ-கை-இது பிரமானந்த இலக்கணங் கூறுதல்!)

124. ஈனந்தருஞ்சுக விடயஞ் திரிபுடி யிடரா
மெனமன மசையாமல்,
சேனந்தனது குலாயந் தனில்விழுஞ் செயல்போ
நித்திரை செறியுஞ் சீவன்
தானந்த மில்பரனுட னொன்றுவன் ஒருதனை
யல்லது பிறநினையாமல்
ஆனந்த மயமாவன் சுகமிகு மதுதான்
உயர் பிரம்மானந்தம்...

அ-வ, உரை = இழிவையும் பிறப்பையும் துன்பத்தையும் தருகின்ற திரிபுடிமயமான துன்பமென அறியாமல், மனஞ்சலியாமல் விசய

சுகபோக காரியங்களில் உழன்று, பருந்தானது உயரப்பறந்தபோது தனதுஇரு சிறகுகளையும் ஒடுக்கித் தனது கூட்டின் நேரே வந்தவிழுந்து பொருந்தும். அத்தொழிலைப்போல, நித்திரைக்குச் சென்ற சீவன் தன்னையல்லாததும், தனக்கு நிகரில்லாததுமான, ஆதியந்தமற்ற பிரம்மத்துடன் கூடுவான், நாநாவிவகார சிந்தனைகளேது மற்று, அப்பிரம்மாகாரத்தில் கரைந்து ஆனந்தாகாரமாவன், சுகமெல்லாஞ் சார்ந்துள்ள அதுவே மேலான பிரம்மானந்தமாகும் என, மதித்திருப்பாயாக?.. (எ-று).

(அ-கை-இதுவுமது பற்றியது - குளகம்)

125.தூங்குஞ்சுகமது வேபிரம்மச் சுகமெனல் சுருதிப்
பொருள்விழி துயில்வோர்கள்
தாங்கும், மலரணை, நன்றாகச் சிலர்சம்பா,
திப்பதுதான், யூகம்
தீங்குநன் மையும், ஆண்பெண், முறைமையுந்,
தெரியாதமனி செய், பொதுதேபோல்
ஆங்குள் வெளிகளு மறியாவநுபவ
மதனாலதுபிர மானந்தம்...

அ-வ, உரை = குமாரா? இதுநன்கு கவனித்துணர வேண்டியபாடம், உகபத் சிருஷ்டி விளக்கம் போல! அறிதுயிலில் உதயமாகும் ஆனந்தமானது பிரம்மானந்தம் எனக்கொள்வதே வேதங்களின் முடிவான மகாவாக்கியார்த்தப் பொருளாம். நித்திரை செய்பவர்களிற்சிலர், தாம்நித்திரைசெய்வதற்கு வசதியான இடமும் கட்டில் விரிப்பு ஜமுக்காளம் போர்வை தலையணை முதலிய சாதனங்களைச் சேகரித்திடுவர், இதுதான் அவர்பிரம்மானந்த சுகமானதூக்கத்தை அநுபவிக்கக் கருதியதே ஆகும். ஆனால்? இந்நூலாசிரியர் ஸ்ரீ தாண்டவராய சுவாமிகள், இத்தகைய தூக்கத்தைக் குறித்துச் சொல்லவில்லை என்றறிக? பின்னையோ எனில் இதுசாதாரணமாகத் தூங்குவது, பாடலின் உட்கருத்து, சுருதிப் பொருள் விழிதுயில்வோர்கள் என்றுள்ளது! அதுயாதெனில், இதுதான் அறிதுயில், என்பது வேதமுடிவான மகாவாக்ய உபதேசாம் ருதத்தில் தனது ஆத்மாவை கரைத்திருப்பது அதாவது பனிக்கட்டி (ஆத்மா) யை, தண்ணீருள் (பரமாத்மாவில்)போட்டுவிட்டதுபோல,

இந்த அறிதுயில் எனும் யோகநித்திரையை புகழாத ஞானிகளும் சாத்திரங்களுமில்லை எனலாம். இன்னும் இதன் சூசகச்சிறப்பு? சாக்கிரத்தில் சுழுப்திநிலை! த்ன்னை அதனுள் கரைத்திருக்கும் அநுபவத்தை (அதன் சொரூபாம்சத்தை சுழுத்தி எனும் பேருறக்கத்தின் அநுபவித்ததை (விழிப்பில்) சாக்கிரத்திலும் நழுவவிடாமல் (ஸ்மிருதியுடன்) நீங்காத நினைவுடன் பொருந்தியிருப்பதே ஆகும்.

உறக்கத்தில் ஞானி அஞ்ஞானி பாமரன், ஏனையவுயிர் களும்கூட, ஒன்றும் தெரியாத இயலில் நல்ல உறக்கத்திலிருப்பது சகச இயற்கையாகும், இங்கு இவ்வுயிர்களும், ஆண்பெண் நன்மை தீமைகளை இரவுபகல் இன்ப துன்பம் என ஏதும் அறியாமற் தூங்குகின்றனர். இதுமூடல் எனும் காடாந்தகார அவஸ்தையே ஆகும். இப்பாடலின் கருத்தோ! தானதுவாகிக் கலந்துள்ள அநுபவத்தால், மேற்கூறிய எதையும் பகுத்தாராயமல், அது உறக்கநிலையில், இது அதே அநுபவம், நினைவிற்சுழுத்திநிலை, இது, அது இது அகம்புறம் அநுபவங்களும் நெகிழ்ந்துள்ள சுகாநுபவம்! ஆதலால் இதுவே பிரம்மானந்தம் என்று அறிந்தின்புறுக? என்றருளினார்! (எ-று).

அ-கை- சித்தில் சுகம் விளங்கும் அநுபவம் காண்பான், அறிவின்றிய ஆனந்தம் அறிவில் எவ்வாறு தோற்றும், என இடைமறித்துக் கேட்டனன். (எ-ம்).

126. உதவும் புவியினி லொருவன் அநுபவம்
ஒருவன் மனதினி லுதியாதே
மதியுங்கெடுகிற துயில்கொண்டானந்த மயனன்றோ
சுகமுறு, கின்றான்
இதுவிஞ்ஞான மயனாஞ் சிந்தையில் நினைவாய்
வந்திடும் எனக் கண்டேன்.
சுதைவிண் ணோர்புகழ் குருவே நீரிது சொல்லீர்,
சகலமும் வல்லீரே!...

அ-வ, உரை = அமிர்தம் புசித்ததால் அமரத்துவமுடைய தேவர்களும் போற்றி வணங்கத்தக்க, எனது ஞானதேசிகரே?

முத்திக்குச் சகாயமான, இப்பூமியில் ஒருவனுக்கு உதிக்கின்ற மன அநுபவமானது வேறொருவன் மனதில் உண்டாகாதே? மனோமயகோசத்துடன் விஞ்ஞானமய கோசமும் அழிந்துபோகின்ற யோகநித்திரையைக் கொண்ட ஆனந்தா காரனல்லவா?. பரமசுகத்தை அடைகின்றான். இச்சுகமானது விஞ்ஞான சொரூபமாகிய மனதுள் வந்தமையும் என்றறிந்தேன்! ஆயினும், ஒருவனது மனஅநுபவம் இன்னொருவன் மனதில் எப்படி உதிக்குமென்று நீர் அருளிச் செய்யுங்கள் சுவாமி என வினவினான்.. (எ-று).

அ-கை-126 -வது கவிக்கு விடை தருகின்றார். (எ-ம்).

127. நெய்யும், வெண்ணையுமிருபேர்களு மறிநினைவிற்,
பிறிவு அறிவினில்லை.
செய்யுந் நனவினி லிறுகும் மனதொடு
சேருஞ்சின் மயவிஞ்ஞானன்
நையுந் துயர்மனம் நழுவும் பொழுதுணர்
ஞானச்சுகமுண்ணுமானந்தன்,
பெய்யுந் துளிகளும் நீருங்குளமொடு பாரும்
போலிவர் பிறிவன்றே!...

அ-வ, உரை = நெய் என்றும் வெண்ணை என்றும் கூறப்படும் பெயர்களும் பெயரளவில் அறியப்படும் மனப்பேதம், அன்றி, அவற்றின் சுவையைக் கொள்கின்ற அறிவினிடம் பேதமில்லை இச்சா ஞானக் கிரியைகளைச் செய்கின்ற விழிப்புநிலையில், ஸ்திரமான மனதுடன் இணைகின்ற சின்மாத்திரமாயுள்ள விஞ்ஞானமயனும், வருந்தித் துன்புறுகின்ற மனமும் நீங்குங் காலத்தில், அறிகின்ற ஞானானந்தத்தை அநுபவிக்கின்ற ஆனந்தமயனுமாகிய இவர்கள் மேகம் பொழிகின்ற மழைத்துளிகளும் நீரும் போலவும், வெல்லமும் பாகும் போலவும், பெயரளவில் இரண்டானாலும் பொருள்மாத்திரையில் இரண்டற்ற ஒன்றே ஆவர், வேறுவேறல்லர், இன்னும் அறிவிறந்து உதிக்கும் ஆனந்தம் தெளிவுடன் விளங்குவதாலும், ஆனந்தத்திலிருந்து உதிக்கும் அறிவு சுக சொரூபமாயிருப்பதாலும், இச்சிற்சுகம்

அநுபவத்தில் ஒன்றாதலின் அறிவில்வரும் என்பதாம் இதை குருமுன்னிலையில் சகசநிஷ்டை வாயிலாகக் காணலாம். (எ-று).

(அ-கை- அப்படியானால், பிரம்மானந்தமயனாக நிற்காமல் அறிவில் வருவானேன் என்ற கேள்விக்குப் பதில் கூறும் வாயிலாக வாசனையானந்த இலக்கணமும் கூறுகின்றார்!.. (எ-ம்)

128. ஒன்றாகிய பிரமானந்தச் சுகமொழி
வானேன் வெளிவருவானேன்
என்றால் முன்செய்த கருமம் வெளியினி லிழுக்குஞ்
சுழுத்தி விட்டெழுந்தோனும்
நன்றா யினசுக மகலான் வெளியிலும் நடவான்
மறதியும் பெறமாட்டான்,
அன்றாமென யிருந் துறங்குஞ் சில
கணமதுவே வாசனையானந்தம்

அ-வ, உரை = ஒன்றாயுள்ள பிரம்மானந்த சுகத்தில் அழுந்தி அநுபவிக்கின்ற சீவன் அதினின்றும் நீங்குவதும் பகிர்முகமான விழிப்புப் பெற்றுவெளியில் வருவதும் ஏன் எனக்கேட்பாயாகில், முந்திய அனந்த செனனங்களிற்செய்த, கன்மவினை எனும் (இருப்பில்) சஞ்சிதவினையை இவன் அநுபவிக்க இருக்கும் அவசரத்தில், அப்பிரம்மானந்தசுகத்தில் நீடித்துநிற்கவிடாமல், பல்வேறு காரிய ஏதுக்களைக் கொண்டு வெளியிற் கொண்டுவரும், இவ்விதஞ்சுழுத்தி சுகத்தினின்றும், வெளிப்படுபவன், நன்மையே வழங்கிய அச்சுகாநுபவத்தை நீங்கமாட்டான். சரேலென வெளிப்படான். அவ்வநுபவ ஆனந்தத்தை மறக்கவும் மாட்டான், நன்றாம் என இருந்துறங்குஞ் சிலநொடிப்பொழுதுகள் மட்டும்? இதுவே வாசனையானந்தம் என அறிக?... (எ-று) இன்னும், ஆனந்த மயத்திடமிருந்து விஞ்ஞானமயத்திடம் வருவது சகசநிஷ்டையாகும், மேலும் பிராரப்த கர்மத்தை அநுபவிக்கும் இயல்பினையும் குறிக்கும், தூங்குவதுபோலச் சமாதியிலிருந்து நீங்கும் போது பிரம்மானந்தானுபவ ஸ்மிருதி (நினைவு) யோடும் வருதலால் அச்சுகம் வாசனையானந்தம் என்பதாகும்!.. (எ-று).

அ-கை- இனி நிசானந்த இலக்கணங் கூறுகிறாா. எ-ம்.

129. அந்தக் கனமுட லகமென் றிடர்களில் அலைந்தே
சுகந்தனை மறந்தேபோம்.
முந்திச் செயும்வினை சுகதுக்கந் தரும் மோனந்தரு
நடுவடிவே காண்.
எந்தப் புருடனு மொருசிந் தையுமற இருந்தே
னெனல் அநுபவமாகும்
இந்தப் படிதன் உதாசீனச்சுக மிதுவே
நிசமெனு மானந்தம்!

அ-வ, உரை = தேகாத்மபுத்தியுடன், உடல்உலகு உடமைகளை நான் என்றும் என்னதென்றும், அபிமான நினைவுண்டானபோதே ஆன்மா துன்பங்களில் சுழன்று மருவி தாம்பெற்ற ஆனந்தத்தை மறந்துவிடும், முன்பிறவிகளிற் செய்த கர்மவினைப் பயன்களான துன்பங்களையோ இன்பங்களையோ கொடுக்கும் மகாமௌனங் கொடுப்பது மத்திய கத நிலையையே ஆகும். எதிலும் நடுவுநிலை எத்தகையவான புருக்ஷனும், ஒருநினைவுமின்றி இருந்தேன் என்பது யார்க்கும் அநுபவமாகும். இதுவே உதாசீனத்தால் உண்டான ஆனந்தமாம் இதுவே நிசானந்தமாகும் என அறிந்திடுக? சமம் + ஆதி, சமாதியில் தனது எதார்த்த சொரூபத்தை, விருப்பு வெறுப்பு, நன்மை தீமை, லாப நஷ்டம், வெற்றிதோல்வி, இரவு பகல், இறப்புப் பிறப்பு துன்பம் இன்பம் என்ற இருமைகளை விடுத்து சமரசமான வுண்மையாய் இருத்தலால், அச்சுகம் நிசானந்தமாயிற்று. இதனையே சில உரையாசிரியர்கள் முக்கியானந்தமென்றுங் கூறுவாருமுளார். பிள்ளாய் விழிப்புநிலையில் நீ நிசானந்தமாகவே இருக்கிற உண்மைகூறுகிறேன் கேட்பாயாக? அஞ்ஞானிகள் கண்விழித்தவுடனே, தனது உடலும் இந்த உலகமும் சத்தியமாய்க் காணுகின்றான். ஞானிகள் கண் விழித்தபோதில் தன்னுடம்பையும் இவ்வுலகையும் கண்டறியும் அறிவையே தான் என எண்ணுகின்றான். இதனால் உண்டாகும் ஆனந்தமே, சர்வ துக்கங்களால் உண்டான இடர்களெல்லாம் நீங்கி என்றும் அழியாத ஆநந்தமாய் உள்ளதால் இது நிசானந்தமெனப்படும் என உணர்ந்திருப்பாயாக?

அ-கை- இனி முக்கியானந்த இலக்கணம் கூறுகிறார்.

130. நிசமா னதுமுக் கியமோ குடத்துள
நீரன்றே வெளியீரந்தான்
வசமா மகங்கார மதுமறைந்தா லிசமது படிந்தான்
முக்கிய வகையாகும்
திசையார் திரிசிய மறியாதே துயில்செறி
யாதே யுடற் தறிபோல
அசையா தேமதிசமமாகிய நிலையது
தான்முக்கிய வானந்தம்!..

அ-வ, உரை = நிசானந்தமே முக்கியானந்தமோ எனில், இல்லை இதன் வேறுபாட்டினைக் கூறுகின்றேன் கேட்பாயாக? குடத்திற்குள்ளே நீரிருந்தால், தான் அதன் புறத்திலும், தொடுவுணர்வில் குளிர்ச்சியுண்டாகும். அப்படி வெறும் நீரில்லா குடத்தின் புறத்தில் குளிர்ச்சி கிடைக்காதல்லவா? அதுபோல அகங்கார மமகாரம் வசப்பட்டு மறைந்தால் நிசமானது அநுபவமானால் முக்கியமாகும், எட்டுபதினாறு திக்குகளிலும் சூழ்ந்துள்ள விசயங்களை அறியாமலும் நித்திரையில்லாமலும், உடலானது நட்டுவைத்த கம்பம் போல அசையாததுபோல அறிவானது சலனமின்றி, தராசு நுணி நடுநிலையன்ன, அறிவுசமமாயிருப்பதே முக்கியானந்தமாம் என்றறிக? இதற்குவமை?.. கட்டக் கான்று கீழ்நான்று விழாமல், அட்டத்தைக் கட்டி அடுப்பை அணைகோலி, விட்டத் தைப்பூட்டி மேற்பையைத் தாட்கோர்த்து, நட்டமிருக்க நமனில்லை தானே, என்கிறார் திருமூலர்!... (எ-று).

அறிவு அறியாமையின்றி இவ்விரண்டையும் அறிகின்ற சமாதியில் அறிவே முதலாகச் சுகித்திருத்தலின், அச்சுகம் முக்கியானந்தம் ஆயிற்று எனவே முதலாகச் சுகித்திருத்தலின் அச்சுகம் முக்கியானந்தம் ஆயிற்று என்பதாம், இதையே நிசானந்த மென்பாருமுளர். இவ்விதங் கூறியது ஏனெனின்? சலனமின்றி நடுவுநிலையில் நிற்பதால் முக்யாம்ச சொரூபம் வெளிப்படுவதால் என அறிக?... சமாதியில் தன்னிடத்தில் தானே சுகித்தலால் அச்சுகம் ஆத்மானந்தமாயிற்று, சமாதியில் ஆனந்தம் ஆனந்தி (அநுபவிப்பது) எனும் இரண்டற்று சுகமாய்த் திகழ்வதால் அச்சுகம்

அத்வைதானந்தமாயிற்று, சமாதியில் அது இது நீநான் என்பதின்றி, அறிவானந்தமாய்ச் சுகித்தலின் அச்சுகம் வித்யானந்தமாயிற்று என்றும் கொள்க? எதிலும் அபிமானமின்றிய, நிரதிசயானந்த அம்சமான இவ்வஷ்ட (எட்டு) வித ஆனந்தங்களும், அதிசயமாகச் சமாதியின்கண் திகழ்வதால் நிரதிசயானந்தமெனக் கூறப்படும் என்றருளிச் செய்தார் என்றார். (எ-று)

(அ-கை-ஆனந்தானுபவப் பேற்றின் மகான்மியம் கூறுகிறார்!)

131. மனுடன் மனுடகந்தருவன் தேவநன்மா
கந்தருவன் ஓண்பிதிரோடே
பனுமாச னர்கள் கருமத் தேவர்கள்
பகர்முக் கியர்இந் திரனாசான்
கனமார் பிரசாபதி என்விராட் டுப்பொன் கர்ப்ப
பிரம்மனென் றின்னோர்கள்
பினவானந் தங்கநுரையாம், பிரளய
வெள்ளக், கடல்பிர, மானந்தம்.

அ-வ, உரை = மானிடனும் மாநுடகந்தருவனும் தேவனும் தேவ கந்தர்வர்களும், பிதிர்கருமத்தேவரும் அசுரரும் இந்திரனும் பிரகஸ்பதியும், பிரம்மாவும் விஷ்ணுவும் விராட் புருடனும் இரணியகர்ப்பனும் ஆகிய முறையிலே, இப்பதினொருவர்களின் ஆனந்தங்களும் ஒன்றுக் கொண்டு, ஏற்றத்தாழ்வு பேதங்களாக உள்ளது. இவ்வானந்த வகைகளெல்லாம், சர்வசங்க பிரித்தியாகியாய், சர்வசாராம்ச சாக்ஷியாய், சர்வானந்தா தீதமாயுமுள்ள, பிரம்மானந்தமெனும் பெருங்கடலினிடத்தில் எழுந்து, அதிலேயே அழிந்த டங்குகின்ற (புற்புதநியாயம் - அலை திவலை நுரை குமுழி சேறு கலங்கல் பாசி எனும் ஏழு உபாதிகளேபோல) அலையாதிகள் போன்ற தன்மையர்களாவர்? இந்த எட்டுவித ஆனந்தங்களும், மநுடானந்த முதலிய பதினொருவர்களின் உரிமை பெருமை தன்மைகளும், நிரதிசயானந்தக் கடலின் (பிரம்மானந்த இயல்பின் சிறுதுகளேயாகும் அலையாதிநுரைகளே போன்ற தாகும் என, (தத்துவ விளக்கப் படலம், 91-வது கவியின் பொருளாக நீசுகித்திடுக?... என்றருளினார்... (எ-று).

அ-கை-131, கவியின் பொருள்திரண்டசாரமாயுள்ள, ஆனந்தங்களின் தியாகவுணர்வான, ஆனந்தாதீதம் என்றுறுதி கூறுகிறார், நன்னிலம் ஸ்ரீ,ல,ஸ்ரீ தாண்டவராய சுவாமிகள், என்றறிந்திடுவோமாக! (எ-ம்).

132. எவனாகிலு மிந்தத் துரியாதீதத்தில் ஏழாம்
பூமியிலிருந் தானேல்
அவன்நா ரதன்சுகன் சிவன்மா லயன் முதலறிவோ
ரனுபவ சுகபோதன்
விவகார அதிரிசிய மிதுவே யனுபவ மெனமுன்
சொல்லிய விவகாரி
உவமான, மும்அறி, மகனே, அவனடி, உதிரும்,
பொடிகள், என் முடிமேலே!

அ-வ, உரை = தொள்பொருளாம் பழமைபாராட்டி வளரும் மகனே?... தன்னை அறிந்து அதில் அழுந்தி இன்புறக் கருதும், நான்குவகைப்பக்குவர்களும், (மந்தன் மந்ததரன் தீவிரன் தீவிரதரன் எனும்) மற்றும்பிற சாதனையாளர்களிலும், தேறிச்சிறந்த சாத்தியர்களிலும், ஞானபூமிகளின் முடிவான, ஏழாவது துரியாதமென்னும் பூமிக்குரிய அநுபவமுள்ள நல்லான் யாராகிலுமிருந்தானேல்! அம்மகா பாக்கியவான், சிவன் விஷ்ணு பிரம்மா எனும் மும்மூர்த்திகளினும் சிறந்தோன் ஆவன். இவர்களின் ஆற்றலும், நாரதர் வியாசர் சுகர்சனகர் முதலியோர்களின் சுகாநுபவங்களும் அமைந்துள்ள ஆனந்த அறிவினன்! எப்படினயெனின்? சந்தேகந்தெளிதல் படலத்தில் 22-வது கவியின் இவனது விவகார அநுபவ ரகசியத்தை அக் (கவியின் பொருளாக, பலமாய் அறிந்துணர்ந்துள்ளான். இவனுள்ளில் திரிசியக் காட்சிகளும் கர்மபந்தங்களும் அகம்மமதைகளுமற்ற இப்புனிதனின் பாதாரவிந்தத்திலிருந்து சிதறி உதிரும் துகள் (தூசி) களைச்சேகரித்து, என்சிரசில் சூடி மகிழ்வேன் என்று இக்கைவல்ய நவநீத நூலாசிரியர் ஸ்ரீலஸ்ரீ தாண்டவராய சுவாமிகள் சாத்தியர்களாய் யாவரும் வளரும்படி ஊக்குவித்து இவ்வுபதேச வர்ணனையை அமிர்தவர்ஷினியாக அருளியுள்ளார்! (எ-று).

அ-கை- துரியாதீதத்தை அடைந்தவனது மகிமையை கூறியவர் சச்சிதானந்த இலக்கணங் களும்கூறி, இதுபற்றிய

சந்தேகம் உளதேல் இன்னமும் தெளிவுரை செய்வேன் கேட்பாயாக? என்கிறார். (எ-ம்).

133. இந்தவா றைந்துசுகஞ் சொல்லினோம் வித்தைச்சுக
மினிமேற் சொல்லுவேம்
முந்தமா யையுஞ் சச்சிதானந்தப் பொருளுமே
மொழியும் போதில்
அந்தமா மத்துவிதசுக மான்மசுகமிரண்டும்
அங்கே சொன்னோம்
தொந்தமாற்றியமகனே இன்னமுனக் கையமுண்டேற்
சொல்லுவாயே!

அ-வ, உரை = அநாத்ம தத்துவங்களை விசாரித்து அறிந்து நீக்கி தொந்தபந்த தொடர்ச்சியைக் களைந்து நிற்கும் மகனே? இதன் மூலமாய் ஆதிநடு அந்தமும் துன்புமின்றிய செல்வா? இப்படலத்தின் 123 வது கவிமுதல், 130 வது கவிவரையும், பிரம்மசுகம் விசய சுகம் வாசனைச் சுகம் நிஜசுகம் முக்கியசுகம் ஆகிய ஐந்து சுகங்களையும் சொன்னோம். இதற்கு முன்னேயே 95-வது முதல், 123-வது கவிவரையிலும், மாயையையும் சச்சிதானந்தப் பொருளையும் சொன்ன போதங்கே அத்வைதசுகத்தையும் ஆன்மசுகத்தையும் கூறியிருக்கின்றோம், இனியும் ஏதாவது சந்தேகம் இருக்குமானால் கேட்டுத் தெளிவுபெற்றுக் கொள்க? ... என்றருளினார்.. (எ-று).

அ-கை- ஆத்மா சச்சிதானந்த சொரூபமெனத் தெரிந்தேன் எனினும் சுருதி யுக்தி அநுபவங்கட்கு ஒத்து இருக்கும் அதனுண்மையான சுவாநுபூதி வெளிப்படும் நிமித்தம், அவைகளின் ஒருமையைத் தெரிவித்தருளும் சுவாமி எனக் கேட்டனன்... (எ-ம்).

134. குகன்தனையு மெனையுமுல கினையுமீன்
றளித்தருளுங் குருவே மொழியக் கேளீர்
புகன்ற சச்சிதானந்தப் பதங்கள் தனித்தனியேப்
பொருள் வேறானால்
உகண்ட மனமுறைப்ப தெங்ஙன் பரியாய பதங்களைப்
போலுறவுங் காணேன்,
அகண்டமாய் ஒரு சுவையாய்த் தேனீக்கூட்டிய
மதுப்போ லறிவிப்பீரே

அ-வ, உரை = எல்லாவுயிர்களின் இதயத்துள் வீற்றிருந்தருளும் குமரகுருபரனையும், என்னையும் இச்சகங்களையும், தோற்றுவித்து இரட்க்ஷித்து காத்தருளுங் குருமூர்த்தியே (இத்தனையும் குரு செய்கிறாரா? ஆம் குருப் பிரம்மா குருவிஷ்ணு குருதேவா மகேஸ்வர குருசாக்ஷாத் பரப்பிரம்மம் தஸ்மைஸ்ரீ குருவே நமஹ) என்று சங்கரரும் அருளியுள்ளார் ஆதலின் கேட்டருள்வீர் சுவாமி, பிரம்மத்தை, சத்து சித்து ஆனந்தமென மூன்று பதமாய்க் கூறினீர்.. ஈது இப்படிவேறுபடக் கூறியதால், பதங்கள் மூன்றுளதேல் பொருள்வேறாமே, என்ற ஐயம், இதனால் குழப்பமே நிறைந்த என்மனம் தடுமாற்றமடைகிறது, இச்சந்தேகம் நீங்கிடவும், நான் பிரம்ம சொரூபமென்ற திடமான நிச்சயமுண்டாக, பல மலர்களிலமர்ந்து தேனை எடுத்து ஒருமைப்படுத்திய தேனீக்களின், அருஞ்செயலாகவே தாங்கள், பல மலர்களின் மகரந்தங்களே ஏகமாயுள்ள தேனைப்போல அறிவிப்பீர் ஐயனே - எனக் கேட்டனன்... (எ-று).

அ-கை, சச்சிதானந்தமாயுள்ள ஒருமையை, சுருதிகளின் எடுத்துக்காட்டுகளுடன், கூற முன்வந்த ஆசிரியர், அவைகளின் காரணங்களையும் ஒருமையும் கூறுகின்றார்.. (எ-ம்).

135. குளிரிளகல் வெண்மையென்ற பதங்களினால்
நீர்மூன்று கூறாயிற்றே
ஒளிதகனஞ் செம்மையென்ற பதங்களினாலக்கினியு
மொருமூன்றாமோ
வெளிமுதலாஞ் சகமசத்து மூடமிடரெனப் பிரித்து
விலக்கி வேதம்
எளிதறிய முரண்மொழிந்த சத்தாதி எனும்
பிரம்மம் ஏகந்தானே..

அ-வ, உரை = குளிர்ச்சியான குணமும், நெகிழ்ச்சியுடைய வடிவமும், வெள்ளையான நிறமும் நீரினிடத்து மூன்று பொருளாயுள்ளதோ? இதேபோல, பிரகாசமும் சுடுகின்ற குணமும் சிவந்த நிறமுமுடைய அக்கினியினிடத்து வேறுவேறாயுள்ளதோ? இந்நீரின் மூன்றுபதங்களும் அக்கினியின் மூன்றுபதங்களும், தனித்தனியே வெவ்வேறின்றி ஒரேபொருளாம் போல (பிரம்மமும்)

நினதாத்மாவும் ஒன்றாய் உள்ளது என திடம் பெறுக? சச்சிதானந்த பதங்கள் ஆத்மவஸ்வினின்றும் பின்னமல்ல (வேறல்ல) ஏகம்தான், பிரம்ம சொருபமாகலின் பின்னமாகா, பிரம்மம் ஒன்றே வேறுயாதினாலும் நிவர்த்திக்கும் கூடாமையினால் சத்தென்றும், முக்கியப் பிரீதிக்கு விசயமாயும் துக்கந்துவந்துவங்களை நிவர்த்திக்கம் ஒளஷதமாயும் உள்ளதால் ஆனந்தமென்றும், சடத்தில் விலக்ஷணமாகிப் பிரகாசஸ்வருபமா யிருத்தலினால் சித்தென்றும் கூறப்படும், ஆதலின், குளிச்சி நெகிழ்ச்சி வெண்மை என்ற பேதங்கள் பிரிவின்றி எப்படி நீரினிடத்திலும், சுடுந்தன்மை சிவந்தநிறம் பிரகாசம் (வெளிச்சம் - ஒளிவடிவு) மூன்றும் பிரிவின்றி அக்னியிடத்தும் ஒன்றாயுள்ளதோ அப்படியே, சச்சிதானந்த சொருபங்கள் மூன்று பதங்களும் அடர்ந்து ஒன்றாயுள்ளது பிரம்மம் (ஆத்மா) என்றுறுதியும் தெளிவும் பெறுக என்றருளினார். (எ-று).

அ-கை- சச்சிதானந்தப் பதங்களின் பன்மை (விரிவு) எல்லாம் பிரமத்திடம் ஒருமைஎன்பது உறுதிப்படும் நிமித்தம், வேதம் ஒருமைபட கூறியுள்ள பரியாய (வெவ்வேறு சொற்கள்) நாமங்களில் சொல்லியுள்ள, விதி (வரையரைப்பதிவு நிச்சயம்) நாமங்களைக் கூறுகின்றார்... (எ-ம்)

136. நித்தியம்பூ ரணமேகம் பரமார்த் தம்பரப் பிரம்ம
நிதானஞ் சாந்தம்,
சத்தியங் கேவலந்துரியஞ் சமந்திருக்குக்
கூடஸ்தன் சாக்ஷிபோதம்
சுத்தமிலக் கியஞ்சனா தனஞ்சீவன் தத்துவம்
விண்சோதி, ஆன்மா
முத்தம்விபு சூக்கும மென்றிவ் வண்ணம் விதிக்குணங்
கள்மொழி யும்வேதம்!

அ-வ, உரை = நித்யமானது என்றும், குறைவின்றிய நிறைவு (பூரணம்) என்றும், யாவும் அஃதொன்றாய் ஏகம் என்றும், அருட்சம்பத்தாயுள்ள பரமார்த்தம் என்றும், தோற்றங்கட் கெல்லாம் ஆதி காரணமாயுள்ளவை களுக்கும், முதலாயுள்ள தோன்றாத் துணையானதால் நிதானம் என்றும், முக்குண இயல்புகளை வெளிப்படுத்தும் தயார்நிலையான. பரப்பிரம்மம் என்றும், ஆரவார

ஆர்ப்பரிப்புகளற்ற சாந்தம் என்றும் (திரி) முக்காலத்திலும் பொய்படாத சத்தியம் எனவும், ஒழுக்கம் புண்ணியம் பாவம் படாடோபமற்ற கேவலம் என்றும், நினைவில் அதிவிரைவுடைய துரியம் எனவும், துளியும் விளக்கின்றி எங்கும் ஒரே தன்மையாயுள்ளதால் சமம் என்றும், கண்ணால் மட்டுமின்றிக் கருத்தாலும் கவர்ந்திருக்கும் நுண்பார்வையுள்ள திருக்கு. என்றும், செகசீவ பரங்கள் எல்லாம் தன்னிடத்திருந்தே உண்டாகியுள்ளதான கூடஸ்தன் என்றும், ஞானி அஞ்ஞானி நாமரூப சிவசீவபரங்களுக்கு நடுநாயகமாயுள்ளதால் சாக்ஷி என்றும், உணர்த்தப் படுகின்ற கலைகளுக்கெல்லாம் அறிவிக்கின்ற, போதம் என்றும், அந்தம் நடுஆதிகளுக்கெல்லாம், அநாதியாம் சனாதனம் என்றும், தத்துவ இலக்கணங்களுக் (96 + இல்லை, 36 - தத்துவங்களுமற்ற) கெல்லாம் உறைவிடமாகவுள்ள இலக்கியம் என்றும், என்னையன்றி அசுத்தங்களேதுமில்லை ஆதலால், யான் சுத்தம் எனவும், உலகாபிமானமாகிய நாமரூபம் உடல் அந்தக்கரணங்கள் உயிர்மற்றுடைமை மக்கள் மனை உறவுகளில் சம்பந்தப்படுகின்ற சித்தாபாச சகிதனாகிய சீவன் என்றும், அனாத்ம தத்துவங்கள் 95-ம், பிரதானமாயுள்ள தத்துவங்கள் 35-ந்திற்கும் நாயகதாரக மாயுள்ளதால் தத்துவ (ஆத்மா) மென்றும், சுயமே பிரகாசித்துக்கொண்டுள்ளதால், சோதி என்றும், தனித்தனித்தன்மை நிருபகத்திற்கு ஏதுவாயுள்ள (வியஷ்டி வடிவமாயுள்ள)தால் ஆன்மா என்றும், அநாத்ம தத்துவங்களும் செகசீவபரத்திற்கும் கட்டுப்படாமல் புளியம்பழமும் ஓடும் சதையும் கொட்டையும் (ஓடும் என) போல் ஒட்டாமல் உள்ளதால் முத்தம் எனவும், தூக்கல் எடுத்தல் நீட்டல் அளத்தல் முதலியக் கணிப்புகளுக்குப் பொருந்தாதிருத்தலால் விபு என்றும், புலன் விசாரணைகட்குப் புலப்படா திருப்பதால் சூக்குமம், (பொறிகளின்) என்றும், விதித்த (நியமித்த) குணங்கள் இன்னும், வேதங்கள் மொழிந்துள்ளன இவ்வாறு குணங்களின் பரியாய நாமங்கள் (சொற்தந்திரங்களைச் சாத்திரஞ் சுருதிகள்கூறியுள்ளன என்றறிக? (எ-று).

அ-கை, விதிகளுக்கு மாறான, இயமம் எனம் விலக்குநாமங்களை கூறுதல். இது விதிநிஷேதமென அறியவும்!.

137. அசலம்நிரஞ் சனமமிர்த மப்பிரமேயம் விமலம்வ சனாதீதம்
அசடமநா மயமசங்க மதுலம் நிருமல மசோசர மகண்டம்
அகமனந்த மவினாசி நிர்குணம் நிஷ்களம் நிரஞ்சனம் நிரவயவமநாதி
அசரீர மவிகார மத்துவிதமென விலக்கா மனேக முண்டே...

அ-வ, உரை = பரிமானமாற்றம் ஏதுமின்றியதால் ஒருதன்மை யுறுதியுடையதால் அசலம் என்றும், அணுவளவும் இருளற்றதால் நிரஞ்சனம் என்றும், மர்ணஞ் சிதைவு அழிவற்றதால் அமிர்தம் என்றும், தன்னால் யாவும் அறியப்படுகின்றதால் (அறியப்படாத பிரமேயமற்ற) அப்பிரமேயம் என்றும், ஐந்து, மற்றும் மூன்று மலங்களும் அற்றிருத்தலால், விமலம் என்றும், வாக்கினால் நிறைவு செய்யமுடியாத (திருப்தியடைய) தால் வசனாதீதம் என்றும், முற்றும் உணர்வின்றிய சடமாயில்லாதிருப்பதால் அசடம் எனவும், துவந்துவத் துன்பமுடைய நோய்களினும், பிறப்பு இறப்பு என்னும் நோய்களேதும் இல்லாதிருத்தால் அநாமயம் என்றும், உலகியல் பரவியல் உடலியல் உறவு உடமை உரிமை இயல்புகளில் சாராதிருப்பதால் அசங்கம் என்றும், இவ்வுலக அண்டபிண்ட சராசரங்களையும் தாங்கிநிற்கிறேன் ஆயினும் யாதொரு பழுவும் (கனம்-பாரமும்) என்னிடமில்லாததால், அதுலம் என்றும், மலம் மறைப்பு விரிவுகளற்றதால் நிருமலம் என்றும், இவ்வண்ட பிண்டங்களெல்லாம் தன்னுள்ளே உள்ளதால் அணு என்றும், வாக்குமனம் காயங்களுக்கு கட்டுப்படாததால் அகோசரம் என்றும், யாதொருதானங்களுக்கும் தனக்கு இயைபு அற்றதால் நிரந்தரம் என்றும், அலையாதிகளான உபாதிகளுக்கு ஆதாராம் கடல்தான் ஆயினும் இவ்வுபாதிகள் தன்னிலிருந்துண்டானவை, தான் அதனிடம் உண்டாகாததால், நிருபாதிகம் என்றும், அண்ட பிண்டா அண்டங்களும் என்னில் ஓரங்கம்,ஆனதால் கண்டங்கள், இக்கண்டங்கட்கெல்லாம் (சமஷ்டிரூபனான) நான் ஒருமையுடயவன் ஆதலின் அகண்டம் என்றும், தினம் காலம் கற்பங்கள் தோறும் இச்செகசீவ பரங்கள் தோன்றியிருந்தழியும், தோற்றம் இருப்பு நாசமின்றிய பிறப்பிலித் தன்மையன் ஆதலால், அவிநாசி என்றும், சீவேசுவரர் மற்றய உயிர்கள்தோறும் ஊடுருவிப் புணர்ந்திருந்தாலும் யாதொரு சரீரமும் (சமஷ்டிரூபனாதலால்) தானன்றாதலால். அசரீரம் என்றும், சிருஷ்டி திதிசம்ஹாரம்

மறைத்தல் அநுக்கிரகம் முதலிய ஐந்து தொழில்களும் என்னாலே அன்றிப் பிறனுடையதல்ல.

ஆயினும் இக்கருமங்கள், தத்துவங்களின் கோரணிக் கூத்தேயன்றி எனதல்லாமையின் நான்யாதொரு காரியங்களுமற்ற நிர்விகாரி என்றும், எவ்வுயிர்க்குள்ளும் எனது நாதமே சப்திக்கின்றதால் நான் நான் என்றியங்கும், அகம், என்றும், தூலம் சூக்கும் க்ாரணம் என்ற மூன்றுடல்களின் சகாயமற்றுள்ள தன்மையால் நான் நிரவயவன் என்றும், குணங்கள் மூன்றும் கடந்துள் குணாதீதனான படியால், யான் நிர்க்குணன் என்றும், என்னையன்றி யாதொன்றும் இயக்கமில்லாததால் எதனிடத்தும் நானுள்ளதைக் காணமுடியாதிருப்பதால், அண்ட பிண்ட சராசரமும் சகசீவபரம் உயிர்களின் உள்ளும் புறம்புமென ஊடாடிப் புணர்ந்துள்ளதால் என்னை, அத்துவிதம் என்றும், கூறப்பட்ட விலக்கு (விதிகடந்ததான)ச் சொற்களின் இரகசியவாக்கியங்கள் இன்னும் அனேகமுள்ளன என்றுமருளிச்செய்தார்! (எ-று)

அ-கை, இத்தகைய விதிவிலக்குப் பெயர்களின் பன்மையை அபவாதமாம் ஒருமைத் தன்மையைக் கூறுகிறார்!... எ-ம்.

138. இன்னவகை விதிவிலக்குக் குணங்கள் நன்றாய்ச்
சேர்ந்தொருமித் தெல்லாங்கூடிச்
சொன்னபொருள் ஒன்றன்றி யிரண்டில்லை ஒருபொருளைச்
சொல்லுஞ் சொற்கள்
பின்னபதமா மதனாற் சத்தாதி குணப்
பொருளாம் பிரம்மம் ஏகம்
அன்னபொருள் ஒருமையறிந் தகண்டபரி,
பூரணமாயாவாய் நீயே.

அ-வ, உரை = குமாரா? 136-வது கவியின்படி விதியின் பெயர்களும் 137-வது கவியின்படி விலக்குப் பெயர்களும் சேர்ந்து நன்றாய் ஒன்றுபட்டு அனைத்தும் கூடிக் கூறிய அர்த்தங்கள் எல்லாம் ஒன்றே அன்றி வெவ்வேறு அல்ல, அந்த ஏகவஸ்துவை பேசுகின்ற சொற்கள் வெவ்வேறுவிதமாயுள்ளன. ஆதலினால், சத்து சித்து ஆனந்தமென்னும், மூன்றுபதங்களுக்கும் பொருள் பிரம்மம் ஒன்றேயாகும். அருமை பெருமைகளைப் பொருந்தியுள்ள

அர்த்தங்களின் ஒருமையைத் தெரிந்து நீ அகண்ட பரிபூரணமாய் ஆவாய் என்றருளார். இன்னும், (கைம்மலை, கறையடி, புழைக்கை எனும் மூன்று சொற்களுக்கும், யானை ஒன்றே பொருளாகுமதுபோல, ஒரு புருடனையே, மகன்தந்தை என்றும், தந்தை மகனென்றும், மனைவி கணவனென்றும் அண்ணன் தம்பி என்றும் தம்பி அண்ணன் என்றும், மாமன் மருமகன் என்றும் மருமகன் மாமனென்றும், அனேகமாய்க் கூறினாலும், இவ்வுறவுமுறைகளால் அப்புருடன் அனேகன் ஆகாமல் ஒருவனாயிருப்பது, போல, சத்து சித்து ஆனந்தம் என்ற பதங்கள் மூன்றாயினும், அவைகள் உணர்த்துகின்ற பொருள் ஒன்றாயும் அதுவே அத்துவித வஸ்துவாயிருத்தலால், பரிணாமாதிகளின் சந்தேகங்கள் ஒழிந்து நீயது, வாயிருந்திடுக? என்றருளினார்...(எ-று).

அ-கை- குணங்களுக்கும் அப்பாலாம் அதீதமான வஸ்துவிற்குக் குணங்கள் கூறலாமோ? எனின், பதில் தருகின்றார்... (எ-ம்)

139.நிர்க்குண வஸ்துவின் குணங்க ளுரைப்பது தாய்மலடி
யெனநிகர் எண்ணாதே,
சற்குணனே வஸ்துநிலை உரையாமல்
அறியவல்ல சதுரருண்டோ,
நற்குண வேதங்கள் இந்தச்சீவன் முத்திபெற
பிரம்மஞானந் தோன்றச்
சொற்குணங்கள் பிரம்மத்தின் குணங்களன்று
பிரமமாஞ் சொருபந்தானே,

அ-வ, உரை = நற்குணங்களையுடைய மைந்தனே? சத்துவம் இரஜசு தமசு என மூன்று குணங்களின் இயல்புகள் ஒன்றுக்கொன்று மிகவும் வேறுபாடுகள் உடையவை, ஆனால் சத்து சித்து ஆனந்தமெனும் பதங்கள் மூன்றும் வெவ்வேறு அல்லாததான பிரம்மம் மாத்திரமே ஆதலால் இது குணங்களுக்கு கட்டுப்படாத அதீதம், பரியாய மாய்வந்த விதிவிலக்குப் பெயர்களைச் சொல்வதால், தாயை மலடி என்று விபரீதமாய் எண்ணாதே? எந்த ஒரு பொருளையும் அதன் நிறம் மணம் குணம் உற்பத்தி விகிதாச்சாரங்களை எல்லாம், தக்க ஒருகுரு உபதேசிக்காமல் (தாய் தந்தை குரு என) தானாகத் தெரிந்துகொள்ளும் சீடர்கள்,

உலகியலார்களில் ஒருவருமுளரோ? இல்லை, ஆதலால் கருணையும் வள்ளல் தன்மையும் இயல்பாகவுடைய வேதோபநிஷத்துக்கள் சுருதிசாத்திரங்கள் எல்லாம் இச்சீவர்கள் ஞானம் பெறவும் முத்தியிற் சேர்ந்திடுமாறு உபதேசித்த சத்தாதி குணங்கள் பிரம்மத்தின் குணங்களல்லவாம், அவைகளின் பரியாயநாம அர்த்தங்கள் அன்றி ஒன்றேயான பிரம்மஸ்வரூப மேயாம்! இன்னும், அறிதல் எனும் விசயம் இறந்த இடத்தே அநுபவமாயுள்ள நிர்க்குணவஸ்து, அறிவதற்கு அவதானமாகும்படிக்கு, உவமான உபசார நாமங்களின் அர்த்தங்களைச் சிந்தித்திருக்கின், இப்பரியாய குணரூபங்களிறந்து அக்குணாதீதவஸ்து சொரூபம் வெளிப்படும், மற்றொன்று மன்று, இங்ஙனம் சுருதியாதிகள் உணர்த்திய உபயப் பிரமாணங்கள் அனைத்தும் பிரம்மம் ஒன்றே என உறுதிகொள்வாயாக? என்றருளினார்! (எ-று).

அ-கை- சத்சித்தானந்தம் என்ற பதம் மூன்றும், பிரம்மம் ஒன்றே பொருள் பிரம்மாண சுருதிகள் காட்டியதுபோல், யுக்தியினாலும் காட்டவேண்டுமென்று குருவினிடம், சீடன்குறையிரந்து கூறிநின்றான் (எ-ம்).

140. மோகயிருள் கெடக்கோடி யருணனென
வருங்குருவே மொழியக் கேளீர்
ஏகபரி பூரணமா மென் சொரூப
மென்னுளத் திருக்கும் வண்ணம்
ஆகமங்கள் சொன்னபடி என்னையகன் டார்த்தமாய்
அறிந்தேனையா
ஊகமுமொத் திடவுரைத் தாற்பசுமரத்
தாணிபோல் உறைக்கு நெஞ்சம்.

அ-வ, உரை = மயக்கம் குழப்பம் விபரீதம் ஆவரண அஞ்ஞான இருளைக் கெடுத்திட, கோடி சூரிய ஒளிகளும் ஒன்றாய் உதயமானதன்ன? எனது அறியாமை இருளையகற்றிட எழுந்தருளுங் குருவே, அடியவனின் குறைச்சபலங்களைக் கேட்டருள்க... ஒன்றாய் எல்லாம் தானாய்த் திகழும் பரிபூரண சொரூபமாம் எனதாத்ம சொரூபம் எனத் தெரிந்துள்ளேன். எனது இதயத்துள் அழுந்துமாறுஞ்சுருதிகளின் கருத்தை தாங்கள்

உபதேசித்தவண்ணம் அகண்டார்த்தப் பொருளாய் என்னைத் தரிசித்துள்ளேன். எனது ஞானாச்சாரியரே!.. சுருதிகளின் சாரமெல்லாம் எனது யுக்திக்குப் பொருந்துமாறு உபதேசித்தருளும்? அதனால், எனது இதயம் எனும் பச்சைமரத்துள் தாங்களின் உபதேசமென்ற வாக்கிய ஆணியை அறைந்திடுங்கள், மனம் ஞான சுருதியுக்தி அநுபவ விசயங்களை நழுவவிடாது உறைந்துவிடும் என்று கோரிக்கை விடுத்தனன் சீடன்... (எ-று).

141. சத்தேசித் தாகுமயலெனி லசத்தாம் அ
சத்தானாற் சாக்ஷியெங்கே
சித்தேசத் தாகுமயலெனிற் சடமாஞ்
சடங்களுக் குத்திதியுமில்லை
ஒத்தே தோன்றிலசத் துஞ்சித்தும் நல்ல
சுகமாகும் யூகத்திற்கோர்
வித்தே அன்னிய மாகிற் சடமசத்தாஞ்
சுகாநுபவம் விளைந்திடாதே.

அ-வ, உரை = சத்தாக விளங்குவதுவே சித்தாகும், சத்தைவிடச் சித்துவேறு என்றால், அப்போது சத்து என்பது இல்லாததே ஆகும். இவ்வாறில்லாதுபோனால் நடுவே இருந்தறியுஞ் சாக்ஷி என்பது எப்படிக்கூடும். சித்தாகயிருத்தலே சத்தாகும். சித்திற்கும் சத்துவேறு என்றால் அறியாமையாயிருக்கும் அதிரிசியங்கட்கு (பார்க்கின்ற பொருள்கட்கெல்லாம்) திகழ்ந்து விளங்கும் தன்மையுமில்லையாகும். ஆதலால், சத்து சித்து ஆனந்தங்கள் மூன்றும், முக்காலத்திலும் (தோன்றி இருந்து அழிதல் எனும்) பரிச்சேதமாகாத (கெடாத) தன்மையாயுள்ள சத்தும், அந்த மூன்று காலங்களிலும் தெளிவாக விளங்குகின்ற சித்துமே நிரதிசயானந்தமாகும்! இதுவே யுக்திக்கு ஒரு (சான்றாகும்) விதையாகும். இதைவிட விபரீதமாக இதற்குவேறாகக் கருதிப்பேசுவோமானால் ? சத்தும் சித்தும் சடமும் அசித்துமாகும் அங்ஙனமானால் ஆனந்தம் உதியாது யாண்டும் துக்கமே சம்பவிப்பதாகும். சத்தே சித்தாகாவிடில், தன்னையறியுந் தன்மை இல்லையாகும்? (இன்னும்? சித்தே சத்தாகாவிடில் சர்வம் பிரம்மமயமாக விளங்கமாட்டாவாம், இச்சத்தும் சித்தும் ஒன்றுபடுவதே நிரதிசயானந்தம்! இதுவே யுத்தி அநுபவத்திற்கு

மூலபீஜம் ஆகும். இதனை மறுக்கின்ற அவித்யாவச நெஞ்சம் துக்கமே அதன் (பிறப்பு இறப்பு என) தொடர்கதையாகும் மகனே அறிந்திடுக?... (என்றருளினார்) (எ-று).

142. வியாதசத்து முன்னம் விளங்குவது
தன்னாலோ வேறொன்றாலோ
வாயால் வேறெனில் அதுவுமசத்தோ சத்தோ
அசத்தேல் மலடி மைந்தன்
பேயாகாரியஞ் செய்யுமோ இப்படி
யதையும் பிரித்துச் சொன்னால்
ஓயாத அவஸ்தை யாகுங்குதர்க்க விகற்பங்
களைவிட்டு ஒழிந்திடாயே...

அ-வ, உரை = சித்தப்பிரமை கொண்ட பேயனே? அறியாமையிலிருந்த போதும் மூன்று காலத்திலும் கெடாத சத்தானது முன்பிரகாசிப்பது தன்னாலேயா? வேறென்றாலேயே? வாக்கினால் வேறென்றால் அச் சப்தமும் இருப்பதா இல்லாததா? இல்லாதது என்றால் அவன் மலடியின் மைந்தனாயிற்றே? எத்தொழிலைச் செய்வான் அப்படி ஒருவன் இல்லாதாயிற்றே? அக்கிரியைகளையும் இங்ஙனம் அசத்தென்று பகுத்துக் கூறினால், ஒழியாத பிறப்பிறப்புத் துன்பமே ஆகும் மயக்கத்தால் வரும் விபரீதங் குதர்க்கங்களைவிட்டு நீங்கிடுவாயாக?.. தன்னை அறிவது தானேயன்றி வேறாகுமோ? இல்லாதது நிகழுமோ? இருந்ததே அறிவென்னும் அநுபவங்கொண்டு இல்லாததை ஒழித்திடுக? இருந்து விளங்குவதால் சத்தேசித்தென்றும், அவ்வாறு, விளங்குவதே இருத்தலால் சித்தே சத்தென்றும், இவ்விரண்டின் ஒருமையில் சுகம் விளைதலால் ஆனந்தமென்றும், அவ்வனுபவத்தால் உத்திப்பிரமாணம் உணர்த்தியுள்ளதென, உன்னுள் தெளிவு நிச்சயம் பெறுக? என்றருளினார். (எ-று)...

அ-கை- சச்சிதானந்தப் பதங்களின் பொருள் ஒன்றே என்பதற்கும் முன்பு கூறிய, சுருதி யுக்தியின் முறைமைபோல் அநுபவமுங் கூறுகிறார்.

143. சுருதியுத்தி ஒத்ததுபோலனுபவங் கேள்
சுழுத்திச் சுகாநந்தம்
மிருதிவடி வாதலினவ் வானந்தமே அறிவாம்வே
றங்கில்லை மைந்தா
கருதும்பிரளயஞ் சுழுத்தி யிரண்டிலும் நீயிருந்திருளைக்
காண்கின்றாயே
இருதயத் திப்படி நோக்கியேக பரிபூரண
மாயிருந்திடாயே..

அ-வ, உரை = மகனே சுருதியும் யுக்தியும் உன் மனதிற்கு தெளிவு உரை தந்தது போல, அநுபவங் கேட்பாயாக? சுழுத்தி அவஸ்தையில் பேருறக்கத்தில் நீ எதைக் கண்டநுபவித்தாயோ? அதுவே எங்கும் நிறைந்தப் பேரின்பப் பரமாத்மசொரூபம் இதுவே பூரணானந்த சொரூபமுமாகும்! இவ்வானந்தமே உனதாத்மாவை பரமாத்மாவுடன் புணர்த்திடத்தக்க அநுபவ ஞானானந்தமுமாகும். அவ்வாறு உணரும் ஞானத்தை விடவேறு ஒன்றுமில்லை, கற்பாந்த காலத்தில் நீ எவ்வாறு அவ்வாறே நீகாணும் சுழுத்தி அவஸ்தையுமாகிடும் இரண்டுகாலத்தும், நீ சத்தாகவேயிருந்துநீ அந்த இருளைப் பார்க்கின்றாய் அல்லவா? அவ்விதம் உன் இருதயத்தில் கண்டு நீயும் அதுவுமின்றிப் பூரணஸ்வரூபமாய் இருப்பாயாக? அறிதல் இல்லாத சுழுத்தி (நித்திரை) யில் ஆனந்தம் விளங்கிடுமது அதற்கே தெரியும். அவ்வானந்தமே அறிவாகும்! இந்நிரசயானந்தவடிவமே சாக்கிரத் (நினைவு - விழிப்பில்) தில் நினைவாக (ஸ்மிருதி)பாவனாதீதமடைக! இது சச்சிதானந்தத்தின் முப்பதப் பொருளின் ஒருமை கூறியதாகும். சுருதியுத்தி அநுபவங்களோடும் உபதேசித்தருளிய, படர்க்கை தொகுப்புகளான பன்மைப் பதங்கள் மூன்றையும் ஒருமைப்படுத்திட ஞானகுரு தரிசனவுபதேசத்தால் தெளிந்து சார்ந்திடுக? !... என்றருளினார்.எ-று).

அ-கை-குருவுபதேசம் வாயிலாக சுருதியுத்தி அநுபவத்தால் சீடன் சகச நிட்டையில் பெற்ற அநுபவங் கூறுகின்றனன்... (எ-ம்).

144. பலகலையுமுணர்ந்தகுரு மொழிந்தபடி
யிவனுமனுபவம் விடாமல்
பலமலரின் மதுப்போலச் சச்சிதா
னந்தமொன்றாம் பரமார்த்தத்தைப்
பலபொழுதுங் கண்மூடிச் சமாதியிருந்தான்
விழித்துப் பார்த்தபோது
பலவடிவாஞ் சராசர விசித்திரங்களெல்லாம்
தோன்றுமொரு படமானானே!

அ-வ, உரை = சகல சாத்திரங்களையும் அறிந்துணர்ந்தநுபவித்த ஞானாச்சாரியர் உபதேசித்தனுக்ரகித்த வண்ணம், அவ்வனுபவ வசனங்களை உள்வைத்து விட்டுவிடாமல், பலமலர்களின் மகரந்தங்களை சேகரித்து தேனாக ஒருமைப்படுத்திய தேனீயின் செயலைப் போல, சச்சிதானந்தங்கள் எல்லாந்திரண்டொருமித்த பொருளாம் பிரம்மத்தை, திரிசியங்கள் காட்டிய ஊனக்கண்களை மூடி ஞானவுணர்வுக் கண்ணை மலர்த்தி, சொரூபபாவனாசமாதியில் பல பொழுதும் பார்த்திருக்க, பல்வேறு வடிவாம் தாவர சங்கம தரிசனம்போலச், சித்திரம் கண்டதே போல! இவனும் நிஷ்டையினால் தேகத்துடனான குருவும் காணும்படியாக தோன்றும் ஒரு சித்திரம் தீட்டிய படமானான்!.. என்றருளினார். (எ-று).

அ-கை, துரியாதீதமே துரியமாக விளங்கும் அனுபவத்தில் நவம்நவமாக (அங்கிங்கு அதுஅதுவாக ஆனந்த உல்லாசம் தேனடைகளே போல) இரமிக்கும்பொருட்டு, அஃது உதயமாதற்கிடமான ஞானபூமிகளைக் குறித்து

நான்கு வாகையாகச் சீடன் கேட்கின்றான்.......(எ.ம்)

145 இதயமொத்த சற்குருவே நமக்கிதுவே வினோதமன்றி
இனிவேருண்டோ
அதையுரைத்து மதைநினைத்தும் இருப்பதன்றோ
ஞானிகளுக் கானநீதி
முதலுரைத்த துரியாதீதமு மேழாம்பூமியு
முக்கியமா மென்ற
பதமும்அதின் வகையுமெனக் கெளிதாகத்
தெளியும்வண்ணம் பணித்திடிரே.

அ-வ, உரை = என்மனமுவந்த ஞானச்சாரியரே! என் போன்ற பக்குவர்களுக்கு இதுவே துணிந்து தொடர்ந்து செய்யுங் கடமை, தவிரவேறுஏதும் உளதோ? அதைப்பற்றியே எப்போதும் எவரிடத்தும் எங்கும் பேசியும்

மனதுள்ளே பாவனை(தியானம்) செய்தும், இருப்பதன்றே- ஞானநிஷ்டையிது பயின்று முதிர்வு அடைந்தவர்களுக்குண்டான நெறி, முன்கூறிய துரியாதீதத்தையும், ஞானபூமிகளின் முடிவான எழாவது பூமியையும் முக்கியமாமென்ற பதத்தினையும், இவ்விருபகுப்புகளையும் அடியவனுக்கு எளிதாகத் தெரிந்து தெளிவடையும்படிக்கு அருளிச்செய்வீர்களாக? எனக்கேட்டனன்.
அ-கை சுபாவீகமாகவே சுகாநுபவங்களிற் செல்லுமியல்புடைய மனோலய மார்க்கங்களாகிய ஞானபூமிகள் எழினைக் கூறத்தொடங்கியவர் உற்பத்திக்கிரமமாக முதலில் அஞ்ஞான பூமிகள் எழின் வகைகளாகிய பெயர்களைக் கூறுகின்றனர்!.........................(எ.ம்)

146 வினவுமிடத் தஞ்ஞான பூமிகளேழ் ஞானமிக ளேழ்என்பார்
இனியவற்று ளஞ்ஞான பூமிகளே ழையுமுந்தி இயம்பக் கேளாய்
தனிவித்துச் சாக்கிரஞ் சாக்கிரமகா சாக்கிரஞ் சாக்கிரத்தைச் சார்ந்த
கனவுகனாக் கனவுசாக்கிரஞ் சுழுத்தியென் றேழுபேர்கணித்தார் மேலோர்!

அ-வ, உரை = வேதசுருதி உபநிஷத்துச் சாத்திரங்கள் கூறும் சிறப்பு அங்கங்களை ஆராய்ந்து சிந்திக்கும்போது அஞ்ஞான பூமிகளேழ் என்றும் ஞானபூமிகள் ஏழுஎன்றும் சாத்திர வல்லுனர்கள் கூறினர். ஆம் அவைகளுள் முதலில் உனக்கு அஞ்ஞான பூமிகள் எழினது இயல்பு, களையாம் கூறுகிறோம் கேட்பாயாக?.. 1- தனித்தன்மையுடைய தனிவித்து பொதுவான விழிப்பு நிலை, என்றும், 2-நனவு-இவ்விழிப்பில் நிதானமாகின்ற நினைவு, என்றும்

3-மகாநனவு-நினைவுக்குள்ளே எழும் நினைவு, 4-நினைக்க அந்நினைவையே அடிக்கடி சிந்தித்திருப்பது, 5-கனவு-தூலவுடல் நீங்கினபோது அணைந்து நிற்கும், மனோராஜ்ஜிய ஆரவாரங்கள், 6-அவ்விதங்கண்ட கனவுகளின் என்ன எங்கே எப்போது ஏன் என நினைத்து ஆராய்வது, கனாநனவு, இவ்விதசலனங்களை முற்றும்

இழந்து நிற்கும் எதார்த்த ஸ்தானஅநுபவம், 7-வது சுழுத்தி எனும் நற்பேருறக்க நிலையாம், இவ்வாறு அஞ்ஞான பூமிகள் ஏழினது பெயர்களை மகத்துக்கள் கூறியுள்ளனர்.

அ-கை-அஞ்ஞான பூமிகள் ஏழில் முன்நான்கு பூமிகளின் இலக்கணங்களை மட்டுமிங்கே கூறுகின்றார்!..............(எ.ம்)

147 முந்தமகன் டத்தெழுமோ ரறிவமாத் திரமதுதான்
முதல்வித்தாகும்
இந்தஅறிவிற் பண்டில்லா வகந்தை முளைபோலா
மிதுநனாவாம்
வந்துவந்து பிறவிதோறு மகம்மதை வளருமது
மகாந னாவாம்.
நந்தும் அகங்கொண்டு நனவின்மனோ ராஜ்ஜியஞ்
செயலே நனாக்கனாவே

அ-வ, உரை = விதைக்குள்ளிருந்து காலதத்துவத்தால், முளையிடும் முன்உப்பி நடுவாயிருப்பதுவே, அகண்டமாகிய சத்திடத்தில் உண்டாகும் ஒருணர்வே தனிமுதல் வித்து என்பர் சான்றோர்கள், இம்முதல் வித்தாகிய உணர்வில் அகந்தை-முன்பில்லாத-முளைபோலுண்டாகுமிது சாக்கிரம் என்பர். பிறந்து பிறந்து வந்த செனனங்கள் தோறும், அந்தஅகம்மமதா விருட்சத்தின் பரிமாணங்கிளைகள் வளர்ந்து பருக்குமதுபோல, யான் எனதென்கின்ற விருட்சம் (மரம்) வளருமதுவே பெரிய நனவு காரியமாகும். ஒழிகின்ற அகமமதாவிருத்தி ஆர்ப்பரிப்பு விருத்தி மெலிந்து விழிப்பிலேயே மனோராஜ்ஜியஞ் செய்வது சாக்கிரசொப்பணம்-விழிப்பிலே கனவு என்பர், அறிவு அறியாமை இன்றி அறிவாத்திகழும் தன்னிடத்தில் எதிர்ப்படுமவைகளை அறிய முயற்சிக்கும் தருணமதுவே, செகசீவ பரத்திற்கு மூலமாகிய பிரகிருதியே முதல்தனிவித்து, இவ்வறிவின் பிரதிபலனை வெளிப்படும் சாயை - நிழல் - நானென்னும் அறிவு சீவேசுவர செகத்து அடையாளமானது மகத்துவம் என்பர் நனா - நினைவு இச்சகசீவ பரங்களை நான்எனதென்று அகமமதையோடு வெளிப்படும் அறிவே அகங்கார தத்துவமென்றும், அந்தச் சகசீவபரங்களின் திரண்ட ஒருவமே நானெனவியாபித்து

கலந்துநின்று அதுவாக நிற்கும் அறிதல்போலத் தோன்றும் அதுநனாக் கனவு என்பர்...

அ-கை-இனி எஞ்சிய மூன்று அஞ்ஞானபூமிகளின் இலக்கணமுங் கூறுகிறார் (எ.ம்)

**148 உண்டுறங்கி மனோராஜ்ஜியஞ் செயலே சொப்பனமெ
னும்பேருடையதாகும்
பண்டுகனாக் கண்டுமறந்ததை மீண்டும் நினைப்பது
சொப்பணநனாவாம்
மண்டுமிருள் மூடுமிது சுழுத்தியாகு மஞ்ஞான
வகைகள் சொன்னோம்
விண்டுநிறைவிதேக முத்திதரும் ஞானபூமிக
ளேழுமினிவி ளம்பக்கேளாய்**

அ-வ, உரை = ஒழியாமல் புசிப்பதும் நித்திரை செய்வதும் தொடர்ந்து சிந்தையாயிருப்பதால் கனவு என்பதாகும். முன் நினைவிற்பார்த்து மறந்துபோனதைத் திரும்பவும் ஞாபகப்படுத்துவது சொப்பண நினைவாகும், சங்கற்பவிகற்பங்கள்ஒழிந்து இருள் மிகுந்து மூடிக்கொள்ளுமது சுழுத்திஅவஸ்தையாகும், அந்தச்சகசீவ பரங்களின் உண்மைஏதார்தத்தை யுணராமல் அதனின் முழுதும் கலந்து நிற்குமறிவே மனோராஜ்ஜியமென்பர். சொப்பனம் - கனவு- என்றும் கூறுவர் சான்றோர் சகசீவபரங்களை மறந்து தன்னை அநுமானமாய் அறியும் அது சொப்பன நினைவு என்றும் அச்சகசீவ பரங்களே தானாகிநின்று தன்னை முழுதும் மறந்ததே - அறியாமையினின்றும் விடுபடாதவது மகாசுழுத்திப் பேருறக்கநிலை என்பார். வித்துருவுவாய், நனவு, மகாநனவு ஆகிய இம்மூன்றும் பரிணமித்து அந்தந்த ஆகாரமாய் வெளிப்பாடுகளாவதால் சாக்கிரம் - நனவு ஆகும். சாக்கிர சொப்பனம், சொப்பனம், சொப்பன சாக்கிரம் ஆகிய இம்மூன்றும் எதிர்ப்படுகின்ற ஆகாரங்களின். அறியாமையோடு

விவகாரங்களைச் செய்தலின் சொப்பனம் எனவும் சிருட்டி முதல் இதுவரை தன்நிஜஸ்வரூபந்தெரியாமல் நிர்விசயானந்த ஆகாரமாய் உறங்குவதால் சுழுத்தி என்றுங்கூறினர் .... (எ.ம்)

அ-கை இனிஞான பூமிகளின் ஏழு (பெயர்களையும் கூறுகிறார்.

149 புலவர்புகழ் முதற்பூமி சுயேச்சை விசாரணை
யிரண்டாம் பூமியாகும்
நலதனுமானசிமூன்றாம்பூமி சத்துவா பத்தி
நாலாம் பூமி
சொலும்அ சம்சத்திப் பேரும்பதார்த்தா பாவனைப்
பேருந்துரியப்பேரும்
மலினமறு மகனே ஐந்தாறுஏழு பூமிகளாய்
வகுத்தார் மேலோர்.

அ-வ, உரை = விவேகத்தால் குற்றங்களைக் களைந்து நிற்கும் மைந்தனே அறிஞர் ஆன்றோர் ஞானிகளும் புகழ்ந்து கூறிடும் ஞானபூமிகள் ஏழினுள், உடலோடு கூடிப் புறவாழ்விலும் அகத்துடனுறையும் ஞானானுபவ வாழ்விலும் சுதந்திரம் பெறுவது சுய இச்சைப்படி யாவராலும் யாதினாலும் எப்போதும் தடைசெய்யாமல் விடப்பட்டு, சாதகர் இயங்கிடும் அந்த நிலையே முதற்பூமியாகிய சுயேட்சை எனப்படும். இவ்வுலகம் எனது உடமை உயிர் உறவு நன்மை தீமை பாவபுண்ணியம் பிறப்பு இறப்பு அஞ்ஞானம் ஞானம் இவ்வேற்றுமைகளுடன் கூடிவாழும் நான்யார்? இவைகளின் தொடர்பு எவ்வாறு எனக்கு வந்தது இப்பதங்களிலிருந்து எவ்விதம் விடுதலை வரும் எனஅடிக்கடி தனக்குள்ளேயே விசாரித்திருப்பது விசாரணை எனும் இரண்டாம் பூமி என்பர். இவ்விதவிசாரணையால் மனதின் உருவம் இயல் செயல்களை உன்னிப்பார்த்துப் பழகப்பழக மனங்குவிந்து ஒருமைப்பாடுபெறுவதே மூன்றாம்பூமி தநுமானசி என்பர். அன்பு மகனே? மேற்கூறிய மூன்றுபூமிகளிலும் வைராக்யம் விடாது கடைப்பிடித்தபின்வருவது உண்மைப் பொருள்(ஆத்மாவை) தன்னுள் தரிசிக்கச் செய்த, பிரம்ம வித்துச் சீவன்முத்தன் எனப்புகழப்பெறும் சத்துவாபத்தி எனும் நாலாம் பூமி என்பர். மனதின் தொழில்களான அவா காமம், வெகுளி, நினைப்பு, மறதிகளை, தம்அறிவு பற்றாது திகழ்வதுவே அசம்சத்திப் பேரென்பர். இது ஐந்தாம் பூமி, கண்களால் கண்டறிந்த பதினொருவித உருவ அளவைகளையும் (திரிசியமழிந்தயிடம்) பூதகாரியமாயாவினோதம் என்றறிந்தும் மிரளாமல், பதார்த்தவஸ்துக்களில் சூனிய திருஷ்டி அடைவர்இது பதார்த்தஅபாவனை

என்னும் ஆறாம் பூமியாகும். உடல் உயிர் உலகு சேமநலன் கருதிய நிருவாகத்து மட்டும், அதுஅதற்கான காரியப்பாடுகளை செம்மையாய் தொடர சிந்தித்த அப்போதே, நினைவிற்கு வருமதுவே மின்னலைப்போல் நிகழும் நினைவாற்றல் இது துரியமென்பர்! சான்றோர்கள் என அறிந்திடுக?..............................(எ.ம்)

அ-கை-ஞானபூமிகள் ஏழின் பெயர்களையும் கூறி சிறுகுறிப்புரையும் கூறியவர், இவ்வேழு ஞானபூமிகளில் இங்கு நான்கு பூமிகளின் இலக்கணங்களைக் கூறுகின்றார்!

150 துர்ச்சங்க நிவர்த்திவந்து சிவஞானம் விரும்புவது சுபேட்சையாகும்
நற்சங்க மொழிவினவி ஞானநூற் பழகல்விசாரணையாமதால் நம்பி
முற்சங்க ஏடணைகள் விடலனுமானசி யிந்தமூன்றனாலுஞ்
சற்சங்க மனதிலுண்மை அறிவுதித்தல் சத்துவா பத்திதானே

அ-வ, உரை = அறிவுண்மைப் பொருளை நேசிக்கவிரும்பாத அஞ்ஞானிகளே துஷ்டர்களாம், இவர்களின் நட்பு பழக்கவழக்க சகவாசங்களையும் நீங்கி அன்புடைமை அறிவு அறம் பொருளுடைமைகளை அடைய விரும்பும்அது ஞானபூமி ஏழில் முதற்பூமிசுயேச்சைசத் சங்க சாதனையால், ஞானசாத்தியர்களுடன் கூடி சாத்திரங்களைக் கேட்டும் வாசித்தும் அப்யாசித்தும் வருவது விசாரணை எனும். இரண்டாம் பூமியாகும், விசாரத்தால் உணர்ந்து தெளிந்த பொருளையே நம்பி, முந்தியசகலமுமான புறம்பான விசயங்களை உள்மனதில் நீக்குதல், மனோலயமெனுந்தனுமானசி இதுமூன்றாம்பூமியாகும். இம்மூன்று ஞானபூமிகளின் பழக்கவழக்கங்களால், துவம்பதவாச்சியார்த்தங்கள் கூண்டோடு ஒழிந்த போது, உள்ளே உணர்வின் ஒழிவு மறைவு இன்றிய யாதார்த்த சொருபமாம் ஆத்மாவை தரிசிக்கும் சத்துவாபத்தி எனும் சீவன்முத்தரின்முத்திப் பேறுநாலாம் பூமியாகும்! என்று மகத்துக் கள் கூறியுள்ளனர்! என்றருளினர்..........................(எ.று)

அ-கை-ஞானபூமிகள் ஏழில் மிஞ்சிய மூன்றுபூமிகளின் இலக்கணங்களைக் கூறுகின்றார்......................(எ.ம்)

151 தத்துவத்தில் மனமுறைத்து மித்தையெலாம்
மறத்தலசஞ் சத்தியாகும்
அத்துவிதானந்தம்வரும் திரிபுடிபோம் பதார்த்தா
பாவனையதாகும்

வத்துநிலை இருந்தபடியிருந்த மவுனஞ்
சுபாவந் துரியாகும்
இத்துரிய பூமியைமுன் துரியாதீதப்
பதமென்ற துங்கேளாய்

அ-வ, உரை = மெய்பொருளில் மனம் ஸ்திரப்பட்டுச் சங்கற்ப விகற்பங்கள் ஒழிந்தசிந்தையராய், பொய்யாகவந்துள்ள யாவும் மறந்திருப்பதே அசம்சத்தி எனும் ஆறாம் பூமியாகிய பதார்த்த அபாவனையாகும். பிரம்மவஸ்துவின் நிச்சயம் இருந்தபடியான மோனத்தன்மை (தெரிந்திருந்தும் தெரிந்ததைப் பேசமுடியாத சித்திரம் போன்ற நிலை) நியமவரைவுப்படி இதுவே துரியம் எனும் ஏழாம்பூமியாகும். இன்னும்., விவேகாதி சாதனங்களை பழகவிரும்பியதும் அதனுள் குற்றந்தோஷந் திருஷ்டியாகியதும் நீங்கித் தன்னைத் தரிசிக்க விரும்புமது சுயேட்சையாம், விருப்பத்தால் தானகியச்சித்துருவும்(அறிவுவடிவு) தானல்லாத சடவுருவும் இதில் ஏதேதுஎனவிசாரித்தறிய முற்படுவதே விசாரணை எனவும், இவ்விசாரணையால், சட வாசனை விட்டு, விசாரணை செய்வதில் பிரீதியாகி, மனதின் தொழில்களற்றுத்தானாய் இருப்பதேதனுமானசியாகும். அச்சித்தை உபாசிக்கும் நேயம் மிகுந்து அதன் அநுபவமாக வெளிப்பாடடைவது சத்துவாபத்தியாகும். இச்சித்து உதயத்தினால் தேகம் நானென்றும் பிற சடபானை அறநின்றதே அசஞ்சத்தியாகும். அச்சித்தில் ஆனந்தமுண்டாகி அதுஇது என்கிற இரண்டறயாவும் தானாயிருத்தல் பாதார்த்த அபாவனையாகும். நிலையானஇவ்வநுபவம் எப்போதும் தானாய் உள்ளதாக விளங்குதல் துரியமெனப்படும் என்றருளினர்! ((எ.று)அ-கை- இத்துரியபூமியே அநுபவத்தால் துரியாதீதம் ஆகும் இயல்பு தோன்ற, ஏழு ஞானபூமிகளையும் சிருஷ்டி திதி சங்காரம் திரோபவம் அநுக்கிரகமெனும் ஐந்தவத்தைகளாகப் பிரித்து அதன்வகையும் இலக்கணமும் கூறுகின்றார்.)..........(எ.ம்)

152 முற்புவிமூன்றினுமுலகந் தோற்றுதலாற் சாக்கிரமா
மூன்றற்கு அப்பால்
நாலாம்பூமி சொப்பமான மாதுவுமெல்ல நழுவுஞ்
சுழுத்தி ஐந்தாம்பூமி

அற்புதமாஞ் சுகாநுபவ மிகும்துரியம் ஆறும்பூமி
அதற்கப்பாலோர்
கற்பனையிலிாதவிடம் அதீதமென்று மௌனமாய்க்
காட்டும்வேதம்

அ-வ, உரை = முன்புகூறிய சுயேட்சை விசாரணை தனுமானசியாகிய இம்மூன்று ஞானபூமிகளிலும் உடல் உலகவிகார விசயங்களே தோற்றுதால் சாக்கிரமே ஆகும். நான்காவதான கனவும் மெல்ல நழுவுமதுவே ஐந்தாம் பூமியாகிய சுழுத்தியாகும். நிரதிசயமான சுகாநுபவமிகுந்த ஆறாம்பூமியே துரியமாகும். யாதொரு கற்பனைகளுமற்ற இடமே துரியாதீதமெனச் சுருதிகள் மௌமனமாய்க் காட்டும், அசம்சத்தியென்பது? உருவங்களற்ற நினைவுருவாயும், பதார்த்த அபாவனையில் இச்சகம் முற்றும் தன் அறிவே வடிவாய்க் காணுதலால் இதுவே துரியமெனவும் கூறினார்! (எ.று)

153 துரியநிலந் தனைத்துரியா தீதமெனின் மயக்கம்
என்றுகருதிமேலார்
அரியதொரு விதேகமுத்தி அதீதமென்பார்
அதுகணக்கி லாறாம்பூமி
மருவுஞ்சுழுத் தியிற்காட்சி சுழுத்தியென்பார் என்பதும்
நீமன திற்கொள்வாய்
பெருமைதரும் ஞானபூமிகளேழின் விகற்பம்
இன்னமுண்டு பேசக்கேளாய்...

அ-வ, உரை = துரியபூமியைத் துரியாதீத மென்றால் அது மயக்கத்தையுண்டாக்கும் எனக் கருதிய நூல்வல்ல சான்றோர். மகத்துக்கள், அடைவதற்கரிய ஒப்பற்ற விதேககைவல்யத்தைத் துரியாதீதமென்று கூறியுள்ளனர். அக்கணக்கிற்கு ஆறாம்பூமியின் பதார்தபாவனையைப் பொருந்திநின்ற சுழுத்தியைக், காணும் அறிவாகிய சுழுத்திஎன்று கூறியுள்ளனர் என்று இதையும் நீ மனதுள்கொள்வாய், மாட்சிமையைத் தருகின்ற ஞானபூமிகளின் பேதவிகற்பங்கள் இன்னமுமுண்டு அதனையாம் கூறநீகேட்பாயாகி? இன்னும், விதேகமுத்தி என்பதும் சீவன்முத்தி என்பதும், யாதெனின், சீவனானதன்னை சிவனாகத் தரிசித்த பின்னும் உலகம் உயிர்

உடல் சகவிவகாரகாரியங்களையும் பற்றற்ற தன்மையுடன் இயங்குவதும் சீவன்முத்தி என்பதாகும். இவ்வுடலுள் இருந்து இயங்குங் காலத்திலும், தேகமல்ல நான்தேகி என்ற நிச்சய பலத்தால், ஞானசொரூபமே தன்தேகம் என்று இயங்குவதே! விதேகமுத்தியாமிது பெற்றவரின் அநுபவம்! அன்றித்தேகம் பிணமாவதே! விதேகமுத்தி என்பது, அநுபவமற்ற கூற்றாகுமிதுவெறுஞ் சம்பிரதாயமென்று அறிவாயாக? என்றார் (எ.று)

அ-கை-ஞானபூமிகளை அடைந்த அவசரத்தில் சீவன் முத்தர்களுக்குண்டாகும் நாமங்(பெயர்)களைக் கூறுகிறார்......(எ.ம்)

154 முன்னிலங்க ளேறிய மூவமப் யாசி
களாமுத்த ரல்லர்
பின்னிலங்கள் வரன்வரியன் வரிட்டனெனுஞ்
சீவன்முத்தர் பேதமாகும்
சொன்னநடுப் பூமிவந்த ஞானிகளே பிரம்மவித்தாம்
தூய மேலோர்
இன்னமுமப் பூமிகளின் பெருமைதனை
நீயறியயான் சொல்லுவேனே!

அ-வ, உரை = ஒன்று இரண்டு மூன்றுக்கு வந்தசாதகர்கள் மூன்றுபேர்களும் சீவன்முக்தர்கள் அல்லர். அப்யாச பலமுண்டாக்கும் ஞானபூமிகள் இது, ஐந்து ஆறு ஏழு எனும் ஞானபூமிகளில் உள்ளோர் முறையே பிரம்மவரன் என்றும், பிரம்மவரியான் என்றும், பிரம்மவரிட்டன் எனும் சீவன்முத்தர் களதுபேதங்களாம், சொல்லிவந்த நாலாம்ஞானபூமியுள் ஏறினோர் ஞானசித்தியும் ஆத்மதரிசனமும் பெற்ற பிரம்மவித்தாம் தூயஞானிகளாயிருப்பர், இன்னும் மூன்று ஞானபூமிக்கு வந்தோர் பயிலும் ஞானசாதகராம் மற்றய நான்குபூமியை வந்தடைந்தோர்கள் சீவன்முத்தர் எனப்புகலப்படும் ஞானியர்களே ஆகுவர் என்றும் நீ அறிந்திடுக? (எ.று)

அ-கை-ஞானபூமிகள் மூன்றினது அப்யாசத்தால் அடையப்படும்பயனும், அதிலும் முதற்பூமியின் அருமையும் கூறுகிறார்! (எ.ம்)

155 நாலாம்பூமி யில்வருமுன் முன்மூன்று பூமியும்
அடைந்துநடந்து மாண்டோர்,
மேலானபத மடைந்து பிறந்து மெள்ளமெள்ள
வந்துவீடு சேர்வார்,
மாலான பவத்தில் விழார் முதற்பூமி கிடைப்பதுவே
வருத்த மைந்தா
காலான முதற்பூமி கைவந்தால் முத்தியும்
கைவந்ததாமே....

அ-வ, உரை = வீடுபேறு என்னும் சீவன்முத்தி அடைவதற்கு, ஞானபூமி, ஒன்று இரண்டு மூன்று பூமிகளில் ஏறியவர் நாலாம்பூமிக்கு வருமுன்பு, இறந்துதன் தேகத்தைப் பிணமென்று வீழ்த்திடுவாரானால், அவர் மீண்டும் நல்லயோகீஸ்வரர் தனவந்தர் வேதமோதும் பிராமணர் நாடாளும் அரசர் குடும்பங்களில் பிறந்து பூர்வ சென்ம வாசனையுண்டாகியும் பயின்றும் வந்து, படிப்படியாக நாலாம்பூமியேறி, பின் ஐந்து ஆறு ஏழுபூமியுமவைகளின்பயனையும் தவறாது அடைவார்கள். விரும்பி இருந்துண்டாகும் துக்கசனனங்(பிறவியை)களை அடையமாட்டார்கள், இவர்கள் வழுவாமல் பிறவாப்பேரின்பத்தை அடைவார்கள், என்பதுவேத உபநிஷத்துகளின் தீர்வையுமாகும். ஏழுஞானபூமிகளில் முதற்பூமியான சுயேச்சை ஒருசாதகருக்கு அமைந்திடுமானால் முத்தியும் அவருக்குக் கைவசமாகும் என்றும் நீ அறிந்திடுக? (எ.று) அ-கை-ஒன்று முதல் மூன்று வரை, அப்யாச பூமியை அடைந்தோரன்றி முத்தியைச்சேர்பவனாவன் எனக்கருதி, அவன் ஞானஅநுபவியே என்கிறார்.

156 இப்புவி விஞ்ஞானபூமி யொன்றிலிரண்டில்
அடைந்திருந் தாரானால்
அப்புருடர் மிலேச்சராயினும்முத்தர் குருபாதத்
தாணை மெய்யே
தப்புரை என்றவர்கெடுவார் நடுவான மறை
களைநீ சங்கியாதே
செப்பும் மொழிவழிதிடமாய் அகம்பிரம்ம
மென்றிருந்து தெளிந்திடாயே!

அ-வ, உரை = இவ்வுலகியல் வாழ்மாநுடர்களில் சாதன சம்பன்னர்களாகிய முமுட்சுக்கள், அதிர்ஷ்டபயனாக, ஞானபூமிகள் ஏழினுள், ஒன்று இரண்டு மூன்று பூமியின் அப்யாசம் செய்வாராயின், அவர்(மிலேச்சர்) தாழ்ந்த குலம் சமுதாயத்தைச் சேர்ந்தவராயினும் இவரது விசாரணையினால் வைராக்கியத்தாலும், பிறப்பொழிக்கும் நெறிநின்று சீவன்முத்தார்களாவார்கள், இது எனது குருஞானதேசிகர் மீதுசத்தியம், இதைப் பொய்வார்த்தை என்றெண்ணுவோர், பிறப்பு இறப்பு எனும் மீளாத்துயர்கதியையே அடைகுவார்கள், தீர்க்கதரிசிகளின் இதோபதேசத்தை, நடுவுநிலையுடைய வேத வாக்கியங்களைச் சந்தேகவிபரீ குதர்க்கங்களான மதிபேதகங்களை அறவேவிட்டு, சுருதி குருவாக்கியங்களிடம் அன்பும் விசுவாசமும் பயிற்சியும் கொண்டு, இவை போதித்த நெறிவழியே சென்று அகம் பிரம்மாஸ்மி என்ற, கூடஸ்தனே பிரம்மமெனச் சகசசமாதியிலிருந்து தெளிவுபெறுவாயாக? என்றருளினர்.....(எ.று)

அ-கை-முத்தியை அடைவதற்கு வருணாச்சிரம பேதங்கள் ஒரு தடை இல்லை என்பது விளங்கும்படி இப்பூமிகளின் முடிவான துரியாதீதப்பதம் துறவறத்தார்க்கு, அன்றி இல்லறத்தார்களுக்கு வாராதே எனும் சிலரது ஐயப்பாடுகளை நீக்கவேண்டும்எனப் பிரார்த்தித்தான் சீடன் (எ.ம்)

157 பொல்லாத மிலேச்சருக் கும்விதேகமுத்தி
தரும்ஞான பூமியென்று
நெல்லாகி முளைக்குமெனைத் தண்டுலமாக்கிய
குருவேநீர் சொன்னீரே
இல்லானும் குடும்பம் விட்டுச்சந்நியாசம்
புகுந்து ஏகாங்கியானோர்
அல்லாமல் முத்திபெறார் என்றசிலர்
சொல்மயக்க மகற்றுவீரே.

அ-வ, உரை = குற்றமுந்தோஷமும் பொருந்திய மனதியல்புஞ் செயலும் உடைய மிலேச்சர்(மிகவுந்தாழ்ந்தோர்)களுக்கும், மோக்ஷார்த்தை வழங்கும் ஞானபூமிகளே எனத்தேவரீர் உரைத்தருளினீர்கள் சுவாமிஆனால்? இல்லத்தாரும், துறவறம்

ஏற்று சந்நியாசியாகி உலகியல் உடலியல் இல்லறவியலினின்றும் நீங்கித் தனிமையானவர்கட்கே அன்றி விதேககைவல்யம் (துரியாதீதப்பதம்) அடையமாட்டார்கள் என்று சிலர் சொல்வது அடியேனுக்கு ஐயத்தை தருகின்றது. நெல் முளையாகிக் கொண்டே இருப்பதுபோன்ற, எனைத்தண்டுலம் ஆக்கிய குருவே(நெல்லாகவே எவ்வளவு காலமிருந்தாலும் ஒருநாள் முளைக்கும் அதுவே அரிசியாகிவிட்டால் எப்போதும் முளைக்காதுபோகும் அதுபோல) சனன நோய்க்கு மருந்தானவாறு எனை ஈடேற்றிட, அவ்வையம் நீங்கிட சமாதானம் கூறிஅருளும் சுவாமி என்றான் சீடன். (எ.று)

அ-கை-சீடனின் ஐயம்தீரச்சமாதானமும், நால்வகைத்துறவின் நாமங்களும் அவற்றிற்கான காரணங்களையும் கூறுகின்றார் (எ.ம்)

158 சிட்டர்புகழ் மகனேநீ சங்கித்த சங்கை நன்று
தெரியக் கேளாய்
கட்டவிழுந் துறவுநால் வகையாகும்
அவைகளுக் கானபேரும்
பட்டதுயர் கெடுங்குடீசகமும்பகூ தகமுமென் றம்சம்
பரமஹம்சமெனவாம்
விட்டகலுந் துறவுக்கு விராகங் காரண
மன்றி வேடமன்றே!.........

அ-வ, உரை = சாத்திரங்களைக் கற்றுணர்ந்த சான்றோர்கள் மகிழ்ந்துவரவேற்கும் செல்வனே? நீசந்தேகித்துக் கேட்ட கேள்வியானது மிகமிகவும் நன்று ஆகும் அதைநீ உவக்கும்படி யாம் கூறுவோம் கேட்பாயாக? பந்தங்களை அழிக்கவரும் சந்யாசங்கள் நான்குவிதமாயுள்ளன. அந்த நான்கிற்கும் அந்தயிடம் அவசரத்திற்கான பெயர்கள் உண்டாமதுகூறின் குடும்பம் சமுதாயம் உறவு பொருளுடைமை விட்டுத் தனிமையிலிருந்து தவமேற்றிருப்பது குடீசகமென்றும், மூர்த்தி தலம் தீர்த்தம் என விரும்பிய பலஇடங்களிற் சென்று தவமியாற்றுவது வெகூதகம் என்றும், வித்தையும் வேடமும் கொண்டு திகழ்(திரி)வது அம்சம் என்றும், வித்தைகட்கெல்லாம் மூலவித்தான பிரம்ம வித்தையே தானாய்த்திகழும்(ஞான தேகமானது) பரமஹம்சம் என்றும்

நான்குவகைகளே ஆகும். இதிற்சர்வசங்க சங்காதங்களையும் நிராசையாற் துறந்து(தியாகித்து) விட்டு விடுதலே (அகத்துறவே) துறவாகும், அன்றி வேடம் மட்டும் கொண்டு அவ்வித்தையில்லாத துறவு இழிவுக்குரியதே என்றும் தெரிந்திடுக? என்றருளினர்... (எ.று)

அ-வ-கை துறவுக்குக் காரணமான விராகம்(பற்றின்மை) மூன்றினது நாமமும் அவைகளின் இலக்கணமுங் கூறுகின்றார்.... (எ.ம்)

159 மந்தமுந் தீவிரமுந் தீவிரதர முமெனமூன்று
வகைவிராகம்
வெந்துயரம் வரும்போது குடும்பத்தை வெறுத்து
விரும் விராகமந்தம்
இந்தவுடல் அளவுமனை தனம்வேண்டா மெனவிடற்
தீவிரம் என்பார்
அந்தணர் நூல்மித்தை எனவிடலது
தீவிரதரமா மறிந்திடாயே...

அ-வ, உரை = துறவுக்குக் காரணமாகும் நிராசை(விராகம்)யை உடைய மனநிலையானது மூன்றுவிதமாகும். மந்தம் தீவிரதரம் என்பதாகும் இவற்றுள் குடும்பத்தை ஏற்று வழிநடத்துவதில் உண்டாகின்ற இல்லாமை, இயலாமை, ஏழாமை, வறுமை, நோய் முதலியன காரணங்களால் இல்லறத்தை வெறுத்து வரும் விராகம் மந்தம் எனப்படும். தன்மனை அறவாழ்வும் தேகநலமும் பொருளாதாரம் புகழும் இகழும் சுகபோகங்களான புராண இதிகாசங்கள் கூறி விதிநியமங்களைத் துறப்பதே தீவிரம் என்பர் சான்றோர்கள். என்பதையும் நீ தெரிந்திருப்பாயாக?

அ-கை-மந்தவிராகம் நிலையில்லாதது பயன்தராதது, தீவிரம் இரண்டின் சந்யாச தன்மை ஈதுஇது என்று கூறுகின்றார். (எ.ம்)

160 பாவிமந்த விராகத்திற் சந்யாசங்க ளொன்றும் பலித்திடாதே
தீவிரதரத்திற்குடீ சகம்வெகூ தகமென்றிரண்டுதிறங் களுண்டாம்
தாவிநடந்திடத் திடமில்லா தவர்க்குக் குடிசகமும் சகமெங்கும்
மேவிநடந் திடமுள்ள வர்க்கு வெகுதகமுமென விதித்தார் மேலோர்.

அ-வ, உரை = வீணாக அவ்வப்போது சிலகேடுகளைக் கொடுக்கவந்த மனபலவீனமாகிய, மந்தவிராகத் துறவினால்

யாதொரு பயனுமுண்டாகாது, தீவிரவிராகத்தில், குடிலமைத்து சரிவணாதி சாதனங்களோடு தனிமையில் வாழ்வதும், பல்வேறு ஊர் தேசம் தீர்த்தம் மூர்த்தி ஸ்தலமென்று தொடர்ந்துயாத்திரையில் சென்று வாழ்வதலுமான இருவகையுண்டு, அங்கிங்கென அலைந்து நடக்கமுடியாதவர்க்கு குடீசகமும், எவ்விடத்தெங்கும் நடந்திடத் திடமுள்ளவர்க்கு வெகூதகமுமென்று சந்யாசம் பெற்றவர்களின் வாழ்வு நடைமுறைகளைக் கூறியுள்ளனர் சான்றோர்கள் என்றார். (எ.று)

அ-கை-தீவிரம் தீவிரதரம் என்றிருவகைச் சந்யாசங்களின் பயன்கூறுகிறார்.

161 இருவகைத் தீவிரதரத்தும் அம்சனென்றும்
பரமாம்சனென்றுஞ் சொல்லுவார்
வருமம்ச னுக்குமுத்தி சத்திய லோகத்தன்றி
வாராது என்பார்.
பரமாம்ச னுக்குமுத்தி யிவ்வுலகி லேயேஞானத்
தாற்பலிக்குமென்பார்
திரமருவும் பரமஹம்சன் தானுமிருவகை
யாகுஞ்செப் பக்கேளாய்

அ-வ, உரை = தீவிரமதிதீவிரமெனும் சந்நியாசிகளில், அம்சசந்யாசி என்றும் பரமாம்ச சந்நியாசி என்றும் சத்துக்களும் சுருதிகளும் கூறுகின்றனராம். இவர்களிருவரில் அம்சசந்நியாசி அநுபவஞானமின்றிய பரோட்சத்தின்ஞானம் திடம் பெற்றவர் ஆதலால் பிரம்மலோகம் சென்றடைந்து, பூர்வபுண்ணியம் மற்றும் கருமபயன்தீரவும் மறுபடியும் பூமியில் மானுடராய்ப்பிறந்து ஞானசாதனம் பயின்று முடிவில் அபரோக்ஷஞானம் பெற்று மோக்ஷத்தை அடைவர் என்பதாகும். பரமாம்ச சந்நியாசிக்கு இவ்வுலகில் இப்பிறவியில் இப்போழ்தே, கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிஷ்டைகூடல், எனும் சாதனபலமான சகலமும் கைவரப்பெற்று, அபரோக்ஷஞானமும் மோக்ஷானுபூதியும் பெற்றுய்வடைவர்! இப்பரமாம்சத்திடம் பொருந்திய சந்நியாசிகளிலும் இருவிதங்களாக இருப்பார்கள் அதையும் யாம்கூறநீ கேட்பாயாக? (எ.று)

அ-கை-இப்பரமாம்ச சந்நியாசிகள் இருவரில் அப்யாசியும் அநுபவியும் என்றிரு வகையாவர் எனக் கூறுகிறார்!...........(எ.ம்)

162 சிஞ்ஞாசு ஞானவானென்றிரண்டு பேர்கள்
அவர்களிற் சிஞ்ஞாசு
மெஞ்ஞான பூமியில் முன்மூன்று பூமியுள்
நடக்கும் விவேகியானோன்
சுஞ்ஞான வானென்போன் சீவன்முத்தி
அடைந்திருக்குந் தூயமேலோன்
அஞ்ஞான மகலுமந்தச் சிஞ்ஞாசும்
இருவகையாஞ் செப்பக்கேளாய்!

அ-வ, உரை = சிஞ்ஞாசு என்றும் சுஞ்ஞானவான் எனவுமிரண்டுபேர்கள் இவ்விருவரில், சிஞ்ஞாசு என்பவன் 1-2-3 ஞானபூமிகளில் பயிற்சியைச் செய்துவருபவனாகும். விவேகியும் கூட, இவண் அப்யாசியே ஆவன், சுஞ்ஞானவான் என்பவன், நடுநிலை நின்று சீவன் முத்தியைப் பெற்றிருக்கும். பரிசுத்தாந்தக் கரணாதீதம் உடைய அநுபவ ஞானியுமாவன், அறிவின்மை நீங்கப்பயிலுகின்ற அந்தச்சிஞ்ஞாசும் இருவிதமாயிருப்பார்கள் அதுவும் யாம்கூறநீ கேட்பாயாக? என்றருளினர்(எ.று)

அ-கை-இச்சிஞ்ஞாசு என்போன் இல்லறத்திருந்தேனும் துறவறத்திருந்தேனும் முத்தியை அடைவான் எனக் கூறுகின்றார். (எ.ம்)

163 பந்தம்மனை துறந்துசிலர் அதிதிகளாய்
இருந்தடைவர் பரமஞானம்
அந்தனர் மன்னர் வணிகர் சூத்திரராயிருந்தது
சிலரடைவர் ஞானம்
இந்தவகைச் சாத்திரத் தும்உலகத்தும் நடப்பதைக்
கண்டிருந்து மைந்தா
சிந்தனையில் மயக்கமென்ன சுருதியுக்தி
அநுபவத்தாற் தெளிந்திடாயே.

அ-வ, உரை = உடல் உயிர் உறவு பெற்றோர் மனைவிமக்கள் சுற்றம் பொருளாதிகளால் மனம்போன போக்கெனும் சீவவாழ்வினை

இறுக்கும் பந்தங்களைக் தூரத்தள்ளி, மனைவிட்டு வெளியேறி எதிதிர்மம் கொண்டு நடமாடி, பிச்சை ஏற்றுண்டும் பசியாறிப் பதைப்பும் ஆறி, துறவிகளாயிருந்து சிலர்பிரம்மஞானத் தினைப் பெற்றுய்வர், சிலர் பிராமணகுலத்திற் பிறந்தும் குலப்பண்புகளுக் கேற்றவாரான க்ஷத்திரியர் வைசியர் சூத்திரர்களின் குடும்பநலமுண்டாகும் அக்னிகோத்ர கருமங்களுக்கு இவர்களே குருவாகயிருந்து நடத்திவைத்து அதனால் வரும் தக்ஷிணையைக் கொண்டுதம் குடும்ப பரிபாலனம் செய்தும் தம்மை வந்தடைந்த பக்குவர்களுக்கு ஞானவுபதேசமும் செய்து வாழ்த்தும் பேரின்பப் பெருவாழ்வினை அடைகுவர். ஒரு சிலர் கௌசிகர்சனகர் மாபலி, பகீரதன் போன்று இராஜ்ஜியப்பரிபாலனாம் செய்து கொண்டே சீவன்முத்தியினைச் சார்ந்திருப்பார்.

வைசியர்களானோர், பண்டம் மாற்றுந்தொழிலான வர்த்தக வியாபாரஞ் செய்தும் சீவன்முத்தியைச் சம்பாதித்து உவந்திருப்பர். சூத்திரர்களோ எனின், குரு அரசன் அதிகாரி அந்தணன் போன்றோரைப் பலமுடையோன்! பணிந்து வணங்கிச் சேவைசெய்து வாழ்ந்திருந்தே சாதனாதிகள்யாவும் ஈஸ்வரப் பிரசாதமாக அதிர்ஷ்டவசமாய் அமைந்திட அப்யாசித்து, அநுபவஞானம் கைவரப்பெற்று சீவன் முத்தராவான் என்று, புராண இதிகாச வேதாகமங்களைக் கண்ணுரக் கண்டிருந்தும் சந்தேகமுங் குழப்பமுங் கொள்வதேன்? சுருதிகளினாலும் யுக்தியினாலும், நடைமுறை அநுபவங்களினாலும் தேர்ந்து ஒர்ந்து தெளிந்து உவந்திருப்பாயாக? என்றருளினர் (எ.று)

அ-கை-மேற்கூறுவோம் என்றவாறே (133வது கவியில், இந்த வாறைந்து சுகஞ் சொல்லினோம் வித்தைச்சுகம் இனிமேற் சொல்லுவோம்), முற்கூறிய சர்வார்த்தங்களும் அடங்கிய சுருதிவே தவுபநிஷத்துக்களின் சாரமான முடிவுரையாம் வித்தியானந்தமாக கூறத்தொடங்கி இச்செய்யுளில், அகம்பிரம்மாஸ்மி எனும் பிரம்மமேகூடஸ்தன் எனக் கூறுகின்றார்!

164 பிறந்ததுண் டானாலன்றோ பிறகுசா வதுதா னுண்டாம்
பிறந்ததே யில்லை யென்னும் பிரம்ம மாவதுந் நானே
பிறந்தது நானன்றென் றாகில் பிரம்மமென்றந்த நானே
பிறந்தது மிறந்து மற்றப் பிரம்மமாம்நா னேநானே!

அ-வ-உ_ரை: சாமவேதம் தத்துவசிமகாவாக்கியப்படி நான்பிரம்மம் என்பதும், அதுஎனும் ஆனந்தமும் நான்என்பதே நீ எனும் வித்தையும் ஆம் என்னும் ஆனாய் எனும் ஐக்யமுமாம், எனதாத்மாபிறந்தது என்றாலன்றே, இறப்பதும் ஆகும். பிறந்ததே இல்லை எனும் எனதாத்மா பிரம்மமாவதுவும் நானே, நான் பிறக்கவே இல்லை என்றானபின் பிரம்மமென்று சொல்லப்பட்ட அந்தப் பிரம்மமேயாகிய கூடஸ்தன்நானே! நானே! (எ.று)

அ-கை(இங்கு கூடஸ்தனே பிரம்மம் என்று கூறுகிறார்)

165 நானென்ற பிரம்மமான நானேநா னறியே னென்றால்
நானென் பதேது பின்னை நம்முடைய புத்தியென்னில்
தானது மயக்கந் தன்னிற் சாகுமே சாவாதாகி
நானென நிறைந்திருந்த ஞானமாம் நானே நானே!

அ-வ-உ_ரை: பரிபூரணமாய் எல்லாந்தானாய் நிறைந்துள்ள ஞானமே பிரம்மமென்கிறார், நானென்று சொல்லப்படும் பிரம்மாகிய நானே என்னைக்காண்கிலேன், எனின்? நான்என்பதுயாது? பின்னே நம்முடைய புத்தி என்று கூறிடில் அப்புத்தியும் மயங்கிடு மந்தச் சுழுத்தியில் இறந்துவிடுகின்றதே, அவ்வாறு இறவாதிருக்குமாயின் நானே நானென்று பூரணமாக விளங்குகின்ற மெய்ஞானமாம் நானே நானே! என்றார் (எ.று)

அ-கை-வித்தியானந்தத்தின் ஒருமைதன்மையினைக் கூறுகிறார்! (எ.ம்)

166 நிறைந்த வாறெந்த வாறுநிலைதெரிந்திலேனென்றாயாகில்
அறிந்த தாஞ்சு ழுத்திதன்னில் ஆனந்த மதுவேயாகும்
குறைந்த தற்கான ந்தந்தான் குவலயந் தன்னிலில்லை
நிறைந்த தேயிந்த ஆன்மா நிதான மிவ்வறிவுதானே......

அ-வ, உ_ரை = பிரம்மாம் எங்கும் நிறைந்துள்ள ஆனந்தமும், ஆத்மாஎன்பது அகம் வித்தையும், நிதானம் இவ்வறிவென்பது, அஸ்மி எனும் ஐக்யமும் ஆகும்! நான் பரிபூரண சொரூபமானது எவ்வாறு என்றந்த நிச்சயந்தெரிகில்லேன், என்றாயாகில்,

நனவிற்சுழுத்தி (விழித்துள்ளபோதே அறிவு அறியாமை நாமரூபக் காட்சிகள் கருத்திலில்லாத அந்நிலைை)யில் உள்ள நிரதிசயானந்தமானது அப்பூரணமேயாகும். எப்போதும் ஒருசில துகளுமான சுகதுக்கங்கள் உலகத்தினிடத்தும் இல்லையாகும். இவ்வாத்மாவே சைதன்யம் பரிபூரணம் நிதானமுமாகும்! (எ.று)

அ-கை-வித்தியானந்தங்களின் ஒருமையுறத்திகழும் சுகாநுபூதியே தானென்று கூறுகின்றார்! (எ.ம்)

167 மனத்தி னாலெண்ணித்தானே வந்ததிவ் வுலகமாகும்
நினைத்திடி லனேக லோகம் நிற்பதிவ் வறிவிலன்றோ
அனைத்தையுங் கடந்தப்பால் அந்தமற் றறிவிதாமென்று
எனைத்தனி விசாரித்திட்டால் ஏகமாய் நிறைந்தோன் நானே

அ-வ, உரை = இப்படி சாமவேதமகாவாக்யம் நீ அதுவாய் இருக்கின்றாய் என்றும் யசூர்வேத மகாவாக்கியப்படி அகம்பிரம்மாஸ்மி என்றும் அதாவது சாமவேதம் பிரம்மமே கூடஸ்தனாம், யக்ஷிர்வேதம் கூடஸ்தனே பிரம்மமயமாம் அயம்ஆத்மா பிரம்மம் எனவும், சங்கற்பமே வடிவம் என, மைந்தா? நம்மனம் நினைத்த மாத்திரத்திலேயே இவ்வுலகம் சிருஷ்டியாகிறது, அவ்விதங்கருதுகின்ற இடத்திலேயே அனேக உலகங்களும் சிருஷ்டியும் உண்டாவது, அந்த ஞானத்திலே தானன்றோ? எவ்வித அளவு வரையரைகளுந்தாண்டித் திகழ்வது முடிவற்ற ஞானமிதுவாம், என்று எனைத்தனியாக்கி மூன்று உடல்கள் மூன்று அவஸ்தைகள், மூன்று அபிமானிகள் ஐந்துமலங்கள், ஐந்துகோசங்கள் என விசாரித்தால் இந்த அநாத்மா தத்துவங்கள்யாவும் நானல்ல என்றாகிப்பின் இவைகளுக்கெல்லாம் சாக்ஷியாயுள்ள அப்பிரம்மமே நான் என்று விசாரித்துத் தெளிந்தால் நானே எங்கும் பூரணமாய் நிறைந்துள்ளேன் தானே! (எ.று).

அ-கை-ருக்வேதம் உணர்வே (யாதொரு பேதமுமற்ற அத்வைத ஸ்வரூபம்) பிரம்மம் என்கிறது, இதுபுரியமுடியாத சீடனின் மூன்றாவது ஐயத்திற்கு சாமவேதம் - அது நீயாய் இருக்கிறாய் என்கிறது. இதுவும் சமாதானமற்ற சீடனின் நாலாவதுகேள்விக்கு, அதர்வணவேதம் யாவும் எங்கும் தாமாகவே நிறைந்துள்ளேன் என்பதை அயம் ஆத்மா பிரம்மம் என்கிறது! முற்கூறிய கற்பனைகள் அனைத்தையும் விருத்தியுடன் அடக்கி, இவ்விருத்திகளையும்

அபிமானமற்று நீங்கின் உனது நிசாம்ச ஸ்வரூபசுகானுபவம் உதித்திடும் அக்கணமே (நொடியில்) என்கின்றார்! (எ.ம்)

168 அந்தவா ரிருந்து கொண்டே ஆனந்த மனுபவிக்க
எந்தவா ரிருந்து கொண்டால் எனக்கிது தெரியு மென்னில்
இந்தமூன் றவஸ்தை தம்முள் எழுந்திடும்விருத்தி நீக்கி
அந்தவா ரிருந்துகொண்டே நீ ஆனந்த மடைய லாமே!

அ-வ, உரை = எங்கும் நிறைந்துள்ள சச்சிதானந்த சொரூபத்தை ஒத்து நானும் அவ்வாறு திகழ்ந்திட நான் எவ்விதம் இருந்தால் எனக்கிது தரிசனமாகும் எனக்கேட் பாயாகில் மைந்தா? விழிப்பு கனவு பேருறக்கமாகிய இவ்வுபாதிகளை நானல்ல என நீங்கி நின்ற அவ்விடத்துள் துரியநிலையே நீயதுவாய் அப்படியாயிருந்து நிரதிசாயனந்தமா யிருக்கலாமே! என்றார்.....(எ.று)

அ-கை-அம்மனோ பேதகற்பனா விருத்திகளை நீக்கிட மூவித உபாயங்களை கூறத்துவங்கி இக்கவியுள் அநுபவ உபாயம் கூறுகின்றார்! (எ.ம்)

169 வாதனா வசத்தினாலே வருகின்ற விருத்தி எல்லாம்
எதினா லடக்க லாகும் என்றுதான் விசாரஞ் செய்யின்
போதமாம் இராசன் தானாய்ப் புத்தியைம் புலன்க ளெல்லாம்
தாதராய் இருக்கப் பெற்றால் சகலமு மடங்குந் தானே..

அ-வ, உரை = தானாயிருக்கின்ற நித்யானந்த ஞானசொரூபமே பொறிபுலன்கள் கருவிபிராணாதி சீவேசுவர செகத்தும் விளங்கச் செய்யும் விருத்திகள் எல்லாம் தன்அறிவாகிய அரசனுக்கு ஏவலாட்களாய்ச் செய்திடின் நீங்கும், முன்செனங்களிற் செய்ததும் இப்பிறவிமுதல் பழகிவந்த பழக்கவழக்கங்களாகிய வாசனை முறைமைகளை ஒடுக்குவது எப்படியெனில், தன்னை ஞானச்சாரியனாகவும் புத்திகரணம் பொறிபுலன்களைத் தமது சீடனுமாகப்பாவித்து நடத்திடின், குருஉத்தரவின்றி சீடர்கள் ஏதும் எதேச்சதிகாரமாய்ச் செய்யாது குருவுக்கு அடங்கியவர்களாகுவர்.

அ-கை(எஞ்சியுள்ள இரண்டு அப்யாச உபாயங்களையும் கூறுகிறார்) (எ.று).

170 விருத்திக எடக்கமின்னும் விநோதமாம் யோகத்தாலே
துருத்திபோ லூதுமூச்சைச் சுகமுடன் அடக்கிநிற்குங்
கருத்ததற் கில்லையென் னிற்காரணகளீர மாகிப்
பெருத்ததோ ரவித்தை தன்னைப் பிடிங்குடிலடங்குந்தானே!

அ-வ, உரை = வாசியோகமெனும் பிராணதாரணமாகிய உபாயத்தைக் கெவுணமாகக் கூறி, அவித்தையை நீக்குமுபாயத்தை முக்கியமாகக் கூறுகிறார். ரேசகப் பூரகக் கும்பகத்தைச் சுகமுடனடக்கும் கருத்தினை, குருமுகமாயடக்கின் வசப்படும் இதின்றேல் காரணசரீரமான தனதுநிஜசொரூப இயல்பினை உறுதியுடனான பாவனை செய்தால் சகலமும் வேறுயாதொரு பிரயத்தனமுமின்றி தானே எல்லாம் ஒழிந்துவிடும் (எ.று)

171 காரண சரீரந் தன்னைக் களைவது தானெவ்வா றென்றோதில்
ஆரணம் பொய்சொல்லாதே அதன் பொருளகத்தி லுன்னிப்
பூரணமாகு மென்மேல் புவனங்கள் தோற்றும் என்றவத்
தாரணை வந்ததா கிற்தரித் திடுமவித்தை எங்கே.

அ-வ, உரை = எவரும் கடக்க அரிதாகிய காரணதேகத்தை நானல்ல என்று நீங்குவது எப்படிஎனில்? வேதாகம சுருதி உபநிஷத்துக்கள் உறுதிபடக் கூறுகின்றன? அம்மகாவாக்யார்த்தங்களை உள்மனதில் சிந்தித்தபோது பரிபூரணமாய் எங்கும் நிறைந்துள்ள பிரம்மசொரூபமாயுள்ள என்னிடத்தில் அவ்வப்போது சங்கற்பவிகற்ப சலனங்களால், கற்பனையாய் ஆரோப திருஷ்டிகளாய் உண்டான சீவேசுவர செகத்துக்கள், கடலில் அலையாதிகள் உண்டாகியழிவது போலவும் திரைகாலிக நியாயம் போலவும் ஒருகணமும் நிலையில்லாதபொய்யே என்ற திடநிச்சய முண்டாகுமதனால் அவ்வவித்தைகள் ஒரு நொடியும் உன்னுள் தரித்திருப்பது இல்லை, வேதநிச்சயங்களையும் குருவாக்கியங்களும் கொண்டு சர்வம் பிரம்ம மயம் எனும் அநுபவம் உண்டானால்அப்போது, சித்திரப்படம் போன்ற காரண சரீர அவஸ்தை நீங்கி ஒழியும்! என்றருளிச்செய்தார் (எ.று)

அ-கை-சர்வம் பிரம்ம மயம் எனும் ஞானம் உதிப்பதற்குரிய அநுபவவிலாசங் கூறுகிறார். (எ.ம்)

172 **அப்படி யிருக்கச் சித்தம் அலைதலால் விவகா ரத்தில்**
எப்படிக் கூடும் என்னில் என்னைவிட் டாலொன்றுமில்லை
இப்படிக் கண்டெதல் லாமென் மயமென் கனாப்போல்
கற்பித மென்று தானே காண்கின்ற சித்து நானே.

அ-வ, உரை = இக்கவியில் திரைகாலிக நியாயம் விளக்கமே சரியானபொருளாகும்? சினிமா வெண்திரையிலும் சாட்டிலைட் மூலம் ஒளிப்பரப்புகின்ற தொலைக்காட்சிப் பெட்டிகளிலும் அனேகமான காட்சிகளை மாறிகாட்டிக்கொண்டே இருக்கின்றன. இவைகள் சினிமா புரொஷக்டரையும் டிவி பெட்டிகளின் சுவிட்சை ஆப்ஆன் நிறுத்தியபோது அவ்விரண்டிலும் காட்சிகள் தெரிவதில்லை அல்லவா? அதுபோல மகனே? அலைகள் ஏதும் அற்றமத்திய கடற்பரப்பே போன்ற நிஷ்தரங்க சமுத்திரமாகிய சச்சிதானானந்த பிரம்ம சொரூபமாயுள்ள உனது ஆத்மா, நினைவுமறதி எனும் சலனங்களால் அலையாதிகளுண்டாகின்றன. அன்றோ? விவகாரங்களில் சுழலும், அங்ஙனம் நிற்காதது ஏனெனில்? (த-வி-படலம்65வது கவியின் பொருளாக நீ இருத்தியாயின்) அத்வைத சொரூபமாகிய பொருள் தன்னிடத்தில் காண்பான் காட்சி காணப்படும் பொருள் யாவும் என்னைத்தவிரயாதொன்றும் எனக்கன்னியமல்ல ஆயினும் இவைகள்யாவும் எனது சொப்பனக்காட்சிப் பொருளே என்று திடநிச்சயம் பெறுவாயாக? (எ.று) இன்னும் கற்பிதமாகவந்த திரிசியங்கள் அனைத்தும் தனது அறிவுமயமே எனும் அநுபவப் பாவனையால் ஏதும் அன்னியமின்றியாவுந்தானாய் விளங்கும் என்றார் (எ.று)

அ-கை-(இச்சித்தின் அநுபவமே ஆனந்தவடிவாகும் என்கிறார்)

173 **சித்துநா னிறைந்தோ னென்ற திடம் மறவா திருந்தால்**
எத்தனை எண்ணி னாலும் ஏதுசெய் தாலு மென்ன
நித்திரை உணர்ந்த பின்பு நிற்கின்ற கனவைப் போல
அத்தனையும் பொய்தா னேஆனந் தவடிவு நானே!

அ-வ, உரை = நான் சைதன்யன் சச்சிதானந்தப் பரிபூரணப் பிரம்மபிரகாச சொரூபன், என்னிடம் ஆவரணம் அஞ்ஞானம் மாயை

பிறப்பு இறப்புச் சுக துக்கம் முதலிய இருமைப்பண்புகள் என்னிடத்தெப்போதுமில்லை என்கிற திடச்சித்தம் நீங்காதிருந்தால், ஏதேது நினைத்தாலும் என்னென்ன செய்தாலும், எங்கெங்கு திரிந்து கிடந்தாலும் என்ன? அதனாற்தோஷமோ குற்றமோ அணுவளவுமில்லை, கனவிற்கண்ட சுகதுக்க அனுபவங்கள் யாதும் விழித்தவுடன் ஏதுமுண்மையில்லாததுபோல, தேகாதிப்பிரபஞ்ச அவஸ்தா அநுபவங்கள் யாவும் பொய்பொய்யே! சச்சிதானந்த ஸ்வரூபனான நானே சத்தியமாகும் என நீ உன்னை ஓர்ந்து தெளிந்து இன்புறுக! (எ.று)

அ-கை-இவ்வனுபவம் உதிப்பதற்கு ஏதுவான நிச்சயங் கூறுகிறார் (எ.ம்)

174 நாளென வுடலைத் தானே நம்பினே னனேக சென்மம்
ஈனராய்ப் பெரியோராகி இருந்தவை எல்லா மிப்போது
கானலில் வெள்ளம் போலக் கண்டுசற் குருவினாலே
நானென என்னைத் தானே நம்பி யீடேறி னேனே..

அ-வ, உரை = எழுகடல் மணலை அளவிடின் அதிகம் எனது இடற்பிறவி அவதாரம் எனும் அருணகிரியாரின் கூற்றுப்படி, அனேகமான பிறவிகளை எடுத்து பெற்ற உடலையே நான் என்று மகிழ்ந்து மயங்கி என்னை மறந்தே திரிந்திருந்தேன் ஏழையாக தனவந்தனாக, உயர்ந்தவனாக, தாழ்ந்தவனாக, கற்றறிந்த பண்டிதனாக, கல்வியறியா மூடனாக, சுகியாக, துக்கியாக, பிறந்து இருந்தவைகள் எல்லாம் இப்போது என்னை நான் பிரம்மம் என்றுணர்ந்து அறிந்தபோது இவ்வுடல் உலகம் உயிர் உறவு உடமைகள் யாவும் கானல் நீரே போலும் கற்பனையில் தீட்டிய சித்திரம் போலவும் அறிந்தும், என் ஞானச்சாரியாது உபதே, சத்தினால், சத்து சித்து ஆனந்தமென்ற மூன்று பதங்களின் ஒருமையாயுள்ள சச்சிதானந்த பிரம்மமே நான் நான் என்று எனையே நம்பி ஈடேறினேன். குரு கிருபையின் மகிமையால்! தேகமே தானெனும் துரபிமானம் அழிந்து ஞானமேவடிவாம் எனதுடல் அறிவே வடிவு என்னும் நம்பிக்கை உண்டானால் அறிவாலய மாய்த் திகழும் அதுவே முத்திநிலையாகும்!

அ-கை-குருவின் கருணையை உபதேச மகிமையைப் புகழ்ந்து துதித்தஅவசரத்தில் தன்னையே இழந்து மகிழ்ந்ததாகும்! (எ.ம்)

175 என்னபுண் ணியமோ செய்தேன் ஏதுபாக் கியமோ காணேன்
நன்னிலந் தனில் எழுந்த நாரணன் கிருபை யாலே
தன்னிய னானேன் நானுத்த ரீயத்தை வீசுகின் றேன்
தன்னிய னின்னு நானே தாண்டவ மாடுகின்றேன்!

அ-வ, உரை = என்னதருமஞ் செய்தேனோ ஏதுபாக்கியம் பெற்றேனோ ஏழையான் தெரிந்திலேன், நன்னிலம் எனும் மாநகரில் மானுடராக அவதரித்து, சிருங்கேரி சாரதாபீடத்துக் குருவிடம் சரண்புகுந்து சிரமேற் கரங்குவித்து ஆங்கவரருளிய குருபிரசாத மகிமையைச் சுமந்து மீண்டும் அவதார பூமியாம் நன்னிலமே வந்தடைந்து, என்னை கருணையினாற் கண்ணுற்று தாம் பெற்று மகிழும் பிரம்ம வித்தையை எனக்கின்போடும் அருளிய ஞானவள்ளல், நாராயணதேசிகரது மாண்புமிக்க அன்பினால் வளர்ந்த அவரது சீடனாகிய தாண்டவராயன் எனுமிந்த அடியவன் கிருதார்த்தனுமானேன் (அறம் முப்பத்திரண்டினாலுமாகாதது, யான்பெற்றபேரின்பம்! இது, அகமும் புறமும் ஒத்துப் பயன்கருதாத நிஷ்காமிய கருமபயன்களினால் இப்பேறு பெற்றேனாவேன், இந்த இன்ப உல்லாசத்தின் ஆர்ப்பரிப்பு ஆரவார மிகுதியினால், எனதுமேனியிற் கிடந்த அங்கவஸ்தித்தை (மேலாடையை) எடுத்துக் கரகரவெனச் சுழற்றி வீசிஆகா வெளியில் எறிந்து விளையாடியும்! இப்பக்குவம் ஒருசேரக் கடைக்கண்சாத்தியருளும் குருமூர்த்தியும் மகிழ்ந்து ஆசிர்வதிக்கும்படி யான்மேலும்மேலும் ஆனந்த நடனம் ஆடுகின்றேன் என்றருளினார்! (எ.று)

அ-கை-தான் பெற்றுள்ள ஞானுனுபவத்துக்குத் தக்கநாமத்தை (பெயரைத் தனக்குச் சூட்டிய மாதாபிதாவைப் புகழ்ந்து துதிக்கின்றார்) (எ.ம்)

176 தத்துவ ஞானம் வந்த சந்தோச அதிசயத் தால்
நித்தமு மாடுவன் காண்என்ற நிலையை முன்னமே யறிந்த
சத்திய மதனாலன்றோ தாண்டவா வென்றழைத் தார்
அத்தனை மகிமை யுள்ளோ ரன்னையும் பிதாவுந்தானே!

அ-வ, உரை = விளையும் பயிர் முளையில் தெரியும் என்ற முதுமொழிக்கேற்ப நம்புத்திரப்பேறு, செயற்கரிய செயலை முற்செனனங்களிற் செய்துவந்தபாக்கியவான் போலும்,

இப்பிறவியில் நமது புதல்வனாகப் பிறந்து வெகுவிரைவில் ஞானவானாக வளர்ந்து அத்வைத ஞான அநுபூதியில் நிலைத்து ஞானானந்தத் தாண்டவம் ஆடுவன் என உள்நினைத்து முன்பே அறிந்த மகிமையினால் அன்றோ, என்னை அள்ளி எடுத்து முத்தமழைபொழிந்துத் தாண்டவா? தாண்டவா? எனும் நாமம் (பெயர்சூட்டி) தரித்துக் கூப்பிட்டார்கள் அன்றோ! (எ.று)

அ-கை- பேசித்திரிந்த பேதையான், அந்தப் பேசாத பெரும் பேரின்பப் பொருளே ஆன அ∴தை அவ்வனுபூதியை (மகிமாவை) சுமந்து ஆற்றாது அந்தக் களிப்பினைச் சித்தரித்தலாம் இது! (எ.ம்)

177 வந்தவோ ரிவ்வா னந்தம் மகிழ்ந்தாரோடே சொல்வேன்
சிந்தையிலெழுந்து பொங்கிச் செகமெலாம் நிறைந்து தேங்கி
அந்தமில்லாததா யிற்று அப்படி குருவே தாந்த
மந்திர மருளும் ஈசன் மலரடி வணங்கி னேனே!

அ-வ, உரை = அறிவில் தோன்றிய இந்த ஒப்பற்ற நிரதிசயானந்தத்தினால், மகிழ்ச்சிக் கடலுள் திளைத்திருக்கும், இப்பெரும் இரகசிய உறவை, வினோதத்தை எங்கே சென்று யாரோடு சொல்வேன், அகோ அகோ அகோ! என்னுள்ளத்தினுள்ளே பீறிட்டு எழுந்த ஆரமுத ஊற்று மேலெழுந்துதேகமுற்றும் பரவி, புறத்தும் அண்டபிண்ட சராசர புவனங்கள் எங்கும் பூரணமாய் நிறைந்து கரைகாணுததாயிற்று! அவ்வாறாகிய வேதமுடி! வானமகா வாக்யார்த்த இரகசியத்தை, மும்மூர்த்திகளுக்கும் மேலான எனது குரு இறைவன் ஞானதேசிகரின், கமலமலர் இதழ் போன்ற! மெல்லிய திருவடிகளைப் பணிந்து தொழுது சரணஞ் சேர்கின்றேன்! என்றருளினர்! இன்னமும் தனது சிந்தனையில் உதித்தூறிப் பொங்கிய ஆனந்தவடிவமாகவே திகழ்கின்றது என வித்தியானந்த வகையினை நிறைக்கின்றார்! (எ.று)

அ-கை- கேட்டல் சிந்தித்தல் தெளிதல் முதலிய சாதனம் பழகிய சாத்தியர்கள் இந்நூலால் அடையும் பயனைக் கூறுகின்றார்.

178 வித்தியா னந்த மிந்த விதமென விளம்பி னோமே
பத்தியா யிருந்தின் னூலைப் பார்த்தனு பவித்த பேர்கள்
நித்திய தரும நிஷ்டை நிலைதனை அறிந்து சீவன்
முத்தியை அடைந்திருந்து முனிவர ராகுவாரே!

அ-வ, உரை = ஞானசேகாரமான வித்தியானந்தம் இந்தவாறு என்றுகூறினோம், இஞ்ஞான நூலின்பால் அகலாதஅன்பு புணர்ந்து இக்கைவல்லிய நவநீதநூலை குருவின் அநுக்கிரகங்கொண்டு நன்கு விசாரித்துணர்ந்து தெளிந்து, அப்பொருளை நிச்சயித்து நித்தியமான ஞானநிட்டையின் அநுபவநிலைமையினைத் தெரிந்து சீவன் முத்திப் பதத்தினை பெற்றிருந்த மனனசீலரான முனிவரா் ஆகுவாரே, இவரே முனிவரும் சிரேஷ்டருமாவார்கள் என்பது திண்ணமே ஆகும். என்பதுண்மையே! என்றருளினர் (எ.று)

அ-கை-குருமூர்த்தியின் அன்பும் அருளுப தேசமும் அநுக்கிரமும் ஆணையும் என்சிரமேல் அணிந்து, யான் தொகுத்த இந்த கைவல்லிய நவநீதம், எனும் நூலின் ஆக்கப்பணிகள் யாவும் சம்பூரணமாயிற்று என்கிறார் (எ.ம்)

179 ஆரணப் பொருளாம் வித்தியா னந்தம் விளங்க ஏதுங்
காரணங் குறைவில் லாமல் கைவல்ய நவநீதத்தைப்
பூரண மாக்க வேண்டிப் பூர்வமாம் நன்னிலத்தில்
நாரணகுருந மக்கு நவின்ற னர்யோகில் வந்தே!

அ-வ, உரை = வேதங்களின் சிகரமான மகாவாக்கியார்த்தமான ஞானானந்தம் அனைத்துப் பக்குவர்களின் இதயக்குகையுள் விளங்கிப் பிரகாசிக்கும் பொருட்டு, இக்கைவல்லிய நவநீதம் எனும் ஞானசாத்திரத்தை (நூல் செய்ய வல்ல சான்றோர்களின் பனுவல் முறைகளான, சொல், எழுத்து, பொருள், ஓசை, அணி படலவகை, எடுத்துக்காட்டுகள் போன்ற காரணங்கள்யாவும் குறைவுபடாமல் தாய்மொழியாம் தரணிபுகழும் தமிழ் மாலையிற் தொகுத்திட விரும்பி, அருளாலர்கள் பணிந்துபோற்றிப் பாமாலை சாத்தியருளிய நன்னிலத்தில், பழமைதங்கிய மதுவனம் எனும்! சிவசேத்திரத்தில் மாநுடவடிவாய் அவதரித்தருளிய என்குருவாம் ஸ்ரீ நாராயண ஞானதேசிகர் அவர்கள் என்தியானத்தின் ஒருமையில் எழுந்தருளி நின்றிருந்து அருளிச் செய்தவண்ணமே யானும் இக்கைவல்ய நவநீத நூலினுள் அனைத்துச் சிறப்பம்சங்களையும் பொருத்திச் செய்துள்ளேன், இதனைக் கண்ணுறும் அன்பர்கள் இன்புறவென்றே! என்றார். (எ.று)

அவதாரிகை- இந்நூலையும் அதன் பொருளையும் கற்றுணர்ந்த சாதகர் சாத்தியர்கள் அடையும் பயனும் பெருமையும் இன்னின்ன தெனப் புகழ்கின்றார். (எ.ம்)

180 குலவுசற் குருவின் பாதம் குளிர்புனற் தலைமேல் கொண்டால்
உலகினிற் தீர்த்தமெல்லாம் உற்றபேர் அடைவார்கள்போல
நலமெய் யாகியகை வல்லிய நவநீத நூலைக் கற்றோர்கள்
பலகலை ஞானநூலைப் படித்த ஞானிகளாய் வாழ்வர்தாமே!

அ-வ, உரை = இப்பூமிப்பரப்பின் மேல் பரப்பின் ஞானிகளின் திருப்பாதங்களை வைத்து உலாவி வந்த திருப்பாதங் களிரண்டுக்கும்! தான் வாழும் ஊரில் தனது இல்லத்துள் வைக்கப்பட்டுள்ள மெய்ஞானியை குடத்து நீர் கொண்டு பொய்யான உலகத்தில், பொய்யானவுடலைப் பெற்றுவந்து இங்குள்ள பொய்யர்களுடனும் பொய்ப்பொருள்களுடனும் கூடிவாழ்ந்தும், இவர் பூர்வஞ் செய்த தவப்பேற்றால் மெய்ப்பொருளையுணர்ந்து இன்புற்று தாம்பெற்ற பேறு பெறுக இவ்வுலகரும் அடைந்தின்புறக் கருணை மிகக் கொண்டும், அங்குமிங்கும் நடமாடி நவநவமாய்த் தரிசனந்தந்து, இழிந்தோர்களையும் ஈடில்லார் இவர் எனக் கடைத்தேற்ற வந்த ஞானப் பரிபூரண வள்ளல்) அவர் திருப்பாதங்களை விளக்கிஅலம்பிய அந்நீரை! நம் சிரசு தேகத்தில் புரோக்ஷித்(தெளித்துக்)துக் கொண்டால்) அது, பன்னீரும் (எழு) புண்ணிய நதிகளையும் ஒரு சேரக்கலந்த சப்த (ஏழு) நதி விசேக்ஷ தீர்த்தமேயாகும்! இவைகளில் நீராடிய பயனுண்டாம் எனச்சாத்திரங்கள் விசேக்ஷித்துக் கூறுகின்றன. தீர்த்தமாய்யார்க்குஞ் செவிக்கினிதாயின என்பர்! இங்ஙனமான, நன்மையும் அடங்கியுள்ள கைவல்லிய நவநீதமெனும் ஞானசாத்திரத்தை விருப்பொடும் வாசித்து ஊன்றியுணர்ந்து பயின்று விசாரித்தால், அனந்த ஞானக்கல்வி நூல்களைப் பயின்றுபெறும் அநுபவம் உண்டாகி ஞானியர்களாக வாழ்ந்து சர்வதுக்க நிவர்த்தியும் அனந்தானந்தப் பிராப்தியும் உண்டாகி பிறப்பு இறப்புகளற்ற, முத்திப்பேற்றினையே விரைவில் எய்திடுவார்கள் என்றே அறிந்திடுக! என்றார் (எ.று)

அ-கை-இந்நூலாசிரியர் ஸ்ரீலஸ்ரீ தாண்டவராய சுவாமிகளின் சீடர்களிற் சிறந்த ஒருவர் தம்குரு நுவலிச்செய்த ஞானநூல் கைவல்லிய நவநீதம், நூலினை இவ்வுலகுக்குப் படைத்தருளிய, ஸ்ரீ தாண்டவராயசுவாமிகளின் போற்றுதற்கரிய மான்மியங்களைப் புகழ்ந்து, ஐந்து சிறப்புக் கவித்தொடை(மாலை)களைச் சாத்துபடி செய்து சரண்புகுகின்றார். (என்பதாம்)

சிறப்புக்கவிகள் ஐந்தில் இது முதற்கவி

1 **அண்ணறன் னருளினாலேஅகம் புறம் இன்றி ஒன்றாய்**
எண்ணமி லக்கியார்த் தத்தின் பொருளது நான் என்ன
நண்ணின சரீர மாதிநா தத்தி னுபாதி என்றே
கண்ணதா யனைத்துங் காணக் காட்டினன் தாண்டவ யீசன்

அ-வ, உரை = இருப்பதை இருந்தபடி உரைத்து அல்ல உரித்துக்காட்டிய ஞானவள்ளல் ஸ்ரீ தாண்டவராய சுவாமியாம் ஞானதேசிகரது கருணையிதவுபதேசத்தினால், உள்ளும் புறம்புமின்றி ஒன்றாய் கருதுதற்கரிய இலக்கியார்த்தத்தின் பொருளாய் பிரம்மமாய் அதுவே கூடஸ்தன் ஆகிய என்னைப் பொருந்திய தோஷங்களை நீக்கிநுணுகி ஆராயின், நானல்லாத சகலத்தையும் அத்வைதத்தாற்பரியங் கொண்டு சர்வமும் எனது ஞானாகாரமாய்த் தரிசிக்கும்படிச் செய்தருளிய இந்நூலாசிரியான ஸ்ரீ தாண்டவராய சுவாமிகள் தரிசிப்பித்தருளினார். (எ.று)

அ-கை-இம்மரபு (சம்பிரதாயம் -வழிவழியே) நெறியினால் அநுபவம் உதிக்கக் கண் டவர்களே சுகாநுபவிகள் ஆவார்கள்(என்பதாம்)

2 **ஆன்ற பதமா மூன்றற்கு மதுநீயானாய் எனும் பொருளில்**
சான்ற துரியா தீதமெனும் தடையற்றிலங்குமொன் சைதன்யம்
ஊன்றியுணர்ந்தோர் விகற்ப மயக்கு ஒழித்துத் தடையுமூ டறுத்துத்
தோன்றித்தானே தானாவர் துலங்கு மவர்க்கே சுகாநுபவம்.

அ-வ, உரை = மாட்சிமை தங்கிய மகாவாக்கியத்தை தத்பதம் துவம்பதம் அசிபதம் எனும் மூன்றுபதங்கட்கும், அதுஎனும் பிரம்மமும் நீ எனும் கூடஸ்தனும், இவ்விரண்டின் ஏகத்துவமான ஐக்கியமும் என்கின்ற அர்த்தத்தில் நிறைந்ததுரியாதீதம், என்கிற

உண்மை அநுபவங்கள் மறைப்பின்றி அபரோக்ஷமாக விளங்கும் சுயம்பிரகாச ஒளியாயுள்ள மெய்யுணர்வை, ஸ்திரமாகத் தெரிந்தவர்கள், பேதங்களாயுண்டான அஞ்ஞானத்தைக் கெடுத்துச் சதோதய(உதயாஸ்தமனமின்றியஇயல்பு) மாய்த்தன்மயமாவார்கள் அவ்வறிஞர் கட்கே சுகாநுபவமானது பிரகாசிக்கும். (என்றவாறு)

அ-கை, இச்சீர் இவர்தம் குருவினைப் புகழ்ந்து துதித்துள்ளார். இதுவே சம்பிரதாயமெனும் மரபுவழி அணுகிப் பேறுபெறுகின்றார்.(எ.ம்)

3 என்னும் மாவாக்ய நான்கும் இசைக்கும் வித்யா ணந்தமிதை
சொன்ன நாராயணன்பாதந் தொழுது துதித்தோர்துகளற்றோர்
இன்னமா ணாக்கர் குருவாற் சந்தேகந் தீர்ந்திடு பதத்தே
துன்னி நிறைந்து நின்றோர் கள்தூய முத்தரா குவாரே.

அ-வ, உரை = உணர்வே பிரம்மம், ஞானமே(அகம்) பிரம்மம், நீ அதுவாய் இருக்கிறாய் சர்வம் பிரம்மயம், என்றும் அநுபூதிவாக்கியம், மனனவாக்கியம், உபதேச வாக்கியம், சம்மதவாக்கியம், என்று நான்கு மகாவாக்கியார்த்தங்களும், முடிவாக கூறுகின்ற ஞானானந்தம் ஒன்றே அதுஇதுவாகும். இதனை இந்தவாராகவே உபதேசித்தருளிய(தாண்டராயசுவாமிகளுக்கும்) நன்னிலம் ஸ்ரீ நாராயணன் (எனும்) ஞானதேசிகரின் சீடர் உபய திருப்பாதங்களை வணங்கித்துதித்தவர்கள் யாதொரு தோஷமுங் குற்றமும் நீங்கப்பெறுபவராவார், இத்தன்மை வாய்ந்த சீடர்களானவர், ஆசிரியரால் சகல சந்தேகங்களும் நீங்கி இப்பதத்தை அடைந்து பூரணமாய் இருந்து சீவன் முத்தர்களாவார்கள்! (எ.று)

அ-கை(இந்நூல் செய்த நெறிமுறைகளைக் கூறுதல்!)

4 தத்துவ விளக்கத் தாலுஞ் சந்தேகந் தெளித லாலும்
ஒத்திருள் விடாத மாயா வுள்ளிரு ளிரிய வோங்கும்
சித்ததா மொளிவிளங்கச் செய்தபின் விருத்தி பேதப்
புத்தியால் வருமையத் தைப்புரை யறத் தெளிவித்தாண்டான்

அ-வ, உரை = நூல் நுவல வல்ல சான்றோர் கையாளும் நெறிகளில் ஏதும் குறைவின்றித் தத்துவ விளக்கம் சந்தேகந் தெளிதல் எனும் படல(பகுதி-பிரிவு) வகைகளையும்

பொருந்தச்செய்து, மாயையெனும் நீங்காத அஞ்ஞானயிருள் என் அகத்திலிருந்து நாசமாகிட உன்னதமாஞ் சுயம்பிரகாச ஞானந் திகழும் படிசெய்தும், பின்குற்றமுந் தோஷமும் பொருந்திய சந்தேக விபரீதங்களை அகத்துள் அகற்றியும், விஞ்ஞானபுத்தி விருத்தியினால் தெளிவித்துபதேசித்தும் ஈடேற்றி இரட்சித்தருளினார்! என்கிறார் (எ.று)

அ-கை, இந்நூலாசிரியரைத் துதிக்கின்றார் (எ.ம்)

5 ஆண்டதே சிகனா மையன் நாரணா னந்தன் பாதம்
பூண்ட மூவாரே பத்தால் பொய்மயக் காய்வந் தவற்றை
மாண்டநல் லபவா தத்தால் மாய்த் தருளும் நோக்கத்தென்றுங்
காண்டிட வைத்தளித்த காரணா போற்றி! போற்றி!

அ-வ, உரை = வாக்கு மனம் தேகம் சிதாபாசனை, தக்ஷிணையாகப் பெற்று, என்னை அடிமையாக ஏற்றுக்கொண்டு ஆளுகின்ற ஐயன்! எனது ஞானகுருதேசிகராய் எழுந்தருளிய ஸ்ரீலஸ்ரீ நாராயணன் எனுந்திரு நாமம் தரித்துள்ள எல்லையற்ற மாண்புடையவரது திருப்பாதங்களிரண்டையும் என்சிரசின்மேற்சூடி மகிழ்ந்தேன்! அதனால்! சீவேசுவர செகத்தென்னும் மூன்றுவிதகற்பனைகளால், இல்லாத மயக்கமாயுண்டானதை, நன்மையும் பெருமையு முடையதான, அபவாத (ஒன்றினில் ஒன்று ஒடுங்குங் - காரியங்களுக்கு மூலமாயிருந்த காரணத்தையே அறிதலாகும்) உத்தியினாற் கெடுத்துக் கருணைமிக்க பார்வையினால் எப்போதும், எதையும் என்னையும் அபரோக்ஷமாய் கண்டனுபவிக்கும் ஞானம் தரிசிக்கத் திருவடி சூட்டி இரக்ஷித்தருளிய மூலமுதல்வனே போற்றி! போற்றி!! போற்றி!!! (எ.று)

இத்துடன் நூற்பாயிரமாகிய ஏழு கவிகளும் தத்துவவிளக்கப்படலமாக, நூற்றி ஒரு கவிகளும், சந்தேகந் தெளிதற்படலமாக நூற்றி எண்பதுகளும், நிறைவில் சிறப்புப் பாயிரமாக ஐந்துகவிகளும் ஆகமொத்தக்கவிகள் 7-101-180-5 என்று 293 கவிகள், இவ்விதமாக நன்னிலம் ஸ்ரீ ல ஸ்ரீ தாண்டவராய சுவாமிகள் அருளிய கைவல்ய நவநீதம் நூலின் மூலமும் R.மாணிக்கம் (எ) சு.சதானந்தசாமி எழுதிய அமிர்தவர்ஷினி உரையும் நிறைவுறுகின்றது! ஆவணி மாதம் 22-ம் நாள் தொடங்கிக் கார்த்திகை மீ 30ம் நாள் 27-12-2016

தீ சுபம் (சாந்தி ஓம்தத்ஸத்!) சாந்தியே!

அறப்பணியில் பெரிதும் ஒத்துழைப்பு நல்கிய அன்பர்களை பெயர், ஊர் முகவரிகளாகவும், நிழற்படங்களாகவும் காட்டி அறிமுகம் செய்வது என் கடமை என அமைகிறேன்.

1. R. விஜயலக்ஷ்மி சனாதனா கார்மெண்ட் காளவாசல், மதுரை.
2. பழனிச்சாமி அவர்கள், தாராபுரம்
3. செ. சுப்பையகவுண்டர், ஊதியூர் R. மணி டெய்லர், ஊதியூர்.
4. P.S. வேலுச்சாமி, பெ.பாளையம் (ஊசியூர்)
5. அங்குச்சாமி கவுண்டர், புளியம்பட்டி, R. முதலியப்பன், ஊதியூர்
6. சதீஸ், உணவகம், ஊதியூர்
7. உத்தமன்,நன்னிலம் V.K. பழனிச்சாமி கவுண்டர், தாயம்பாளையம்
8. கி. கோபால், கம்பம், N. மகாலிங்கம்
9. பெரியசாமி, கார்பென்டர், காட்டம்மன் புதூர்
10. M. சுப்பிரமணி, சிற்பி, காட்டம்மன் புதூர்
11. பூபதி, பெரியசூரம்பாளையம், நாமக்கல் வட்டம்
12. சிவக்குமார், அரசு பஸ்கண்டைக்டர், பெரியசூரம்பாளையம், நாமக்கல்.
13. தங்கவேல், சைக்கிள் ஒர்க்ஸ், கபிலர் மலை
14. C. துரைப்பாண்டி, கருநாக்க முத்தம்பட்டி. (கம்பம்)
15. திரு. இராம்குமார் பூஜைத்திரவிய வியாபாரம், மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மன் திருக்கோவில்
16. திரு. இராமச்சந்திரன், நிவாஷ் ஜவுளி ஸ்டோர் (அம்மன் சந்நிதி வீதி, மதுரை)
17. பாரத் கிருஷ்ணா - அபராஜிதா கார்பரேட், மதுரை.
18. AMN. விக்னேஷ் பார்மா, மதுரை.
19. A. திலகவதி அண்ணாதுரை, தாராபுரம்
20. Er. மு. சக்திவேல், கம்ப்யூட்டர், கனடா, பெ.பாளையம்



திருமழபாடி மடம் **சு. சதானந்தா சுவாமிகள்** அவர்களுக்கு

வாழ்த்துப்பா

டாக்டர். **ஸ்ரீசாமி** RIMP., கபிலர் மலை

ஒன்றித்தவம் புரிய ஓங்குவிக்கும் உலக வரை
நன்றுதரு செயலதற்கு நாட்டுவிக்கும் சுருளிமலை
வென்றிவிடை யேறுமெம் வித்தகனார் பாகத்து
கன்னியாம் காமாட்சியை கருத்திருத்தும் தவமுனியே

மோனமெனும் நிலைதெளிந்து முக்தியெனும் விதைதெளித்து
ஞானமெனும் ஒளியேற்ற நற்றரும நெறிநின்று
கானமெனும் இசையோவா திருமழ பாடியை மேவுந்
தேனமுதத் தவத்திருவின் திருவடியெம் தலைமேலாம்

சொற்றிரமும் சிவஞானம் தோய்ந்த நாவும்
முற்றுணர்ந்த முதறிஞ முனிவ ரேரே
பற்றொழிந்த தவத்திருவின் பாதம் போற்ற
கொற்றவராம் குழந்தைவேலருள் குறுக்கிடய்யா

மாவடி யமைத்த ஈசன் மலரடி போற்றும் சீரால்
காவியல் கண்ணால் என்னும் கருணையின் வடிவமாகி
மேவிய கருநாக்க முத்தம்பட்டி தன்னில் மெய்த்தவ முனிவ ரேரே
சேவடி போற்ற யாங்கள் செய்தவம் பெரியதாமே

காலமும் கணக்கும் கண்டு கருத்ததை சிவத்திருத்தி
சீலமே புகட்டும் சீரால் சிற்சபை நடனமாடும்
கோலமே சிந்தை வைத்த குன்றமே முனிவயாங்கள்
சாலநின் பாதம் போற்ற செய்தவம் செப்பப்போமோ

ஒப்பரும் ஞானம் தன்னை உலகவர் தமக்கு ஊட்ட
செப்பரும் தவத்தால் வந்த ஜகத்குரு வழியேவந்த
மெய்ப்பொருள் உணர்த்தும் கீர்த்தி மிக்கமர் முனிவ ரேரே
அப்பெரும் குழந்தையானந்த ஆலயத்து வருகை நோக்கி

கலைமலிந்த கருநாக்கன் முத்திநகர் கந்தன் தன்னருளால்
நிலைதெளிந்த நற்றவத்து தவமுதல்வ விண்ணப்பம்
இலை மலிந்த சுருளிமலை எம்பிரான் தனைப்பரவ
முலை மலிந்த உள்ளத்தால் மனநிறைவாய் அழைக்கின்றோம்

கற்றவர்கள் பரவுதிரு கருநாக்க முத்திநகர்
பொற்பமரும் புனிதநிறை பொன்னார் திருவடியை
நற்றவத்தால் போற்றுகிறோம் நன்றுதரு செயல்கூட
அற்புதனார் குழந்தையானந்த தியானநிலையம் எழுந்தருள்க.
எல்லாம் அவன் செயல் எல்லாம் சிவமயமே!





திரு. **S.V. ஈஸ்வரன்** அவர்கள்
மேனேஜிங் டைரக்டர்.
சைனி நிட்வேர்ஸ்
24, அப்பாச்சி நகர் மெயின்ரோடு,
திருப்பூர் - 641 607.



டாக்டர். **C.K.செல்லமுத்து** MJF
அரிமா அவர்கள்
தொழிலதிபர், ஏர்செல் டீலர்,
தாராபுரம்



திரு. **K.கதிர்வேல்** அவர்கள்
தொழிலதிபர்,
மெரிடியன் டெக்ஸ்டைல்ஸ்,
கரூர்








திரு. N.ராஜேந்திரன் அவர்கள்
J.E., மின்சாரவாரியம் ஓய்வு,
இந்திராணியம்மாள்
பரிமளா இல்லம், தாராபுரம்



திரு. காசி ஸ்ரீ கி.கஞ்சையன் அவர்கள்
கம்பம்



திரு.P.சூரியநாராயணன்
United India
குடியாத்தம்



உ.பழனியம்மாள்
காட்டம்மன் புதூர்




திரு. **மருதப்ப ஆசிரியர்** அவர்கள்
ஆசிரியர், தாராபுரம்



திரு. **கே.கனகராஜ்** அவர்கள்
கிரி ஆட்டோ பைனான்ஸ்,
கரூர்







V.ஈஸ்வரன்
நன்னிலம்



திரு. **V.இராமமூர்த்தி**
தாராபுரம்



மேஸ்திரி **T.சுப்ரமணி**
காட்டம்மன் புதூர்





கோளறு பதிகம் ஞானசம்பந்தர் அருளியது

2 - வது பாடல்

என்பொடு கொம்பொடு ஆமை இவை மார்பிலங்
எருதேறி ஏழையுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமேபுகுந் தவனால்
ஒன்பதோடு ஒன்றோடும் ஏழுபதி னெட்டோடு ஆறும்
உடனாய நாள்களவைதாம்
அன்பொடும் நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியாரவர்க் குமிகவே!

ஓம் - சாந்தி சாந்தி சாந்தி ஓம்!

R. மாணிக்கம் (எ) சுவாமி. சு. சதானந்தா
காட்டம்மன் புதூர், ஆச்சியூர் (Po) - 638 673.
தாராபுரம் வழி, திருப்பூர் மாவட்டம்.
செல் : 98659 65468



ப்டன் Dr. **T.சக்திவேல்** MBBS., MDDM., அவர்கள்
207, வைகை காலனி,
அண்ணாநகர், மதுரை.



டாக்டர். **ஹரிசங்கர்** N.D., அவர்கள்
கீப்பிட் மருத்துவமனை,
செனாய்நகர், மதுரை.



ரு. **S.P.ராஜேந்திரன்** B.A.B.L., அவர்கள்
வழக்குரைஞர்,
ஓட்டல், SPR - IN.
நாராயணகுருசாலை,
சாய்பாபா காலனி,
கோவை - 641 011.



திரு. **P. அருள்** அவர்கள்
ஓவியா கிராபிக் பிரிண்டர்ஸ்
20/40, சொசைட்டி தெரு,
AKMG லாட்ஜ் அருகில்,
திண்டுக்கல் - 1

